# அல்-ஜாமிஆ

நளீமிய்யா மாணவர்களின் இதழ்

## OTTOMANS EMPIRE



ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா - பேருவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



## நளீம் ஹாஜியார் அவர்கள்

### 3ஆவது அல்-ஜாமிஆவுக்கு வழங்கிய ஆசிச் செய்தி

ஜாமிஆ நளீமிய்யா மாணவர்களால் வெளியிடப்படும் அல்-ஜாமிஆ சஞ்சிகைக்கு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மூன்று தசாப்த கால அதன் கல்விப் பணியில் ஜாமிஆவின் சிறப்பான வளர்ச்சியும், சாதனைகளும் மனித முயற்சியின் விளைவன்று. அது அல்லாஹ்வின் பேரருளே ஆகும் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கையாகும். அல்-ஜாமிஆ எனும் சஞ்சிகை ஜாமிஆவின் வளர்ச்சியையும், சாதனைகளையும் பிரதிபலிக்கும் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றது. இச்சஞ்சிகையை வெளியிடுவதில் மிக ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைத்த விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் மனப்பூர்வமாகப் பாராட்டுவதோடு இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message

I am pleased to send this message to be included in the Student's Magazine of Jamiah Naleemiah.

First of all, I would like to say that such an effort taken by the students should be commended. A Naleemi is expected to have a sound knowledge of Islam and the Ummah is expected to be in turn provided with such knowledge by learned Ullemas.

Only by communicating can Naleemis spread the knowledge that they have gained to others, and such communication can be by speech or through written media.

By publishing a regular Magazine, the students will Insha-Allah have an opportunity to improve and sharpen their skills of writing and hence they would be able to subsequently contribute to other journals and publications in the future after qualifying by publishing articles and even writing books, in particular, on religious topics.

I would like to congratulate the students and the organizers for this useful effort, Alhamdu Lillah.

**Al Haj Yakooth Naleem**
**President**
**Board of Management & Society**
**Jamiah Naleemiah**
**Beruwala.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

ஜாமிஆ நளீமிய்யாவினால் வெளியிடப்படும் மாணவர் சஞ்சிகையான 'அல் ஜாமிஆ' விற்கு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். விரிவுரை யாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்களை உள்ளடக்கிய வகையில் வெளியிடப் படும் இச்சஞ்சிகை ஜாமியாவில் நீண்டகால பாரம்பரியமாகும்.

கடந்த காலங்களில் வெளிவந்த சஞ்சிகைகளை நோக்கும்போது அவை எக்காலத்திற் கும் பொருந்தும் முக்கியமான ஆக்கங்களை உள்ளடக்கிய வகையில் அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாக காணப்பட்டது.

இந்த வகையில் காத்திரமான, அறிவுபூர்வமான ஆக்கங்களை உள்ளடக்கிய தற்போது வெளியிடப்படும் சஞ்சிகை இந்த பாரம்பரியத்தை பேணிப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வது பாராட்டுக்குரியதாகும்.

இந்த அறிவு முயற்சியில் ஈடுபட்ட, பங்களிப்புச் செய்த அனைவரும் பாராட்டுக்குரிய வர்களாவர்.

*கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி*
*பணிப்பாளர்*
*ஜாமிஆ நளீமிய்யா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

ஜாமிஆ நளீமிய்யா மாணவர்களின் உத்தியோகபூர்வ சஞ்சிகையான 'அல்-ஜாமிஆ' நீண்டதோர் இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் வெளியிடப்படுவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆரம்பத்தில் 'அல்-பிக்ர்' என்ற பெயரில் கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த ஜாமிஆ மாணவர் சஞ்சிகை பிற்காலத்தில் 'அல்-ஜாமிஆ' எனப் பெயர் மாற்றம் பெற்றது. இச்சஞ்சிகைக்கு 'அல்-ஜாமிஆ' எனும் பெயரை தெரிவு செய்தவன் என்ற வகையில் இது தொடர்ந்தும் உயிர் வாழ்வது தனிப்பட்ட முறையில் எனக்கு மன மகிழ்வைத் தருகிறது.

அன்று தினச்செய்தி எனும் பெயரில் வெளிவந்த சுவரொட்டிப் பத்திரிகையும் மாணவர் மன்றமும் எமது எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் வளர்த்துக் கொள்வதற்கான இரு பெரும் களங்களாக அமைந்தன. வகுப்புவாரியாக வெளிவந்த சஞ்சிகைகளும் எமது எழுத்தை செம்மைப்படுத்த உதவின. எழுத்துத் துறையில் எம்மைப் பயிற்றுவிப்பதில் இஸ்லாமிய சிந்தனைக்கும் பெரும் பங்கு உண்டு. பல நளீமிக்களை எழுத்தாளர்களாகவும் ஊடகவியலாளர்களாகவும் உருவாக்கிய பெருமை ஜாமிஆவின் குறித்த ஊடகங்களுக்கு உரியதாகும்.

இன்றைய எமது மாணவர்களும் குறித்த ஊடகங்களை உச்ச நிலையில் பயன்படுத்தி தமது திறன்களை விருத்தி செய்து கொள்ளல் வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அல்-ஜாமிஆவின் இந்த இதழ் பயனுள்ள பல கட்டுரைகளையும் ஆக்கங்களையும் சுமந்துள்ளது. இவற்றுக்கூடாக சமூகத்துக்கு நல்ல பல செய்திகள் போய்ச்சேரும் என நம்புகிறேன்.

அல்-ஜாமிஆவுக்கு புத்துயிர் அளித்து அதனை மீண்டும் வெளிக்கொணர்வதற்கு பின்புலமாக நின்ற விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி சொல்வதோடு அவர்களுக்கு நற்கூலி கிட்ட வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

*அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்*
*பிரதிப் பணிப்பாளர்*
*ஜாமிஆ நளீமிய்யா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

இன்று நாம் மிக மோசமான சமூக, பொருளாதார, அரசியல் பின்னடைவுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். கல்வி, ஒழுக்கம், பண்பாடு என்ற வகையில் பார்த்தாலும் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகின்றது. எம்மைச் சூழவுள்ள பல்லின சமூகங்கள் பல துறைகளில் முன்னேறிச் செல்கின்ற வேளை எமது இந்தப் பின்னடைவுக்கான காரணங்களைக் கண்டறிய தம்மைத் தாமே சுயவிசாரணை செய்ய வேண்டியுள்ளது.

பிறர் எங்கள் மீது குறிவைக்கிறார்கள், எமக்கெதிராக சதிசெய்கிறார்கள் என்று நோக்குவதைத் தவிர்த்து எமது பின்னடைவுக்கான காரணங்களைச் சரியாக இனங்கண்டு அவற்றைக் களைந்திட வழிகாண்பதே அறிவுடமையாகும். இதற்காக எமது சிந்தனை யிலும், மனப்பாங்கிலும், நடத்தையிலும் அர்த்தமுள்ள மாற்றங்கள் தேவைப்படுகின்றன. ''எந்தவொரு சமுதாயமும் தம்மைத்தாமே மாற்றிக் கொள்ளாத வரை அல்லாஹ் அவர்களை மாற்றப்போவதில்லை'' என்ற அருள்மறை வசனத்திற்கொப்ப மிகக் கவன மாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியது எம்மீதுள்ள கட்டாயக் கடமையாகும்.

ஆய்வும், எழுத்தும், பேச்சும் வெறுமனே புலமைத்துவ வெளிப்பாடுகளாக மாத்திரம் இருப்பதில் அர்த்தமில்லை. இவற்றால் ஒருபோதும் பிரயோசனமுள்ள நடத்தை மாற்றங் களை ஏற்படுத்த முடியாது. இவை தெளிவான கொள்கைகளாலும், இலட்சியங்களாலும் புடம்போடப்பட்டவையாக இருக்க வேண்டும். தமது மார்க்கம், மற்றும் சமூக நிலை குறித்த ஆழமான அறிவோடும், உன்னத பண்புகளோடும் உறுதியான மனப்பலத்தைப் பெற்று கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.


உணர்ச்சிகளை நிதானப்படுத்தி நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளின் ஊடாக அர்ப்பண சிந்தையோடு தியாகங்கள் புரிய முன்வர வேண்டும். மரபு முறைக் கல்வித் தேடலிலிருந்து வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் வாழ்வியல் கல்வியை நோக்கி ஓர் அசைவியக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மாற்றங்கள் குறித்த கருத்துக்களும், ஆய்வுகளும் நவீன சொல்வீச்சுக்களோடு வெளிவந்து கொண்டிருக்கின்ற இக்காலப் பிரிவில் ''அல்-ஜாமிஆ'' என்னும் பெயர் தாங்கி ஜாமிஆ மாணவர்களால் வெளியிடப்படும் இச்சஞ்சிகை விரிவுரையாளர்களதும் மாணவர்களதும் தனித்துவமான சிந்தனைப் பாங்கையும், கருத்தோட்டத்தையும் ஆய்வுத் திறனையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றது. இவை சமூகக் களத்தில் சிறந்த நடத்தை மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென ஆசிப்பதோடு இச்சஞ்சிகை நல்ல முறையில் வெளிவருவதற்கு அயராது உழைத்த மாணவர்களையும், விரிவுரையாளர் களையும் பொருளாதார ரீதியாக உதவி செய்த பெருந்தகைகளையும் பாராட்டுகின்றேன். வல்லவன் அல்லாஹ் இம்முயற்சியை அங்கீகரித்து அருள்புரிவானாக!.

*அஷ்ஷெய்க் ஸீ. ஐயூப் அலி*
*உதவிப் பணிப்பாளர் - கல்வித் துறை*
*ஜாமிஆ நளீமிய்யா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

மொழி ஒரு தொடர்பு சாதனமாகும். கருத்துப் பரிமாற்றத்துக்கும் பரவலுக்குமான ஆரம்ப அடிப்படை ஊடகமாக அது விளங்குகின்றது. ஒவ்வொரு சமூகமும் தனக்கென்று ஒவ்வொரு மொழியை பரிச்சயமாகக் கொண்டுள்ளது. இந்த வகையில், உலகில் பன்னூறு மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன. இது அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்று இதை அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

''மேலும் வானங்களையும், பூமியையும் (அல்லாஹ்) படைத்திருப்பதும், உங்களுடைய மொழிகளும் உங்களுடைய நிறங்களும் வேறுபட்டிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்'' (30:22)

மொழியூடாக உலகைப் பார்க்கும் மனிதனின் இரு கண்களாக பேச்சும் எழுத்தும் மதிக்கப்படுகின்றன. பார்வை அல்லாஹ்வின் மகத்தான ஓர் அருள் எனின், பேச்சும் எழுத்தும் அதற்கு நிகரான அருட்கொடைகளாகும். மொழி பேசும் எல்லோரும் தெளிவாகப் பேசும் ஆற்றலையும் எழுதும் திறனையும் கொண்டவர்கள் அல்லர். இவ்வருளை ஒரு சிலரே உலகில் பெறுகின்றனர். இவ்விரு அருள்கள் மூலமாக அல்லாஹ் உலகில் மனிதனை மேம்படுத்தியுள்ளான்.

''அவனே மனிதனைப் படைத்தான். அவனே மனிதனுக்கு (பேச்சு) விளக்கத்தையும் கற்றுக் கொடுத்தான்'' (55:3-4). ''எழுதுகோல் மீதும் இன்னும் அதன் மூலம் அவர்கள் எழுதுவதின் மீதும் சத்தியமாக'' (68:1) இவ்விரு அல்குர்ஆன் வசனங்களும் மனித வாழ்வில் பேச்சு, எழுத்து இரண்டிற்குமுள்ள முக்கியத்துவத்தைப் புலப்படுத்துகின்றன.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கலங்கரை விளக்காகத் திகழும் ஜாமிஆ நளீமிய்யா தற்கால உலகின் இஸ்லாமிய உயர் கல்வி நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக இஸ்லாமிய தஃவாத் துறையில் ஆரோக்கியமான பங்களிப்பை அது முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கி வருகின்றது.

நளீமிய்யாவின் பட்டதாரிகள் தமது பேச்சாற்றல், எழுத்துத் திறன் மூலமாக மேற்கொள்ளும் தேசிய, சர்வதேச மட்டத்திலான தஃவா முயற்சிகளுக்கு ஜாமியாவின் கற்கை நெறியும் பயிற்றுவித்தல் முறையும் பிரதான காரணிகளாகும்.

மாணவர்களின் பேச்சாற்றலை வளர்ப்பதில் நளீமிய்யாவின் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம் நேரடிக் காரணியாக விளங்குவது போல் மாணவர்களின் எழுத்துத் திறனை வளர்ப்பதில் ''ராபிதா கலமிய்யா'' எனும் வாராந்த சுவரொட்டிப் பத்திரிகை, வகுப்பு ரீதியான சஞ்சிகை வெளியீடுகள் இரண்டோடும் ''அல்-ஜாமிஆ'' மாணவர் சஞ்சிகை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

நளீமிய்யாவின் விடுகை வருட (2009/10) மாணவர்களின் தீவிர முயற்சியால் சில காலம் முடங்கியிருந்த ''அல்-ஜாமிஆ'' மீண்டும் ஆரோக்கியம் பெற்று மீள்பிரவேசம் தந்துள்ளது. கௌரவ பணிப்பாளர், விரிவுரையாளர்கள் சிலரின் ஆக்கங்களோடு மாணவர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கப் பெற்றதாக இக்கல்வியாண்டுக்கான ''அல்-ஜாமிஆ'' அமைந்துள்ளது. அல்-ஜாமிஆவின் ஆக்கங்கள் நடைமுறை நிகழ்வுகளைத் தொட்டுப் பேசக் கூடிய யதார்த்தங்களாகும். இவை நிச்சயம் சமூகத்துக்கு ஆக்கபூர்வமான அறிவுப் பணியை வழங்கும் என்பது திண்ணம்.

இம்முயற்சிக்குரியவர்களைப் போற்றுவதோடு இம்முயற்சி இடைவிடாது தொடர வேண்டும். இதற்கு என் நல்லாசிகள்.

*அஷ்ஷெய்க் எச்.ஐ. கைருல் பஷர்*
*உதவிப் பணிப்பாளர் - நிருவாகத் துறை*
*ஜாமிஆ நளீமிய்யா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

'அல்-ஜாமிஆ' நான்காம் இதழின் வெளியீட்டு ஆலோசனைக் குழு என்ற வகையில் இந்த ஆசியுரையை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

'அல்-ஜாமிஆ' சஞ்சிகை ஜாமிஆ நளீமிய்யா மாணவர்களது இதழாக இருந்த போதும் ஓர் ஆய்வுச் சஞ்சிகையின் கனதியை தனது கன்னி இதழிலிருந்தே தாங்கி வந்திருக்கிறது.

மாணவர்களது படைப்பாக்கத் திறன், ஆய்வு மனப்பாங்கு, மொழி ஆளுமை என்பவற்றை மாத்திரமன்றி அவற்றை நூலுருப் படுத்தத் தேவையான அச்சுத்துறை சார் ஆற்றல்களை வெளிப்படுத்தும் களமாகவும், வளர்த்து விடும் களமாகவும் கூட அது இருந்து வருகிறது.

ஒலி, ஒளி சார்ந்த எண்ணற்ற இலத்திரனியல் ஊடகங்கள் தற்கால மாந்தரது வாழ்வின் மீது படையெடுத்து ஆக்கிரமித்திருக்கும் நிலையிலும் எழுத்தும் நூலும் கொண்டுள்ள தொடர்பாடல் வீச்சும் சிந்தனைப் பரிமாற்ற வீரியமும் இன்னும் குறையவில்லை என்பதை எவராலும் மறுக்க முடியாது. அந்த வீரியமும் வீச்சும் முன்னரை விட அதிகரித்துள்ளன என்று கூடச் சொல்லிக் கொள்ள முடியும்.

மனித அறிவு வளர்ச்சியிலும் நாகரிக எழுச்சியிலும் எழுத்து வகிக்கும் தவிர்க்க முடியாத பாத்திரத்தையே இது நிரூபணம் செய்கிறது.

இந்த வகையில்தான், மறுமை பரியந்தம் நிலைக்கவுள்ள அல்குர்ஆன் பேனா, எழுத்து வாசிப்பு என்பவற்றின் மீது சத்தியம் செய்து அவற்றின் சாஸ்வதத் தன்மைக்கு சாட்சி சொல்கிறது போலும்!

இஸ்லாமிய அழைப்பை தமது முதற் பணியாக ஏற்றுள்ள இஸ்லாமிய கற்கைகள் துறையினர் இந்த உண்மையை மனதில் கொண்டு தமது எழுத்து துறைசார் ஆற்றல்களை வளர்த்துக் கொள்வது அவசியம்.

மாணவர்களது சஞ்சிகையாக இருந்த போதிலும், ஜாமிஆவின் கௌரவப் பணிப்பாளரும் அதன் பட்டதாரிகள் சிலரும் பங்களித்திருப்பது சஞ்சிகையின் பரிணாமத்தை இன்னும் அகலிக்கிறது.

இதனை அழகிய வடிவில் கொண்டுவர அயராதுழைத்த மாணவர் குழாத்துக்கு சஞ்சிகை ஆலோசனைக் குழு என்ற வகையில் எமது நன்றியும் பாராட்டும் உரித்தாகட்டும்.

இம்முயற்சி உரிய பயன்தர அல்லாஹ் அருள்பாளிப்பானாக!

*சஞ்சிகை ஆலோசனைக் குழு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பீடத்திலிருந்து...

எழுதுகோலின் மீது சத்தியமாக! எழுதுவோர் எதை எழுதிக் கொண்டிருக்கிறார்களோ அதன் மீதும் சத்தியமாக!

இந்த நூற்றாண்டு ஊடகங்களால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. மனித சமூகத்தின் பண்பாடுகள், கலாச்சாரம், ஒழுக்கவியல் சார் அம்சங்களில் ஊடகங்கள் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் புதியதோர் உலக ஒழுங்கையே உருவாக்கியிருக்கின்றது. இஸ்லாமிய உலகத்தின் மீதான மேற்கின் சிந்தனைப் படையெடுப்பும் கலாச்சார ஏகாதிபத்தியமும் அதன் சக்தி வாய்ந்த ஊடகங்களின் வாயிலாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நவீன போர் முறையை எதிர்கொள்ள இஸ்லாமிய உலகு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதனால் இஸ்லாமிய உலகில் இலத்திரனியல், அச்சு ஊடகங்களின் வருகை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. அதே நேரம் தேசிய ரீதியாக முஸ்லிம்களுக்கு மத்தியில் அச்சு ஊடகங்களின் வருகை மாத்திரமே குறிப்பிடும் படியாக உள்ளது.

அந்த வகையில் எமது சிறு முயற்சியாக 'அல்-ஜாமிஆ' ஆய்வுச் சஞ்சிகையின் நான்காவது இதழை உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

இவ்விதழ் வெளிவர அருள்பாலித்த அல்லாஹ்வைப் புகழ்வதோடு ஆசியுரைகளை வழங்கிய நிருவாகத் தலைவர், பணிப்பாளர்கள், பொறுப்பாசிரியர் குழு ஆகியோருக்கும் ஆக்கங்களை எழுதித் தந்த விரிவுரையாளர்களுக்கும் மாணவச் சகோதரர்களுக்கும் இச்சஞ்சிகை வெளிவர உறுதுணையாக இருந்த பொறுப்பாசிரியர்களுக்கும் இதழாசிரியர் குழுவிற்கும் இதனை அழகாக வடிவமைத்துத் தந்த சகோதரர் அஸார் வஸீருக்கும் நன்கொடைகளைத் தந்துதவிய நல்லுள்ளங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இச்சிறு முயற்சியை அல்லாஹ் அங்கீகரிப்பானாக! ஆமீன்.

**ஆசிரியர் குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இன்னும் அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள்; மேலும் அல்லாஹ் உங்களுக்கு கற்றுக் கொடுக்கிறான்.”
(பகரா: 282)


### பொறுப்பாசிரியர்கள்

அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி) (B.A) (PGDE)

அஷ்ஷெய்க் பீ.எம்.எம். இர்பான் (நளீமி) M.A. (Linguistics) PGD (Translation) - Sudan

அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். அரபாத் கரீம் (நளீமி) B.A

அஷ்ஷெய்க் எம்.ஜே.எம். இம்தியாஸ் (நளீமி) B.A

**பிரதம ஆசிரியர்:**
ஆர்.எம். றிஸ்வான்

**துணை ஆசிரியர்கள்:**
ஜே.எம். அஸீம்
எம்.ஏ.எம். ஸப்வான்

**ஆசிரியர் குழு:**
எம்.எம்.எம். பர்ஹான்
எம்.ஸீ. அப்துல் வாஜித்
எம்.ஐ.எம். பைஸல்
ஏ.எம். அப்துர் ரஹீம்
ஏ.எஸ்.ஏ. றமீஸ்

**தளக்கோலம், அட்டை வடிவமைப்பு:**
அஸார் வஸீர்



**வெளியீடு:**
நளீமிய்யா மாணவர்கள்
P.o. Box 01, Jamiah Naleemiah
aljamia2009@gmail.com

**அச்சகம்:**
A.J. Prints (Pvt) Ltd,
44, Station Road, Dehiwala

**முதற் பதிப்பு:**
January 2010

**பிரதிகள்:**
1000






# அல்-

## உள்ளடக்கம்


அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பழீல் (நளீமி) M.A (Cey)
**முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் உறவு** 14



அஷ்ஷெய்க் றவூப் ஸெய்ன் (நளீமி) M.Phil
**முஸ்லிம் சமூக நிறுவனங்கள்**
ஒரு முகாமையியல் நோக்கு 28



56 HUMAN TOUCH

90 மாலைப் பிரபந்தம்

ஸூறா யாஸீன்... 32




இஸ்லாமும் முகாமைத்துவமும் 74





66 அல்குர்ஆன், பைபிளின் பார்வையில் ஈஸா (அலை)




62 இஸ்லாமிய வங்கிகளின் நிதி மூலங்களும் நிதியியல் செயற்பாடுகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# ஜாமிஆ

2010/1431




Dr. எம்.ஏ.எம். சுக்ரி
பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா

02

**GLOBALIZATION AND ITS CHALLENGES TO THE SPIRITUAL & CULTURAL VALUES OF THE MUSLIM UMMA**



அஷ்ஷெய்க்
ஏ.ஸீ. அகார் முஹம்மத்
(நளீமி) பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா

**அறிஞர்களுக்கோர் அடையாளப் புருஷர்**

08



அஷ்ஷெய்க்
பீ.எம்.எம். இர்பான் (நளீமி)
M.A. (Linguistics) PGD (Translation) - Sudan

**நளீம் ஹாஜியார்**

வரலாறு படைத்த மனிதர்

20

**இமாம் கஸ்ஸாலி, இமாம் ஜீலானி (ரஹ்)** 52

**ஒற்றைப் புள்ளியில் குவியும் முக்கோட்பாடுகள்** 79

**හින්දු ආගමික ග්‍රන්ථවල අල්ලාහ් හා රසූල් (සල්)** 85

அபாபீலை அழைத்து வா!
ஆப்ரஹாக்கள் ஒழியட்டும்!

12



துருக்கிய தேசமும்
துளிர்விடும்...




40

39




காரணமில்லா காரியவாதம்




Islamophobia

45


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# GLOBALIZATION AND ITS CHALLENGES TO THE SPIRITUAL & CULTURAL VALUES OF THE MUSLIM UMMA



**Dr. M.A.M Shukri**
**Director - Jamiah Naleemiah**

Globalization is generally defined as a free flow of trade and investment and fund across borders without any constrains or limitation and hindrance to these flows (1), it is generally held as processes of change in the global capitalism in relation to production distribution, trade, finance and technology. It created a new global system, this system erodes borders and cut across all boundaries linking the world in a global system (2).

Globalization is closely linked to the information technology. The post 1960 electronic revolution accelerated the process of globalization, the expansion of information at a speedy rate, cutting across all borders resulted in the free flow of information, and it is in this respect that the term "Global Village" came into being.

Is Globalization a process or a project is a question that is being currently debated by economist, sociologist, historians and political theorists. In the history of human civilization there are phases in which changes and new pattern emerges in human thought and in society that act as a process of change. From this perspective Globalization may be considered as a phenomenon of change in the field of trade and investment, and dissemination of knowledge and ideas, triggered by the information revolution. As a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

historical process changes of this nature are inevitable in the history of human civilization.

Globalization in this sense is a logical, inevitable process of history providing opportunities for interac tion it is in this sense Globalization has been defined as a process by which the world become smaller or rather a global village.

But Globalization which started as a historical process has been transformed into a project for econo mic and cultural domination. It is Globalization as a project, planned by the west that poses a threat to local economics and cultures of the third world. Thus it become clear while Globalization as a process provide opportunity for interaction as a program it constitutes a threat.

Most of the studies about Globali zation interpret it as a political and economic phenomenon and less attention has been focused on its cultural implications It is illogical and unscientific to assume that politics, economy, society and cultu ral operate as separate entities. On the whole we need to look at Globali zation not as process but as a prog ramme of the west for dominance and it must be studied in an wholistic approach with multi-dimensional implications, economic, social, and cultural [(3)].

The aim of this paper is to study the threat of Globalization as a program to the religious and cultural values of Muslim Umma. In other word how it poses a challenge to the religion and cultural identity of the Muslim Umma and the way need for an organized, well planned action by the Muslim Umma to meet this challenge [(4)].

Globalization has its positive and negative aspects. Broadly speaking it has an economic and cultural dimension. While granting its positive aspects such as transborder trade, free flow of capital, opportunities to trans mit speedy information due to informa tion revolution, as a programme for social change Globalization poses a threat to the moral, ethical and cultural values of the Muslim society and its identity.

It is in this respect that the Muslim Umma whose world view is shaped by the immutable spiritual values and ethical principles based on divine guidance must take a serious note of the cultural consequences of globaliza tion, viewing from in this perspective Globalization must be viewed not as a historical process but as a progra mme engineered by the west in culture building because emergence of a global society and the manifestation of global culture is an important cultu ral consequence of Globalization[(5)]. It utilizes the powerful tools of inform ation technology aiming at remolding, reshaping and transmuting the spiritu al and moral values of Muslim Umma according to the Post-Renaissance, Humanistic, Secularist, Rationalistic, World view of the west creating a universal culture.


In the 19th century who ever contro lled the sea-lands controlled the world, in the 20th century who ever controlled the air ways controlled the world and in the 21st century with the control of space and cyberspace control reach and sweep are exponentially increa sed. Thus the cultural questions of control by whom for what purpose and with what beliefs and values become more timely, relevant, and crucial [(6)].

Globalization has many commona lities with the philosophy of modernity that came into being during the Post-Renaissance period of the west. Huma nism, Secularism, Rationalism, the Idea of progress and four important concepts that are generally associated with modernity. Humanism of the

**In the 19th century who ever contro lled the sea-lands controlled the world, in the 20th century who ever controlled the air ways controlled the world and in the 21st century with the control of space and cyberspace control reach and sweep are exponentially increa sed.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



west eliminated God and placed man in the central position of the universe, thenceforth man and his reasoning assumed supreme position relegating God and Divine Guidance to the background.

Globalization accelerated this process of modernity, Anthany Gidden sees a strong link between modernity and Globalization. According to him Globalization is an apogee and outgrowth of modernity with its strong emphasis on secular and materialistic values, Globalization with its modernist outlook is a threat to spirituality and creates a crisis of identity in the Muslim Societies. The cultural Globalization is the most dangerous form of control and dominance, and it has more serious impact than economic Globalization because it interferes directly in molding the human thought, human behavior and conduct in many ways. It is because of this, the academics and thinkers of the non western world express their sources concern about the impact of Globalization on the culture of the nations. And according to a western thinker if monopoly in respect of consumerism is bad, it is more harmful in respect of formation of culture because the monopoly in respect of consumer goods decides the prices but the monopoly of culture determine thinking.

Cultural Globalization seeks to destroy the cultural identity of the Muslims by promoting the culture of consumerism which robs man of all his superior values which it distinguishes him from other creations, cultural Globalization also aims at promoting culture of promiscuous sexual relationship which breaks all moral constraints God has placed for the moral and spiritual well being of mankind.

There is an organized effort on the part of the west to promote a culture of total sexual freedom crossing all boundaries of ethical constraints and limitations. The efforts towards cultural Globalization of the society found it's practical manifestation in the international conferences held time to time under various slogans in their outward form but with an hidden agenda to implement a well drawn out programme to impose western values in respects of woman's rights, marriage and family life.

The two conferences held on population one in Cairo and the other in Beijing and the resolution passed in these conferences legalizing sexual relationship between a male and female outside wedlock giving legal approval for abortion and homosexual relationship, and making an effort to remove all differences between man and woman by introducing the term "gender" constituted a direct challenge to the age old institution of family which is the basic foundation of society [7].

Globalization, from the cultural perspective is an organized effort to impose the western cultural values on the non western nation with the objective of creating a monolithic culture that would eliminate the cultural identity of other nations.

The right to cultural diversity has been accepted and recognized today as an important right of each nation by the rules of international law, corroborated by the charter of the united nations, this right affirms the rights of each nation to preserve and promote the it's culture.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In the first article of the declaration on the principles of international cultural cooperation issued by UNESCO it is stated as follows :

- ✓ Each culture has a dignity and a value which must be respected and preserved.
- ✓ Each people shall have the right and duty to develop it's own culture.

Diversity of colors, races and ethnicity is the supreme sign of Allah based on his will and divine plan.

"If thy lord has so willed he could have made mankind one people. But they will not cease to defer." (Sura Hud : 118)

Therefore attempts to obliterate and remove diversities in respect of religious, cultural and



civilizational values of different nations and societies and to cost them into one cultural, civilizational mold of the west is against the sunanullah or the laws of Allah, because unity according to Islam belongs only to Allah.

- ✓ All cultures with their rich diversity, differences and mutual influence constitute part of the heritage owned in common by all mankind.

Islam is totally in agreement with above clauses of the UNESCO declaration which affirms cultural diversities of the human family.

Al-Quran in the following verses recognizes the principle of religious, ethnic, and cultural diversity.

"Mankind was a single nation but differed later" (Sura Yaseen: 19)

"And among his signs is the creation of the heavens and the earth and the variations in your languages and in your colors. Verily in that are signs for those who know"

(Sura Ar–Rum: 22)

The organized programme of Globalization of the west to impose it's economy, politics and culture on other nations particularly on Islamic nations is not something new. Europe had made this attempt during the colonial period of 18th, 19th and to 20th centuries to impose it's culture, traditions, laws and values on the countries which they colonized. But this attempt did not succeed due to the emergence of nationalist movements for political freedom and cultural liberation.

But the current agenda of Globalization is much more subtle and organized backed by science and technology and mainly information technology.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The most serious challenge faced by the Muslim world is in respect of the religious and traditional ethical values and to the institution of family. The conference on population and development held in 1994 and 1995 which sanctioned same sex marriage, homosexuality and lesbianism constitute a direct threat to the institution of family and the values and laws of sharia that aims at creating healthy families which ultimately is foundation of a healthy stable society. Family according to the sharia is formed the basis of a legally constituted marriage relation between husband and wife.

Islam recognizes only the institution of family as the wholesome framework for sexual relations and raring of children. Private consent to sexual intimacy and the practices in the west "living together" "trial marriage" "temporary union" do not institute a family in Islam [8].

Muslims must prepare themselves to meet this challenge of cultural Globalization in order to safeguard their cultural identity and individuality, in note achieve this they must take some organized effort in order to attain the following objectives.

1. Muslim must be educated on the adverse impact of the media and the consumerist culture that is being promoted through the media.
2. Islamic moral and ethical values must be strongly preserved and protected in the families and in the societies at large.
3. Organized effort must be made to guide the Muslim youth on proper lines and youth organizations must be encouraged and structured to mobilize the potentialities of Muslim youth and channel them towards constructive activities.

Globalization is a positive force that could bring the world more closer forging unity among communities and nations. World has never experienced such closeness of the nations in any phase of it's history. Cultural diversity as stated above has always been an important feature in the history of mankind and it has enriched human civilization. Globalization with its major instrument for social change namely information technology can contribute immensely, if positively utilized to bring mankind closer. The growing power of computer software and the revolution in the field of information technology has transfor med the contemporary world into what is known as "Global Village" this has opened up new avenues for cultural discourse in the form of civilizational dialogue. Attempts are being made at all levels by all those who are concer ned about peace and co-existence to create understanding among different religious and cultures in the form of inter-faith and inter-civilizational dialogue. It is only by identifying common shared values of different cultures, moral and ethical values that are held in common by religions, humanity could strengthen it's spiritual roots and withstand the surging tide of secular humanism.

## References:


1. The economic and financial imperatives of Globalization; an Islamic response, Edited by Nik Musthafa Nik Hassan & Mazilan Musa, Kula Lampur, 2000.
2. Dr. Mohamed Dayyab, Awlamathul Iqthisad, Majallathul arabi, vol-494, January 2000.
3. Abd Saeed Abd Ismaeel, Arqam wal haqaiq al awlama wal alam al islami, Jeddah, 2001, p 46-47.
4. Dr. Yusuf al qardawi, Al muslimuna wal awlama, Darut tawzi wan nashrul islamiya, 2000.
5. Muqtedar khan, constructing identity in global politics, The American journal of Islamic social science, vol-15, p 95.
6. Dilnawaz siddiqi, Information technolo gies and Globalization: Ruination vs Ripples, the American journal of Islamic social science, vol-15, p 45-81.
7. Abdul Wahid Hamid, Islam the natural way, London, 1985, p 71-91
8. Dr. Abdulaziz Othman Altwaijiri, Identity and Globalization in the perspective of the right to culture diversity, ISESCO publication, 1997, p 65-68.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்பார்க்கப்படும் இஸ்லாமிய எழுச்சியை அடைவதற்கு அஷ்ஷெய்க் யூஸுப் அப்துல்லாஹ் அல்கர்ளாவி அவர்கள் 20 அடிப்படை அம்சங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். முஸ்லிம் உம்மாவின் கவனம் இந்த ஒவ்வொரு அம்சத்தின் மீதும் குவிய வேண்டும்:**



அஷ்ஷெய்க் யூஸுப் அப்துல்லாஹ் அல்கர்ளாவி

1. கிளை அம்சங்களிலிருந்து அடிப்படை அம்சங்களுக்கும் பகுதி அம்சங்களிலிருந்து (ஜுஸ்இய்யாத்) பொதுமையான அம்சங்களுக்கும் (குல்லிய்யாத்)...
2. நஃப்லான விடயங்களிலிருந்து பர்ழான அம்சங்களுக்கும்...
3. கருத்து முரண்பாடுள்ள அம்சங்களிலிருந்து கருத்து உடன்பாடுள்ள அம்சங்களுக்கும்...
4. உடலுறுப்புகளின் அமல்களிலிருந்து உள்ளங்களின் அமல்களுக்கும்...
5. தீவிரப்போக்கு மற்றும் அசிரத்தையிலிருந்து நடுநிலைக்கும்...
6. மார்க்கத்தைக் கஷ்டப்படுத்தல் மற்றும் அதனை விட்டும் விரண்டோடச் செய்தல் என்பவற்றிலிருந்து இலகுபடுத்தல் மற்றும் சுபசோபனம் சொல்லும் நிலைக்கும்...
7. குறுகிய சிந்தனைப் போக்கு மற்றும் கண்மூடித் தனமான பின்பற்றுதலிலிருந்து இஜ்திஹாத் மற்றும் புத்துயிர்ப்பை நோக்கியும்...
8. வெற்று வாதங்களிலிருந்து பிரயோசனமான செயற்பாட்டை நோக்கியும்...
9. உணர்ச்சிவசப்பட்டதும் ஒழுங்கமைக்கப்படாததுமான உரையிலிருந்து அறிவுபூர்வமானதும் திட்டமிடப்பட்டதுமான உரையை நோக்கியும்...
10. கருத்தில் முரண்படுபவர்களுடன் பிடிவாதத்தன்மையுடன் நடந்து கொள்வதிலிருந்து சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வதை நோக்கியும்...
11. வேகமான உரையிலிருந்து விவேகமான உரையை நோக்கியும்...
12. தொகையை விடுத்து முறைமையை நோக்கியும்...
13. கனவுலகிலிருந்து யதார்த்த உலகுக்கும்...
14. சமூகத்தின் மீது அதிகாரம் செலுத்துவதை விடுத்து அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதை நோக்கியும் (குற்றம் சுமத்தும் நிலையிலிருந்து வைத்தியன் என்ற மனோ நிலைக்கும்)...
15. இறந்த காலத்துடன் சுருங்கிவிடாது நிகழ்காலத்தை நோக்கியும் எதிர்காலத்துக்கான தயார் நிலையை நோக்கியும்...
16. அரசியல் செயற்பாடுகளில் மூழ்குவதிலிருந்து சமூக செயற்பாடுகளை நோக்கியும்...
17. எதிரான அம்சங்களில் முரண்படுவதிலிருந்து பன்மைத்துவம் மற்றும் பரஸ்பரம் உடன்பாடு காண்பது தொடர்பான விவாதத்துக்கும்...
18. வாழ்க்கை விவகாரங்களில் பொடுபோக்குடன் நடந்து கொள்வதிலிருந்து அதனைத் திறம்படச் செய்வதை நோக்கியும்...
19. பிரதேச எல்லைக்குள் சுருங்குவதிலிருந்து விசாலமான உலகை நோக்கியும்...
20. தற்பெருமை கொள்ளும் நிலையிலிருந்து சுயவிசாரணை செய்யும் பண்பை நோக்கியும்...

நாம் நகர வேண்டும். *(நூல் : ஜனல் கலல்?, பக். 83-85)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர்களுக்கோர் அடையாளப் புருஷர்

## இமாம் இப்னு தைமியா (ரஹ்)



அஷ்ஷெய்க்
ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி)
பிரதிப் பணிப்பாளர் - ஜாமிஆ நளீமிய்யா

### வாழ்க்கைச் சுருக்கம்

தகியுத்தீன் அஹ்மத் இப்னு அப்தில் ஹலீம் இப்னு அப்திஸ் ஸலாம் என்பது இவரது முழுப் பெயராகும். இவர் ஹிஜ்ரி 661 இல் (கி.பி. 1263) டமஸ்கஸ்ஸுக்குப் பக்கத்தில் ஹர்ரான் எனும் ஊரில் பிறந்தார். மன்னன் ஹுலாகுவின் மங்கோலியப் படை பக்தாதைத் தாக்கி சூறையாடி சுமார் ஐந்து வருடங்களில் இப்னு தைமியாவின் பிறப்பு இடம் பெற்றது. தாத்தாரிய -மங்கோலியரின் அச்சுறுத்தல் காரணமாக இவரது இளமைப் பருவத்திலேயே இவரது தந்தை இவரை டமஸ்கஸ்ஸுக்கு அழைத்து வந்தார். இங்கு ஹதீஸ், பிக்ஹு முதலான கலைகளை ஆழமாகக் கற்றார்; குறிப் பாக இமாம் அஹ்மதின் சிந்தனைகளை ஆர்வத்துடன் பயின்றார்; பதினேழு வயது முதலே கல்விப் போதனை, சட்டத் தீர்ப்பு வழங்கல், நூல் எழுதுதல் முதலானவற்றில் ஈடுபடலானார்.

கி.பி. 1282இல் தந்தை மரணமடைந்ததைத் தொடர்ந்து ஹன்பலி மத்ஹப் பிக்ஹுத் துறை இமாமாகப் பதவியேற்றார். முப்பது வயதில் முஹ்யுஸ்ஸுன்னா - ஸுன்னாவுக்குப் புத்துயிர் அளிப்பவர், இமாமுல் முஜ்தஹிதீன் - முஜ்தஹித்களின் தலைவர் முதலான பட்டங்களைப் பெற்றார்.

தாத்தாரியர்களின் தாக்குதல்களுக்கு முன்னால் இஸ்லாமிய அரசின் பலயீனத்தைக் கண்டு மனம் வெதும்பிய இப்னு தைமியா மக்களை ஜிஹாதுக்காக அணி திரட்டினார். தனது மங்கோலிய எதிர்ப்பு இயக்கத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக கெய்ரோவுக்குச் சென்றார்.

மறுபக்கத்தில் இவரது பல சன்மார்க்க நிலைப்பாடுகள் அன்றைய உலமாக்களின் அங்கீகாரத்தைப் பெறத் தவறின. இதனால் இவருக்கும் அவர்களுக்குமிடையில் தொடர்ந்து கருத்து மோதல்கள் நிலவின. குறிப்பாக சூபிகளுடன் இவர் கடுமையாக முரண்பட்டார். இவரது இத்தகைய நிலைப்பாடுகள் காரணமாக டமஸ்கஸ், கெய்ரோ, எலெக்ஸான்ரியா உட்பட மற்றும் பல இடங்களில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இப்னு தைமியா ஒரு பன்னூல் ஆசிரியர். சிறையில் இருந்த காலத்திலும் இவர் எழுதினார். பேனாவும் மையும் இவருக்கு வழங்குவது தடை செய்யப்பட்டபோது கரித் துண்டுகளைப் பயன்படுத்தி எழுதினார் எனக் கூறப்படுகின்றது.

இவர் எழுதிய நூல்கள் 300 பாகங்களைக் கொண்டிருக்கும் என கைருத்தீன் அஸ்ஸர்கவி குறிப்பிடுகின்றார். அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மின்ஹாஜுஸ் ஸுன்னாஹ்
2. அத்தவஸ்ஸுல் வல் வஸீலாஹ்
3. அஸ்ஸியாஸது ஷரஇய்யது பீ ஸிலாஹிர் ராஈ, வர்-ரஇய்யாஹ்
4. அர்ரத்து அலல் மன்திகிஈன்
5. அல் புர்கான் பைன அவ்லியாயிர் ரஹ்மானி வஅவ்லியாஇஷ் ஷைதானி
6. அல்-உபுதிய்யாஹ்
7. இவரது சட்டத் தீர்ப்புக்கள், சிற்றேடுகள் தொகுக்கப்பட்டு மஜ்முஅது ரஸாஇல் வல் மஸாஇல் எனும் பெயரில் பல பாகங்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

இறுதியாக இவர் தனது கைப்பட வழங்கிய ஒரு சர்ச்சைக்குரிய தீர்ப்பையடுத்து அன்றைய உலமாக்கள் கிளர்ந்து எழவே ஹிஜ்ரி 726 (கி.பி. 1325) ஆம் ஆண்டு ஸுல்தான் இவரைக் கைது செய்யுமாறு பணித்தார். பின்னர் சிறையில் அடைக்கப்பட்டு ஹிஜ்ரி 728 (கி.பி. 1327) ஆம் ஆண்டு சிறையிலேயே மரணமானார். இவரது ஜனாஸாவில் முழு டமஸ்கஸ் வாசிகளும் கலந்து கொண்டனர். வினோதம் யாதெனில் இப்னு தைமியாவின் ஜனாஸா ஸூபியாக்களின் அடக்கஸ்தலத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகும். மேலும் இப்னு தைமியா ஒரு பிரமச்சாரியாகவே வாழ்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இமாம் இப்னு தைமியாவின் காலப் பின்னணி

இப்னு தைமியா (ரஹ்) இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய பேராற்றலும் செயற்றிறனும் (Dynamic) பின் விளைவுச் செறிவும் (Seminal) பெற்ற மனிதர்களுள் ஒருவராகக் கொள்ளப்படுகின்றார்.

இவர் பிறந்த காலம் இஸ்லாமிய உலகைப் பொறுத்தவரையில் தொய்ன்பியின் வார்த்தையில் குறிப்பிடுவதாயின் (Schism of the body politic) அரசுச் சமுதாயம் சின்னா பின்னப்பட்டிருந்த ஒரு காலமாகும்.

இப்னு தைமியாவின் காலம் சில விடயங்களில் இமாம் அஹ்மதின் காலத்தை ஒத்திருந்தது. ஆயினும் இமாம் அஹ்மதின் காலத்தைப் போலன்றி இவர் காலத்தில் அறிவியல் இயக்கம் தேக்க நிலையை அடைந்திருந்தது. பிக்ஹுத் துறையானது மாசடைந்து அதன் தூய்மையை இழந்திருந்தது; முன்னைய இமாம்களதும் அவர்களின் மாணவர்களினதும் ஆக்கங்களை மனனமிட்டுப் பதிய வைத்துக் கொள்வதே சமூக முதன்மையைப் பெறுவதற்குரிய ஒரு தகைமையாகக் கருதப்பட்டது. அத்துடன் புதிய பிரச்சினைகளின் தீர்வுக்கு சட்ட மூலாதாரங்களை ஆதாரங்களாகக் குறித்துக் காட்டும் மரபு நீங்கி இமாம்களின் நூல்களையும் பத்வாக்களையும் ஆதாரமாகக் காட்டும் புதிய மரபு ஒன்றும் உருவாகியிருந்தது.

இதைத் தொடர்ந்து குறித்த ஓர் இமாமை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்ற சிந்தனைப் பாங்கும் வளர்ந்தது... இதன் வழி, குறித்த நான்கு இமாம்களுக்குப் பின் இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டு விட்டது என்ற கருத்தோட்டமும் வலுப் பெற்றது.... சுய சிந்தனா வழி, இஜ்திஹாத் என்பன புறக்கணிக்கப்பட்டு, மத்ஹபுகளை, அதன் இமாம்களை ஆராய்வின்றிப் பின்பற்றும் பண்பு வளர்ச்சி கண்டது. இப்பண்பே 'தக்லீத்' எனப்படுகின்றது.

அறிவியல் ரீதியாகவும் இருவரது காலமும் வேறுபட்டு அமைந்தன. இமாம் அஹ்மதின் காலத்திலோ அப்பாஸிய கிலாபத் -சில கலீபாக்கள் முஃதஸிலாக் கொள்கைச் சார்புடையோராக இருந்த போதிலும்- பலமிக்கதாகக் காணப்பட்டது. ஆனால் இப்னு தைமியாவின் காலத்தில் இந்நிலை இருக்கவில்லை "அப்பாஸிய கிலாபத்தின் ஸ்தீரநிலை குன்றியிருந்தது. அவர்களிடமிருந்த ஆட்சி அதிகாரம், பொருளாதார வளம் என்பவற்றை முஸ்லிம் சிற்றரசுகள் அபகரித்திருந்தன. ஆன்மீகத் தலைவர் என்ற நிலையில் மட்டுமே கலீபாவை சிற்றரசர்கள் அங்கீகரித்திருந்தனர். முஸ்லிம் ஸ்பெய்ன் அமீர்கள் அப்பாஸிய கலீபாவை ஆன்மீகத் தலைவராகவும் ஏற்கத் தயாராக இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தம் சுயமான ஆட்சியைக் கொண்டு நடாத்தினர். இவ்வாறு அப்பாஸிய கிலாபத் ஐக்கியம் குறைந்து பலம் இழந்து இருந்த போது மேற்கேயிருந்து மேற்கொள்ளப்பட்ட சிலுவைப் படையெடுப்பினாலும் கிழக்கேயி ருந்து வந்த மாங்கோலியப் படையெடுப்பினா லும் இஸ்லாமிய அரசு மேலும் பலயீனமுற்றது.

இமாம் அஹ்மதின் காலம் முதல் முஸ்லிம் சமூகத்தினுள் செல்வாக்குச் செலுத்திய கிரேக்க, பாரசீக சிந்தனைகள் இமாம் இப்னு தைமியா வின் காலத்தில் மேலும் வலுவடைந்தன. அவற்றினால் தோன்றிய சிந்தனா ரீதியிலான முரண்பாடுகள் மேலும் வளர்ச்சியடைந்தன. அரசியல் ரீதியாகத் தோன்றிய ஷீயாக்கள் இக் காலத்தில் சிந்தனா ரீதியான இயக்கமாக வளர்ச்சி கண்டனர்.

சுருக்கமாகச் சொல்வதாயின் இப்னு தைமியா வின் காலம் என்பது முஸ்லிம் சமூகத்தின் அகீதா உயிரோட்டம் இழந்தும் நடத்தைகளில் ஊழல் மலிந்தும் தீமைகள் பரவியும் சிந்தனை தேக்க மடைந்தும் இஜ்திஹாத் செயல் இழந்தும் மக்கள் கருத்து முரண்பட்டு பல குழுக்களாகப் பிளவு பட்டும் இருந்த ஒரு காலமாகும்.

இப்பின்னணியில் தன் காலத்து சவால்களை சரியாக இணங்கண்ட இப்னு தைமியா அவற் றுக்கு முகங்கொடுத்ததைக் காண முடிகின்றது. தன் காலத்து அறிவியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இஜ்திஹாதையும் அரசியற் பிரச்சினை களுக்குத் தீர்வாக ஜிஹாதையும் இவர் முன் வைத்தார். ''அரசியல் மட்டத்தில் ஜிஹாதும் அறிவு மட்டத்தில் இஜ்திஹாதும் முஸ்லிம் சமூக புனர்நிர்மாணத்திற்கான அவரது இயக்கத்தின் தூண்டற் சக்திகளாக அமைந்தன''.

### இப்னு தைமியாவும் இஜ்திஹாதும்.

ஆரம்ப ஸலபுகளின் வழியில் இமாம் அஹ்மதின் முறைமையில் நின்று இஜ்திஹாதின் அவசியத்தை வலியுறுத்திய இப்னு தைமியா ஸலபிப் போக்கின் அடிப்படைகளை வகுத்தும் எதிர்வாத சிந்தனையை விளக்கியும் சமகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன் வைத்தும் செயற்பட்டதை அவதானிக்க முடிகின்றது. இவரது மஜ்மூஅது அல்-பதாவா அல் குப்றா எனும் சட்டத் தீர்ப்புகளின் தொகுப்பை நோக்கு கின்றபோது அன்றைய சன்மார்க்க வாழ்வியல் பிரச்சினைகளுக்கு அவர் ஸலபு வழி முறையில் இஜ்திஹாதின் துணையுடன் எவ்வாறு தீர்வுகளை முன் வைத்தார் என்பதனை அறிய முடியும்.

இஜ்திஹாதின் மூலம் தூய இஸ்லாமிய சிந்தனைக்கு புத்துயிர் அளித்தல் வேண்டும். ''போலிகளற்ற, இஸ்லாத்திற்கு அந்நியமான எத்தகைய இடைச் செருகளும் அற்ற தூய இஸ் லாமிய அடிப்படைகளில் மீண்டும் இஸ்லாமிய சமூகம் கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்பது இப்னு தைமியாவின் இலட்சியமாக இருந்தது.

சமூகப் புனரமைப்பிற்கு இவரது இரண்டாம் பெரும் ஆயுதமாக ஜிஹாத் அமைந்தது. தாத் தாரிய மன்னர் காஸான், ஷாம் பிரதேசத்தைத் தாக்கியபோது அவரைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்தி கைதிகளை விடுவிக்க இப்னு தைமியா ஆவண செய்தார். இவ்வாறு சமாதான வழியில் எதிரிகளை அணுகி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சி செய்தார். ஆயினும் தாத்தாரியர் டமஸ்கஸ் கோட்டையை தமக்குக் கையளிக்கு மாறு வேண்டியபோது அவர்களின் அநீதிகளை யும் அராஜகங்களையும் கண்டு இனியும் சமா தான வழிமுறை வெற்றியளிக்காது என்பதை உணர்ந்த இப்னு தைமியா எந்நிலையிலும் கோட்டை கையளிக்கப்படலாகாது என்பதில் உறுதியாக நின்றார். தானே ஒவ்வோர் இரவும் கோட்டை மதிலைச் சுற்றி வந்ததுடன் மக்க ளுக்கு அல்குர்ஆனின் ஜிஹாத் பற்றிய வசனங் களை ஓதிக் காண்பித்து ஸ்தீரமாக நின்று போராட்டத்தைத் தொடர அவர்களைத் தூண் டினார்.

மறுபக்கத்தில் தாத்தாரியர்களின் தொடர்ந் தேர்ச்சியான தாக்குதலின் காரணமாக இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் நாடு பலவீன முற்றிருந்த நிலையில் ஆட்சியாளர்கள் தீமை களை ஒழிப்பதிலும் சமூக விரோதச் செயல் களைக் கட்டுப்படுத்துவதிலும் பாராமுகமாக இருப்பதைக் கண்ட இப்னு தைமியா தன்னோடு இருந்தவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று நன் மையை ஏவி தீமையை விலக்கல் எனும் சன் மார்க்கக் கடமையை நிறைவேற்றும் நோக்குடன் செயற்படலானார். இதனால் மதுபான விற்பனை நிலையங்கள் தகர்க்கப்பட்டன. குற்றச் செயல் களில் ஈடுபட்டோருக்கு தண்டனைகள் நிறை வேற்றப்பட்டன.


மேலும் சிந்தனா ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சதிகளில் ஈடுபட்ட பாதினிகள், இஸ்மாயிலிகள் போன்றோரை முறியடிக்கும் பணியிலும் இப்னு தைமியா முனைப்புடன் செயற்பட்டார்.

அறியாமை, மூடக் கொள்கைகள், நூதன அனுஷ்டானங்கள், இணை வைத்தற் செயற்பாடு கள் முதலானவற்றை எதிர்ப்பதில் இப்னு தைமி யாவுக்கு இணையானவர்களை வரலாற்றில் காண்பது அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாகக் கூறுவதாயின் இப்னு தைமியாவின் போராட்டம் தனது ஸலபிக் கோட்பாட்டிற் கூடாக இஸ்லாத்திற்கு அந்நியமான எத்தகைய இடைச் செருகலும் அற்ற தூய இஸ்லாமிய அடிப்படைகளில் மீண்டும் இஸ்லாமிய சமூகத்தைக் கட்டியெழுப்பும் ஒரு முயற்சியாகும்.



## இமாம் இப்னு தைமியாவின் சிந்தனைகளும் நிலைப்பாடுகளும்

புத்துயிர் அளிக்கும் நோக்குடன் பிற, அந்நிய கொள்கைகளிலிருந்து பெறப்பட்ட விதிகளைப் புறக்கணித்து அல்குர் ஆனிய அளவு கோலை மேம்படுத்தும் முகமாக இப்னு தைமியா முப்பெரும் விதிகளை வகுத்து முன் வைத்தார். அவையாவன:

1. அல் அக்ல் அஸ் ஸரீஹ் எனும் சீரான பகுத்தறிவு, அந் நக்ல் அஸ் ஸஹீஹ் எனும் நம்பகமான (குர்ஆன், சுன்னா ஆகிய இரண்டிலிருந்தும் பெறப்பட்ட) சட்ட வசனத்துடன் முரண்படுவதிற்கில்லை.

2. கிரேக்க தத்துவத்திலிருந்து பெறப்பட்ட சொற் பிரயோகங்களையும் எண்ணக் கருக்களையும் முஸ்லிம் தத்துவவியலாளர்கள் பயன்படுத்துவது ஆட்சேபனைக்குரியதாகும்.

3. அரிஸ்டோட்டிலின் அளவையியல் கோட்பாடுகள் பிழையானவையும் மறுக்கத்தக்கவையும் அவசியமற்றதுமாகும்.



இம்மூன்று விதிகளும் கீழே சற்று விளக்கப்படுகின்றன.

முதல் விதிக்கூடாக இமாம் இப்னு தைமியா சன்மார்க்கத்தின் மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட நம்பகமான சட்ட வசனங்கள், சீரான பகுத்தறிவு உறுதி செய்யும் தெளிவான அறிவுடன் முரண்பட மாட்டாது என்ற கருத்தை முன்வைத்தார். அவ்வாறு முரண்பாடு ஏதும் ஏற்பட்டால் இரண்டில் ஒன்றிலோ அல்லது இரண்டிலுமோ ஏதோ தவறிருக்கின்றது என்றே கொள்ள வேண்டும் என்றும் அவர் கருதினார்.

முதகல்லிம்களும் பிற தத்துவவியலாளர்களும் பயன்படுத்தி வந்த கிரேக்க கலைச் சொற்பிரயோகங்களை நிராகரிப்பது இவரது மற்றுமொரு நிலைப்பாடாகும். அவசியமான கலைச் சொற்கள் அனைத்தும் அல்குர்ஆனிலிருந்தே பெறப்படல் வேண்டும். அந்நிய கொள்கை கோட்பாடுகளிலிருந்து வழி காட்டல்களைப் பெறுவது முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதை அவர் வலியுறுத்துகிறார். ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு ஒரு பிரயோகத்தைப் பெயர்க்கும்போது மொழிகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளின் காரணமாக நுணுக்கமான விடயங்களில் கருத்துப் பிழைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதே இமாமவர்களின் இந்நிலைப்பாட்டிற்கான நியாயமாகும்.



அரிஸ்டோட்டிலின் அளவையியல் கோட்பாடுகளை நிராகரித்தமை இவரது இன்னுமொரு நிலைப்பாடாகும். உலகில் நீண்ட காலம் எல்லோராலும் ஏற்று நம்பப்பட்டு வந்த அரிஸ்டோட்டிலின் அளவையியலை விமர்சித்த இவர் அதற்கு மாற்றீடாக அல்குர்ஆன், அஸ்-ஸுன்னா இரண்டினதும் ஒளியில் ஒரு புதுத் தர்க்கவியலை முன்வைப்பதில் வெற்றி கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாபீலை அழைத்து வா!

ஐரோப்பிய மண்ணில்
நாகரிகப் பயிர் நட்டு
பண்பாட்டுப் பசிக்கு
தீனி போட்ட
பரம்பரையில் உதித்த
வாரிசு நீ
காலனித்துவச் சுவடுகளில்
அச்சுவார்த்த உன்
காலணிகளை களைந்து விடு
சறுக்கிய உன் பாதங்கள்
மலையேறும்

எரியும் நிலவில்
குளிரில்லை
மலரும் பஷ்பங்களில்
மணமில்லை
தென்றல் நாணிக்கின்றது
வெறுமை உணர்வால்
பனி விழும் இரவு
சோபிக்கவில்லை
உணர்வுகளில்
சிந்தனைகளில்
உயிரில்லை
வாழ்வைப் பிரிந்து விட்டாய்
உணர்வுகளிலிருந்து
வாழ்பவன் நீ அல்ல
உன் நிழல்
மொத்தத்தில் அனைவரும்
நிழல் மனிதர்கள்
இஸ்லாமிய உணர்வை
மீட்டுக் கொடு
நிழலும் நிஜமாகும்.

விடுதலை
விலங்குகளை அறுத்து
விடும் சொன்னால்
அர்த்தம் விளங்கும்
கை விலங்கு
கால் விலங்கு
மன விலங்கு அல்ல

உணர்வுகளைப் பூட்டியிருக்கும்
உள்ளத்து விலங்கு
சடவாதப் பசிக்கு உன்னை
இரையாக்கும் மேற்கின்
கொடிய விலங்கு

படைகள் பின்வாங்கி
பல்லாண்டுகள் ஆயினும்
முற்றுகை இன்னும்
முற்றுப் பெறவில்லை
உன் இறக்கையால்
ஆகாயத்தில் உன்
இருப்பைத் தேடு
அபாபீல்களை அழைத்து வா
ஆப்ரஹாக்களின் அட்டகாசம்
அவனியில் ஒழியட்டும்

பூகோள மயமாக்கல்
என்ற மாயை
உன்னை மயக்கத்தில்
ஆழ்த்திவிட்டது
இயற்கையை வென்று
இச்சைக்கு அடிமையான
நவ காலனித்துவத்தின்
நச்சுக் கலாசாரம்
உன் சுவாசத்தின் கலப்பு
சுதந்திரம் வாங்கி
உணர்வுகளை விற்று விட்டாய்
கண்களை கசக்கி விடு
உன் மயக்கம் தெளியட்டும்
உன்னை மூடியிருக்கும்
மேற்கின் மாய வலையை
அறுத்து விடு
விடுதலைக்கு அர்த்தம் காண

அனாச்சாரத்தின் சாரம்
அவர்களின் கலாசாரம்
மேற்கின் ஆபாசப் போர்வையில்
உன் உடம்பு குளிர்காய்கின்றது
அர்த்தம் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையை அகற்றி விடு
நீ ஒரு
நோய்க் காவி
ஆக முன்

எகிப்துக்கு விடுதலை
மண்ணைக் கொடுத்து
மாமறை சுமந்த
மனித மனங்களை
பறித்துச் சென்றான்
நெப்போலியன்
செத்த உணர்வுகளுக்குத்தான்
சுதந்திரக் கொண்டாட்டங்களா?

இரவிடம் இருளை
முறையிடுகிறாய்
உன் ஈமானிய ஒளி
மங்கிப் போனதால்
இருளிடம் ஒளியை
இரவல் கேட்கிறாய்
உன் அகக் கண்
குருடாகிப் போனதால்
உன் கரமிருக்கும்
தீப் பந்தத்தை எரிய விடு
அது ஜாஹிலிய்யத்தை
சுட்டெரிக்கட்டும்
உன் பாதையில் அதன்
சுடரொளி பரவட்டும்

குடித்துக் கூத்தாடிக்
கும்மாளமிட்டவர்கள்
அடுத்தவர் உதிரத்தை
உறிஞ்சி சுவைத்தவர்கள்
ஏய்த்துப் பிழைத்து
வயிறு வளர்த்தவர்கள்
சுதந்திரம்
சுய உரிமை
கோஷங்களால் தமது
இச்சைக்கு அர்த்தம் தேடி
மாற்றான் மனையாளின்

அஷ்ஷெய்க் எச்.ஐ. கைருல் ப
(நளீமி) M.A. (Suda
உதவிப் பணிப்பாளர் - நிருவாகத் து
ஜாமிஆ நளீமிய்

மானத்தை சுகித்த
மாண்பற்றவர்கள்

அன்புடன் உறவாடும்
பண்பாடு தெரியாமல்
தன்பாடும் புரியாமல்
மாதர் குலப் பிஞ்சுகளை
துஞ்சாமல் துடி துடிக்க
புதைகுழியிட்டவர்கள்
தன்மானம் காத்திட்ட
வன்னெஞ்சர்கள்
பிரபஞ்ச முகவரி
அறியாத மூடர்கள்


மானிட சமூகத்துக்கே
மாசு கற்பித்த மாந்தரை
மாண்பில் மாணிக்கமாய்
மாற்றி அமைத்து
மாநபி வழி வந்த
மானமுள்ள முஸ்லிமே
மனதில் வை
மறந்து விடாதே
மனிதன் தன்னில்
மாற்றம் காண
மனம் கொள்ளும் வரை
மறையோன் அல்லாஹ்
மாற்றிடான் அவனை

முன்னோரில் மாற்றும்
முறையாகத் தந்த
முழுமதி அல்குர்ஆனை
முன்னிறுத்தி மறைதூதர்
முஹம்மது நபியின்
முன்மாதிரியில் உன்
முகவரியைத் தேடு
முஸ்லிமாக வாழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் உறவு

## -நபி (ஸல்) அவர்களது முன்மாதிரி-





அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பழீல்
(நளீமி) M.A (Ceylon)
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்கள் இருக்கின்றன என்றவகையில், முஸ்லிம் அல்லாதவர்களுடன் முஸ்லிம்கள் எத்தகைய உறவையும் தொடர்பையும் கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்விக்கும் தெளிவான பதில்களைக் காண முடியும். அன்னாரது வாழ்விலிருந்து இத்துறை தொடர்பான பின்வரும் இரண்டு முக்கிய வழிகாட்டல்களைப் பெற முடிகிறது.

அ. முஸ்லிம் அல்லாதவர்களோடு முஸ்லிம்கள் தனிப்பட்ட, சமூக, பொருளாதார, அரசியல் உறவுகளைப் பேண முடியும். ஆனால், அவர்கள் தமது தனித்துவங்களை இழந்து பிறரில் கரைந்து போகலாகாது.

ஆ. முஸ்லிம்கள் மீது முஸ்லிம் அல்லாதவர்கள் அக்கிரமங்களைக் கட்டவிழ்த்து விடாதபோது முஸ்லிம்கள் அவர்களுடன் சமாதான சகவாழ்வைப் பேணி நடப்பதுடன் அவர்கள் சகல விதமான மனித உரிமைகளையும் அனுபவித்து வாழ ஒத்துழைப்பார்கள்.

இவ்விரு நிலைமைகளையும் சற்று விளக்கமாக நோக்க நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாற்றில் சில சான்றுகளைக் காட்ட முடியும்.

### 01. மனித சமூகத்தின் மீதான பாசம்

மனிதர்கள் அவர்கள் எந்த மதத்தை, பிரதேசத்தை, நிறத்தை, மொழியை, கலாசாரத்தை கொண்டவர்களாக இருப்பினும் அவர்கள் அனைவரையும் நபி (ஸல்) அவர்கள் அன்புக் கண் கொண்டே நோக்கினார்கள். தான் ஏற்றிருக்கும் நேர்வழியின்பால் உலக மாந்தர் அனைவரும் வர வேண்டும்; நரகில் விழுந்துவிடக் கூடாது என்ற பரந்த மனப்பாங்கு அவர்களிடம் இருந்தது. அந்த வகையில், முஸ்லிம்-முஸ்லிம் அல்லாதோர் உறவு இஸ்லாத்தைப் பிரசாரம் செய்தல் என்ற புள்ளியிலிருந்து ஆரம்பிப்பதால் அங்கு மனித சமுதாயத்தின் மீதான உண்மையான அன்பும் அக்கறையும் வெளிப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனில் அல்லாஹ், "அவர்கள் இந்தத் தூதை விசுவாசிக்காதபோது நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீர் போலிருக்கிறதே" (18:6) என நபி (ஸல்) அவர்களை நோக்கிக் கேட்கிறான்.

தான் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற வேண்டும் என்ற வேட்கையில் அன்னார் இருப்பதையும் அது சாத்தியப்படாதபோது தன்னுயிரையே மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு அவர்களுக்குக் கவலை மேலிடுகிறது என்பதையும் இந்த வசனம் சுட்டிக் காட்டுகிறது.

எனவே, நபி (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இடையிலான உறவின் அடிப்படை பொறாமையும் சுயநலமும் மோதலுமாக இருக்கவில்லை. அன்புதான் நிலவியது. முழு மனித சமுதாயமும் மௌட்டீகம், அடக்குமுறை, துர்க்குணம், அநீதி, மனஉளைச்சல், போட்டி மனப்பாங்கு என்பவற்றில் சிக்கித் தவிப்பதாகக் கருதி நபி (ஸல்) அவர்கள், அந்த மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டு அவர்களை விடுதலையின்பால் அழைத்தார்கள்.

ஜஃபர் இப்னு அபீ தாலிப் (ரழி) அவர்கள் அபிசீனியா மன்னன் நஜ்ஜாஸியின் சபையிலும்; அபூ சுப்யான் (ரழி) அவர்கள் ஹிரகல் மன்னனின் அவையிலும்; ரப்ஈ இப்னு ஆமிர் (ரழி) அவர்கள் தளபதி ருஷ்துமின் அவையிலும் முன்வைத்த கருத்துக்கள் நபி (ஸல்) அவர்களது தூதின் உள்ளடக்கத்தையும் பரந்துபட்ட தன்மையையும் அதன் அப்பழுக்கற்ற சிறப்புப் பண்புகளையும் தெளிவுபடுத்துகின்றன.

எனவே, நபி (ஸல்) அவர்கள் அடக்குமுறையின் பாலோ குறுகிய வாழ்வை நோக்கியோ மனிதர்களை அழைக்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் "உலகத்தாருக்கான அருட்கொடை" (21:107). அவர்கள் கொண்டு வந்த தூது "உலகத்தாருக்கான ஞாபகமூட்டலாகும்" (12:104) என்றிருப்பதால் அதனைத் தனக்குள் பதுக்கி வைக்க அவர்களால் முடியாது. எனவே, அன்னார் அதனை பிரசாரம் செய்தாக வேண்டும். பிரசாரம் வெற்றியளிப்பதாயின் தனது தூதை ஏற்காதவர்களுடன் அவர் சுமுகமானதும் அன்பு கலந்ததும் நம்பிக்கை, நாணயம் மிக்கதுமான உறவை வைத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

அன்னாரது சமூக உறவுகளைப் பற்றிக் கூறிய அல்குர்ஆன், "அல்லாஹ்வின் அருளால் நீர் மிருதுவாக நடந்து கொண்டீர். (நடத்தையிலும் பேச்சிலும்) நீர் இறுக்கமான போக்கைக் கொண்டவராகவும் ஈவிரக்கமற்ற தன்மையுடனும் நடந்திருப்பினும் அவர்கள் உம்மை விட்டும் கலைந்து சென்றிருப்பார்கள். அவர்களை மன்னிப்பீராக! அவர்களுக்காக பாவ மன்னிப்புக் கேட்பீராக... (3:159) என்று தொடர்கிறது.

நபி (ஸல்) அவர்களை எதிரிகள் விடயமாக கடின சித்தம் படைத்த, பண்பாடற்ற ஒருவராக தற்கால உலகிற் சிலர் சித்தரிக்க முற்படுவது முற்றிலும் பெரிய தவறாகும். ஒருவர் ஒரு கொள்கையை ஏற்றிருக்கிறார். அதுதான் முழுக்கவும் சரியானது என்றும் ஏனைய கொள்கைகள் பிழையானவை என்றும் நரகிற்கு இட்டுச் செல்பவை என்றும் கருதுவாராயின், அவர் தனது உள்ளத்தில் பொங்கி வழியும் இரக்க சுபாவத்தின் விளைவாக உலக மாந்தர்களை அழிவிலிருந்து பாதுகாக்க முயற்சிப்பதில் தவறேதுமில்லை. நபி (ஸல்) அவர்களது நிலையும் இப்படித்தான்.

ஆனால், தனது தூதை முஸ்லிம் அல்லாதவர்கள் ஏற்காதபோது நபியவர்கள் ஆழ்ந்த கவலையில் மூழ்கினார்களே தவிர தனது தூதை பலாத்காரமாக அவர்களிடம் திணிக்கவோ, ஏற்காதவர்களை கொலை செய்யவோ இல்லை. இஸ்லாமிய வரலாற்றில் நடந்த ஆயுதப் போராட்டங்களுக்கு வேறுபல நியாயங்கள் உள்ளன.

### 02. இஸ்லாமும் மத சுதந்திரமும்

நபி (ஸல்) அவர்கள் தனது தூதை உலக மாந்தர் அனைவரும் ஏற்க வேண்டும் என்று விரும்பி பலமான ஆதாரங்களோடு, சாத்வீக வழிமுறைகளின் மூலமே அதனைப் பிரசாரம் செய்தார்கள். அப்போது அதனை ஏற்காதவர்கள் விடயமாக கவலைப்பட்ட அவர்கள் அந்த நிராகரிப்பாளர்களது முடிவை அல்லாஹ்விடமே ஒப்படைத்து விட்டார்கள். அவர்களை பலாத்காரப்படுத்தவோ தண்டிக்கவோ இல்லை. தான் வாழ்ந்த சமூகத்தில் -தான் தலைமையேற்று அதிகாரத்தைக் கையில் வைத்திருந்த சமூகத்தில் கூட வாள்முனையில் பிரசாரம் நடைபெற அவர்கள் அனுமதிக்கவில்லை.

மதீனா வந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் அங்கு முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், இணைவைப்பாளர்கள் போன்றோரை உள்ளடக்கிய ஒரு சமூக அமைப்பைக் கட்டியெழுப்பி, முஸ்லிம் அல்லாதோரை திம்மிக்களாக -இஸ்லாமிய அரசின் பாதுகாப்பில் உள்ளவர்களாகக்-கணித்து அவர்களுக்கான சகலவிதமான அடிப்படை வசதிகளையும் வழங்கி, அவர்களுடன் சமாதான சகவாழ்வை மேற்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தார்கள். அந்த வகையில்தான் "மீதாகுல் மதீனா" எனப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மதீனா சாசன"த்தில் அனைத்து சமூகத்தவர்களும் இணைக்கப்பட்டனர். அதில் கைச்சாத்திட்ட அனைத்து மதத்தவர்களுக்குமான மத உரிமை பேணப் பட்டது. அந்த வகையில் "யூதர்களுக்கு அவர்களது மதமும் முஸ்லிம்களுக்கு அவர்களது மதமும்" என்ற வாசகமும் அதில் இடம்பெற்றது.(1)

ஹுஸைனீ எனும் மதீனத்து அன்ஸாரி ஒருவருக்கு கிறிஸ்தவர்களான இரு புதல்வர்கள் இருந்தனர். இஸ்லாத்தைத் தழுவும்படி அவர்கள் இருவருக்கும் அவர் அழைப்பு விடுத்தார். ஆனால், அவர்கள் தமது கொள்கையில் பிடிவாத மாக இருந்தனர். அவர்களை நிர்ப்பந்தித்து இஸ்லாத்தில் நுழைவிக்க அவர் நபி (ஸல்) அவர்களிடத்தில் அனுமதி வேண்டினார். அப்போதுதான், **"மார்க்கத்தில் பலாத்காரமில்லை; வழிகேட்டிலிருந்து நேர்வழியானது தெளிவாகி விட்டது"** (2:256) என்ற குர்ஆன் வசனம் இறக்கப்பட்டது.

எனவே, ஒருவர் தான் தெரிவுசெய்யும் கொள்கைக்கு அவரே பொறுப்பு என்ற வகையில் நபி (ஸல்) அவர்கள் இந்த மத சுதந்திரத்தை வழங்கினார்களே தவிர, அக்கொள்கைகளும் இஸ்லாத்தைப் போல் சரியானவை என்ற காரணத் தினால் அல்ல. இதுதான் நபியவர்களது சகிப்புத் தன்மை (Tolerence) ஆகும்.

### 03. அனைத்து மனிதர்களுக்குமான கண்ணியத்தை வழங்கியமை

இஸ்லாமியத் தூதை ஏற்றுக் கொள்ளாதவர்களாயினும் அவர்களும் மனிதர்கள் என்ற வகையில் அவர்களை நபி (ஸல்) அவர்கள் மதித்தார்கள். கொள்கையால், மதத்தால் வேறு பட்டவர்களும் மனிதர்கள்தாம். அவர்களை யும் முஸ்லிம்களையும் ஒரே இறைவன்தான் படைத்தான். ஆதம் (அலை), ஹவ்வா (அலை) ஆகிய இருவரும்தான் அனைத்து மனிதர்களுக்கும் அடிப் படையாக இருந்தார்கள். எனவே, அடிப்படையான மனித உரிமைகளை முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதில் நபி (ஸல்) அவர்கள் கரிசனையாக இருந்தார்கள்.

ஒரு தடவை அவர்களைக் கடந்து யூதர் ஒருவரின் பிரேதம் எடுத்துச் செல்லப்பட்ட போது அதற்காக எழுந்து மரியாதை செய்தார்கள். அவர்களது இந்த நடவடிக்கை பற்றித் தோழர்கள் ஆச்சரியமாக கேள்வியெழுப்பியபோது, *"அதுவும் ஓர் ஆத்மாவாக இல்லையா?"* என்று அவர்கள் பதிலுக்கு கேள்வி எழுப்பினார்கள்.(2) 'என்னைப் படைத்த இறைவன் எனக்கு ஓர் உயிரை ஊதியிருக்கிறான். அதே இறைவன்தான் அந்த யூதனது உடலுக்குள்ளும் உயிரை ஊதியிருக்கிறான்' என்பது அவர்களது கூற்றுக்குள் மறைந்திருக்கும் கருத்தாகும்.

எனவேதான், *"உடன்படிக்கை செய்திருக்கும் ஒருவரை (திம்மீ எனப்படும், முஸ்லிம்களுடன் சகவாழ்வைப் பேண விரும்பும் ஒருவரை) யார் கொலை செய்கிறாரோ அவர் சுவர்க்கத்தின் வாடையைக் கூட நுகர மாட்டார். அதனது (வாசனைக்) காற்று நாற்பது வருடங்கள் ஒருவர் நடந்து செல்லும் தூரத்துக்கு வீசும்"*(3) என நபியவர்கள் கூறினார்கள்.

எனவே, முஸ்லிம் அல்லாத ஒருவர் முஸ்லிம்களுடன் இணக்கமாக வாழ விரும்புவாராயின் அவரது உயிர், மத உணர்வு, உடைமைகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய அறிஞர்களது கருத்தாகும். இது நபி (ஸல்) அவர்களது வாழ்விலிருந்து பெறப்பட்ட வழிகாட்டலாகும்.

### 04. சுமுகமான சமூக உறவு

முஸ்லிமல்லாதவர்களுடனான உறவுகளை நபி (ஸல்) அவர்கள் முற்றாகத் துண்டித்து வாழவில்லை. மாறாக பொதுவான, சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான உறவுகளைப் பேணி வாழ்ந்தார்கள். நபியவர்களது வாழ்வு சிறுபிராயம் முதற் கொண்டே முஸ்லிம் அல்லாதவர்களுடன் தொடர்புபட்டிருந்தது. அபூ லஹபின் அடிமை துவைபாவும் பனூ ஸஅத் தாபித் என்ற கோத்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் அன்னாரின் செவிலித் தாய்மார்களாக இருந்துள்ளனர். தாயார் ஆமினாவின் மரணத்தின் பின்னர் பாட்டனார் அப்துல் முத்தலிபிடமும் பின்னர் அபூ தாலிபிடமும் அவர்கள் வளர்ந்தார்கள். அபூ தாலிப் அன்னாரை பாசத்தோடு வளர்த்தார்.[4]

அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழி) அவர்களைத் தேடி அவர்களது பிறசமயத்து அன்னை மதீனா வந்தார். அவருடன் பழகலாமா, உறவாடலாமா என்று அஸ்மா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வினவியபோது, *"ஆம், உனது தாயை சேர்ந்து நட"* எனக் கூறினார்கள்.[5]

முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் உதவிகளைப் பெற்றிருக்கிறார்கள். பத்ர் யுத்தக் கைதிகளில் ஒவ்வொருவரும் மதீனத்து அன்ஸாரி சிறுவர்களில் பத்துப் பேருக்கு கற்றுக் கொடுத்தால் விடுதலையாகலாம் என நிபந்தனை விதித்தார்கள். கைபர் யுத்தத்தின்போது பனூ கைனுகா யூதர்களதும் ஹுனைன் யுத்தத்தின் போது ஸப்வான் இப்னு உமையா எனும் இணைவைப்பவரது உதவியையும் பெற்றார்கள். ஹிஜ்ரி 6ஆம் வருடம் மக்கா வந்த நபியவர்கள் தனக்கு குறைஷியர் பற்றிய தகவல்களைத் தரும் உளவாளியாக இறைநிராகரிப்பாளர் ஒருவனைத்தான் நியமித்தார்கள். ஹிஜ்ரத்தின் போது இப்னு அர்கத் என்ற நிராகரிப்பாளரை தௌர் குகைக்கு ஒட்டகைகளை எடுத்து வர கூலிக்கமர்த்தினார்கள்.

மக்கத்து நிராகரிப்பாளர்களிடமிருந்து சொல்லனாத் துயரங்களை அனுபவித்த தனது தோழர்களை அபிசீனியாவுக்கு இரண்டு தடவைகள் ஹிஜ்ரத் செல்லப் பணித்தமையின் மூலம் அபிசீனிய கிறிஸ்தவ மன்னன் நஜ்ஜாஸியின் உதவி பெறப்பட்டது.[6]

ஆனால், இந்த உதவிகள் அனைத்தும் முஸ்லிம் சமூகத்தின் பொதுநலனுக்கு ஆபத்து வராது என்ற சூழ்நிலைகளில் மட்டுமே பெறப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

அதேபோல் முஸ்லிம் அல்லாதோருக்கு நபியவர்கள் உதவிய சந்தர்ப்பங்களும் உள. ஒரு தடவை மக்காவில் கடுமையான பஞ்சம் நிலவியபோது மதீனாவிலிருந்து 500 தீனார்களைத் திரட்டி, தன்னையும் தனது தோழர்களையும் காலா காலமாக எதிர்த்துக் கொண்டிருந்த மக்கத்து நிராகரிப்பாளர்களுக்கு நிவாரணமாக அனுப்பி வைத்தமை[7] நபி (ஸல்) அவர்களது மனிதாபிமானக் கண்ணோட்டத்திற்கான சிறந்த சான்றாகும். மக்கா வெற்றியின்போது ஸப்வான் இப்னு உமையா என்பவருக்கு வழங்கப்பட்ட உதவியும் இத்தகையதாகும்.[8]

முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து நபி (ஸல்) அவர்கள் அன்பளிப்புகளைப் பெற்றது மட்டுமன்றி, தாமும் அன்பளிப்புகளை வழங்கினார்கள். ஒரு தடவை (தற்போதைய எகிப்துக்கும் சிரியாவுக்கும் இடையில் அமைந்திருந்த) ஐலா (எனப்படும் பிரதேசத்தைச் சேர்ந்த) அரசன் நபிகளாருக்கு வெள்ளை நிறக் கோவேறு கழுதை ஒன்றை அன்பளிப்புச் செய்தான். நபி (ஸல்) அவர்கள் பதிலுக்கு அவருக்கு சால்வை ஒன்றை (அன்பளிப்பாக அனுப்பி) அணிவித்தார்கள்.[9]

### 05. பொதுப் பணிகளும் உடன்படிக்கைகளும்

முஸ்லிம் அல்லாதவர்கள் மேற்கொண்ட நற்பணிகளில் நபி (ஸல்) அவர்கள் பங்குகொண்டார்கள். அவற்றை ஊக்குவித்தார்கள். அவர்கள் 20 வயதாக இருக்கையில் அநீதிகளை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட 'ஹில்புல் புளூல்' என்ற சங்கத்தில் பங்கெடுத்தார்கள்.[10]

மதீனா சாசனம், ஹுதைபியா உடன்படிக்கை, நஜ்ரான் தேச கிறிஸ்தவர்களுடனான உடன்படிக்கை போன்றன நபியவர்கள் பிற சமயத்தவர்களுடன் சமாதான வாழ்வைப் பேண மேற்கொண்ட குறிப்பிடத்தக்க முயற்சிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, பிற சமயத்தவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற மனோநிலையில் நபி (ஸல்) அவர்கள் இருக்கவில்லை. சிலபோது முஸ்லிம்களுடனான உறவில் முஸ்லிமல்லாத வர்கள் மூர்க்கத்தனமாகவும் அநீதியாகவும் நடந்து கொண்டபோது மட்டுமே, அதாவது, யுத்த சூழ்நிலைக்கு நபி (ஸல்) அவர்கள் தள்ளப்பட்ட வேளையில்தான் யுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

இஸ்லாம் அடிப்படையில் சாந்தியை, சமா தானத்தைப் போதிக்கும் மார்க்கமாகும். பலாத் காரம், வன்முறை, தீவிரவாதம் போன்ற மனிதநேய விரோத செயற்பாடுகளுக்கும் இஸ்லாத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. நபி (ஸல்) அவர்கள் இயன்றவரை யுத்தத்தைத் தவிர்த்தே வந்துள்ளார்கள்.

*''எதிரியை போர்முனையில் சந்திப்பதற்கு நீங்கள் விரும்ப வேண்டாம். (யுத்தமற்ற) சுமுக மான சூழலையே அல்லாஹ்விடம் கேளுங்கள்'' என்றார்கள்.*[(11)]

நபி (ஸல்) அவர்கள் யுத்தம் செய்ய நிர்ப் பந்திக்கப்பட்டார்களே அன்றி, அது அவர்களது விருப்பமாகவோ தூதின் நோக்கமாகவோ இருக்கவில்லை. மக்காவில் அவர்கள் வாழ்ந்த போது பொறுமை காக்கும்படியான கட்டளை கள் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட்டன. **"அவர்களை அழகான முறையில் புறக்கணிப் பீராக!"** *(73:10)* என்று அல்லாஹ் பணித்தான்.

மதீனா வந்த பின்னர் அடக்கியொடுக்கப் பட்ட முஸ்லிம்களுக்கு யுத்தம் செய்ய அனுமதி கிடைத்தது. முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி சகல சமயத்தவருக்குமான மத சுதந்திரத்தைப் பெற் றுக் கொடுக்க, அநியாயக்கார ஆட்சியாளர்களது கொட்டத்தை அடக்க, இஸ்லாமிய அரசின் பாது காப்பை பலப்படுத்த, இஸ்லாமிய அரசுடனான உடன்படிக்கையை மீறுவோருக்கு பதிலடி கொடுக்க என பல்வேறு நிர்ப்பந்த சூழ்நிலை களில்தான் நபி (ஸல்) அவர்கள் யுத்தங்களில் ஈடுபட்டார்கள். யுத்தங்களின் போதும் இஸ்லாமிய யுத்த தர்மங்கள் கடைப்பிடிக் கப்பட்டன. போரில் சம்பந்தப்படாத பெண்கள், வயோதிபர்கள், துறவிகள், சிறுவர்கள் போன்றோரை கொலை செய்வது, உடல்களை சின்னா பின்னப்படுத்துவது, அத்துமீறுவது என்பன பூரணமாகவே தடுக்கப் பட்டிருந்தன.

யுத்த சூழ்நிலை நிலவிய போதெல்லாம் எதிரிகள் சமா தான முயற்சிகளுக்கு வர இணக் கம் தெரிவிக்கும் சந்தர்ப்பங்களை நபி (ஸல்) அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அப்படியான சூழ்நிலை உருவாகினால் உடனடியாக யுத் தத்தை நிறுத்தி சமாதானத்தின் பால் மீளும்படி அல்லாஹ்வும் கட்டளையிட்டான். **"அவர்கள் சமாதானத்தின்பால் சாய்ந்தால் நீரும் அதே போல் சாய்வீராக!"** (8:61) என்று கூறினான்.

முஸ்லிம்களுடன் இணக்கமாக வாழ விரும்புபவர்களுக்கு எதிராக யுத்தம் தொடுக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு உதவி ஒத்தாசைகளைச் செய்து, அவர்களுடன் நீதி, நியாயமாக நடக்கும்படி அல்லாஹ் கூறுகிறான். இது பற்றி சூறா 'மும்தஹினா'வின் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

முஸ்லிம்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக வும் தொந்தரவுகளைத் தந்து கொண்டும் இருப்பவர்களை விசுவாசத்துக்குரிய நேசர்களாக எடுக்க வேண்டாம் என குர்ஆன் பல இடங் களில் வலியுறுத்தியிருப்பதால் நபி (ஸல்) அவர்கள் அத்தகையவர்கள் விடயமாக மிகுந்த அவதானமாகவே இருந்தார்கள். நயவஞ்சகர் களின் தலைவனாக இருந்த அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் விடயமாக நபியவர்கள் எச்சரிக்கையோடு இருந்தமையை வரலாறு பதிந்து வைத்துள்ளது.

அதுமட்டுமன்றி, முஸ்லிம் அல்லாதவர் களுடன் எவ்வளவு அன்யோன்யமாகப் பழகி னாலும் முஸ்லிம்கள் தமது தனித்துவங்களை இழந்து பிறரில் கரைந்து போகலாகாது என்பதை நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தினார்கள். மது பரிமாறப்படும் இடங்களுக்குப் போவது, பிற சமயத்தவருக்கு மட்டுமே உரிய உடைநடை பாவனைகளை கைக்கொள்வது, அவர்களுக் கென்றே உரிய பிரத்தியேகமான நடவடிக்கை களில் ஈடுபடுவது போன்றவற்றை கடுமையாக எதிர்த்தார்கள்.

எனவே, நபி (ஸல்) அவர்கள் தனது தனித்து வம் காத்த நிலையில் பிற சமயத்தவர்களுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகவாழ்வை மேற்கொண்டார்கள். வேற்று மதத்தை அல்லது கலாசாரத்தைக் கொண்டவராக ஒருவர் இருந்தபோதிலும் அவரும் மனிதன்தான் என்ற வகையில் அவருக்குத் தேவையான அடிப்படையான உரிமைகளை வழங்கினார்கள்.

மொத்தத்தில் வேற்றுமையில் ஒற்றுமை கண்ட நபியவர்கள் முழு உலகுக்கும் முன் மாதிரியான ஒரு வாழ்வுநெறியைக் காட்டித் தந்தமை குறிப்பிடத்தக்கதாகும். நபி (ஸல்) அவர்களுக்கும் பிற சமயத்தவர்களுக்கும் இடையிலான உறவின் அடிப்படைகளாக அன்பு, அக்கறை, பரஸ்பர ஒத்துழைப்பு, சமாதான சகவாழ்வு என்பன காணப்பட்டன. அவர்கள் முழு உலகத்தாருக்குமான அருளாக அமைந்தமைதான் அதற்கான காரணமாகும்.

## உசாத்துணைகள்


1. இப்னு ஹிஷாம், ஸீரது இப்னு ஹிஷாம், பாகம் 1, பக்:341

   Hamidulla, The first written constitution of the world, 48,49

2. ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ், (49-1312),

   ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜனாயிஸ் (81-2225)

3. முஸ்னத் அஹ்மத், பாகம்: 2, பக்:36,38

   ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஸ்யா, (3166)

4. இப்னுல் கையிம், ஸாதுல் மஆத் 1/82, அக்ரம் ழியா உமரி, அஸ்ஸீரா அந்நபவிய்யா அஸ்ஸஹீஹா, 1/103

5. தப்ஸீர் இப்னு கதீர், 4/349

6. மேலதிக விளக்கங்களுக்கு பார்க்க: ஷாபிஈ; கிதாபுல் உம்: 4/177, இப்னுல் கையிம், ஸாதுல் மஆத்: 4/200, 212, அக்ரம் ழியா, அஸ்ஸீரா அந்நபவிய்யா 1/209

7. அஷ்ஷைபானி, ஷரஹ் அஸ்ஸியர் அல்கபீர், 1/96

8. மேலும் பார்க்க: ஸைதான், அஹ்காமுத் திம்மிய்யீன், பக்:108,

   யூசுப் அல் கர்ளாவி, பிக்ஹுஸ் ஸகாத், 2/594

9. அக்ரம் ழியா, அஸ்ஸீரா அந்நபவிய்யா: 1/112

10. ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாத்: 293


முஸ்லிம்களே! குர்ஆனைச் சுமந்து கொண்டு உலகை வலம் வாருங்கள். உலகுக்குப் பின்னால் அலைவது எமது பண்பல்ல. எமது கொள்கைகள், அடிப்படைகளை நோக்கி அதனை இழுப்பதுதான் எமது கடமை. உலகம் எம்மை மிகைத்துவிடக் கூடாது. ஏனெனில் அதற்குப் பின்னால் நாம் நடைபயில்வதில்லை. எனவே, அதனை தொலை தூரத்திற்கு எறிந்து விடுவது எமது கடமை.

எனது வாழ்வு, எனது மரணம் இரண்டுமே இந்த இலக்கை மையப்படுத்தியே அமைந்திருக்கிறது.

என்னோடு யாரும் முன்வராவிட்டாலும் நான் முன்னோக்கிப் பயணிப்பேன். பயண துணைக்கு யாரும் வராவிட்டாலும் தனியாகப் பயணிப்பேன்.

அவர்கள் என்னோடு கைகோர்த்தாலும் முரண்பட்டாலும் தனியாகவே இப்போராட்டத்தில் குதிக்க அஞ்ச மாட்டேன்.



மௌலானா மௌதூதி (ரஹ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளீம் ஹாஜியார்

## வரலாறு படைத்த மனிதர்



எண்ணற்ற ஏழை மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து, எண்ணற்ற மஸ்ஜித்களை உருவாக்கி, இன்று இந்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் புகழ் பெற்று விளங்கும் ஓர் இஸ்லாமியக் கல்வி நிலையத்தைக் கட்டியெழுப்பி, இந்நாட்டு முஸ்லிம்கள் நன்றிப் பெருக்குடனும் மதிப்புடனும் அழைக்கும் ''நளீம் ஹாஜியார்'' ஆனார்.



அஷ்ஷெய்க்
பீ.எம்.எம். இர்பான் (நளீமி)
M.A (Linguistics), PGD (Translation) - Sudan
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா

''அல்லாஹ்வின் பாதையில் தங்கள் பொருள்களைச் செலவு செய்வோரின் பொருளுக்கு உதாரணம் ஒரு தானிய விதையைப் பயிரிடுவது போன்றதாகும். அதிலிருந்து ஏழு கதிர்கள் முளைக்கின்றன. ஒவ்வொரு கதிரும் நூறு தானிய மணிகளைக் கொண்டுள்ளது. அல்லாஹ் தான் நாடியோருக்கு (இதனை மேலும்) இரட்டிப்பாக்கிக் கொடுக்கிறான். அல்லாஹ் (கொடை கொடுப்பதில்) மிக்க விசாலமானவனும் யாவற்றையும் நன்கறிபவனுமாய் இருக்கிறான்.'' (அல்- பகரா: 261)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்களது சமகால வரலாற்றில் மறுக்க முடியாததோர் அசைவை உண்டு பண்ணியவர் நளீம் ஹாஜியார் அவர்கள். கடந்த நான்கு தசாப்தங்களில் இலங்கை முஸ்லிம்களது வரலாற்றுப் போக்கில் அவர் விட்டுச் சென்றுள்ள தடயங்கள் மிகப் பாரியவை. நாம் வாழும் காலத்தில், இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தில் ஒரு மகத்தான வரலாற்றுத் தேவையைப் பூர்த்திசெய்தவர் அவர். அவரது பரந்துபட்ட-பல்வேறு துறைகள் சார்ந்த சன்மார்க்க சமூகப் பணிகளின் தாக்கத்தினை எடைபோட்டுப் பார்ப்பது அவரது சமகாலத்தவர்களால் சாத்தியமானதன்று.

ஏனெனில், இத்தகைய பணிகளின் தாக்கம் அதன் முழுமையான வடிவில் புலப்படுவதற்கு எதிர்காலத்திற்காக நாம் காத்திருக்க வேண்டியுள்ளது. இலங்கை வாழ் மக்களுக்கு அவர் ஆற்றியுள்ள பெரும் பணிகளின் சிறப்புக்கூறுகள் சிலவற்றையும் அவரது பொதுவான ஆளுமையின் சிறப்பம்சங்கள் சிலவற்றையும் இங்கு தொட்டுக் காட்டுவது பொருத்தமாக அமைய முடியும்.

1933ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி ஓர் ஏழைக் குடும்பத்தின் ஆண் வாரிசாகப் பிறந்தவர் நளீம் அவர்கள். வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த அக்குடும்பத்தில் அவரது பாடசாலைக் கல்வி ஒரு பெரும் பிரச்சினையாக மாறியதால் ஐந்தாம் வகுப்போடு பாடசாலைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு குடும்பப் பொறுப்பைச் சுமப்பதில் தானும் பங்குகொள்ளத் தொடங்கினார்.

ஆனால், இந்நிலையிலும் பெற்றோர் அவருக்களித்த சன்மார்க்கப் பண்பாட்டுப் பயிற்சியின் மூலம் தன்னில் ஓர் இஸ்லாமிய ஆளுமையை உருவாக்கிக்கொண்ட அவர், எண்ணற்ற ஏழை மாணவர்களின் அறிவுக் கண்ணைத் திறந்து, எண்ணற்ற மஸ்ஜித்களை உருவாக்கி, இன்று இந்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் புகழ் பெற்று விளங்கும் ஓர் இஸ்லாமியக் கல்வி நிலையத்தைக் கட்டியெழுப்பி, இந்நாட்டு முஸ்லிம்கள் நன்றிப் பெருக்குடனும் மதிப்புடனும் அழைக்கும் "நளீம் ஹாஜியார்" ஆனார். அவரது வாழ்வு ஒரு தனி மனிதரின் வாழ்வன்று. மாறாக அது இலங்கை முஸ்லிம்களது அண்மைக் கால சமூக, கல்வி, கலாசார வரலாற்றோடு பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்த ஒரு வாழ்வு. சன்மார்க்கப் பணி, சமூகப் பணி, கல்விப் பணி, வணிக முயற்சி என தேசிய வாழ்வினதும் சமூக வாழ்வினதும் பல்வேறு களங்களை அது தழுவி நிற்கிறது.

இயற்கையிலேயே விரிந்த உள்ளமும், பரந்த மனப்பான்மையும், எல்லோரும் வாழல் வேண்டும் என்ற தாராள எண்ணமும் கொண்டிருந்தவர் நளீம் ஹாஜியார். வாழ்வின் எல்லா நிலையிலும் அவரது உள்ளத்தில் ஓர் அடிப்படைப் பண்பு மாறாமல் என்றும் நிலையாக நின்றது. அவரது ஆளுமையின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகவும் அது இருந்தது. தனது செல்வத்தைப் பிறருக்கு ஈந்து வாழ்வதில் அவர் அடையும் மகிழ்வும் நிம்மதியும் நிறைவுமே அப்பண்பாகும்.

வாழ்க்கையின் வசதிகள் பெருகப் பெருக அவரது ஆளுமையின் இச்சிறப்பியல்பும் வளர்ச்சி கண்டது. அவரது இத்தகைய உயர்ந்த பண்பின் காரணமாக எண்ணற்ற மாணவர்கள் கல்விப் பாக்கியம் பெற்றனர். அவர்களில் இன்று உயர்நிலையில் இருக்கும் பலர், எவருக்கும் தெரியாமல் தங்களுக்குப் புரியப்பட்ட அவரது உதவிகளை இன்றும் நன்றியுணர்வுடன் நினைவுகூர்கின்றனர்.

நூற்றுக் கணக்கான பருவப் பெண்கள் அவரது பெருந்தன்மை காரணமாக மணவாழ்வில் நுழைந்தனர். இலங்கையில் எந்தவொரு மூலையிலாவது மஸ்ஜிதுக்கான அத்திவாரம் நாட்டப்பட்டாலும், அதன் நிர்வாகிகள் அம்மஸ்ஜிதை நிறுவும் பணியில் நளீம் ஹாஜியாரின் உதவியையே எதிர்பார்த்தனர். அவரது இந்தப் பணியினால் இலங்கையின் பல பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான மஸ்ஜித்கள் நிறுவப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. நளீம் ஹாஜியார் அவர்களது ஆரவார மற்ற, அமைதியான- சன்மார்க்க, சமூகப் பணிகள் முஸ்லிம் சமூகத்தில் நாடளாவிய ரீதியில் நடைபெற்றன. மாணிக்கக்கல் வர்த்தகத்தின் மூலம் அல்லாஹ் தனக்கு வாரியிறைத்த செல்வத்தின் மூலமே இத்தனை பணிகளையும் அவர் புரிந்தார்.

அல்லாஹ்வின் பேரருளாலும், தனது கடுமையான உழைப்பு, தன்னம்பிக்கை, தளராத முயற்சியினாலும் இலங்கையில் மாணிக்கக் கற்களை பெறுவதற்காகவும் அவரை நாடி வந்தனர். ஆனால் இந்த எத்தகைய நிலையிலும் தான் பிறந்த மண்ணிலும் நாட்டிலுமே அவர் காலூன்றி நின்றார்.

வணிக வளர்ச்சியோடு சேர்ந்து, அவரது சமூகப் பணியும் சன்மார்க்கப்பற்றும் கூட வளர்ச்சியடைந்தன. வணிக முயற்சிகளைத் தாண்டிக்கூட அவை சிலபோது வளர்ந்தன. எத்தகைய முக்கியமான வியாபார முயற்சியாக இருந்தாலும், அது எத்தனை இலட்சம் ரூபாய்க்




இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஓராண்டு பூர்த்தி விழாவின்போது நளீம் ஹாஜியார் தலைமையுரை நிகழ்த்துகிறார். முஸ்லிம் சமூகத்தின் முதுபெரும் தலைவர்களான டாக்டர் எம்.ஸீ.எம். கலீல், சேர். ராஸிக் பரீத், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் ஆகியோருடன் அமைச்சர் ஏ.ஸீ.எஸ். ஹமீதும் காணப்படுகிறார்.

வர்த்தகத்துறையில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுக்கொண்ட நளீம் ஹாஜியாரின் வணிக முயற்சிகள் நாட்டின் எல்லையைத் தாண்டி பல்வேறு நாடுகளைத் தழுவி சர்வதேசப் பரிமாணத்தைப் பெற்றிருந்தன. நம்பிக்கையும் நாணயமும் மிக்க ஒரு மாணிக்க வியாபாரி என்ற வகையில் அவரது பெயர் மாணிக்கக்கல் வியாபாரத்தோடு தொடர்புடைய வட்டாரங்களில் பிரபல்யமாகியது.

இலங்கையில் எந்தவொரு பகுதியிலாவது பெறுமதியான மாணிக்கக்கல் கிடைத்தால், அதற்கு ஒரு நியாயமான விலையைப் பெறுவதற்காக மாணிக்க வியாபாரிகள் பேருவளைக்கு நளீம் ஹாஜியாரைச் சந்திக்க வந்தது போன்று, சர்வதேசப் புகழ்பெற்ற மாணிக்கக்கல் வர்த்தகர்கள் தலைசிறந்த, விலைமதிப்பு மிக்க மாணிக்கக் களை ஈட்டித் தந்தாலும் சமூகப் பணிக்கும் மார்க்கக் கடமைகளுக்கும் முன்னால் அதனை ஒரு பொருட்டாகவே மதிக்காத மனப்பண்பு அவரிடம் மிக உறுதியாகக் காணப்பட்டது. தனது மார்க்க அனுஷ்டானங்களுக்கும் சன்மார்க்க- சமூகப் பணிகளுக்கும் வியாபார முயற்சிகள் தடையாக அமைய என்றுமே அவர் அனுமதித்ததில்லை.

ஒரு சமயம் வெள்ளிக் கிழமை தினமொன்றில் ஜும்ஆவுக்குச் செல்லவேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவ்வேளை சப்ரகமுவப் பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள இரத்தினக்கல் வியாபாரிகள் சிலர் நளீம் ஹாஜியாரது வீட்டுக்கு வந்து விற்பனைக்காக தாம் கொண்டு வந்திருந்த இரத்தினக் கல்லை அவரிடம் காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கல் பேரம்பேசப்பட்டு ஒரு குறிப்பிட்ட விலையும் தீர்மானிக்கப்பட்டது. கல்லை வாங்கிய ஹாஜியார், பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் வரும்படியும் அப்பொழுது பணம் தருவதாகவும் கூறினார். அவர்கள் பிறகு வர முடியாதென்றும் காசை உடனே தரும் படியும் கேட்டனர். ''என்னிடம் காசு இல்லாமலில்லை. ஆனால் இப்பொழுது ஜும்ஆத் தொழுகைக் காகப் பள்ளிக்குப் போகும் நேரமாகி விட்டது. இந்த நேரத்தில் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் வைத்துக்கொள்வது எங்கள் மார்க்கப்படி கூடாது. நான் இப்பொழுது பள்ளிக்குப் போகப் போகிறேன். அதுவரைக்கும் நீங்கள் சென்று சாப்பிட்டுவிட்டு வாருங்கள். அப்பொழுது காசைத் தருகிறேன்'' என்று அவர்களிடம் நளீம் ஹாஜியார் வேண்டிக் கொண்டார். ஆனால் அவர்கள் இணங்கவில்லை. ஈற்றில் கல்லை வேண்டாம் என்று அவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு ஹாஜியார் தொழுகைக்குச் சென்றுவிட்டார். அவர்களும் திரும்பிச் சென்றுவிட்டனர்.

பின்னர் கல்லை இன்னும் சிலரிடம் காட்டிய அவர்கள், உரிய விலை கிடைக்காததால் மீண்டும் ஹாஜியாரிடமே வந்தனர். ஹாஜியாரும் அப்பொழுதுதான் பள்ளியிலிருந்து வந்து பகலுணவை முடித்துவிட்டு வெளி விறாந்தைக்கு வந்து கொண்டிருந்தார். வந்த வியாபாரிகள், ''ஹாஜியார் அவர்களே! இதோ கல். தாங்கள் கூறியபடி இப்பொழுது காசை வாங்கிக் கொள்கிறோம்'' என்று கூறி கல்லைக் கொடுத்தனர். அதற்கு, ''வியாபாரம் ஏற்கனவே முறிந்துவிட்டது. தாங்கள் முடியாதென்று கூறி கல்லையும் எடுத்துக்கொண்டு போய்விட்டீர்கள். அது முடிந்த கதை. இப்பொழுது நீங்கள் மறுபடியும் விலையொன்று சொல்ல வேண்டும். அப்பொழுது நான் விலையொன்று தருவேன்'' என்று ஹாஜியார் கூறினார். புதிய விலை சொல்லப்பட்டுப் பேரமும் பேசப்பட்டது. இறுதியில் வியாபாரம் முடிவுக்கு வந்தது. ஆனால் ஜும்ஆவுக்கு முன்னர் கேட்ட விலையை விடக் குறைவான விலைக்குக் கல் வாங்கப்பட்டது.

வியாபாரிகள் சென்றதன் பின்னர் அங்கிருந்தவர்களைப் பார்த்து ஹாஜியார் கூறினார்: ''நான் கல் வியாபாரிகளைத் திருப்திப்படுத்தாமல் அல்லாஹ்வைத் திருப்திப்படுத்த நாடியதால், இந்தக் கல்லை வாங்க முன்னரே அல்லாஹ் அதில் இலாபமொன்றைத் தந்துவிட்டான். எனவே யாரும் அல்லாஹ்வின் விசயத்தில் பேணுதலாக இருந்து கொள்ளுங்கள்- ஒரு போதும் தோல்வி ஏற்படாது.''

நளீம் ஹாஜியார் அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட பெரும் வெற்றிகளுக்கெல்லாம் மூல காரணம் அவர்களிடமிருந்த தக்வாவாகும். வியாபாரத்தில் உண்மை, நேர்மை, ஹராம்-ஹலால் விடயத்தில் பேணுதல், அல்லாஹ் தந்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தல் போன்ற விடயங்களில் ஹாஜியார் மிகக் கண்டிப்பாக நடந்துகொண்டார்கள். மேற்குறித்த சம்பவம் இதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு.

தன்னைப் போல் மற்றவர்களும் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற நோக்கில், வியாபாரம் செய்துகொள்ள வசதியற்றவர்களுக்கும் ஹாஜியார் இரகசியமாக முதலீடுகளைக் கொடுத்துதவினார். இது அவர் சமூகத்துக்காற்றிய மிகச் சிறந்த பங்களிப்புகளில் ஒன்றாகும். ஒரு கால கட்டத்தில் நடுத்தர மற்றும் சிறிய வியாபாரிகள் ஈடுபடும் (தரம் குறைந்த) ஆறுநூல் மாணிக்க வியாபாரம் மந்த நிலையை அடைந்திருந்தது. புனித ரமழான் மாதம் அண்மித்துக்கொண்டிருந்த காலம் அது. இந்நிலையில, தொழில் பாதிக்கப்பட்டிருந்த சிறு வியாபாரிகள் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் நளீம் ஹாஜியார் அவர்களிடம் ஆறுநூல் கற்களுக்காக வெளியிலிருந்து பெரும் கேள்வியொன்று வந்துள்ளதாகவும், அவர் அவற்றுக்கு நல்ல விலை கொடுத்து வாங்குவதாகவும் ஒரு செய்தி வெளியானது. இதனைக் கேள்வியுற்ற சிறு வியாபாரிகள் தம்மிடமிருந்த கற்களை எடுத்துக்கொண்டு நளீம் ஹாஜியாரிடம் ஓடினர். அவரும் அவற்றையெல்லாம் நல்ல விலைகொடுத்து வாங்கினார். ஆனால், நளீம் ஹாஜியார் அவர்களிடம் ஆறுநூல் கற்களுக்கான கேள்வியொன்று வந்ததாக வெளியாகியிருந்த தகவல் உண்மையல்ல என்றும், அது அவரே வேண்டுமென்று வெளியிட்ட செய்தி என்றும் பின்னர் தெரிய வந்தது. ஆறுநூல் வியாபாரம் ஸ்தம்பிதம் அடைந்துவிட்டதால் சின்ன வியாபாரிகள் மனம் தளர்ந்துவிடுவார்கள்.

எனவே அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஹாஜியார் செய்திருந்த ஏற்பாடாகவே அது இருந்தது. அவரால் வாங்கப்பட்ட கற்கள் யாவும் ஒரு புறத்தில் போட்டு வைக்கப்பட்டிருந்தன. ஏனெனில், அவ்வாறான ரகக் கற்கள் எளிதில் விற்கக்கூடியவையல்ல. அத்துடன் ஹாஜியார் கொடுத்த விலைகளுடன் ஒப்பிடும்போது, விற்றாலும் நஷ்டத்திலேயே விற்க வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நளீம் ஹாஜியார் அவர்களால் ஜாமிஆ நளீமிய்யாவிற்கான அத்திவாரக் கல் நடப்படுகின்றது.

எனினும், சிறு வியாபாரிகளை உற்சாகப் படுத்தி விட நளீம் ஹாஜியார் மேற்கொண்ட இக்காரியத்தின் பின்னாலிருந்த இதய சுத்தியை (இஹ்லாஸ்) அல்லாஹ் பொருந்திக் கொண் டான் போலும். சில நாட்களின் பின்னர் உண் மையாகவே அத்தகைய ஆறுநூல் கற்களுக்கு ஒரு வியாபாரி (Buyer)யிடமிருந்து கேள்வி வந்தது. ஆச்சரியப்படத்தக்க வகையில் அக்கற் கள் அனைத்தும் பாரிய இலாபத்துடன் மொத்த மாக விற்கப்பட்டன.

இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் நளீம் ஹாஜியார் அவர்கள் மாணிக்கக் கல் வர்த்தகத் துறையில் அடைந்த வெற்றிகள் மிக ஏராளம். ஆனால் அந்த அனைத்து வெற்றிகளையும் தனது சமூகத்தின் விடியலுக்காகவே அவர் பயன்படுத்தினார்.

அல்லாஹ் தனக்கு வழங்கிய செல்வத்தை அவனது திருப்தியைப் பெறும் வகையில் பயன் படுத்தல் வேண்டும் என்ற கொள்கையை தனது வாழ்வின் தத்துவமாகக் கொண்டிருந்த நளீம் ஹாஜியார் அவர்கள், ஏலவே குறிப்பிடப்பட் டது போன்று மஸ்ஜித்களை நிறுவுதல், ஏழைப் பெண்களுக்கு வாழ்வளித்தல், கல்வியைத் தொடர முடியாதோருக்குப் புலமைப் பரிசில் வழங்கல் போன்ற பணிகளில் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டு வந்தாலும், அவரது உள்ளத் தில் அவரது சமூக- சன்மார்க்கப் பணிகளுக்கு சிகரம் வைக்கும் ஒரு மகத்தான எண்ணம் கருக் கொண்டிருந்தது. அதுவே இஸ்லாமிய சன்மார்க் கக் கல்விக்கான கலாநிலையம் ஒன்றை உரு வாக்குதல் வேண்டும் என்ற எண்ணமாகும்.

அக்கலாநிலையம் ஏனைய பாரம்பரிய மத்ரஸாக்கள் போன்று அமையாமல், அறிவும் ஆராய்ச்சியும் சிந்தனையும் வளர்ச்சியடைந்து வரும் நவீன யுகத்திற்குப் பொருத்தமான மார்க்க அறிஞர்களை உருவாக்கும் கல்வி நிலையமாக அமைய வேண்டும் என்ற உணர்வு அவருக்கிருந்தது. இந்த வகையில், முஸ்லிம் சமூகத்தில் அப்போது காணப்பட்ட மிகச் சிறந்த கல்விமான்கள், மார்க்க அறிஞர்களது ஆலோ சனைகளோடும் நீண்ட உழைப்பின் பிறகும் உருவாக்கப்பட்டதே ஜாமிஆ நளீமிய்யா என்ற கல்வி நிறுவனமாகும்.

1973ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9ஆந் திகதி நிறுவப்பட்ட ஜாமிஆ நளீமிய்யா, மிகக் குறுகிய காலப் பிரிவிலேயே அதன் கல்வித் துறையில் தீவிர வளர்ச்சி கண்டது. அதன் நூலகம், வெளி யீட்டுப் பணியகம், ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய துறைகள் காத்திரமான பணிகளில் ஈடுபட்டு முஸ்லிம் சமூகத்துக்கு சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளன. இவ்வாறு மிகக் குறுகிய காலப்

**அல்லாஹ் தனக்கு வழங்கிய செல்வத்தை அவனது திருப்தியைப் பெறும் வகையில் பயன்படுத்தல் வேண்டும் என்ற கொள்கையை தனது வாழ்வின் தத்துவமாகக் கொண்டிருந்தவர் நளீம் ஹாஜியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவில் இத்தகைய சிறப்பான வளர்ச்சியை அது காண்பதற்கு அடிப்படைக் காரணம் அதனை நிறுவிய நளீம் ஹாஜியாரின் தூய்மையான சிந்தனையும், அல்லாஹ்வின் திருப்தி ஒன்றையே நாடி அவர் மேற்கொண்ட அயரா உழைப்பும் தியாகமுமாகும்.

இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு தான் செய்த முக்கிய பங்களிப்பாகவும், தனது வாழ்வில் தான் புரிந்த மாபெரும் பணியாகவும் ஜாமிஆ நளீமிய்யாவின் உருவாக்கத்தை அவர் மனநிறைவோடும் பெருமிதத்தோடும் நோக்கினார். உண்மையில் இந்த நாட்டிலும் இஸ்லாமிய உலகிலும் நளீம் ஹாஜியார் என்ற நாமத்துடன் இணைத்துப் பேசப்படும் நிறுவனமாக இது தலைநிமிர்ந்து நிற்கிறது.

இதுதவிர, இலங்கை முஸ்லிம்களின் பல்கலைக்கழக உயர் கல்விக்குத் துணைபுரியவென அவர் உருவாக்கிய இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமும் அவரது மிகப் பெரும் சாதனையாகும். 1981ஆம் ஆண்டு அறிஞர் பெருமக்களின் துணையுடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கத்தின் தாக்கமும் செல்வாக்கும் முஸ்லிம்கள் வாழும் கிராமங்கள், பட்டினங்கள் எங்கும் பரவியது. நாடு முழுவதிலும் இவ்வியக்கம் நடாத்திய ஏராளமான வகுப்புக்களால் பயனடைந்து பல்கலைக்கழகப் பிரவேசம் பெற்ற மாணவர்களுக்கு இயக்கத்தின் புலமைப் பரிசில் திட்டம் துணைநின்றது.

இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் இடைக்கிடை தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் அறிமுகக் கூட்டங்கள், முஸ்லிம் சமூகத்தின் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் கூட்டங்களாகவே அமைந்தன. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் முதன்முதலாக நாடெங்கும் திரிந்து, கல்விக்காகப் பிரசாரம் செய்து, முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு புதிய தலைமைத்துவத்தை நளீம் ஹாஜியார் வழங்கினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சமூகத்தில் ஒலித்த சித்திலெவ்வையின் குரலின் தொடர்ச்சியாக அவரது குரல் ஒலித்தது.

நளீம் ஹாஜியார் தோற்றுவித்த இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் கல்விப் பணி, இலங்கை முஸ்லிம்களுக்கான இக்ரஃ தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்பட்டதோடு அதன் உச்ச நிலையை அடைந்தது. நளீம் ஹாஜியாரின் கல்விப் பணியின் ஒரு சிகரமாக ஜாமிஆ நளீமிய்யா விளங்குவது போன்று அதன் இன்னொரு சிகரமாக இக்ரஃ தொழில்நுட்பக் கல்லூரி விளங்குகிறது. முஸ்லிம் மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கும் நோக்கோடு நிறுவப்பட்டிருந்த நவீன வசதிகளைக் கொண்ட ஜித்தா இக்ரஃ நிறுவனத்தினதும், இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தினதும் இணைப்பில் 1992ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்தொழில் நுட்பக் கல்லூரியானது இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றிலும், நளீம் ஹாஜியாரின் கல்வி- கலாசார- பண்பாட்டுப் பணியிலும் ஒரு முக்கிய மைல் கல்லாக அமைந்தது.

இலங்கை முஸ்லிம்களது வரலாற்றினை ஆய்வுபூர்வமாகத் தொகுக்கும் பணியை ஆரம்பித்து, அதற்கு உற்சாகமும் தூண்டுதலும் அளித்து, தனது செல்வத்தை வாரி வழங்கி அது நூலுருப் பெறத் துணைநின்றமை நளீம் ஹாஜியார் இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய மற்றொரு பாரிய பங்களிப்பாக அமைந்தது.

நளீம் ஹாஜியாரின் சன்மார்க்க- சமூகப் பணியானது ''இலங்கை முஸ்லிம்கள்- பூர்வீகப் பாரம்பரியத்திற்கான பாதைகள்'' என்ற இந் நூலின் பிரவேசத்தோடு கலாசாரப் பண்பாட்டுப் பரிமாணத்தையும் பெற்றது. இந்நாட்டில் இறை வணக்கத்திற்காக பல மஸ்ஜித்கள் கட்டப்பட துணைநின்ற அவர்... நூற்றுக்கணக்கான மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்துவிட கல்விப் பணி புரிந்த அவர்... இந்நூல் தொகுப்பிற்குத் துணைநின்றதன் மூலம், இந்நாட்டில் முஸ்லிம்களின் வரலாற்று, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியம் அணைந்துவிடாது பேணிப் பாதுகாக்கும் பணியை ஆரம்பித்து வைத்தவராக வரலாற்றில் பிரவேசிக்கிறார்.

நளீம் ஹாஜியார் ஒரு பட்டதாரியல்ல. பாடசாலைக் கல்வியை ஐந்தாம் வகுப்புடன் முடித்துக் கொண்டவர். ஆனால் தனது தனித்துவமான ஆளுமை மூலம் சமூகத்தின் பல்வேறு தளங்களிலும் அவர் ஏற்படுத்திய அதிர்வுகள் பல்வேறு தரப்பினராலும் வேண்டப்படும் மனிதராக அவரை முன்தள்ளின.

இந்த வகையில் சர்வதேசப் புகழ்பெற்ற இஸ்லாமியப் பல்கலைக்கழகங்கள், இஸ்லாமிய நிறுவனங்களின் மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றுக்கு அவர் அழைக்கப்பட்டார். சர்வதேச மட்டத்தில் புகழ்பெற்ற அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கல்விமான்கள், இஸ்லாமிய அழைப்பாளர்கள், ஆட்சியாளர்கள் முதலியோரைச் சந்திக்கும் வாய்ப்பையும், அவர்களில் சிலரோடு சில முக்கிய பணிகளில் ஒன்றாக ஈடுபட்டு உழைக்கும் வாய்ப்பையும் பெற்றார். தேசிய வாழ்விலும்கூட பல அரசியல் தலைவர்கள், பிரமுகர்களுடன் தொடர்புகொள்ளும் சந்தர்ப்பங்களையும் அவர் பெற்றிருந்தார். இந்த அனைத்துவிதத் தொடர்புகளையும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் பொது நலன்களுக்காகவே அவர் பயன்படுத்தினார்.

நளீம் ஹாஜியாரின் ஆளுமையில் காணப் பட்ட ஒரு சிறப்பம்சம் அவரது தெளிவான சிந்தனையாகும். எந்தவொரு விடயம் பற்றியும் ஆழமாகச் சிந்தித்து, தனக்கென ஒரு கருத்துத் தெளிவைப் பெற்றுக் கொள்ளும் பண்பு அவரில் காணப்பட்டது. எனவேதான், அன்றாட வாழ் வின் தனிப்பட்ட நிகழ்வுகளாயினும், தேசிய வாழ்வில் நிகழும் சில பாரதூரமான நிகழ் வுகளாயினும், வணிகத்துறையில் நிகழக்கூடிய அதிர்ச்சியூட்டும் சம்பவங்களாயினும் அவர் நிலைகுலைந்ததில்லை. இத்தகைய நிலை குலையா நெஞ்சுறுதியை அவர் பெற்றிருக்கக் காரணம் அவரது சிந்தனைத் தெளிவும், அல் லாஹ்வின் மீது அவர் கொண்டிருந்த உறுதி யான நம்பிக்கையும் வாழ்க்கையின் நோக்கம் பற்றிய தெளிவான பார்வையுமாகும்.

நளீம் ஹாஜியார் பெரிய அளவில் வாசிப்புப் பழக்கம் கொண்டவராக இருக்கவில்லை. மத் ரஸாவுக்குச் சென்று இஸ்லாமியக் கலைகளைப் பயிலவுமில்லை. இருப்பினும், சிலபோது ஆலிம்கள் பலராலும் புத்திஜீவிகளாலும் இலகு வில் புரிந்துகொள்ள முடியாத- ஜீரணித்துக் கொள்ள முடியாத விடயங்களைக்கூட எளிதில் அவரால் புரிந்துகொள்ள முடியுமாக இருந்தது. தரீக்காவின் செல்வாக்கில் வளர்ந்த அவரால் ஸலபிய சிந்தனையை ஏற்கவும் கவனமாகப் புரிந்துகொள்ளவும் முடிந்தது.

ஓரளவு இஸ்லாமிய சிந்தனை பரந்துவிட்ட இன்றைய நிலையில் இது சாத்தியமாகலாம். ஆனால், கால் நூற்றாண்டுக்கு முன்னரேயே இதனை அவர் புரிந்து கொண்டார் என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இது மாத்திரமன்றி, நவீன இஸ்லாமிய எழுச்சி யையும்கூட அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. பேரறிஞர் மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி எழுதிய 'ரித்தா லா அபா பக்ர லஹா' ('காலத்தின் அறைகூவலும் முஸ்லிம்களின் பணியும்' என மொழிபெயர்க்கப்பட்டது) என்ற நூலின் கருத்தை தான் சரிவரப் புரிந்ததாகவும், அக்கருத்தே ஜாமிஆ நளீமிய்யா உருவாக்கப்படு வதற்கு வழி கோலியதாகவும் அவர் பல தடவை கூறியிருக்கிறார்.

இவ்வாறு ஆழ்ந்த பிரக்ஞையும் சமூகப் பற்றும் கொண்டவராக அவர் திகழ்வதற்கு அல்லாஹ் அவருக்களித்த மிகப் பெரும் பேறு களுள் ஒன்றாக அமைந்தது ஆரம்பம் முதலே அவருக்குக் கிடைத்த சான்றோர் நட்பாகும். எப்போதும் அறிஞர் பெருமக்களைச் சார்ந்து, அவர்களை கௌரவித்து, அவர்களுடன் அளவ ளாவி, ஆலோசனை பெற்றுச் செயற்படும் அவரது உயர்ந்த பண்புதான் இதனையெல்லாம் அவருக்குச் சாத்தியப்படுத்தியதெனலாம்.

இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச் சிக்காக 1880ஆம் ஆண்டளவில் சித்திலெவ்வை யும் அவரது முஸ்லிம் நேசனும் ஆற்றிய பணி யின் தாக்கத்தினை ஒரு நூற்றாண்டு கழித்தே அவதானிக்கவும் உணரவும் முடிந்தது. எனவே தான், தனது சிந்தனையின் தாக்கத்தினை, அவரது காலப் பிரிவிலன்றி, மிக நீண்ட காலம் கழித்தே சமூகம் உணரும் காலகட்டம் தோன்றும் என்பதை தெளிவாக விளங்கிய அல்லாமா இக்பால், தன்னைப் பற்றி 'நான் நாளைய கவிஞன்' எனக் குறிப்பிட்டார். இதே போன்றே நளீம் ஹாஜியாரது பணிகள் எமது சமகாலத்தில் இடம்பெற்றிருந்தாலும் அவர் நாளைய மனிதர். எனவே, இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு அவர் ஆற்றிய பணிகள், பங்களிப்புகள் என்ப வற்றின் தாக்கத்தினையும் செல்வாக்கினையும் மதிப்பீடு செய்யும் பொறுப்பினை எதிர்கால வரலாறு ஏற்கட்டும்.

அகில உலகங்களையும் படைத்து இரட்சித் துக் கொண்டிருக்கும் ஏகனான அல்லாஹ் நளீம் ஹாஜியாரது செயல்களைப் பொருந்திக் கொண்டு, பிர்தவ்ஸ் என்ற உயர்ந்த சுவனத்தை அவருக்கு வழங்குவானாக!

''ஒப்பற்ற ஆத்ம பலம் கொண்டோரே எல் லாக் காலத்திலும் மனித இனத்தின் வழிகாட்டி களாய் இருந்து வந்திருக்கின்றனர்; இருக்கவும் போகின்றனர். இவர்கள் ஏந்திநிற்கும் புனித நெருப்பில்தான் அனைத்து அறிவியல்களும் புடம்போடப்படுகின்றன- அதன் வெளிச்சத்தில் தான் பயணத்திற்கான வழித்தடம் தெளிவாகி றது. அதுதான் மிக உன்னத இலட்சியத்தை நோக்கிய நகர்வைத் தயார் செய்கிறது.

இத்தகைய மனிதர்கள் மனித வரலாற்றில் மிக அரிதாகவே தோன்றுகின்றனர். எனினும், அவர்களே போதுமாகவும் இருக்கின்றனர். ஏனெனில், இப்பிரபஞ்சத்தைக் கண்காணிக்கும் அந்த ஒரே சக்திதான் இவர்களைச் சிருஷ்டிக்கி றது. அவசியம் என்று தீர்மானிக்கப்பட்ட பொழுதில் உலகிற்கு அனுப்பி வைக்கிறது.'' (ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்)

**நன்றி:**


1. நளீம் ஹாஜியார் வாழ்வும் பணியும், கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி.
2. Souvenir to Commemorate the Felicitation of M.I.M. Naleem Hajiar- Naleem Hajiar Felicitation Committee, Chinafort, Beruwale.
3. Souvenir to Commemorate the Felicitation of M.I.M. Naleem Hajiar- (Rabitha An- Naleemiyyeen)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளீம் ஹாஜியாரின் வாழ்விலிருந்து...


- 1934.4.4: பேருவளையில் மதிப்புமிக்க குமுஸ்தர் குடும்பத்தைச் சேர்ந்த முஹம்மது இஸ்மாயீல், ஓபிசர் குடும்பத்தைச் சேர்ந்த சரீபா உம்மா தம்பதியினரின் மகனாகப் பிறந்தார். ஏழ்மையின் காரணத்தினால் பள்ளி செல்லும் காலங்களில் தாய் திரித்த கயிறுகளை கடைகளில் விற்று வந்தார்.
- பின்பு பள்ளிக்கு முற்றுப்புள்ளி வைத்து மண் வெட்டும் தொழிலில் ஈடுபட்டார். பின்பு எகலிய கொடயில் தனது மாமனார் வாஹித் ஹாஜியாருடன் மாணிக்கக்கல் விற்பனையில் ஈடுபட்டார்.
- 1954 – இக்காலப்பிரிவில் இவர் இலங்கை வந்த எலிசபெத் மகாராணியை குதிரைப் பந்தயத்திடலில் பல்லாயிரம் பேருள் ஒருவராய்ச் சென்று தரிசித்தார்.
- 1958 – சீனன் கோட்டையைச் சேர்ந்த அப்துல் வதூத் சித்தி ரபீகா அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்தார்.
- 1960 – ஜூலை முதலாவது ஹஜ் பயணம்
- **வாழ்வில் புதுத் திருப்பம்**
- இதனைத் தொடர்ந்து இலங்கை மாணிக்கக் கல் வியாபாரத்தில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார்.
- 1963 – நளீம் ஹாஜியார்- Dr. சுக்ரியுடன் முதலாவது சந்திப்பு கண்டி குயின்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.
- 1965 – பேருவளையில் நளீம் ஹாஜியார் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
- 1970 – சீனன் கோட்டை [பேருவளை] பள்ளிச் சங்கத் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

  நளீம் ஹாஜியார் விளையாட்டுத்திடல் திறந்து வைப்பு
- 1972.04.24 வியாழன் காலை 6.30 மணியளவில் தக்பீர் முழக்கத்துடன் நளீமிய்யாவுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- 1972.07.11 இலங்கை மாணிக்கக் கல் கூட்டுத் தாபனம் திறந்துவைக்கப்பட்து.
- 1973.08.19 ஞாயிற்றுக்கிழமை பகல் 2.30 மணியளவில் ஜாமிஆ நளீமிய்யா திறந்த வைக்கப்பட்டது.
- 1974 – இலங்கை அரசாங்கத்துக்கு 150,000 ரூபாவை அந்நியச் செலாவணியாக வழங்கினார். இது பற்றி தினகரன் 1974.08.15, Time of Ceylon 1974.08.19 செய்தி வெளியிட்டன.
- 1976 – பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஹாஜியாரின் பேருவளை இல்லத்திற்கு விஜயம் செய்தார்.
- 1980 – ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் அழைப்பின் பேரில் எலிசபெத் மகாராணியை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தார்.
- அவ்வேளை பெறுமதியான மாணிக்கக் கல்லை அன்பளிப்பு செய்தார்.
- 1981 – இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தை ஸ்தாபித்தார். மேலும் புலமைப் பரிசில் திட்டத்தையும் ஆரம்பித்தார்.
- 1981/1982 – காலப்பகுதிகளில் 97 பேருக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.
- 1983 – ஜாமிஉல் அஸ்ஹரின் 1000 வருட பூர்த்தி விழாவில் நளீம் ஹாஜியாரும் Dr. சுக்ரியும் கலந்து கொண்டார்கள்.
- 1984.4.15 இக்ரஃ தொழிநுட்பக் கல்லூரியை நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஜித்தாவில் கைச்சாத்திடப்பட்டது.
- 1985 – இக்கல்லூரிக்கான அடிக்கல் ஹாஜியாரினால் நடப்பட்டது
- 1987 – கொழும்பில் அமைந்துள்ள சுச்சரித கட்டடம் ஹாஜியாரின் சொந்த செலவில் கட்டப்பட்டது.
- 1992.4.18 இக்ரஃ தொழிநுட்பக் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது.
- 1993.9.12 நளீமிய்யாவின் 20 வருட நிறைவு விழாவும் 4வது பட்டமளிப்பு விழாவும் ஜாமியாவின் கலை, கலாசார கண்காட்சியும், நளீம் ஹாஜியார் வாழ்வும் பணியும், எனும் நூலும் வெளியிடப்பட்டது.
- 1997 – நளீமிய்யா பழைய மாணவர் அமைப்பினால் ஹாஜியார் சேவை நலன் பாராட்டு விழா நளீமிய்யா மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

  பள்ளிச் சங்கத் தலைவர் பொறுப்பிலிருந்து இராஜினாமா செய்தார்.
- 1998 – பேருவளை பொது மக்களால் சேவை நலன் பாராட்டு விழா நடாத்தி கௌரவிக்கப்பட்டார்.
- 2005 – தஃவா அகடமிக்கான அடிக்கல்லை நாட்டினார்.
- 2005.9.27 கொழும்பு தனியார் மருத்துவமனையில் வபாத்தானார் [இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்]
- மறுநாள் பகல் நளீமிய்யா வளாகத்தில் அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் சமூக நிறுவனங்கள்

## ஒரு முகாமையியல் நோக்கு



அஷ்ஷெய்க் றவூப் ஸெய்ன் (நளீமி)
(M.Phil)
-அபிவிருத்திக் கற்கைகள் நிறுவனம்-

மூன்று தசாப்த போருக்குப் பிந்திய இலங்கையில் ஒரு குறுக்குச் சந்தியில் முஸ்லிம்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். இதற்குப் பின்னர் எந்தத் திசையில் நகர்வது என்பதே முஸ்லிம்கள் முன்னாலுள்ள பெரிய கேள்வியாகும். கடந்த கால இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகள், சவால்களுக்குப் பின்புலமாக மூன்று அடிப்படைக் காரணிகள் இருந்து வருகின்றன.

1. இலங்கையில் நாம் ஒரு சிறுபான்மைச் சமூகம்
2. சிதறுண்ட குடியமைப்பைக் கொண்டுள்ளோம்.
3. பாரிய நிறுவனப் பிளவுகளுடன் வாழ்கின்றோம்

இக்காரணிகளின் விளைவாக அரசியல், பொருளாதார, கலாசார ரீதியான அறைகூவல்களுக்கு முகங் கொடுக்கின்றோம். இத்தனை பிரச்சினைகள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் முஸ்லிம் சமூகத்தில் எண்ணிறைந்த சமூக நிறுவனங்கள் செயல்பட்டு வருவது நம்பிக்கையளிக்கின்றது. எமது சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விட அதிகளவிலான சமூக நிறுவனங்கள் (Social Organization), அமைப்புகள் (Institutes), இயக்கங்கள் (Movement), சமூக நல தொண்டர் நிறுவனங்கள் (NGO), நலன்புரி அமைப்புகள்

**நிறுவனங்களும் அதன் அங்கத்தவர்களும் பாரம்பரிய சட்டகங்களுக்குள் தம்மை முடக்கிக் கொண்டு, எப்போதும் ஒரே வகையில் சிந்திக்கின்ற நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தமது உறைநிலையை உடைத்து தேக்கத்தைக் கலைக்கலாம். புதிய புதிய புத்தாக்க (Creativity) வழிகளில் சிந்திக்கப் பழகல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(Welfare Organizations) என ஏகப்பட்ட நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் அரசியல் பகுதித் தலைவர் கலாநிதி ஜயதேவ உயங்கொட அவர்கள் சமீபத்திய கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்த கருத்து எனக்கு நினைவுக்கு வருகின்றது.

“முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை விட அவர்களுக்கு மத்தியில் அனேகமான சமூக நிறுவனங்கள் காணப்படுகின்றன. ஆனால், அவர்களது சமயத்தைப் பற்றி பெரும்பான்மைச் சமூகம் அறிந்து வைத்திருப்பது மிகச் சொற்பமே. எனக்கு நிறைய முஸ்லிம்களுடன் தொடர்புள்ளது. நான் முஸ்லிம்களுடன் நெருங்கிப் பழகுபவன். எனினும், முஸ்லிம்களின் இஸ்லாம் பற்றி நான் இரண்டு விடயங்களையே அறிந்து வைத்திருக்கிறேன். முஸ்லிம்களுக்கு விரும்பியளவு மாட்டிறைச்சியை உண்ண முடியும். அதேபோன்று முஸ்லிம் ஒருவருக்கு ஏழு திருமணங்கள் முடிக்கலாம் என்பனவே அவ்விரண்டு விடயங்களாகும்.''

உயங்கொடயின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்ன? குறைந்தபட்சம் அவர் அறிந்து வைத்துள்ள இவ்விரண்டு தகவல்களேனும் சரியானவையல்ல என்பதுதான். இது நமது சமூகத்தின் தவறே ஒழிய ஜயதேவவின் தவறல்ல. ஏனெனில், கண்டி ராஜ்ய மன்னர்களின் காலத்தில் இருந்து முன்னாள் எம்.எச்.எம். அஷ்ரப் வரை எமது அரசியல் தலைவர்கள் அதிகாரபீடங்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தனர். அரசாங்கத்தின் ஆலோசகர்களாகவும் விசுவாசிகளாகவும் நம்பிக்கைக்குரிய பிரஜைகளாகவும் இருந்தனர்.

ஸ்ரீ விக்ரம ராஜ சிங்கனின் காலத்தில் வெளிநாட்டுத் தூதுவராக இருந்தவர் அபூ உஸ்மான் எனும் முஸ்லிம் ராஜ தந்திரியே. அரண்மனைகள், சமயலறை, குளியலறை, பாதுகாப்புத் துறை, நீதித்துறை அனைத்திலும் மிகப் பெரும் பதவிகளை முஸ்லிம்கள் வகித்து வந்தனர். (இவை சுவாரஷ்யமான ஆய்வுக்குரிய விடயங்கள்) ஆனால், பெரும்பான்மைச் சமூகத்துக்கு நெருக்கமாக நாம் வாழ்ந்து வந்தபோதும் 1000 ஆண்டு கால சகவாழ்வையும் சௌஜன்யத்தையும் பேணி வந்தபோதும் எமது கையில் உள்ள இஸ்லாம் எனும் தூதை அவர்களுக்கு சரியாக நாம் எத்திவைக்கவில்லை. இது வரலாறு முழுவதிலும் இடம்பெற்றுள்ள மாபெரும் துரதிஷ்டமாகும்.

இந்த இடத்தில்தான் முஸ்லிம் சமூக நிறுவனங்களின் பணிகள், பங்குகள் பற்றிய மதிப்பீடு எமக்கு தேவைப்படுகின்றது. அல் ஜீரியாவின் இஸ்லாமிய சிந்தனையாளர் பேராசிரியர் மாலிக் பின் நபி அவர்கள் கூறுவது போன்று, ''சுயவிமர்சனம் இல்லாத தனிமனிதனும் சுயமதிப்பீடு இல்லாத சமூகமும் தனது அடையாளத்தை இழப்பதோடு, இறுதியில் எவ்வித சாதனையும் இன்றி தேங்கிப் போய்விடும்.''



எந்தவொரு செயற்பாடும் தொலை நோக்கிற்கு உட்பட்டதாக அமைய வேண்டும். அப்போதுதான் நிறுவன இலக்குகளை எட்ட முடியும். நமக்கு எது முடியுமோ அதைச் செய்வது என்பதை விடுத்து நாம் எதைச் செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்தாக வேண்டும் என்பதில் நிறுவனங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இன்று முஸ்லிம் சமூக நிறுவனங்கள் எண்ணிக்கையில் உயர்ந்துள்ளன. கணித ரீதியான இவ்வதிகரிப்பு மாத்திரம் பொது மக்கள் பரப்பினுள் தாக்கம் செலுத்தப் போதுமானதல்ல. பாரிய நிறுவனப் பிளவுகள் முஸ்லிம் சமூகத்தின் பொதுக் குறிக்கோள்களையும் இலட்சியங்களையும் அடைவதற்கு பெரும் தடையாகவுள்ளன. முஸ்லிம் சமூக நிறுவனங்களிடம் நான் அவதானிக்கும் சில குறைபாடுகளைப் பின்வருமாறு அடையாளப்படுத்த விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 01. மிகைச் சுமை நோய் (Over Load Disease)

நிறுவனங்களோ அதன் தலைமைகளோ தமது வளங்கள், வளவாளர்களின் மட்டுப்பாடுகளை அறிந்தும் தமது ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட பணிகளை சுயமாக சுமத்திக் கொள்வதே மிகைச்சுமை நோய் எனப்படுகின்றது. சில இடங்களில் நிறுவனத் தலைமைகள் அனைத்துப் பொறுப்புகளையும் சுமக்க முற்படுவதைக் காண்கிறோம். இது தலைமைக்குப் பொருத்தமற்றது என்பது மாத்திரமல்ல, நிறுவனங்கள் மந்தமாகி, நோயுற்று முறிந்து சாய்ந்து விடவும் காரணமாகி விடும்.

இதுபோன்றுதான் இன்று முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் செயற்படும் நிறுவனங்கள் பெரும்பாலும் சமூக வேலைத்திட்டங்கள் பற்றிய அனைத்துப் பணிகளையும் தனித்து நின்று ஆற்றிவிடலாம் என்று மனப்பால் குடிக்கின்றன. யதார்த்தத்திற்கு இது மிகவும் புறம்பான ஓர் அணுகுமுறையாகும். ஏனெனில், ஒரு நிறுவனத்தின் தலைவர், ஏனைய அங்கத்தவர்களிடையே வேலைப் பகிர்வு எப்படி அவசியமோ அது போன்று பல்வேறு சமூக நிறுவனங்களிடையேயும் பணிப் பகிர்வு அவசியம். எல்லாவற்றையும் நாமே அல்லது நமது நிறுவனமே செய்ய வேண்டும் என எண்ணுவது நடைமுறைக்குப் பொருந்தாது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையும் வளவாளர்களையும் கொண்டுள்ள நிறுவனங்கள் இப்படி சிந்திப்பது அதன் விளைதிறனை (Effectiveness) நிச்சயம் பாதிக்கும்.

### 02. இயைபாக்கம் இன்மை (Non cordinative)

முஸ்லிம் சமூகத்தில் பரவலாகவும் திரட்சியாகவும் செயற்படும் நிறுவனங்களிடையிலேனும் ஒரு வலைப் பின்னலை நாம் உருவாக்கவில்லை. இயைபாக்கமும் கூட்டுறவும் தேவை. ஏனெனில் இன்றைய முஸ்லிம்கள் கல்வி, சமூக விவகாரம் அரசியல் ஆகிய தளங்களில் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு பயனுறுதி வாய்ந்த தீர்வுகளைக் கண்டடைய வேண்டுமாயின் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம். ஒவ்வொரு அமைப்பும் மூடிய அறைகளினுள்ளே அடைபட்டுக் கொண்டு தமக்கு வசதியானதை மட்டும் பேசிக் கொண்டிருக்கின்றன.

### 03. இரண்டாம் வரிசை தலைமைத்துவம் பற்றிய சிரத்தையின்மை (Second Raw Leadership)

ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைமை எப்போதும் தனக்குப் பின்னர் வரக் கூடிய அடுத்த தலைவர் யார் என்பதில் மிகவும் அக்கறையுள்ளவராக இருக்க வேண்டும். அவரை மானசீக ரீதியாகத் தயார்படுத்துவதில் சிரத்தை காட்ட வேண்டும். ஏனெனில், நிறுவனங்கள் யுக முடிவுவரை வாழ வேண்டியவை. தலைவர்கள் என்போர் தனிநபர்கள். அவர்கள் மறையலாம் அல்லது பிரிந்து செல்லலாம். ஆனால், நிறுவனங்கள் வாழ வேண்டும் என்ற சிந்தனை தலைமைக்கு அவசியமாகும்.

ஒரு நிறுவனத்தின் தொலைநோக்கை (Vision) யும் அதற்கமைவான பணியையும் (Mission) முதற் தலைவர் விட்ட இடத்திலிருந்து தொடங்குவதுதான் இரண்டாவது வரிசைத் தலைமைகளின் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆனால், இன்று முஸ்லிம் சமூகத்தில் என்ன நடக்கின்றது. விட்ட இடத்திலிருந்து தொடரும் முயற்சிகள் இங்கு இடம்பெறவில்லை. ஏனெனில் ஒவ்வொரு தலைமையும் தொங்குகின்றனர். முடித்து வைப்பதற்கு யாரும் இல்லை.

### 04. எப்போதும் ஒரே மாதிரியாய் சிந்தித்தல் (Sterio Type Thinking)

நிறுவனங்களும் அதன் அங்கத்தவர்களும் பாரம்பரிய சட்டகங்களுக்குள் தம்மை முடக்கிக் கொண்டு, எப்போதும் ஒரே வகையில் சிந்திக்கின்ற நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தமது உறைநிலையை உடைத்து தேக்கத்தைக் கலைக்கலாம்.

புதிய புதிய புத்தாக்க (Creativity) வழிகளில் சிந்திக்கப் பழகல் வேண்டும். நாம் கற்பனை செய்யும் உலகம் எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை. மாற்றம் என்பதைத் தவிர அனைத்தும் மாறிக் கொண்டிருக்கின்ற யுகம் இது! மாற்றங்களை கவனமாக உள்வாங்கிக் கொள்ளவும் நெகிழ்வுகளை ஏற்றுக் கொள்ளவும் நாம் தயாராக இருக்க வேண்டும். இதற்கு வெளியிலிருந்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் உள்வாங்க வேண்டும். தமது அமைப்பு என்ற சட்டகங்களுக்குள்ளேயே சிந்திப்பதால் புத்தாக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

### 05. ஆய்வு மற்றும் திட்டமிடலில் கவனக் குறைவு (Research & Planning)

சமூக மாற்றத்தை இலக்காகக் கொண்டு செயல்படும் சமூக நிறுவனங்கள் ஆய்விலும் திட்டமிடலிலும் கவனம் குவிக்க வேண்டும். அல்லது ஆய்வுகளிலிருந்து பயன்பெற வேண்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். குறைந்தபட்சம் ஒரு தகவல் வங்கியேனும் (Data Base) இருக்க வேண்டும். எந்த சமூகத்தை நாம் பலப்படுத்த (Empowering) அல்லது வழிப்படுத்த (Guiding) முயல்கின்றோமோ அந்த சமூகம் பற்றிய அடிப்படையான தரவுகளும் தகவல்களும் புள்ளிவிபரங்களும் அவசியமானவை. அப்போதுதான் சமூகத்தின் யதார்த்தமான பிரச்சினைகள் பற்றிய புரிதலை நாம் வளர்த்துக் கொள்ளலாம். அதற்கமைவான வேலைத் திட்டங்களைத் தொடங்கலாம்.

### 06. தொலைநோக்கிற்கு இசைவான பணிகளின் போதாமை (Lack of Vision -Oriented task)

எந்தவொரு நிறுவனத்திற்கும் அல்லது அமைப்புக்கும் ஒரு தொலைநோக்கு இருக்கலாம். அது அச்சிடப்பட்டு அல்லது சுவர்களில் வண்ண வண்ண நிறங்களில் வரையப்பட்டிருக்கலாம். அது சாதனையல்ல, குறிப்பிட்ட தொலை நோக்கிற்கு அமைவானதாக அதன் வேலைத் திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். எந்தவொரு செயற்பாடும் தொலை நோக்கிற்கு உட்பட்டதாக அமைய வேண்டும். அப்போதுதான் நிறுவன இலக்குகளை எட்ட முடியும். நமக்கு எது முடியுமோ அதைச் செய்வது என்பதை விடுத்து நாம் எதைச் செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்தாக வேண்டும் என்பதில் நிறுவனங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இந்தக் குறைபாடுகள் குறித்த சுயவிமர்சனம் எமது சமூக நிறுவனங்களுக்கு மிகவும் இன்றியமையாதது. இவை நிவர்த்தி செய்யப்படுமாயின் நிறுவனத் தொழிற்பாடுகள் மென் மேலும் வினைத் திறனுள்ளதாக மாறும் என்று நம்பலாம்.



வீரமா அபூ பக்கர் உமர் - உஸ்மான் அலீ
வீற்றிருந்த உம்மதிதுவே!
தீரமாம் நபித் தோழர் பாரெங்கும் சுற்றியே
தாழ்வுநிலை அகற்றவேண்டி,
தாரகை போன்றெங்கும் ஒளிவீசும் ஜோதியாய்த்
திகழ்ந்தனரும் எமக்காகவே!
வீரர் பரம்பரை வீழ்வுற்று வாடுதல்
என் மறையே சொல்லாயோ?

மேனாடு விஞ்ஞான வீழ்ச்சியிற் சிக்குண்டு
மாண்பற்று வாழ்ந்தகாலை
கீணாட்டு ஜோதியாம் இஸ்பெயின் தலைநகர்
கூப்பிட்டழைத்ததென்றோ?
வாணாட்கள் வல்லோனுக் கர்ப்பணம் என்று நாம்
வாய்விட்டுக்கூறினோமே!
வீணோர்கள் வாழ்கிறர், வீரர்கள் அழிகிறார்
என் மறையே சொல்லாயோ?


வாருங்கள்! நவஉலகில் நமக்குமொரு பங்குண்டு
வளமான வழிவகுப்போம்!
சேருங்கள்! குர்ஆனுக்காக இனிச் செங்குருதி
கொட்டுவதில் நட்டமில்லை
பாருங்கள்! பரிசுத்த இஸ்லாமின் இன்றைய
பரிதாபநிலையைக் கேளீர்
யாருமே வருவதைக் காணோமே குருஆனே!
என் மறையே சொல்லாயோ?

யூ.எல்.எம். தாஸீம் (நத்வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸூறா யாஸீன்



## ஒரு பார்வை





**அஷ்ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி**

*தமிழில்: இஸூல் ஜவ்ஸி (விடுகை வருடம்)*

ஸூறா யாஸீனின் ஆயத்துக்கள் அந்த ஸூறா கொண்டிருக்கும் கருத்துக்களையும் நோக்கங்களையும் மிகத் தெளிவாகப் பேசுகின்றன. எனவே, அதன் ஒவ்வொரு பகுதியையும் வசனங்களுக்கிடையிலான தொடர்பின் அடிப்படையில் விளக்க வேண்டிய அவசியம் பாரியளவில் இருக்காது.

இந்த ஸூறா சத்தியத்தோடு ஆரம்பிக்கின்றது. இச்சத்தியம் நபி (ஸல்) அவர்களது மேன்மையையும், அவர்கள் கொண்டு வந்த தூதின் உண்மைத் தன்மையில் உள்ள நுணுக்கங்களுக்கான ஆதாரத்தையும் உள்ளடக்கியிருக்கின்றது.

والقرآن الحكيم إنك لمن المرسلين
على صراط مستقيم (سورة يس : ٢)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தீர்க்கமான சட்டங்களையும் தெளிவான ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்தக் குர்ஆனின் மீது சத்தியமாக! நீர் தூதர்களில் ஒருவர். நீர் நேரான வழியில் இருக்கிறீர்.'' (36:2-4)

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதற்கு அல்குர்ஆன் மிகப் பலமான ஆதாரமாகும். குர்ஆன் கொண்டுள்ள மிக நுணுக்கமான விடயங்கள், சந்தேகமின்றி அது இறைத்தூதுதான் என்பதற்குத் தெளிவான ஆதாரமாக அமைகின்றன. அதேவேளை, அதை ஓதுகின்றவர் தஃவாவை உண்மைப்படுத்தியவர்; நேர்வழி பெற்றவர் என்பதற்கும் ஆதாரமாக அமைகின்றன. அத்துடன் இந்த ஸூறா மனிதர்கள் இந்தத் தூதை எவ்வாறு புறக்கணித்தார்கள்? எவ்வாறு அதை ஏற்று உண்மைப்படுத்தினார்கள்? என்பதையும், மனிதர்களுக்கு மத்தியில் காணப்படும் பிரிவினைக்கான ஒரு சுருக்கமான பீடிகையையும் முன்வைக்கின்றது.

> எந்தவொரு மனிதனும் தன்னைத்தானே கண்ணியப்படுத்தி, தனது இரட்சகனைப் பயந்து, தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாழ்வு, மரணம் என்பவற்றிலுள்ள யதார்த்தங்களை விளங்குகின்ற போதுதான் அவனால் அவ்விருள் மிக்க சிறையில் இருந்து மீள முடியும்.

ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை வாழ்ந்த மனிதர்கள் இருவகைப்படுகின்றனர். முதலாவது பிரிவினர், பரம்பரை பரம்பரையாக தாம் கண்டு வந்த சிந்தனையிலேயே தங்கியிருப்பவர்கள். அச்சிந்தனை வட்டத்திலிருந்து தாம் வெளியேறுவதையோ, அல்லது வேறு எவரும் வெளியேறுவதனையோ அவர்கள் விரும்ப மாட்டார்கள். மற்றைய பிரிவினரைப் பொறுத்தவரை, அவர்கள் சிந்தனை நெகிழ்ச்சி மிக்கவர்களாகவும் சுதந்திரப் போக்கைக் கொண்டவர்களாகவும் காணப்படுவர். அதாவது, ஒப்பீட்டு அடிப்படையில் தாம் விரும்பியதை ஏற்றுக் கொள்வார்கள். இவ்விரு பிரிவிலும் காபிர்களும், முஃமின்களும் உள்ளடங்குவர்.

இந்தப் பீடிகையைத் தொடர்ந்து இந்த ஸூறா உள்ளடக்கியிருக்கும் மூன்று காட்சிகள் இடம்பெறுகின்றன. அவை ஒரே மையக் கருத்தைக் கொண்டு காணப்படுகின்றன. மனித இயல்புகளுக்கு மதிப்பளித்து, அனுபவங்கள் மூலம் படிப்பினை பெற்று, இஸ்லாம் மிக உறுதியாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதற்காக மிகவும் சிந்தித்து, பலமான ஆதாரங்கள் கிடைக்கும் வரை மிகக் கடுமையாக உழைத்து, அசத்தியத்திற்குத் துணை போகும் வெறித்தனத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காகப் பயணிப்பவர்களின் பாதையைக் காட்டிக் கொடுப்பதாக இதன் மையக் கருத்து அமைகிறது.

### முதலாவது காட்சி

நபிமார்களைப் பொய்ப்படுத்தி அவர்களை எதிர்த்து நின்றதனால் அல்லாஹ்வின் தண்டனைக்கு உள்ளாகிய ஒரு புராதன நகரவாசிகள் பற்றிப் பேசும் வரலாற்று ஆதாரம் இடம்பெறுகின்றது.

### இரண்டாவது காட்சி

எமது புலன்களை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் இடம்பெறும் நிகழ்கால ஆதாரம். இது நிலம், கடல், வளிமண்டலத்தில் காணப்படும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நோக்கிப் பார்வையைத் திருப்புகின்றது. அதேநேரம் முழுப் பிரபஞ்சத்தை நோக்கியும் கவனத்தை ஈர்க்கச் செய்து அல்லாஹ் இருப்பதற்கான ஆதாரத்தை முன்வைக்கிறது.

### மூன்றாவதும் இறுதியுமான காட்சி

மனிதர்கள் வாழ்கின்ற இவ்வுலகமானது வரையறுக்கப்பட்ட ஒரு காலத்தில் முடிந்து விடும் என்பதை உறுதிப்படுத்தி, எதிர்காலத்தைக் குறித்து நிற்கும் ஓர் ஆதாரம். இவ்வுலக அழிவின் பின்னால் நல்ல மனிதர்கள் சந்தோஷமடையக் கூடியதும், தீயவர்கள் கண்ணியமிழந்து துன்பமடையக் கூடியதுமான ஒரு உலகம் இருக்கின்றது என்பதை இது கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸூறா யாஸீன், அதன் ஆரம்பத்தில் அமைந்திருக்கும் பீடிகையுடன் தொடர்ந்து வரக்கூடிய முக்காலங்களுக்குமான ஆதாரங்களைத் தொடர்புபடுத்துகின்றது. இறுதி நபித்துவம் வெளிப்பட்டபோது, ஏகத்துவக் கொள்கையின் பால் அழைப்பு விடுத்த இந்தத் தூதை சுமக்க அல்லாஹ் தேர்ந்தெடுத்த சமூகமாகிய அந்த அறபுகளின் நிலை எவ்வாறு இருந்ததென்று ஆராய்ந்தவர்களாக நாம் இந்த ஸூறாவை ஓதுகின்றபோது அதன் ஆரம்பப் பகுதிக்கும் இறுதிப் பகுதிக்கும் இடையிலான தொடர்பைக் கண்டுகொள்ள முடியும்.

அதேபோல், அல்லாஹ் ஒருவன்; அவனது தூதர் உண்மையானவர்; இத்தூது எல்லாக் கால, இட வேறுபாடுகளுக்கும் ஏற்ப, குழப்பமடைந்து நிற்பவர்களைத் தொடர்ந்தும் நேர்வழிப்படுத்தி நெறிப்படுத்துவதற்கான ஓர் ஆதாரம் என்ற உண்மைகளை விளங்கி இந்த ஸூறாவை ஓதுகின்றபோதும் எம்மால் அந்த அழகிய தொடர்பை விளங்கிக் கொள்ள முடியும்.

எனவே, அப்பீடிகையையும் அதற்குப் பிற்பாடுள்ள மூன்று காட்சிகளையும் நோக்க நாம் இன்னுமொரு முறை நமது கவனத்தை திருப்புவோம்.

இன்று அதிகமானோர் தம்மை ஆக்கிரமித்திருக்கும் ஏதோவோர் சிந்தனைக்குள் எவ்விதத் தேடலும் கருத்துப் பரிமாறலும் இல்லாமல் மிகக் கஷ்டத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சிறைக் கைதிகளைப் போன்றோர். தாமிருக்கும் இடத்தைச் சுற்றும் முற்றும் பார்க்கிறார்கள். தாம் அடைக்கப்பட்டிருக்கின்ற நான்கு சுவர்களைத் தவிர வேறெதையும் அவர்கள் காண்பதில்லை. தாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அக்கஷ்ட நிலைமைகளுக்கு அப்பால் உள்ளவை குறித்த அறிவைப் பெறாத நிலையிலேயே தமது காலங்களை அவர்கள் கடத்தி விடுகிறார்கள்.

**"நிச்சயமாக நாம் அவர்களுடைய கழுத்துகளில் நாடி வரை விலங்குச் சங்கிலிகளை ஆக்கி விடுவோம். ஆகவே, குனிய முடியாதவாறு தலை உயர்த்தப்பட்டவர்களாக அவர்கள் காணப்படுவர். அவர்களுக்கு முன்னால் ஒரு தடுப்பையும், அவர்களுக்குப் பின்னால் ஒரு தடுப்பையும் நாம் ஆக்கிவிட்டோம். பின்னர் அவர்களை மூடிவிட்டோம்."**

(ஸூறா யாஸீன்: 8-9)

மனிதனைச் சூழ கட்டப்படும் அவ்விலங்குச் சங்கிலிகள் அவனது கழுத்தை சுதந்திரமாக அங்குமிங்கும் அசைப்பதற்கும், பல்வேறுபட்ட காட்சிகளையும் நிலைமைகளையும் பார்ப்பதற்கும் அவனுக்கு இடம்தரமாட்டா.

நிச்சயமாக அவ்விலங்குச் சங்கிலிகள் மனிதன் தானாகவே உருவாக்கிக் கொண்டவை. அவன் அவற்றிலிருந்து ஈடேற்றம் பெற்று வெளியேற விருப்பமின்றி அதிலேயே தொடர்ந்தும் தங்கியிருப்பவனாக இருப்பின் அல்லாஹ் அவனை அதே நிலையில் தொடர்ந்தும் வாழச் செய்துவிடுவான். இது குறித்து அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

**"எவர் வழிகேட்டில் இருக்கிறாரோ அவருக்கு அல்லாஹுத்தஆலா அதிலேயே கால அவகாசத்தை நீட்டி விடுகிறான்."**

(ஸூறா மர்யம்: 75)

எந்தவொரு மனிதனும் தன்னைத்தானே கண்ணியப்படுத்தி, தனது இரட்சகனைப் பயந்து, தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாழ்வு, மரணம் என்பவற்றிலுள்ள யதார்த்தங்களை விளங்குகின்ற போதுதான் அவனால் அவ்விருள் மிக்க சிறையில் இருந்து மீள முடியும். அப்போது அவன் அல்லாஹ்வை ஈமான் கொண்டு நேர்வழி பெற்றுவிட்டான் என்பதும் எமக்குத் தெளிவாகின்ற மிகப் பெரும் உண்மையாகும்.

அம்மூன்று காட்சிகளிலும் முதலாவது காட்சி கீழ்வரும் வசனத்தோடு ஆரம்பிக்கின்றது.

**"நம் தூதர்கள் வந்தபோது நிகழ்ந்ததை உதாரணமாகக் கூறுவீராக" (ஸூறா யாஸீன்: 13)**

அவ்வூர் மக்கள் மக்காவாசிகளைப் போன்று தூதுவர்களைப் பொய்ப்பித்தனர். அவர்கள் தமது தூதர்களை நோக்கிக் கூறினார்கள். **"நீங்களும் எங்களைப் போன்று மனிதர்கள்தான். அல்லாஹ் உங்கள் மீது எந்த ஒன்றையும் இறக்கவுமில்லை. நீங்கள் பொய்தான் சொல்கிறீர்கள்." (ஸூறா யாஸீன்: 15)**

எனவே, மனிதர்களுக்கு நபிமார்களால் எதனைத்தான் செய்ய முடியும்!? பெரியதொரு மந்தையை மேய்ப்பதைப் போன்று அவர்களை ஒரு தடியைக் கொண்டு ஏகத்துவத்தின் பால் நெறிப்படுத்திச் செல்வதா...? நிச்சயமாக இல்லை. அத்தூதுவர்கள் தாம் கொண்டு வந்த தூதை மனிதர்களுக்கு எத்திவைப்பவர்களாகவும், அவற்றிலுள்ள உண்மைகளை வெளிக்கொண்டு வருபவர்களாகவும் மாத்திரமே இருக்கின்றனர்.

**"அல்லாஹ்வின் தூதை பகிரங்கமாக எத்திவைப்பதைத் தவிர நம்மீது வேறு கடமையில்லை." (ஸூறா யாஸீன்: 17)**

குருடர்கள் தமக்கு ஒளி கிடைப்பதை வெறுக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்மிடத்தில் இருப்பதை மக்களுக்குக் கூறுவதற்கு இடமளிப்பதால் ஏகத்துவ ஒளியை பார்க்க விரும்பாத இக்குருடர்களுக்கு என்ன தீங்கு நேர்ந்து விடப் போகிறது? தூதர்கள் கூறுவதை யார் ஏற்றுக் கொள்கின்றாரோ அவர் அவ்வொளிக்குள் நுழைந்து விடுவார். எனவே அவ்வொளி யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று இவர்கள் எண்ணுவது நியாயமானதா? நிச்சயமாக அவர்கள் அத்தூதர்களைச் சுதந்திரமாகச் செயற்பட விடவில்லை. மாறாக, அவர்கள் தூதர்களிடம்,

**இச்சூழலில் பரந்து கிடக்கும் காற்று இருந்ததா? அல்லது பூமியின் மீது விரிந்து கிடக்கும் இம்மண்தான் இருந்ததா? மிக அழகான உடலை நீ பெறுவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன் நீ என்னவாக இருந்தாய்!? உனக்குள் எப்படி இந்தச் சிந்தனைகள் தோற்றம் பெறுகின்றன என்று ஒரு நாளேனும் உன்னை நீ விசாரித்ததுண்டா?**

**"நிச்சயமாக இதிலிருந்து விலகிக் கொள்ளாவிட்டால் உங்களை நிச்சயம் நாம் கல்லால் அடிப்போம். அன்றியும் எங்களிடமிருந்து துன்புறுத்தும் வேதனையும் உங்களைப் பீடித்துக் கொள்ளும்" என்று கூறினார்கள். (ஸூறா யாஸீன்: 18)**

இச்சந்தர்ப்பத்தில் தூர தேசத்திலிருந்து ஒரு நீதமான மனிதர் அந்த மக்களிடத்தில் வருகிறார். அங்கு அந்த மனிதருடைய பெயரை அல்குர்ஆன் குறிப்பிடவில்லை. ஏனெனில், புகழ், பிரபல்யம் என்பவற்றை விட்டு ஒதுங்கித் தம்மை இறை வணக்கங்களில் ஈடுபடுத்திக் கொள்கின்ற மனிதர்கள் ஒரு சபைக்கு சமூகம் தரும்போது அவர்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. அது போன்றே அவர்கள் அங்கு சமூகமளிக்காவிடினும் அவர்கள் தொடர்பாக யாரும் கேட்பதுமில்லை. மறுப்பாளர்களுக்கான ஒரு முன்மாதிரியாக இவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அல்குர்ஆன் அவர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை.

அந்நகரவாசிகளுடன் அம்மனிதர் அறிவுபூர்வமாகவும் பேசுகிறார். இதனை அல்குர்ஆன், "என்னைப் படைத்தவனை வணங்காமல் இருக்க எனக்கு என்ன நேர்ந்து விட்டது!? அவனிடமே நீங்கள் மீளக் கொண்டு செல்லப்படவும் இருக்கிறீர்கள்" என்று அம்மனிதரது வார்த்தைகள் அமைகின்றன.

நிச்சயமாக அல்லாஹுத்தஆலா இருக்கின்றான். அவன்தான் வானங்களையும் பூமியையும் படைத்து பல கோடிக்கணக்கான உயிரினங்களையும் நிர்வகித்துக் கொண்டிருக்கிறான். அவனிடமே இவ்வனைத்துப் படைப்பினங்களும் மீளப் போகின்றன. எனவே, இப்படைப்பினங்கள் அவனுடைய ஏகத்துவத்தை விட்டும், நேர்வழியை விட்டும் தூரச் செல்வதற்கான நியாயங்கள் ஏதும் இருக்க முடியுமா? 'நான் ஏன் அல்லாஹ்வை விடுத்து மற்றவர்களிடம் செல்ல வேண்டும்' என்பது அம்மனிதரது மிக ஆழமான மனப்பதிவாகும்.

**"அல்லாஹ்வையன்றி வேறு வணங்கப்படுபவர்களை நான் எடுத்துக் கொள்வேனா? அவன் யாதொரு துன்பத்தையும் எனக்கு நாடியிருப்பின் இவர்களின் பரிந்துரைகள் யாருக்கும் பயனளிக்காது. என்னை இவர்கள் விடுவிக்கவும் மாட்டார்கள். ஆகவே, அல்லாஹ்வைத் தவிர்த்து ஏனையவற்றை வணங்கினால் அப்போது நிச்சயமாக நான் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருப்பேன்"**

**(ஸூறா யாஸீன்: 23)**

அல்லாஹ்வைப் பூரணமாக விசுவாசித்த, அவனது தூதர்களை ஏற்றுக் கொண்ட அம்மனிதர் அவரது சமூகத்துக்கு ஈமானைப் பற்றிக் கூறிய ஒரே காரணத்திற்காக அச்சமூகத்தினராலேயே கொல்லப்படுகின்றார். எனவே, அவர் ஈமானுக்காகத் தியாகியாகி ஈமானுடனேயே இறையடி சேர்ந்து விடுகிறார். இதன் மூலம் அவர் ஆழ்ந்த ஈமான் உடையவராகவும், அவருடைய சமூகம் நேர்வழியிலேயே செல்ல வேண்டும் என்ற ஆசையுடையவராகவும் இருந்துள்ளார் என்பது எமக்குத் தெளிவாகின்றது.

தனக்கு அல்லாஹ்விடமிருந்து எண்ணிலடங்கா அருள்கள் கிடைக்கப் பெற்றபோது, தன்னைக் கொலை செய்த தனது சமூகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வருள்களை அறிந்திருக்கக் கூடாதா என்று அங்கலாய்க்கிறார் அந்த தியாகி.

"எனினும் அச்சமூகத்தார் அவரைக் கொலை செய்து விட்டனர். ஆகவே, 'நீர் சுவனபதியில் நுழைவீராக!' என அவருக்குக் கூறப்பட்டது. சுவனபதி நுழைந்த அவர், 'என்னுடைய சமூகத்தார் எனக்குக் கிடைத்த இப்பாக்கியங்களை அறிந்துகொள்ள வேண்டுமே!' என்று கூறினார்.

**"என் இரட்சகன் என்னை மன்னித்து மிக்க கண்ணியமானவர்களில் ஒருவராகவும் என்னை ஆக்கிவிட்டான் என்பதையும் அவர்கள் அறியக் கூடாதா!" என்றும் கூறுகிறது.**
**(ஸூறா யாஸீன் 26-27)**

தூதர்களைப் பொய்ப்படுத்தியும், சுதந்திரத்தை அச்சுறுத்தியும் சிந்தனைக்குத் தடைக் கல்லாயும் அமைந்த அந்தப் பாவிகளின் முடிவு என்னவாக அமைந்திருக்கும்! வானத்திலிருந்து ஒரு படையை இறக்கித் தண்டிக்குமளவுக்கு நிச்சயமாக அவர்கள் பலசாலிகளாக இருக்க வில்லை. இதைப் பின்வரும் வசனம் கூறுகிறது.

**"அம்மனிதரைக் கொலை செய்ததற்குப் பின்னர் அந்த சமூகத்தவர்கள் மீது வானத்திலிருந்து அவர்களை அழிக்க யாதொரு படையையும் நாம் இறக்கவில்லை. அவ்வாறு இறக்கி வைப்பவர்களாகவும் நாம் இல்லை. அவர்களின் அழிவு ஒரேயொரு பயங்கர சப்தத்தைத் தவிர வேறில்லை. அப்போது அவர்கள் எச்செயற்பாடும் அற்றவர்களாக சாம்பலாகி விட்டனர்." (ஸூறா யாஸீன்: 8)**

அம்மக்களின் பரிதாபகரமான முடிவு மனித சமூகம் உணர்வு பெற மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. கடந்த காலங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள் பலரும் படிப்பினை பெறாமலேயே தேங்கிக் கிடக்கின்றன. தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் முன்னைய காலங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளிலுள்ள படிப்பினைகள் மூலம் உணர்வு பெறுவது மனித சமூகத்தை பெரும் அழிவுகளிலிருந்து பாதுகாக்க வழிவகுக்கும்.

இந்த முதலாவது உதாரணம் முற்றுப் பெறுவதற்கு முன்னால், அல்குர்ஆன் பயங்கரமான ஓர் எச்சரிக்கையை முன்வைக்கிறது.

**"அடியார்கள் மீதுள்ள கைசேதமே! அவர்களிடம் எந்தத் தூதர் வந்தபோதும் அவர்கள் அவரைப் பரிகசிப்பவர்களாகவே இருந்தனர்."**
**(ஸூறா யாஸீன்: 30)**

இந்த இரண்டாவது காட்சி, மனிதர்களுக்கு அவர்களது இரட்சகனை அறிமுகப்படுத்துவதோடு காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளுக்கு முன்னால் அவர்களை நிறுத்துகின்றது. இதனை நான்கு ஆதாரங்களை முன்வைத்து இந்த ஸூறா பேசுகின்றது.

**முதலாவது ஆதாரம்:** இது பூமியில் விளைகின்ற மரம், செடி கொடிகளைப் பற்றிப் பேசுகின்றது. அதாவது இப்பரந்த, முடிவேயில்லாத பூமியின் மேற்பரப்பிலுள்ள மண்ணைப் பற்றி நீ ஆராய்ந்திருக்கிறாயா? நீ பலவகையான கனிகளை உண்ணுகிறாய். அவற்றில் பல சுவைகளையும் அனுபவித்திருக்கிறாய். எனினும், அவற்றின் மூல காரணியாகிய மண்ணில் ஏதாவது ஒரு சுவையை நீ உணர்கிறாயா? இத்திண்மமான மண்ணிலிருந்து பல வகையான நிறங்களால் அழகுபடுத்தப்பட்ட கனிகள் எவ்வாறு உற்பத்தியாகின்றன? அதேபோன்று அழுக்குகள் நிறைந்த இப்பூமி எவ்வாறு சுவையான பழங்களை உருவாக்குகிறது? இவற்றுக்கு மேலாக, விதைகளும் பழங்களும் அழுகிவிடாமல் அவற்றின் மீது அழகிய தோல்களை வடிவமைத்தவன் யார்?

**"இறந்த பூமியும் இவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும். அதனை நாம் மழையைக் கொண்டு உயிர்ப்பிக்கின்றோம். இன்னும் அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகின்றோம். அப்போது அதிலிருந்து அவர்கள் உண்ணுகிறார்கள். அதிலே பேரீத்தம், திராட்சைத் தோட்டங்களையும் நாம் ஆக்கினோம். நீரருவிகளையும் ஓடச் செய்தோம். இவையனைத்தும் அதன் கனிகளிலிருந்து அவர்கள் உண்ண வேண்டும் என்பதற்காகத்தான். அவர்கள் இவற்றுக்கு நன்றி செலுத்த மாட்டார்களா?"**
**(ஸூறா: யாஸீன்: 33-35)**

**இரண்டாவது ஆதாரம்:** இரவைப் பகலாகவும் பகலை இரவாகவும் மாற்றி நாட்களை உருவாக்குகின்றவன் யார்? நிச்சயமாக எமது வரையறுக்கப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் எம்மை இப்பூமி, கோள்களின் இயக்கத்தை விட்டும் பராமுகமாக்கிவிட்டன. அதன் காரணமாகத்தான் நாம் காலையை அடைகின்றோம். மேலும், மாரி காலத்திற்குப் பிரியாவிடை கொடுத்துவிட்டு கோடை காலத்தை வரவேற்கின்றோம். இரவு, பகல், குளிர், உஷ்ணம் என்பவற்றின் மாற்றம் எவ்வாறு நடக்கின்றது என்பதனை உணராமலேயே நாம் அவற்றைக் கடத்தி விடுகின்றோம்.

இவையனைத்தும் பிரமாண்டமான அண்ட வெளியில் இந்தப் புவியினதும், ஏனைய கோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினதும் சுழற்சியால் உண்டான விடயங்களாகும். விசாலமான இப்பிரபஞ்சத்திலே தொடர்ச்சியாகச் சுழல்கின்ற, எந்தவொரு ஓய்வும் இன்றி நீந்திக் கொண்டிருக்கின்ற ஒரு கோளிலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அச்சுழற்சியும் நீந்தலும் மிகப் பலமான திட்டமிடலுடன் நிர்வகிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறன.

**"சூரியன் சந்தினை அடைந்து விட முடியாது. இரவு பகலை முந்தவும் முடியாது. இவ்வாறே கிரகங்கள், நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் தமது வட்டத்தினுள்ளே நீந்திச் செல்கின்றன." (ஸூறா: யாஸீன்: 40)**

***மூன்றாவது ஆதாரம்:*** பல மனிதர்களையும் பிரமாண்டமான பொருட்களையும் சுமந்து செல்லக் கூடிய கப்பல்களை மனிதனால் உருவாக்க முடியும். அவை அக்கடல் அலைகளின் மீது அமைதியாக பிரயாணம் செய்யும். அதன் பிரயாணம் எப்படி இருப்பினும் அவற்றின் இரட்சகன் நாடினால் அக்கப்பல்களை அவற்றின் ஒதுங்குதளத்துக்கு மிகப் பாதுகாப்புடன் தரையொதுக்குவான். இல்லாவிட்டால் அவற்றை கொந்தளிப்பான கடல் அலைகளுடன் போராடச் செய்து ஆழ்கடலிலே மூழ்கடிக்கச் செய்வான். அச்சந்தர்ப்பத்தில் அவற்றைக் காப்பாற்றுவதற்கும், உதவியளிப்பதற்கும் எவரும் சக்தி பெறமாட்டார்கள்.

இதனை அல்குர்ஆன்: **"மேலும் நாம் நாடினால் அவர்களை கடலில் மூழ்கடித்து விடுவோம். அச்சமயத்தில் அபயக் குரல் எழுப்பும் அவர்களைக் காப்பாற்றுவோர் எவரும் இருக்கமாட்டார்கள். அவர்கள் விடுவிக்கப்படவும் மாட்டார்கள். எனினும், நமது அருளின் காரணமாக இன்னும் சில காலம் வரை சுகம் அனுபவிப்பதற்காக அவர்களை விட்டு வைக்கிறோம்." (ஸூறா யாஸீன்: 43-44)**

***நான்காவது ஆதாரம்:*** உயிர் வாழ்கின்ற போதும் இறந்த பின்னரும் நாம் பிரயோசனம் பெறுகின்ற, எமக்கு வசப்படுத்தித் தரப்பட்டுள்ள கால்நடைகள் குறித்து இது பேசுகிறது. எனினும், இந்த நான்காவது ஆதாரத்தை நாம் விளங்குவதற்கு முன்னர் இந்த ஸூறாவின் நடுப்பகுதி அறிவியல் ரீதியான சிந்தனைகளை முன்வைப்பதோடு, ஸூறாவின் இறுதிக் காட்சியைப் பற்றிக் கூறுகிறது. அக்காட்சியானது கீழ்வரும் வசனத்துடன் ஆரம்பிக்கிறது.

**"நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின் நீங்கள் கூறும் தண்டனை பற்றிய வாக்குறுதி எப்பொழுது வரும் என்று அவர்கள் வினவுகின்றனர். ஒரேயொரு பெரும் சப்தத்தை தவிர வேறு எதையும் அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இது குறித்து தர்க்கித்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே அது அவர்களை பீடித்துக் கொள்ளும்." (ஸூறா யாஸீன்: 48-49)**



மறுமை நாள் பற்றிய நிகழ்வுகளை இந்த ஸூறா இறுதி வரை குறிப்பிடுகின்றது. ஆனால், சிந்தனையானது அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நோக்கி எமது பார்வையைச் செலுத்தும் வகையிலான இரண்டாவது காட்சியின் சில பகுதிகளில் இடையிடையே வந்து செல்கின்றது. உதாரணமாக இந்த வசனத்தைக் கவனியுங்கள்.

**"நிச்சயமாக நாம் அவர்களுக்காக கால்நடைகளைப் படைத்திருக்கின்றோம் என்பதை அவர்கள் காணவில்லையா? பின்னர் அவர்கள் அவற்றுக்கு உரிமையானவர்களாக இருக்கின்றனர். அவை இலகுவான முறையில் அவர்களுக்கு கீழ்ப்படியும் படி நாம் செய்தோம். அவற்றில் அவர்கள் வாகனமாக ஏறக் கூடியவைகளும் இருக்கின்றன. அவர்கள் அவற்றிலிருந்து உண்ணவும் செய்கிறார்கள்." (ஸூறா யாஸீன்: 71-72)**

இந்த ஸூறா அறிவியல் ரீதியான அத்தாட்சிகளை எமக்கு முன்வைத்தாலும் கூட, மனிதனின் உள்ளத்தில் தாக்கம் விளைவிக்கக் கூடிய மறுமைநாள் பற்றியும் கூறத் தவறவில்லை. எந்தவொரு நிகழ்வினையும் எதிர்பாராது தமது அன்றாடக் காரியங்களில் மனிதர்கள் மூழ்கியிருக்கும்போது திடீரென இறைவனின் வாக்குறுதி நிகழ்ந்து விடும் என்பதை இந்த இரண்டாவது காட்சியிலிருந்து எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஒரு மனிதன் தனது பணிகளுக்காக வெளியேறி, தான் வேண்டிய இடத்தை அடைய முன்னரே மறுமைநாள் நிகழ்ந்து விடலாம். ஒரு பணியாளன் சில பொருட்களை வாங்குவதற்காக வெளியேறிச் செல்லலாம். அப்போது மறுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாள் நிகழ்ந்து விட்டால் சென்றவன் திரும்பி வரவே மாட்டான். மனிதர்கள் தங்களது அன்றாட நடவடிக்கைகளைப் பற்றிக் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கும் அவ்வேளை, கியாமத் நிகழும் காட்சியை அல்குர்ஆன் பின்வருமாறு வர்ணிக்கிறது.

**“அப்போது அவர்கள் தங்களுக்குரிய வஸிய்யத்தை கூற சக்தி பெறமாட்டார்கள். தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பிச் செல்ல மாட்டார்கள். அதற்குள் அழிந்து விடுவர்.” (ஸூறா யாஸீன்: 50)**

பின்னர், மண்ணறைகளிலே மிக நீண்ட காலமாக தூங்கிக் கொண்டிருப்பவர்கள் மறுமை நாள் விசாரணைக்காக திடீரென எழுப்பப்படுவர். அவ்வேளை, அவர்கள் திடுக்கிட்டவர்களாக, “எங்களை எமது தூங்கும் இடங்களில் இருந்து எழுப்பியவர் யார்?” என சத்தம் போடுவார்கள். அதற்கு ‘அர்ரஹ்மான் உங்களுக்கு வாக்களித்ததும் தூதர்கள் உண்மையெனக் கூறியதும் இதுதான்’ எனக் கூறப்படும். தொடர்ந்தும் நாம் சுவனக் காட்சிகளை வர்ணித்து முஃமின்களுக்கு ஆசையூட்டிக் கொண்டும், வேதனைகளை வர்ணித்து அதனை மறந்து வழிதவறியவர்களை எச்சரித்துக் கொண்டும் செல்லாது, இந்த ஸூறாவின் இறுதியில் மீள் எழுப்புதல் தொடர்பாக வருகின்ற சில ஆதாரங்களில் எமது கவனத்தை செலுத்துவோம்.

இச்சூழலில் பரந்து கிடக்கும் காற்று இருந்ததா? அல்லது பூமியின் மீது விரிந்து கிடக்கும் இம்மண்தான் இருந்ததா? மிக அழகான உடலை நீ பெறுவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன் நீ என்னவாக இருந்தாய்!? உனக்குள் எப்படி இந்தச் சிந்தனைகள் தோற்றம் பெறுகின்றன என்று ஒரு நாளேனும் உன்னை நீ விசாரித்ததுண்டா?

நிச்சயமாக நான் இல்லாமையில் இருந்து தோற்றம் பெற்றவன் என்பதை உறுதியாக நம்புகிறேன். ஏனெனில், இது சந்ததி சந்ததியாக இந்தப் பூமியின் மீது இற்றைவரை நடந்து கொண்டுதான் இருக்கிறது. இப்படியான படைப்புகள் மிக நுணுக்கமான, சக்தி மிக்க இல்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்கக் கூடிய ஒரே இரட்சகனை காட்டி நிற்கின்றன. தெளிவான ஆதாரம் இவ்வாறிருக்க, அதனைக் கேட்க முடியாத செவிடர்களும், இரட்சகனின் ஆதாரங்களை பார்க்க முடியாத குருடர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதேபோல் அல்லாஹ்வை சந்திக்கப் போகிறோம் என்பதை அறியாது பேசும் சில மனிதர்களும் இருக்கின்றனர்.

**“நிச்சயமாக நாம் மனிதனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா? பின்னர் அவன் பகிரங்கமாக தர்க்கிக்கக் கூடியவனாக இருக்கின்றான். மேலும் அவன் தன்னுடைய படைப்பைப் பற்றி மறந்துவிட்டு ஓர் உதாரணத்தையும் நமக்காகக் கூறுகிறான். ‘எலும்புகளை அவை உக்கிப் போன நிலையில் உயிரூட்டுபவன் யார்?’ என்று அவர்கள் கேட்கிறார்கள்.” (ஸூறா யாஸீன்: 77-78)**

இந்த வாழ்க்கையின் சரியான போக்கை விளங்கிக் கொண்டவன் இப்படியான கேள்விகளைத் தொடுப்பது பொருத்தமாக அமையாது. அப்படி அவன் கேள்வியெழுப்பினால், தீர்க்கமான பல ஆதாரங்கள் இருக்க, இம்மனித உருவாக்கமானது அப்பட்டமான பொய் என்று அவன் மனிதனாக இருந்து கொண்டே தனது உள்ளத்தோடு முரண்பட்டுக் கொள்வதாகவே அது பொருள்படும்.

எலும்புகளை அவை உக்கிப்போன நிலையில் உயிரூட்டுபவன் யார்? ஒரு துளி இந்திரியத்திலிருந்து மனிதனைப் படைத்தவன்தான் அவற்றை உயிரூட்டுகிறான். மீள எழுப்பப்படுதல் என்பது, ‘அது எதிர்காலத்தில் நிறைவேறப் போகும் ஒரு வாக்குறுதியாம்! என்று ஒருவர் ஆச்சரியத்தோடு கூறக் கூடிய விடயமல்ல.

இராப் பகலாக நிகழும் ஒரு விடயம் குறித்து ஏன் ஆச்சரியப்பட வேண்டும். நிச்சயமாக அவ்வாச்சரியம் மிகப் பெரும் அறிவீனத்தின் வெளிப்பாடே!

**“நபியே! நீர் அதற்கு ‘முதன் முறையில் அதனைப் படைத்தவன்தான் அதனை உயிர்ப்பிப்பான். அவன் ஒவ்வொரு படைப்பைப் பற்றியும் நன்கறிவான். அவன் எத்தகையவன் என்றால், உங்களுக்காக பசுமையான மரத்திலிருந்து நெருப்பை உண்டாக்கினான். அப்போது அதிலிருந்து நீங்கள் நெருப்பை மூட்டிக் கொள்கிறீர்கள்.” (ஸூறா யாஸீன்: 79-80)**

அல்குர்ஆன் கூறும் இந்த உண்மைகளை நோக்கி எமது சிந்தனைகளை செலுத்துவோம். பசுமை மிக்க வயல்களும், அமைதி பரவிக் கிடக்கும் தோட்டங்களில் காணப்படும் தாவரங்களும் நாம் சுவாசச் செயற்பாட்டை செய்கின்ற போது காபனீரொட்சைட்டை உள்வாங்கி ஒட்சிசனை வெளியிடுகின்றன. இவ்வொட்சிசனானது நெருப்பை மூட்டுவதற்கும், நாம் பூமியிலே வாழ்வதற்குமான அடிப்படை மூலமாகும். நாம் உணராத எதிரும் புதிருமான இச்செயற்பாடுகள் எவ்வளவு ஆச்சரியத்துக்குரியவையாகக் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் அவ்வசனங்கள் மீளெழுப்புதல் தொடர்பான ஆதாரத்தைப் பூரணப்படுத்திக் கொண்டு செல்கின்றன. அந்த வகையில் அதைத் தெளிவாகக் காட்டும் வகையில் இறையாற்றல் பற்றிப் பின்வருமாறு கூறி இந்த ஸூறா முடிவடைகிறது.

**“ஆகவே, சகலவற்றினதும் அதிகாரம் எவனுடைய கைவசம் இருக்கிறதோ, அவன் மிகப் பரிசுத்தமானவன். மேலும், அவன் பக்கமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்.”**

(ஸூறா யாஸீன்: 82)



இந்த ஸூறா முஹம்மத் (ஸல்) அவர்களது தூதை மிகச் சுருக்கமாக விளக்கும் ஒரு பீடிகையாக அமைவது போன்றே, அத்தூதை எதிர்ப்பவர்கள், ஆதரிப்பவர்கள் தொடர்பாக மிக மேலோட்டமான ஒரு விளக்கத்தையும் முன்வைக்கின்றது. அதைத் தொடர்ந்து, இத்தூதின் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தும் வகையில் மூன்று காட்சிகள் வந்துள்ளன.

இந்த ஸூறாவில் வஹியினுடைய நோக்கம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

**“இந்த வேதம் உயிரோடிருப்போரை அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது. நிராகரிப்பாளர்களுக்கு இறுதியில் தண்டனை உண்டு என்ற வாக்கை உண்மையென்று உறுதிப்படுத்துகின்றது.” (ஸூறா யாஸீன்: 70)**

இந்த ஸூறா இப்படியான உயர்ந்த ஒரு விடயத்தைக் கூறிக் கொண்டிருக்க எம்மவர்கள் அதனை வேறு எதற்காகவோ பயன்படுத்துகின்றனர். முஸ்லிம்கள் தமது இறைவனது வேதம், நபியின் போதனை, தமது வரலாற்றின் அடிப்படை, நாகரிகத்தின் செழுமை என்பவற்றுக்கு மிக அநியாயம் இழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் பீடிகையும் ஏலவே கூறப்பட்ட மூன்று காட்சிகளும் நவீன காலத்து ஆக்கங்களில் காணப்படுவது போன்று கலையம்சம் பொருந்திய வடிவில் அமையவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஏனெனில், அல்குர்ஆன் வித்தியாசமான போக்கைக் கொண்டது. எவ்வாறு இப்பிரபஞ்சம் அறிவின் அடிப்படைகளை ஒன்றுசேர்த்து உள்ளடக்கி வைத்திருக்கின்றதோ அதுபோன்றே அல்குர்ஆனும் தனது கருத்துக்களை உள்ளடக்கி வைத்திருக்கிறது.

இந்த வகையிலான குர்ஆன் விளக்கத்தின் மூலம் ஸூறா எதனை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது? எப்படியான கருத்துக்கள் அதில் இழையோடிக் காணப்படுகின்றன? என்பதைக் கூறுவதே எமது நோக்கமாகும்.

**“இன்றைய நவீன உலகம் முழுவதும் ஜாஹிலிய்யத்தில் உழன்று கொண்டிருக்கிறது. அந்த ஜாஹிலிய்யத்தினடியாகத்தான் அதன் வாழ்க்கைப் போக்குகளும் நடைமுறைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. அனைத்துக்கும் சடத்துவ விளக்கம் கொடுக்கும் நிலைக்கு அது உலகை மாற்றியிருக்கின்றது. அல்லாஹ்வுடைய அதிகாரத்துக்கு சவால் விடுக்கும் அளவுக்கு அந்த ஜாஹிலிய்யத் இன்று வேரூன்றியுள்ளது. சட்டமியற்றும் அதிகாரத்தை அல்லாஹ்விடமிருந்து எடுத்து மனிதர்கள் தமக்கிடையில் அவ்வதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் பயங்கரமான நிலை தோற்றம் பெற்றிருக்கின்றது. சட்டம் சொல்கிறோம், ஒழுங்கைப் பேணுகிறோம், சமூகக் கட்டுக் கோப்பை உருவாக்குகிறோம், சமூக நிலைமைகளைச் சீர்செய்கின்றோம் என்பன போன்ற இன்னோரன்ன போர்வைகளில் அல்லாஹ்வின் அனுமதியின்றி அவனது அதிகாரத்தில் கை வைக்கப்படுகின்றது. இவை அனைத்தும் நவீன ஜாஹிலிய்யத்தின் ஒட்டு மொத்த விளைவுகளே!”**

**-அஷ்ஷஹீத் செய்யித் குத்ப் (ரஹ்)-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கிய தேசமும் துளிர்விடும் உஸ்மானிய சாம்ராஜ்யமும்


### அமைவிடமும் புவியியல் அம்சங்களும்

துருக்கி என்றவுடன் ஒருகாலத்தில் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா உட்பட மூன்று கண்டங்களிலுமுள்ள பல நாடுகளை உள்ளடக்கிய உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் தலைநகராக இருந்தமையே நினைவுக்கு வருகிறது. துருக்கி ஆசியாவையும் ஐரோப்பாவையும் உள்ளடக்கி அமைந்துள்ள ஒரு நாடு. இந்நாட்டின் 97% நிலப்பரப்பு மேற்காசியாவிலும் 3% பகுதி ஐரோப்பாவிலும் காணப்படுகிறது. நாட்டின் தலைநகர் அங்காரா (Ankara) ஆசியாவிலும், மிகப் பெரிய நகரான ஸ்தான்பூல் (Istanbul) ஐரோப்பிய பகுதியிலும் அமையப் பெற்றுள்ளன.

கிரேக்கம், ஆர்மேனியா, ஜோர்ஜியா, பல்கேரியா, ஈரான், ஈராக், சிரியா, அஸர்பைஜான் போன்ற நாடுகளையும் ஏசியன் கடல், கருங்கடல், மத்திய தரைக்கடலையும் துருக்கி எல்லைகளாகக் கொண்டுள்ளது. நாட்டின் மொத்த நிலப்பரப்பு 779,452 சதுர கிலோ மீற்றர் ஆகும். உயர்ந்த மலைச் சிகரங்களும் இங்கு காணப்படுகின்றன. உலகப் புகழ்பெற்ற யூப்ரடீஸ், ரைகிறீஸ் நதிகள் இங்கிருந்துதான் ஊற்றெடுக்கின்றன. நாட்டின் விவசாயத்திற்குத் தேவையான நீரை இந்நதிகள் மூலம் பெறக் கூடியதாகவுள்ளது.

### கல்வி, பொருளாதார, சமய, சமூக நிலைமைகள்

துருக்கியில் ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இங்கு பல பல்கலைக்கழகங்களும் நூற்றுக்கணக்கான உயர் கலாபீடங்களும் உண்டு. அறபு நாடுகளுடன் ஒப்பிடுகையில் துருக்கியின் கல்வி நிலை பாராட்டத்தக்கதாகவுள்ளது. எழுத்தறிவு வீதம் எண்பதைத் தாண்டிய அதேவேளை, தகவல் தொழில்நுட்பத் துறையிலும் நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. துருக்கி மதச்சார்பற்ற யாப்பைக் கடைப்பிடிக்கின்றபோதும் அங்குள்ள உயர் கலாபீடங்களில்



பர்ஹான் மன்ஸூர்
(விடுகை வருடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய கலைகளுக்கான தனியான பீடங்கள் காணப்படுகின்றன.

துருக்கியின் பண அலகு துருக்கிய லீரா (Lira). அடிப்படையில் இதுவொரு விவசாய நாடாகவுள்ள போதிலும் அண்மைக் காலமாக கைத்தொழிற் துறை பாரிய முன்னேற்றம் கண்டு வருகிறது. விவசாயப் பொருட்கள், கனிய வளங்கள், கைத்தொழில் பொருட்கள் போன்றவை நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு, மீன்பிடித் தொழில் போன்றவற்றிற்கும் துருக்கி பிரசித்தி பெற்ற நாடாகும்.

மொத்த சனத்தொகையில் 97% முஸ்லிம்கள். நாட்டின் பல இனத்தவர்கள் வாழ்கின்ற போதும் துருக்கியர் 80%, குர்திஷ்கள் 17% காணப்படுகின்றனர். இஸ்லாத்தைப் பின்பற்றுவதில் அதிக ஆர்வம் கொண்டவர்கள் துருக்கிய மக்கள். 1924ம் ஆண்டு இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியைத் தொடர்ந்து நாட்டில் மதச்சார்பற்ற அரசியல் யாப்பு பின்பற்றப்படுகிறது. இஸ்லாமிய கலாசார அம்சங்கள் பல தடை செய்யப்பட்டிருந்தன. அண்மைக்காலமாக சமூக, அரசியல் மட்டத்தில் இஸ்லாம் பேசப்படுவதை அவதானிக்கலாம்.

துருக்கியில் பல மஸ்ஜித்களும், மத்ரஸாக்களும் காணப்படுகின்றன. பல்வேறு கட்சிகள் காணப்பட்டபோதும் பிரதமர் ரஜப் தையிப் அர்தூகான் தலைமையிலான 'நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி'யே மக்கள் மத்தியில் பாரிய செல்வாக்கைப் பெற்றுள்ளது. அண்மைக் காலமாக துருக்கிய அரசியல் மட்டத்தில் ஏற்பட்டுள்ள இஸ்லாம் சார்ப்புப் போக்கு நாட்டில் மீண்டுமோர் உஸ்மானிய சாம்ராஜ்யம் தோன்ற வழியேற்படும் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

### பண்டைய வரலாறும் உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியும்

துருக்கி 5000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஒரு பிரதேசம். கி.மு. 3000 ஆண்டுகளில் அங்கு மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. கி.பி. 33ம் ஆண்டளவில் கொன்ஸ்டன்மைஸ் என்பவரே கொன்ஸ்தாந்துநோபிள் நகரை நிறுவியுள்ளார். மத்தியாசியாவிலிருந்து புலம்பெயர்ந்த மக்களே துருக்கியப் பூர்வீகக் குடிகளாவர். கி.பி. 11ம் நூற்றாண்டில் அல்ப் அர்ஸலான் என்ற ஸல்ஜூக்கிய மன்னர் துருக்கியின் ஒரு பிரதேசத்தை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்.

உஸ்மானியர்களின் பரம்பரையில் வந்த மன்னர் 2ம் முஹம்மத், நபி (ஸல்) அவர்களின் ஹதீஸை உண்மைப்படுத்தும் விதமாக கி.பி. 1451ம் ஆண்டு கொன்ஸ்தாந்துநோபிளைக் கைப்பற்றினார். தற்போதைய இஸ்தான்புல் நகர் அமைந்துள்ள இடமே அதுவாகும். வரலாற்றில் அவர் முஹம்மத் அல்-பாதிஹ் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். பின்னர் உஸ்மானியர்களின் ஆட்சி உலகெங்கும் விஸ்தரிக்கப்பட்டது. ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா கண்டங்களிலுள்ள 28 நாடுகளை ஏக காலத்தில் ஆட்சி செய்த பெருமை உஸ்மானியர்களையே சாரும். ஷரீஅத்தின் அடிப்படையில் ஆட்சி நடைபெற்றபோதும் ஏனைய இன, மதத்தவர்களுக்கான பூரண உரிமைகள் வழங்கப்பட்டன. பேரரசின் ஏக தலைவராக கலீபா காணப்பட்டார்.

'எந்தவொரு எழுச்சிக்கும் வீழ்ச்சியுண்டு' என்பதே உலக நியதி. இந்த வகையில் யாராலும் அசைக்க முடியாமலிருந்த உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்வதற்கான பல்வேறு அக, புறக் காரணிகள் செயற்பட்டன. கி.பி. 17ம் நூற்றாண்டிலிருந்து ஆட்டம் கண்ட உஸ்மானிய ஆட்சி, 1924ம் ஆண்டு வீழ்ச்சியடைந்தது.

இந்த சாம்ராஜ்யத்தின் ஆளுகைக்குட்பட்டிருந்த பிரதேசங்களில் வாழ்ந்தவர்களில் 75 வீதமானோர் முஸ்லிம்கள். ஏனையோர் கிறிஸ்தவர்களும் யூதர்களுமாவர். இவர்கள் ஆரம்பத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கினாலும் பிற்பட்ட நாட்களில் ஐரோப்பாவின் பொம்மைகளாக மாறினர். பிரித்தானியா, ஆஸ்திரியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் துருக்கியில் வாழ்ந்த



ரஜப் தையிப் அர்தூகான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமால் அதாதுர்க்

பல இனக் குழுக்களை தனிநாட்டுக் கோரிக் கைக்குத் தூண்டியதனால் துருக்கி பல சவால் களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது.

நிருவாகம், கல்வி, இராணுவம் போன்ற துறைகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதற்காக அப்போதைய மன்னர் முதலாம் அப்துல் மஜீத், தனது செயலாளர் முஸ்தபா ரஷீத் பாஷா தலைமையில் 1839இல் ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்தார். விளைவாக நிருவாகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பாவுடன் இராணுவத் தொடர்புகள் அதிகரித்தன. மத்ரஸா கல்வி முறை மாற்றப்பட்டு, மதச்சார்பற்ற கல் விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. புதி தாக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் யாவும் அரசைப் பாதுகாப்பதற்குப் பதிலாக இன்னும் வீழ்ச்சிப் பாதைக்கே இட்டுச் சென்றன.

துருக்கியில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் ஐரோப் பாவுக்கு சார்பாக செயற்பட்டனர். ரஷ்யா, பிரித் தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் துருக்கியை ஆக்கிரமிக்க முற்பட்டன. 1850, 1870 காலப் பகுதியில் துருக்கி மீது ரஷ்யா மேற்கொண்ட படையெடுப்பால் நாட்டுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதோடு பல இராணுவ வீரர்களையும், ஏராளமான ஆயுதங்களையும் இழக்க நேரிட்டது. பொது மக்கள் பலர் கொல்லப்பட்டதோடு இப்போரினால் அகதிகளின் தொகையும் அதி கரித்தது. 1878 பேர்லின் மாநாடு ஐரோப்பா மீதான துருக்கியின் ஆதிக்கத்தைத் தளர்த்தியது.

சுல்தான் 2ம் அப்துல் ஹமீத் இஸ்லாமிய அரசை கட்டிக் காக்க பல முயற்சிகள் மேற் கொண்ட போதும் இறுதியில் அவையொன்றும் பயனளிக்கவில்லை. இவர் நாட்டின் பொருளா தாரத்தை சீரான வழிக்குக் கொண்டு வந்தார். சுல்தான் 2ம் அப்துல் ஹமீத் அன்வர் பாஷா தலைமையிலான 'இளம் துருக்கியர்' என்ற அமைப்புடன் முரண்பட்டுக் கொண்டதன் விளைவாக இறுதியில் கலீபா பதவியை துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஐரோப்பியர் களும் யூதர்களும் கலீபாவை பதவி கவிழ்ப்பதற் காக நீண்ட நாட்களாகவே பல சதி முயற்சி களை செய்து வந்தார்கள்.

### மதச் சார்பின்மையிலிருந்து இஸ்லாத்தை நோக்கி

உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சியை தடுத்து நிறுத்த பல இஸ்லாமிய அறிஞர்கள் முயற்சித்த போதும் அது சாத்தியமாகவில்லை. கி.பி. 1924ம் ஆண்டு முஸ்தபா கமால் மூலமாக உத்தியோக பூர்வமாக இஸ்லாமிய கிலாபத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. நாட்டில் மதச்சார்பற்ற யாப்பு பிரகடனப்படுத்தப்பட்டது. உடனடியாக நாட்டில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டன. புதிய சட்டங்கள் அமுலாகின. அங்கு இஸ்லாம் பற்றிப் பேசுவதற்கு தடைவிதிக்கப் பட்டது. 1949ம் ஆண்டு ஐரோப்பிய கவுன்சி லிலும் 1952ம் ஆண்டு நேட்டோ அமைப்பிலும் துருக்கிக்கு அங்கத்துவம் கிடைத்தது.

1938 முஸ்தபா கமாலின் மரணத்தைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பலரும் இஸ்லாத் தின் எதிரிகளாகவே இருந்தனர். எப்போதும் இராணுவத்தின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப் பட்டது. தேசியவாதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை இந்நிலையிலிருந்து துருக்கியை மீண்டும் ஒரு கிலாபத் ஆட்சிக்குள்ளால் கொண்டுவர பலர் முயற்சித்து வந்திருக்கிறார்கள். எழுபதுகளின் ஆரம்பத்தில் பேராசிரியர் நஜ்முத்தீன் அர்பகான் தோற்றுவித்த அரசியல் சிந்தனை துருக்கியில் மீண்டுமோர் இஸ்லாமிய யுகம் தொடங்க வழி வகுத்தது.

1972ம் ஆண்டு 'ஹிஸ்புஸ் ஸலாமா' என்ற கட்சியை இவர் தோற்றுவித்தார். தற்போதைய துருக்கிப் பிரதமரான ரஜப் தையிப் அர்தூகான் இக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவ ராகவும் பேராசிரியர் அர்பகானின் மாணவராக வும் இருந்தார். 1973 பொதுத் தேர்தலில் இக் கட்சிக்கு 49 ஆசனங்கள் கிடைத்தன. இராணுவத் தின் கெடுபிடிகளால் இக்கட்சிக்கு தடைவிதிக் கப்பட்டது. எனினும், நஜ்முத்தீன் அர்பகான் அரசியலை விட்டுவிடவில்லை. அவர் துணிச்ச லும், நிதானமும், தூரநோக்கும் கொண்ட ஓர் அரசியல்வாதி. பின்னர் 1983ம் ஆண்டு இவர் 'அர்-ரபாஹ்' என்ற கட்சியை பிரகடனப் படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989, 1992ம் ஆண்டு தேர்தல்களில் கணிசமான வெற்றிகளைப் பெற்ற இக்கட்சி 1994 நகர, மாநகர சபைத் தேர்தலில் பாரிய வெற்றி கண்டது. இக்கட்சியின் வெற்றியைத் தொடர்ந்து மாநகர சபைகளில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இத்தேர்தலில் ஸ்தான்புல் மாநகர சபை முதன்மை வேட்பாளராக தற்போதைய பிரதமர் அர்தூகான் போட்டியிட்டு வெற்றியீட்டினார். அர்ரபாஹ் கட்சியின் அமோக வெற்றியால் அதன் தலைவர் பேராசிரியர் நஜ்முதீன் அர்பகானுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. இவர் நாட்டை ஒழுங்கான முறையில் வழிநடாத்தியபோது மதச்சார்பற்ற இராணுவத்தின் அழுத்தங்களால் பதவி துறக்க வேண்டியேற்பட்டது.

இக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவரான ரஜப் தையிப் அர்தூகானும் அக்டோபர் 1997ம் ஆண்டு சிறைக்குச் செல்ல வேண்டியேற்பட்டது. சில மாதங்கள் கழித்து சிறையிலிருந்து இவர் விடுதலை பெற்றார். இக்காலப் பிரிவில் அர்-ரபாஹ் கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அக்கட்சியிலிருந்த முக்கிய அரசியல்வாதிகளான அர்தூகான், அப்துல்லாஹ் குல் போன்றோர் ஒன்று சேர்ந்து 14 ஆகஸ்ட் 2001ம் ஆண்டு ஹிஸ்புல் அதாலா வத்தன்மியா (நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி) என்ற கட்சியை பிரகடனப்படுத்தினர். அதன் தலைவராக ரஜப் தையிப் அர்தூகான் தெரிவு செய்யப்பட்டார்.

550 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 2002ம் ஆண்டு நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலில் இக்கட்சி 363 ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதற்கு முன்னைய தேர்தல்களில் எந்தவொரு கட்சியும் இவ்வாறானதொரு வெற்றியைப் பெற்றிருக்கவில்லை. இவ்வெற்றியின் மூலம் நாட்டின் தலைவராக ரஜப் தையிப் அர்தூகான் தெரிவானார். இஸ்லாமியவாதிகளின் வெற்றியைத் தொடர்ந்து மேற்குலகின் பார்வை துருக்கியின் பக்கம் திரும்பியது. ஆட்சியைக் கவிழ்க்க பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் எதுவும் வெற்றியளிக்கவில்லை. இஸ்லாமியவாதிகள் மீதுள்ள மக்களின் நம்பிக்கையே இக்கட்சியின் வெற்றிக்குக் காரணமென இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஹிஸ்புல் அதாலாவின் வெற்றியைத் தொடர்ந்து நாட்டின் எல்லாத் துறைகளிலும் பல்வேறு மாற்றங்களும் சீர்திருத்தங்களும் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் கடன்சுமை படிப்படியாகக் குறையத் தொடங்கியது. சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டதோடு வருடா வருடம் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகையும் அதிகரித்தது. துருக்கிய நாணயமான லீராவின் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்பட்டது. வெளிநாட்டு முதலீடுகள் வந்து குவிந்ததன் விளைவாக நாட்டின் கைத்தொழிற்துறை விருத்தியடைந்தது. ஏற்றுமதி வருமானம் அதிகரித்தது. மாத்திரமல்லாமல் வேலையில்லாப் பிரச்சினையும் ஓரளவுக்குக் குறைந்தது. ஆள்வீத தேசிய வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. நாட்டில் இஸ்லாமிய வங்கிகள் பல உருவாகின.

அறபு நாடுகளுடன் அரசியல், பொருளாதார, கலாசார ரீதியாக பல்வேறு உடன்படிக்கைகள் கைச்சாத்தாயின. சர்வதேச ரீதியில் துருக்கிக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்தில் (European Union) இணைவதற்கான முயற்சியை துருக்கி மேற்கொண்டது. இராணுவம் தவிர்ந்த ஏனைய எல்லாத் துறைகளிலும் இஸ்லாமியவாதிகள் ஓரளவு முன்னேற்றம் கண்டனர். கல்விக் கூடங்கள், பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிய இயக்கங்களின் செயற்பாடுகள் அதிகரித்தன. 2005 நவம்பர் 3ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்காக பேச்சுவார்த்தையொன்று அவ்வொன்றியப் பிரதிநிதிகளோடு நடைபெற்றது.



பிரதமர் ரஜப் தையிப் அர்தூகான் மார்க்கப் பற்றுமிக்க, நிதானமான, தூர நோக்குக் கொண்ட ஓர் அரசியல்வாதி. இவர் நாட்டை நேரான பாதையில் இட்டுச் சென்றார். இஸ்லாமிய நாடுகள் ஒன்றியத்தின் (OIC) தலைமைப் பொறுப்பு முதன் முறையாக துருக்கிக்கு வழங்கப்பட்டது. அறபு நாடுகள் ஒன்றியத்தின் மேற்பார்வையாளராகவும் அர்தூகான் நியமிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் நஜ்முதீன் அர்பகான்

பட்டார். 2003ம் ஆண்டு அமெரிக்கா ஈராக்கைத் தாக்குவதற்காக துருக்கிய விமானத் தளங்களை பயன்படுத்த அனுமதி கோரியபோதும் அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை.

லெபனானை இஸ்ரேல் தாக்கியபோது துருக்கி அதை கடுமையாக எதிர்த்தது. 2007ம் ஆண்டு பலஸ்தீன பொதுத் தேர்தலில் ஹமாஸ் வெற்றி பெற்றபோது துருக்கி மாத்திரமே ஹமாஸுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தது.

இவ்வரசாங்கத்துக்கு முக்கிய சவால்களில் ஒன்றாக குர்திஷ்களின் பிரச்சினை காணப்பட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்க பல பேச்சுவார்த்தைகளை நடாத்தினர். 2002-2007 வரை குர்திஷ்கள் அதிகம் வாழ்கின்ற பிரதேச அபிவிருத்திக்காக 8 பில்லியன் டொலர்களை இவ்வரசு செலவு செய்துள்ளது. இந்நிதி பாதைகள் சீரமைத்தல், பாடசாலைகள், வைத்தியசாலைகள் கட்டல், மின்சாரம், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக 2007 பொதுத் தேர்தலில் குர்திஷ்கள் ஹிஸ்புல் அதாலாவுக்கு தமது ஆதரவை வழங்கினர்.

மீண்டும் விரைவாக தேர்தலை நடாத்துமாறு மதச்சார்பற்ற கட்சிகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டேயிருந்தன. இதன் விளைவாக 22 ஜூலை 2007 பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஹிஸ்புல் அதாலாவே வெற்றி பெறும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர். தேர்தல் முடிவுகளின் படி 48% வாக்குளைப் பெற்று இக்கட்சி பாரிய வெற்றி பெற்றது. குர்திஷ்கள் அதிகமாக வாழ்ந்த பிரதேசங்களில் கூட இக்கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றது. இத்தேர்தல் மதச்சார்பற்றோருக்கு வழங்கப்பட்ட பலத்த அடியாகும். இதன் மூலம் மக்கள் மீண்டுமொருமுறை இஸ்லாமிய ஆட்சிக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இரண்டாவது முறையாகவும் ஹிஸ்புல் அதாலாவின் வெற்றியைத் தொடர்ந்து நாட்டின் ஜனாதிபதியாக அப்துல்லாஹ் குல்லும் பிரதமராக ரஜப் தையிப் அர்தூகானும் தெரிவுசெய்யப்பட்டனர். மக்களுக்கு புதிய நம்பிக்கை பிறந்தது. இவ்வரசு ஹிஜாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்தது. மார்க்கப் பாடசாலைகளுக்கிருந்த தடை ஓரளவு தளர்த்தப்பட்டது. இஸ்லாமிய நிறுவனங்களின் செயற்பாடுகள் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. ஷரீஆ சட்டம் அமுலுக்கு வருமானால் அதுவே இவ்வரசாங்கத்தின் பெரும் வெற்றியாக அமையும்.

2008 டிசம்பர் காஸா தாக்கப்பட்டபோது துருக்கி இஸ்ரேலை கடுமையாக எதிர்த்ததோடு இஸ்ரேலுடன் செய்யப்பட்டிருந்த இராணுவ ஒப்பந்தமொன்றையும் முறித்துக் கொண்டது. 29/01/2009 தாபூஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் (World Economic Forum) இஸ்ரேலின் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டித்துப் பேசி மாநாட்டிலிருந்தும் பிரதமர் அர்தூகான் வெளிநடப்புச் செய்தார்.

04/04/2009 நேட்டோ அமைப்பின் புதிய தலைமைப் பொறுப்பு டென்மார்க்குக்கு வழங்கப்பட்டபோது அதை எதிர்த்து வாக்களித்தார். நபி (ஸல்) அவர்களுக்கெதிராக கார்ட்டூன் வரைந்தமை, ஐரோப்பிய ஒன்றியத்தில் துருக்கி இணைய மறுப்புத் தெரிவித்தமை, குர்திஷ்களை நாட்டுக்கெதிராக தூண்டி விடுகின்றமை போன்ற காரணங்களுக்காக டென்மார்க்குக்கு தலைமைப் பதவி வழங்கப்படுவதை துருக்கி எதிர்த்தது.

துருக்கிப் பிரதமரிடமும் மக்களிடமும் காணப்படும் துணிச்சலும் ஒற்றுமையும் மார்க்கப் பற்றும் மீண்டுமோர் உஸ்மானிய சாம்ராஜ்யத்தை எங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றன. அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் எகிப்து லெபனான், பலஸ்தீன், மொரோக்கோ, மொரிடானியா, சூடான் என்ற வரிசையில் துருக்கியிலும் இஸ்லாமியவாதிகள் பெற்றிருக்கும் வெற்றி இஸ்லாம் இன்னும் உயிர்த் துடிப்புடன் இருக்கின்றது என்பதற்கு சான்றாகும்.


### உசாத்துணைகள்

1. இஸ்லாமிய சிந்தனை, 1996 (ஜூலை-செப்.)
2. இஸ்லாமிய சிந்தனை, 2005 (ஒக்.-டிசம்.)
3. அல் முஜ்தமஃ சஞ்சிகை, இதழ் 1663
4. அல் முஜ்தமஃ சஞ்சிகை, இதழ் 1760
5. அல் முஜ்தமஃ சஞ்சிகை, இதழ் 1847
6. அல் முஜ்தமஃ சஞ்சிகை, இதழ் 1851



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# HAMEEDIAS
## FASHION LINK

Kandyan Bridal, Cosmetics
Imitation Articles, Silver 925 Jewellery
and Saloon Accessories Etc.



**No. 335, Main Street, Colombo 11.**
**Tel: 011 5735300, 011 4561133**
**No. 21,23, Sea Street, Colombo 11.**
**Tel: 011 2348801**
**Web: www.hameedias.com**
**E-mail: Hameedias-fashionlink@yahoo.com**

இஸ்லாமிய சேவைகள் சங்கத்தின்


இனிய வாழ்த்துக்கள்



**ISS - Mosque Office**
**Kiringadeniya, Mawanella.**
**035 4920005**
**035 2246607**

# NEW CITY HARDWARE


**Importers Wholesale Dealers in all kinds of Electrical Goods & Hardware Etc.**



**No. 247, OLD MOOR STREET, COLOMBO-12. Tel: 011 2336205**
**No. 280 C, OLD MOOR STREET, COLOMBO-12. Tel: 011 2343313**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Islamophobia




றிஸ்வான் றாஸிக்
(விடுகை வருடம்)

இஸ்லாம் உலகில் தோன்ற ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை வேறு எந்த மதமோ, கோட்பாடோ சந்தித்திராத எதிர்ப்புகளையும், சவால்களையும் எதிர்கொண்டுள்ளது. உலகில் தோன்றிய ஒவ்வொரு நபிமாரும் ஏதோ ஒரு வகையில் எதிர்ப்புகளை சந்தித்துள்ளனர். குறிப்பாக இஸ்லாத்தை பூரணத்துவப்படுத்த வந்த இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் அவரது உம்மத்தும் மற்றைய நபிமார்கள், அவர்களது சமூகங்கள் முகம் கொடுத்திராத புது வகையானதும், குரூரமானதுமான வேதனைகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் இன்றுவரை முகம்கொடுத்து வருகின்றனர்.

இன்று இஸ்லாமிய உலகிலும், மேற்கிலும் ஏற்பட்டிருக்கும் நவீன இஸ்லாமிய எழுச்சியின் வேகமான அலைகள்; உலக மக்களை அதனை நோக்கித் திரும்பிப் பார்க்க வைத்துள்ளன. குறிப்பாக மேற்குலகில் மிக வேகமாக மனித மனங்களை வசீகரித்து வரும் மார்க்கமாக இஸ்லாம் மாறியிருப்பது, அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயங்களையும், இஸ்லாம் விரோதப் போக்காளர்களையும் ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது.

இதன் விளைவாக கிறிஸ்தவப் பாதிரிகளும் மேற்குலகின் சில அறிஞர்களும் இஸ்லாம் குறித்து போலியான கருத்தியல்களை முன்வைத்ததோடு, முஸ்லிம்களை குரூரமானவர்களாகவும், பயங்கரவாதிகளாகவும் காட்ட முனைந்தனர். இவ்வாறான செயற்பாடுகளினால் Islamophobia (இஸ்லாமியப் பீதி) எனப்படும் கருத்தியல் மேற்குலகால் கட்டமைக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக பரபரப்பாக பேசப்பட்டு வந்த இக்கருத்தியல் கட்டமைப்பு குறித்த போதிய விளக்கம் எமது சமூகத்தில் முன்வைக்கப்படாமையினால், அது பற்றிய சிறு விளக்கத்தை இக்கட்டுரையினூடாக முன்வைக்க முயற்சிக்கின்றோம்.

மேற்கத்தேயம் மனித வழிகாட்டல்களாக முன்வைத்த கோட்பாடுகள், நாகரிகக் கருத்துக்கள் தோல்வியடைந்து விட்டன. அவற்றால் மனித ஈடேற்றத்தையோ மன நிம்மதியையோ கொடுக்க முடியவில்லை. தோல்விகளைச் சரிகட்ட மேற்கு உருவாக்கிய பதிலீடுகளும் தோல்வியடைந்து விட்டன.

அவ்விடத்தை இஸ்லாம் நிரப்பி விடும் என்ற அச்சம் மேற்கத்தேயர்களை ஆட்கொண்டுள்ளது. எனவே மேற்கில் வேகமாகப் பரவும் மார்க்கமாக இஸ்லாம் மாறியிருப்பதனால் அதனை இழிவுபடுத்தி பல ஆய்வுகளையும் புத்தகங்களையும் அவர்கள் வெளியிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Islamophobia என்றால் என்ன?

மேற்குலகில் பரவியிருக்கின்ற அல்லது கட்டமைக்கப்பட்டிருக்கின்ற இஸ்லாமியப் பீதியின் பரிபாஷைத் கருத்தாகவே மேற்குலக கலைக் களஞ்சியங்கள் இதனைக் குறிப்பிடுகின்றன. 'Phobia' என்ற சொல் பீதி, அச்சம், நோய், பயம் என்ற கருத்தைக் கொண்ட ஒரு கிரேக்க சொல்லாகும்.[1] 2001-09-11 இரட்டைக் கோபுர தகர்ப்பிற்கு பின் மேற்குலகில் உருப்பெற்ற கருத்தியலாகவும் இதனை அடையாளப் படுத்தலாம்.

> "ஐரோப்பாவில் பிறை வளர்கிறது. அது சிலுவையை எவ்விதத்தில் பாதிக்கும் என்று அடுத்து வரும் இரு தசாப்தங்களுக்குள் மிகத் துல்லியமாய்ப் பார்க்கலாம்"
>
> கலாநிதி தாரிக் ரமழான்

Islamophobia வானது முஸ்லிம்களை மதத் தீவிரவாதிகளாகவும், இரக்கம், பண்பாடு என்பனவற்றை அறியாத, மனித குலத்திற்கு எதிரான, சமத்துவம் (Equality), மன்னிப்பு (Tolerance), ஜனநாயகம் (Democrecy) என்பனவற்றுக்கு முரணான போக்கைக் கொண்டவர்களாகவும் சித்தரிப்பதைக் குறிக்கிறது.[2]

இவ்வாறான கட்டமைப்பை மேற்கொள்வதன் மூலம் மேற்குலக மக்களின் உள்ளங்களில் இஸ்லாம் பற்றிய பீதியை உண்டு பண்ணி இஸ்லாத்தை ஆதரிப்பதையும், தழுவுவதையும் விட்டுத் தடுப்பதற்கான முயற்சியாகவே இதனை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் கருதுகின்றனர்.

புவியியல் ரீதியாக அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற கண்டங்களில் பரவியிருக்கும் இக்கட்டமைப்பியல் வாதம் வரலாற்று ரீதியாக மக்கா காலப் பிரிவிலிருந்து தொடங்குகிறது. மக்கா குறைஷியரும், மதீனத்து யூதர்களும் இஸ்லாத்தின் வருகையால் பெரிதும் கலக்கமடைந்தனர். இதனை நபி (ஸல்) அவர்களின் ஸீறாவில் தெளிவாகக் காண முடியும். நவீன காலத்தில் 2001-09-11 இரட்டைக் கோபுர தகர்ப்பின் பின் 'Islamophobia' என்ற வடிவமைக்கப்பட்ட கருத்தியலாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்க்கையில் இஸ்லாம் விரோதப் போக்கும், இஸ்லாமிய சமூகத்தின் மீதான முஸ்லிமல்லாதவர்களின் போராட்டமும் மூன்று கட்டங்களில் நிகழ்ந்து வந்துள்ளமை தெளிவாகின்றது.

1. நேரடி இராணுவப் படையெடுப்பும் நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பும் (Military Invasion and Land Occupation)
2. காலனித்துவமும் கலாசார ரீதியான ஆக்கிரமிப்பும் (Colonism and Cultural Invasion)
3. ஊடக உளவியல் யுத்தமும் உள்ளங்கள் மீதான ஆக்கிரமிப்பும் (Media Terrorism and Colonization of mind)[3]

சிலுவை யுத்தம், தாத்தாரியர் படையெடுப்பு முற்றிலும் இராணுவ ரீதியானவை. அத்தகைய ஆயுதப் போராட்டங்களின் பின்னணியில் கலாசார ஆதிபத்திய நோக்கங்கள் இருக்கவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் கூறுகளில் இஸ்லாமிய உம்மத்தின் மீது இன்னொரு படையெடுப்பு நிகழ்ந்தது.

அதில் முன்பு போன்று பெருமளவு ஆயுதங்களோ, குதிரைப் படைகளோ போர் வீரர்களோ இருக்கவில்லை. ஆயுத ரீதியில் ஆக்கிரமிப்பு நிகழ்ந்தாலும் அதன் அரசியல் ரீதியான தாக்கமே மிகக் குரூரமாய் இருந்தது. இன்னும் தெளிவான வார்த்தையில் சொல்வதானால் அரசியல் ரீதியான ஆதிக்கத்தின் கீழ் ஒரு கலாசாரப் படையெடுப்பு (Cultural Invasion) நிகழ்ந்தது.[4]

Islamophobia மேற்கு மக்களின் உள்ளங்களில் இஸ்லாம் பற்றிய மோசமான பிம்பங்களை கட்டமைக்கிறது. முஸ்லிம்களின் உள்ளங்களில் "மேற்கை வெல்ல முடியாது; அதனுடன் போராட முடியாது; அது அசைக்க முடியாத சக்தி" போன்ற மாயையை (myth) உருவாக்குகிறது. இதுதான் நவீன காலப் போர் முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Islamophobia உருவாக்கத்தின் எட்டு அடிப்படைகள்

Islamophobia வானது எட்டு அடிப்படைகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளதாக Runnymede Trust குறிப்பிடுகிறார்.

1. இஸ்லாம் இறுக்கம் நிறைந்த, மாற்றங்களை விரும்பாத மதம் (Monolithic Bloc)
2. இஸ்லாம் ஏனைய நாகரிகங்கள், அறிவியல் கோட்பாடுகளுடன் பிரிந்து நிற்கக் கூடியதும் அவற்றுடன் உறவாடுவதற்கான எவ்வித பெறுமானங்களையும் (Values) தன்னகத்தே கொண்டிராததுமான மார்க்கம்.
3. இஸ்லாம் அறிவுபூர்வமற்ற, மேற்கை விட தரத்தில் குறைந்த, (Inferior) இழிவான மார்க்கம்
4. இஸ்லாம் பயங்கரவாதத்திற்கு துணை போகின்ற (Supportive of terrorism) வன்முறை (Violent), ஆக்கிரமிப்புக் குணம் நிறைந்த (Aggressive), நாகரிகங்களுடன் முரண்படும் தன்மை கொண்டது.
5. இஸ்லாம் அரசியல் ரீதியான கருத்தியலைக் கொண்ட மார்க்கம் (Political Ideology) அது இராணுவ, அரசியல் நலன்களுக்காகவே செயற்படுகிறது.
6. மேற்கு பற்றிய இஸ்லாத்தின் விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை.
7. இஸ்லாத்திற்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற எதிர்ப்புகள் முஸ்லிம்களை சமூக ஒழுங்கிலிருந்து புறமொதுக்குவதற்கும் முஸ்லிம்களை பிளவுபடுத்துவதற்குமான செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
8. முஸ்லிம்களை எதிர்ப்பது இயற்கையான அம்சமாகும்.[5]

இவ்வாறான எட்டு அம்சங்களை முன்னிறுத்தி முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்திற்கும் எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், இஸ்லாமியப் பீதியை உருவாக்கவும் மேற்குலகு முயற்சிக்கிறது.

## இஸ்லாம் பற்றிய மேற்குலகின் பார்வை

இஸ்லாமிய உலகின் நவீனகால எதிரியாகச் செயற்படும் மேற்குலகு இஸ்லாத்தை எவ்வாறெல்லாம் இழிவுபடுத்த முடியுமோ அதற்கான அனைத்து முறைகளையும் கையாள்கிறது. மேற்கு என்பது ஒரு பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதல்ல. மாறாக அது ஒரு வாழ்க்கை முறையாகும். உலகின் எக்கண்டத்தில் வாழும் எவரேனும் இவ்வாழ்க்கை முறையை பின்பற்றுபவராக இருந்தால் அவர் மேற்கத்தேயவாதி என்றே குறிப்பிடப்படுவார்.

மேற்கு புனித அல்குர்ஆனிய வசனங்களை முற்றாக மறுக்கிறது. அதனைப் போலியானது; படைக்கப்பட்டது; ஷைத்தானிய வசனங்கள் என இழிவுபடுத்துகிறது. இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்களது ஆளுமைப் பண்புகளையும் கொச்சைப்படுத்துவதோடு, மிக மோசமான விமர்சனங்களையும் முன்வைக்கிறது. இதன் விளைவாக அடிக்கடி நபி (ஸல்) அவர்கள் பற்றிய கேலிச் சித்திர நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன.

முஸ்லிம்களையும் அறபிகளையும் காட்டுமிராண்டிகளாகவும், இரத்தம் குடிக்கும் ராட்சகர்களாகவும், பயங்கர வாதிகளாகவும், உலக சமாதானத்தினதும் அமைதியினதும் எதிரிகளாகவும் காட்டுகிறது. மேற்கத்தேயவாதிகளை உலகின் கதாநாயகர்களாக சித்தரிக்கிறது.

இஸ்லாம் புவியியல் சார்ந்த கொள்கை; அது கீழைத்தேய உலகத்திற்கு மாத்திரம் உரித்தானது; மேற்குலகின் அறிவியல் போக்கிற்கும் வளர்ச்சிக்கும் இஸ்லாத்தினால் ஈடுகொடுக்க முடியாது; கிழக்குலகின் அறிவியல் பின்னடைவிற்கு அது இஸ்லாத்தை மதமாக ஏற்றிருப்பதே காரணம் போன்றவை இஸ்லாம் குறித்தும் முஸ்லிம்கள் பற்றியும் மேற்குலகம் கொண்டுள்ள கண்ணோட்டங்களாகும்.

## இஸ்லாம் குறித்து மேற்கத்தேயம் ஏன் பயப்படுகிறது?

இயற்கையாகவே இறைவன் ஏற்படுத்தி வைத்திருக்கும் இஸ்லாத்தின் இயங்கியலானது, இஸ்லாத்தின் தோற்றம் முதல் இன்று வரை அது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்து வந்த எதிர்ப்புகளை தகர்த்தெறிந்துள்ளது. இந்த சக்தி இஸ்லாத்திற்கு மாத்திரம் உரியது என்பதனால் எதிர்காலம் இஸ்லாத்தின் கரங்களுக்குச் சென்று விடும் என மேற்குலகு அஞ்சுகிறது. இவ்வாறு மேற்குலகு அஞ்சுவதற்கு ஐந்து காரணங்கள் இருக்கின்றன.

*1) இஸ்லாம் ஏனைய எந்த கோட்பாட்டிற்கும் முன்னால் அடிபணியாத, தலை சாய்க்காத மார்க்கம்.*

*2) உலகின் பல பாகங்களிலும் ஏற்பட்டு வரும் இஸ்லாத்தின் அபரிமிதமான வளர்ச்சியானது பாரிய கவனயீர்ப்பை பெற்றுள்ளமை.*

*3) பதிலீடுகளின் தோல்வி:*

மேற்கத்தேயம் மனித வழிகாட்டல்களாக முன்வைத்த கோட்பாடுகள், நாகரிகக் கருத்துக்கள் தோல்வியடைந்து விட்டன. அவற்றால் மனித ஈடேற்றத்தையோ மன நிம்மதியையோ கொடுக்க முடியவில்லை. தோல்விகளைச் சரிகட்ட மேற்கு உருவாக்கிய பதிலீடுகளும் தோல்வியடைந்து விட்டன. இந்நிலையில் அவ்விடத்தை இஸ்லாம் நிரப்பி விடும் என்ற அச்சம் மேற்கத்தேயர்களை ஆட்கொண்டுள்ளது. எனவே மேற்கில் வேகமாகப் பரவும் மார்க்கமாக இஸ்லாம் மாறியிருப்பதனால் அதனை இழிவுபடுத்தி பல ஆய்வுகளையும் புத்தகங்களையும் அவர்கள் வெளியிடுகின்றனர்.

i) Islamic Invasion, Confronting of the world's growing religion - by Robert Mores

ii) Militent Islam Reaches America by Deniel Pipes

iii) இஸ்லாத்தின் பீதியில் பிரான்ஸ் - by Roony Herson

இந்தப் புத்தகங்களின் வருகை மேற்கத்தேயம் தோல்வியடைகிறது, அவ்விடத்தை இஸ்லாம் நிரப்புகிறது என்பதைக் காட்டுகின்றது.

*4) மேற்கு தொழில்நுட்ப ரீதியாக (Technical) வெற்றி பெற்றாலும் கருத்தியல் (Idiological) ரீதியாக தோல்வியடைந்துள்ளமை.*

*5) இஸ்லாத்தின் இயற்கையான இயங்கியல் சக்தி.*

இஸ்லாம் தேக்கநிலை அடையாத பிரச்சினைகளின்போதும் எதிர்ப்புகளின்போதும் தனக்குள்ளால் இறைவன் ஏற்படுத்தி வைத்திருக்கும் இயங்கியல் சக்தியால் அவற்றைத் தகர்தெறிந்து முன்னோக்கிச் செல்லும் தன்மை கொண்டது. இதனைக் கண்டு மேற்குலகம் அஞ்சுகிறது.

மேற்கத்தேயவாதிகள் இஸ்லாம் குறித்த போதிய விளக்கமின்மையினால் உருவாக்கிக் கொண்ட விடயமே இஸ்லாமியப் பீதியாகும். அவர்கள் இஸ்லாத்தின் உண்மைகளை அறியவில்லை. அதனை வெறும் கோட்பாடாகப் பார்க்கின்றனர். சில நிகழ்வுகளையும் தோற்றப்பாடுகளையும் வைத்தே இஸ்லாத்தை மதிப்பிடுகின்றனர். தமது உலக சித்தாந்தங்களை இஸ்லாத்துடன் பொருத்திப் பார்க்கின்றனர். இவைகளே இஸ்லாம் குறித்த அச்சம் எழுவதற்கு காரணமாக அமைகின்றன.[6]

## Islamophobia வை உருவாக்கும் சக்திகள்

Islamophobiaவை உருவாக்குவதில் பல்வேறு சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. இவை பல்வேறு வடிவங்களில் அவற்றை உருவாக்க முயற்சிக்கின்றன. அதற்காக தம்மாலான முழுச் சக்திகளையும் செலவிடுகின்றன. இச்சக்திகளினால் Islamophobia பல வடிவங்களில் உருவாக்கப்படுகிறது.

### 1. மத ரீதியான தோற்றம் (Theological Image)

இஸ்லாத்தை மத ரீதியாக எதிர்ப்பதில் கிறிஸ்தவ திருச்சபைகள் முதலிடம் வகிக்கின்றன. இஸ்லாம் கிறிஸ்தவத்திற்கு எதிரானது, அதன் கருத்துக்கள் கிறிஸ்தவத்துடன் முரண்பட்டுச் செல்கின்றன போன்ற பிரம்மைகளை அவை உருவாக்குகின்றன. ஐரோப்பா இஸ்லாத்தை தழுவுமானால் தமது நலன்களும், சுக போகங்களும், கொள்கைகளும் செல்லுபடியற்றதாகிவிடும் என அச்சம் கொண்டுள்ள பாதிரிகளின் செயற்பாடுகளே இதற்கு முக்கிய காரணிகளாகும்.[7]

### 2. கருத்தியல் தோற்றப்பாடு (Idiological Image)

இத்தோற்றப்பாட்டை உருவாக்குவதில் கீழைத்தேயவாதிகள் முக்கியமானவர்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவ பாதிரிகளாக இருப்பதனால் கருத்தியல் தோற்றப்பாட்டின் உருவாக்கத்தில் மதம் தொழிற்படுவதையும் அவதானிக்க முடிகிறது. பல மேற்கு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களாக கடமை புரியும் இவர்கள் மாணவர்களை மூளைச் சலவை செய்வதன் மூலம் தமது கருத்துக்களை பரப்புகின்றனர்.

இவர்களின் கருத்துப்படி இஸ்லாம் புதுமைகளை விரும்பாத, கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவமளிக்காத, பரம்பரை வழக்கங்களைப் பின்பற்றுகின்ற (Tradition) ஒரு மதம். அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கால சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாது. அல்குர்ஆன் இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களால் உருவாக்கப்பட்டது போன்ற இன்னும் பல மோசமான கருத்துக்களையும் இவர்கள் ஆய்வுகளாக முன்வைக்கின்றனர். இக்கருத்தியல் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் கீழைத்தேயவாதிகளுடன் மேற்கின் இஸ்லாம் விரோதப் போக்குடைய சிந்தனையாளர்களும் கைகோர்த்துள்ளனர்.[8]

**3. இலக்கியங்களால் உருவாக்கப்படும் பீதி**

மேற்கின் இலக்கியவாதிகள் தமது இலக்கியங்களினூடாக இஸ்லாமியப் பீதியை இலக்கிய ஆர்வளர்களுக்கும், வெகுஜன மக்களுக்கும் ஊட்டுகின்றனர். பெரும்பாலான இலக்கியவாதிகளின் சிந்தனைகளை கீழைத்தேய கருத்துக்களும் ஆய்வுகளும் ஆக்கிரமித்திருப்பதால் அவர்கள் உருவாக்கும் இலக்கியங்களும், கலை நிகழ்வுகளும் இஸ்லாத்தை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளன.

கேளிக்கைகளிலும் கலியாட்டங்களிலும் அதிக விருப்பம் கொண்ட மேற்குலக மக்கள் இவற்றை உண்மை என நம்பி வருகின்றனர். Richard Burton, William Beckford, Eugere, Delacroi, Henry Regrult, John Ferdrick Lewis, Jean Auguste போன்றவர்களை இவ்வாறான இலக்கியவாதிகளுக்கான உதாரணங்களாகக் கொள்ள முடியும்.[9]

உண்மையில் மேற்குலகின் எல்லா சிந்தனையாளர்களும் இஸ்லாம் விரோதப் போக்கைக் கடைப்பிடிப்பதில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். இஸ்லாத்தைப் பற்றி நல்லபிப்பிராயம் கொண்டுள்ள சிந்தனையாளர்களும் உள்ளனர். மேற்குலகில் எழுதப்பட்ட "Europes Myths of Orient" என்ற புத்தகம் இதற்கு சிறந்த உதாரணம்.

## Islamophobia வை உருவாக்குவதில் மேற்கத்தேய ஊடகங்கள்

இன்றைய உலகம் ஊடகப் பயங்கரவாதத்தின் (Media Terrorism) கோரப் பிடியில் சிக்கியிருக்கிறது. ஊடகத் தொழில்நுட்பத்தில் பெரு வளர்ச்சி கண்டுள்ள மேற்குலகின் தயாரிப்புகளுக்கும் விரிவுபடுத்தலுக்கும் முன்னால் ஏனைய ஊடகங்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எங்கு பார்த்தாலும் மேற்கு ஊடகங்களின் வல்லாதிக்கமே தொழிற்படுகிறது. மேற்கத்தேயத்தின் சிந்தனைகளை உலகமயப்படுத்துவதில் அவை வெற்றிகண்டுள்ளன.

2001/09/11க்குப் பின்னர் மேற்குலகின் தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என பல்வேறு தளங்களிலும் இஸ்லாமியப் பீதியை மேற்குலகு உலகமயப்படுத்தியது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் முன்னணி ஊடக நிறுவனங்களாக செயற்பட்டு வருபவை யூத செல்வந்தர்களுக்குச் சொந்தமானவை. உதாரணமாக, Fox News, CNN, Reuturs, Google போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை இஸ்லாமியப் பீதியை மனித மனங்களில் கனகச்சிதமாக விதைத்து வருகின்றன.[10]

மேற்கத்தேய ஊடகங்களின் இச்செயற்பாட்டினால் உலகில் ஏற்பட்டிருக்கும் மோசமான விளைவுகள் குறித்து பல மேலைநாட்டு அறிஞர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அவை பல புத்தகங்களாகவும் வெளிவந்துள்ளன. இவர்களின் கருத்து, இச்செயற்பாடுகள் அடிப்படையற்றவை; நாகரிக மோதலுக்கும், புரிந்துணர்வின்மைக்கும் இட்டுச் செல்லக் கூடியவை என்பதாகும். அவ்வாறான சில புத்தகங்களுக்கு உதாரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். Arab and Muslim Sterreo typing in American popular culture by Edmand Shareeb. இது அறபு -அமெரிக்க விவகாரங்களுக்கான அமையத்தினால் வெளியிடப்பட்டது.

The T.V. Arab, Split vision -The Portrayal of Arabs in the American meathic, Real Bad Arabs -How hollywood villifies a people இவை மூன்றும் பேராசிரியர் Jack Shaheen ஆல் எழுதப்பட்டவை. இப்புத்தகங்கள் உலகின் மிகப் பெரும் பயங்கரவாதியாக மேற்கு ஊடகங்கள் மாறியிருப்பதாகக் குறிப்பிடுகின்றன.[11]

## இஸ்லாமிய பீதியை ஏற்றுமதி செய்வதில் Hollywood சினிமாக்களின் பங்கு

Hollywood சினிமா உலகளவில் பாரிய கவனயீர்ப்பைப் பெற்ற, இளைஞர்களை வசீகரித்து வைத்திருக்கும் மேற்கத்தேய சினிமா முறையாகும். இது 1ம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவை நோக்கி குடிபெயர்ந்த யூதர்களினால் உருவாக்கப்பட்டது. ஹொலிவூட் சினிமாவின் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களில் பெரும்பான்மையானவை யூதர்களுக்குச் சொந்தமானவை. உதாரணமாக Colombia, Coldwyn, Mayer-Metro, Warner Brothers, Peramount Universal, Twentith Century fox போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.[12]

ஹொலிவூட் சினிமாக்கள் முஸ்லிம்களை வில்லன்களாகவே சித்தரிக்கின்றன. பண்பாடற்ற, நாகரிகம் தெரியாத, மனித இரத்தத்தைக் குடிக்கும் சமூகமாகவே அவர்கள் காட்சிப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறார்கள். 2001/09/11 இரட்டைக் கோபுர தகர்ப்பின் பின் இதன் வீச்சு அதிகரித்துள்ளது. இதன் பின்னர் வெளியாகிய திரைப்படங்களில் 75%க்கும் மேற்பட்டவை முஸ்லிம்களை குரூர மானவர்களாகவும், பெண்களைத் துன்புறுத்து பவர்களாகவும், ஊடக சுதந்திரத்திற்கு எதிரான வர்களாகவுமே சித்தரிக்கின்றன.

இவ்வாறான ஹொலிவூட் திரைப்படங்கள் தயாரிப்பதனால் ஏற்படும் மோசமான விளைவுகள் பற்றி பேராசிரியர் Jack Shaheen, Real Bad Arab -How Hollywood vilaifies people என்ற நூலை எழுதியுள்ளார்.

இதுவரை வெளியான முஸ்லிம்களை மோசமாக சித்தரிக்கும் படங்களுக்கு உதாரணங்களாக Erodus, Black Sunday, Delta Force, Iron Eagle, Ruls of Engagment, Hidalco, The Mummy Returns போன்றவற்றைக் குறிப்பிடலாம்.[13] இது போன்று பல நூறு படங்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு மக்களின் உள்ளங்களில் இஸ்லாம் பற்றிய மோசமான பிம்பங்களை கட்டமைக்கிறது. முஸ்லிம்களின் உள்ளங்களில் "மேற்கை வெல்ல முடியாது; அதனுடன் போராட முடியாது; அது அசைக்க முடியாத சக்தி" போன்ற மாயையை (myth) உருவாக்கு கிறது. இதுதான் நவீன காலப் போர் முறையாகும்.

### Islamophobia விற்கு மத்தியில் இஸ்லாமிய எழுச்சி

இஸ்லாத்தை அழிப்பதற்கு அதன் எதிரிகள் என்னதான் முயற்சித்தாலும் அதன் வளர்ச்சியையும் எழுச்சியையும் எந்த மனித சக்தியாலும் தடுத்து விட முடியாது. 21ம் நூற்றாண்டின் அரை இறுதிப் பகுதிக்குள் இஸ்லாம் ஐரோப்பாவின் தீர்மானிக்கும் சக்தியாக மாறும் சாத்தியம் உள்ளது என்று 'மோசி ஸாபிச்' என்ற ராஜ தந்திரியின் ஆய்வு கூறுகின்றது. இவை அவர் வெளியிட்டுள்ள "Europe and Islam" என்ற ஆய்வு நூலில் இடம்பெற்றுள்ளன. "Growing Cresent and Decline of Civilization" (வளரும் பிறையும் நாகரிகத்தின் வீழ்ச்சியும்) என்ற தலைப்பு ஐரோப்பாவில் இஸ்லாத்தின் வளர்ச்சி நிலைகளை புள்ளி விபரங்களுடன் முன்வைக்கிறது.[14]

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் இஸ்லாமிய எழுச்சி அலைகளினால் மேற்குலகம் நடுநடுங்கிப் போயுள்ளது. இதனால்தான் இஸ்லாம் குறித்த மாயைகளை அவர்கள் கட்டமைக்க முயற்சிக்கின்றனர். ஆனால், மேற்குலக மக்கள் இஸ்லாத்தை தெரிந்து கொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுதான் இன்றைய ஐரோப்பாவினதும் அமெரிக்காவினதும் நிலை. மேற்கத்திய வாதிகள் ஏற்படுத்திவிட்ட இஸ்லாம் பற்றிய பீதி அங்குள்ள மக்களை இஸ்லாத்தைப் பற்றிய தேடலின்பால் தூண்டியுள்ளது. இதைத்தான் அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனில்,

**"அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். (அவர்களுக்கு எதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். இன்னும் சூழ்ச்சி செய்வோரில் அல்லாஹ் மிக்க மேலானவன்"** (அன்பால்:30)

மேற்கத்தேயவாதிகள் இஸ்லாத்திற்கு எதிராக செய்த சூழ்ச்சிகளை அல்லாஹ் அவர்களுக்கு எதிராகவே திருப்பியுள்ளான். அதுதான் ஐரோப்பாவில் மிக வேகமாகப் பரவி வரும் மார்க்கமாக இஸ்லாம் மாறியிருப்பதாகும்.

கிறிஸ்தவ ஐரோப்பா இப்பொழுது இஸ்லாமிய ஐரோப்பாவாக மாறி வருகிறது. அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் 20 ஆயிரம் பேர் இஸ்லாத்தை தழுவுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் வருடா வருடம் 22 ஆயிரம் பேர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதோடு, ஜேர்மனியில் கடந்த காலங்களை விட இவ்வருடம் 40,000க்கும் அதிகமானோர் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர்.

2008 மார்ச் மாதம் வத்திகான் வெளியிட்ட ஓர் அறிக்கையில் உலக முஸ்லிம் சனத்தொகை 19%ஆக அதிகரித்திருப்பதாகவும், கத்தோலிக்கர்களின் தொகை 18% ஆக குறைந்திருப்பதாகவும் குறிப்பிடுகிறது. இப்பொழுது இங்கிலாந்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு அதிகமாகச் சூட்டப்படும் பெயர் 'முஹம்மத்' என்பதாகும். இது பிரித்தானியாவின் டெய்லி கிராப் (Daily Graph) பத்திரிகை 2006ம் ஆண்டு வெளியிட்ட செய்தியாகும். ஜேர்மனியில் 30% கிறிஸ்தவ தேவாலயங்கள் மூடு விழாக் கண்டுள்ளன. அதேநேரம் பல நூறு பள்ளிவாசல்கள் புதிது புதிதாய் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.[15]

ஐரோப்பாவின் முழு மொத்த சனத்தொகையின் 23 மில்லியன் பேர் முஸ்லிம்கள். அங்குள்ள 37 நாடுகளில் 16க்கும் மேற்பட்ட நாடுகளில் இரண்டாவது சமயமாக இஸ்லாமும், இரண்டாவது பெரும்பான்மையினராக முஸ்லிம்களும் உள்ளனர். இந்தக் கணிப்பீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை முஸ்லிம் நாடுகளான துருக்கி, பொஸ்னியா, ஹெஸகோவினா என்பன உள்ளடங்கவில்லை. இவற்றைச் சேர்த்துப் பார்க்கும்போது மொத்தமாக 108 மில்லியன் முஸ்லிம்கள் அங்கு வாழ்வதாகக் கருதலாம்.[16]

Mark Steyn எழுதிய "America alone -The End of the World as we know it" என்ற கட்டுரையில் ''கிறிஸ்தவ ஐரோப்பா இஸ்லாமிய ஐரோப்பாவாக மாறும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதற்கான நம்பத் தகுந்த சூழ்நிலைகள் அங்கு நிலவுகின்றன. எந்த ஐரோப்பிய நாடு முதல் இஸ்லாமிய நாடாகும் என்பதுதான் கேள்விக்குறி. முதலில் அல்பேனியா, அடுத்ததாக பிரான்ஸ், பின்னர் இங்கிலாந்து அதனைத் தொடர்ந்து ஜேர்மன்?'' இப்படி எழுதுகிறார்.[17]

இஸ்லாத்தின் மீதான குற்றச்சாட்டுகளும் திரிபுவாதங்களும் அடுக்கடுக்காக முன்வைக்கப்படுகின்ற போதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் மக்கள் தொகை அதிகரித்தே செல்கிறது. 2015இல் ஐரோப்பிய முஸ்லிம் சனத்தொகை இரு மடங்காக அதிகரிக்கும் அதேவேளை, ஐரோப்பியர்களின் எண்ணிக்கை 3.5%ஆல் குறைவடையும் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இஸ்லாம் பற்றிய புத்தகங்களே மேற்குலகில் அதிகமாக விற்பனையாகியும் வருகின்றன.

மேற்குலகம் ஊடகப் பயங்கரவாதத்தின் மூலம் Islamophobiaவை கட்டமைத்தாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் இஸ்லாமிய நாடுகளை ஆயுத ரீதியாக தாக்கினாலும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் இஸ்லாமிய எழுச்சியை அவர்களால் தடுத்து நிறுத்த முடியாது. ''ஐரோப்பாவில் பிறை வளர்கிறது. அது சிலுவையை எவ்விதத்தில் பாதிக்கும் என்று அடுத்து வரும் இரு தசாப்தங்களுக்குள் மிகத் துல்லியமாய்ப் பார்க்கலாம்'' என்கிறார் கலாநிதி தாரிக் ரமழான்.

இஸ்லாம் உண்மையானது; அதை எவ்வளவு தான் நசுக்கினாலும் தன்னளவில் சக்தி பெற்று பெரு விருட்சமாவதை யாராலும் தடுக்க முடியாது. இதனை இன்னும் ஓரிரு தசாப்தங்களில் ஐரோப்பா நன்கு உணர்ந்து கொள்ளும்.

**அடிக்குறிப்புகள்**

1. இஸ்லாம் போபியா அல்ஜுதூர் அத்தாரிஹிய்யா, அத்தவாசுல்-04
2. மேலது
3. அஷ்ஷெய்க் றவூப் ஸெய்ன், உளப் பாங்கு மாற்றமும் சமூக மாற்றமும், இஸ்லாமிய சிந்தனை-111
4. மேலது
5. (Islamphobia, Challenge for us - by Runnymede Thrust) இஸ்லாம் போபியா அல்ஜுதூர் அத்தாரிஹிய்யா அத்தவாசுல்-04
6. மேலது
7. மேலது
8. மேலது
9. இஸ்லாம் போபியா வல் இஃலாமுல் ஹர்பி -அத்தவாசுல்-04
10. மேலது
11. ஹொலிவூட் ஸினாஅதுல் இஸ்லாம் போபியா -அத்தவாசுல்-04
12. மேலது 13. மேலது
14. ஐரோப்பிய முஸ்லிம் சிறுபான்மை -அரசியல் போராட்டமும் இஸ்லாத்தின் எதிர்காலமும், றவூப் ஸெய்ன், இஸ்லாமிய சிந்தனை-115
15. அலி அல் ஹம்மாதி, ரஃமல் மஆஸி, வஃயுல் இஸ்லாமி-522
16. ஐரோப்பிய முஸ்லிம் சிறுபான்மை, அரசியல் போராட்டமும் இஸ்லாத்தின் எதிர்காலமும், றவூப் ஸெய்ன், இஸ்லாமிய சிந்தனை-115


**உசாத்துணைகள்**

1. அத்தவாசுல் கட்டுரைகள்-04

லிமாதா கவ்பு மினல் இஸ்லாம்? கலாநிதி அப்துல் ஹாதி முஹம்மத் அப்துல் ஜலீல்

இஸ்லாம் போபியா அல் ஜுதூர் அத்தாரீஹ

அல் இஸ்லாம் இல் இஃலாமுல் ஹர்பி - தஹத்தியாத் மா பஃத அஹ்தாஸ்

2001/9/11 - கலாநிதி முஹம்மத் பஸாரி

அல் கவ்பு மினல் இஸ்லாம் பில் முஜ்தமயில் உறுப்பி - கலாநிதி ஆன் சூபி ருவால்

ஹவ்ல தகாபதின் கராஹியதி லிஇஸ்லாம் பில் பிக்ரில் ஹர்பி, கலாநிதி முஹம்மத் அஸ்ஸிமாக்

ஹொலிவூட் ஸினாஅது இஸ்லாம் போபியா

02. Islamophobia - பைனல் ஹகீகதி வத்தப்லீல் - தொகுப்பு அதிய்யா பத்ஹி அஸ் ஸீ ஸீ

03. இஸ்லாமிய சிந்தனை 111, 115

04. மேற்கத்தேய உலகம் தேய்ந்து கொண்டிருக்கிறது - ஜோர்ஜ் ஓவல் - இணையக் கட்டுரை

05. வயியுல் இஸ்லாமி 522,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாம் கஸ்ஸாலி, இமாம் ஜீலானி (ரஹ்)

## சிந்தனைகளும் விளைவுகளும்

பெரோஸ் முஹம்மது நௌசாத்
(விடுகை வருடம்)



**அழிவு தரும் நோய் எனும்போது அது உலக ஆசைதான்**

சொந்த நலன்களையும் மறந்து இஸ்லாத்தின் உயர்ச்சிக்காக தமது உயிரையும் தியாகம் செய்த முன்னோர்களின் நினைவுகள் பற்றிப் பேசுவதை விட உள்ளத்துக்கு விருப்பத்துக்குரிய வேறொரு விடயம் இருக்க முடியாது என்று ஹஸன் இப்றாஹீம் ஹஸன் குறிப்பிடுகிறார்கள்.(1) அந்த வகையில் நினைவுகூறப்பட வேண்டிய ஆளுமைகள் பலர் இருக்கின்றனர். இக்கட்டுரை ஹி.4ம், 5ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற இரண்டு முக்கியமான ஆளுமைகள் பற்றியும் சமூக சிந்தனை மாற்றத்தில் அவர்களது வகிபாகம் பற்றியும் சுருக்கமாக ஆய்வு செய்கிறது.

கால மாற்றத்துக்கேற்ப எழுகின்ற சவால்களுக்கு அமையவே அக்காலத்தில் தோற்றம் பெறும் சீர்திருத்தவாதிகளின் சிந்தனைப் போக்கும் அமைவதுண்டு. அந்த வகையில் ஹி.4ம், 5ம், 6ம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் உலகுக்கெதிராக தோன்றிய சவால்களாக கீழ்வருவனவற்றை வரையறுக்க முடியும்.

- மத்ஹப் முரண்பாடுகள்
- சூபித்துவ வழிபிறழ்வுகள்
- பாதினீக்களின் தோற்றமும் விளைவும்
- தத்துவக்கலை ஏற்படுத்திய சவால்கள்
- சிந்தனைக் குழப்பமும் அது முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கமும்
- மன்னர்களின் கெடுபிடிகளால் சமூக வாழ்வு சீர்குலைதல்
- மேற்சொன்ன சவால்களை சந்தர்ப்பமாகக் கொண்டு சிலுவை வீரர்கள் இஸ்லாமிய உலகை நோக்கிப் படையெடுத்திருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சவால்கள் நிறைந்த காலப் பகுதியில்தான் இருபெரும் ஆளுமைகள் இஸ்லாமிய உலகில் தோன்றினார்கள்.

1. *இமாம் கஸ்ஸாலி (ரஹ்) (ஹி. 450-505)*
2. *அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) (ஹி.470-563)*

## 1. இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும் சீர்திருத்தப் பணியும்

இமாமின் சமகாலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் இமாம் ஜுவைனி, அபூ இஸ்ஹாக் அஷ்-ஷிராஸி, அபுல் காஸிம் அல்-குஷைரி, அபூ அலி அல்-பர்னதி ஆகியோர் கலீபா நிளாம் அல் முல்க் ஸ்தாபித்த நிளாமிய்யா பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

இக்காலப் பகுதியில் இமாம் கஸ்ஸாலி பற்றி அறிந்து கொண்ட கலீபா நிளாம், நிளாமிய்யாவில் இணைந்து கொள்ளுமாறு இமாமிடம் கேட்டுக் கொண்டார். அன்றிலிருந்து இமாமின் பணி துரிதமடைந்தது. ஆனாலும் சில வருடங்கள் பணியாற்றிய இமாம் அன்று செல்வச் செழிப்பில் மூழ்கி அநியாயத்தில் மூழ்கியிருந்த சமூகத்தைக் கண்டு மனம் வருந்தி கற்பித்தல் பணியிலிருந்து விலகி 10 வருடங்கள் சூபித்துவ வாழ்வு வாழ்ந்தார்.

இதன் பின்னரான இமாமின் வாழ்வே ஒரு புதிய பாதையை அவருக்குக் காண்பித்தது. விளைவாக அவர் பெரும் சீர்திருத்தவாதியாக மாறினார். இப்பீடிகையுடன் இமாமின் சீர்திருத்தப் பணி குறித்து சுருக்கமாக நோக்குவோம்.

இமாமவர்கள் தமது பணியை ஆரம்பிக்க முன்னரே சில சமூக சிந்தனையாளர்கள் அகீதாவில் தெளிவை ஏற்படுத்துதல், அரசியல் மாற்றங்களை உண்டுபண்ணுதல் போன்ற அம்சங்களை இலக்காகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருந்தனர். காலத்தின் தேவை கருதி இமாமவர்களது இலக்காகவும் இவ்வம்சங்களே மாறின.

உலகை நோக்காகக் கொண்டு வாழ்ந்த உலமாக்களின் சிந்தனைப் போக்கை மாற்றுவதை இமாமவர்கள் தனது முதற் பணியாகக் கொண்டார்கள். உலமாக்களை நோக்கி இமாம் பேசிய ஒரு கருத்தை மாத்திரம் இங்கே குறிப்பிடுகிறோம். "அழிவு தரும் நோய் எனும்போது அது உலக ஆசைதான். இந்நோய் வைத்தியர்களுக்குத்தான் அதிகம் ஏற்பட்டுள்ளது. உங்களை மறந்துவிட்டு சிகிச்சைக்கான வழிமுறையை எங்களுக்குச் சொல்ல வருகிறீர்களே! என்று மக்கள் தம்மிடம் கேட்டு விடுவார்கள் என்ற வெட்கத்தினால் இந்நோயிலிருந்து அவர்களை எச்சரிக்கவும் சக்தியிழந்திருந்தார்கள். இதன் காரணமாக நோய் பரவி வைத்தியர்களை இழந்ததனால் மக்களும் அழிந்து போயினர். மக்களை ஏமாற்றும் கலைகளில்தான் வைத்தியர்கள் ஈடுபாடு காட்டினர். உபதேசம் செய்யாவிட்டாலும் குழப்பமாவது ஏற்படுத்தாமல் இருக்கக் கூடாதா! பேசாமல் மௌனமாகவே அவர்கள் இருந்திருக்க வேண்டுமே." இது போன்ற பல கருத்துக்கள் இஹ்யாஉ உலூமுத்தீனில் இடம்பெற்றிருக்கின்றன. அத்தோடு,

- கற்பித்தல், பயிற்றுவித்தலுக்கான புதிய பாடவிதானங்களை அமைத்தல்
- நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதற்கான முயற்சியைத் துரிதப்படுத்தல்
- அநியாயக்கார அரசர்களுக்கெதிராக போராட்டம் நிகழ்த்துதல்
- சமூக நீதிக்காக அழைப்பு விடுத்தல்
- வழிகெட்ட சிந்தனைப் பிரிவுகளை எதிர்த்தல் போன்ற முக்கியமாக பல பணிகளையும் மேற்கொண்டார்கள்.

## 2. இமாம் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் சமூக மாற்றப் பணி

அஷ்ஷெய்க் அபுல் ஹஸன் அலி அந்நத்வி (ரஹ்) அவர்கள், 'இமாம் கஸ்ஸாலியின் சிந்தனையின் விளைவாக முஸ்லிம் சமூகத்தில் பாரிய விழிப்புணர்வு ஏற்பட்டது என்றாலும் நிரப்பப்பட வேண்டிய பாரிய இடைவெளிகள் தொடர்ந்தும் இருந்தன. இவ்வேளை இன்னுமொரு ஆளுமையின் தேவையை சமூகம் உணர்ந்தது. அப்போதுதான் இப்பாரிய ஆளுமை தோன்றியது' என இமாம் அப்துல் காதிர் ஜீலானி குறித்து குறிப்பிடுகிறார்கள்.[2]

இமாம் கஸ்ஸாலியின் சிந்தனைகள் இயல்பிலேயே மார்க்க உணர்வும் பற்றும் கொண்டிருந்த இமாம் அப்துல் காதிரிலும் பாரிய தாக்கங்களை உண்டுபண்ணின. இரு இமாம்களதும் இலக்குகளும் ஒன்றாகவே அமைந்திருந்தமையால் இருவரது சிந்தனைகளும் கருத்துக்களும் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக இருப்பதனை அவதானிக்க முடியும். இஹ்யாஉ உலூமுத்தீன் போலவே அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் எழுதிய 'அல்-குன்யது லிதாலிபீ தரீகில் ஹக்' என்ற நூலும் அமைந்திருக்கின்றமை இதற்கு ஆதாரமாக அமைகிறது.

ஹி. 521ல் தனது பணியை ஆரம்பித்த இமாமவர்கள் முதலில் சிறிய கல்விக் கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை அமைத்தார்கள். பின்னர் தேவை கருதி பாரிய தியாகங்களுக்கு மத்தியில் ஹி.528ல் இக்கல்விக் கூடத்தை விசாலிக்கும் பணியை நிறைவு செய்தார்கள். பின்னர் முழு உலகையும் இஸ்லாத்திற்காக பணிபுரிய அழைப்பு விடுத்தார்கள். 'உலகத்தாரே! முஹம்மத் (ஸல்) அவர்களது மார்க்கத்தின் சுவர்கள் படிப்படியாக வீழ்கின்றன. அதனது அத்திவாரமும் சிதறிப் போகிறது. தகர்ந்து போனதைக் கட்டியெழுப்புவோம், வீழ்ந்து போனதை மீண்டும் நிறுவுவோம். வாருங்கள். இது பூரணப்பட வேண்டிய பணி. சூரியனே! சந்திரனே! பகலே வாருங்கள்.' இவ்வாறு விடுக்கப்பட்ட அழைப்பை நோக்கி 70,000க்கும் அதிகமானோர் இமாமவர்களது பாசறையில் ஒன்று கூடினார்கள்.

உலகம் கரங்களில் இருக்க முடியும். சட்டைப் பையினுள் இருக்க முடியும். நல்லெண்ணத்துடன் அதனை சேமிக்கவும் முடியும். ஆனால், உள்ளத்தில் இருக்கக் கூடாது.

இமாமவர்கள், உலமாக்கள் மறுமையை மறந்திருந்ததைப் பார்த்து, "மறுமைக்கான பாதையில் வீற்றிருக்கும் உலகத்துக் கொள்ளையர்களே! சத்தியத்தை அறியாதவர்களே! பொதுமக்களுக்கு நீங்கள் செய்த அநியாயத்துக்கு அவசியம் தௌபா செய்ய வேண்டும். அவர்களுக்கு இழைத்த குற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களிடம் எந்த நன்மையும் கிடையாது" என்று கூறி எச்சரித்தார்கள்.

இன்னுமொரு கருத்தில் "உலகம் கரங்களில் இருக்க முடியும். சட்டைப் பையினுள் இருக்க முடியும். நல்லெண்ணத்துடன் அதனை சேமிக்கவும் முடியும். ஆனால், உள்ளத்தில் இருக்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்கள். அத்துடன் அரசியல் தளத்திலும் அநியாயக்கார அரசுகளுக்கெதிராக சுவரொட்டிகளையும், பதாதைகளையும் ஏந்தினார்கள். வறுமை ஒழிப்புக்காக பாரியதொரு பணியை நிகழ்த்தினார்கள். அயராத முயற்சியில் இறுதி மூச்சுவரை ஈடுபட்டிருந்தார்கள்.

## மாற்றத்தை நோக்கி முஸ்லிம் உம்மா

இக்கட்டுரையின் இறுதிப் பகுதி இரு இமாம்களது இணையற்ற பணியின் விளைவாக முஸ்லிம் உம்மாவில் ஏற்பட்ட எழுச்சி குறித்து சுருக்கமாக ஆராய்கிறது.

அந்த வகையில் முஸ்லிம் சமூகத்தில் கல்வி, அரசியல், சமூகவியல், இராணுவம் போன்ற பல துறைகளிலும் ஆன்மீக ரீதியில் பயிற்றப்பட்ட தலைவர்கள் உருவாகியமையை முதலாவது பெரும் விளைவாகக் கொள்ள முடியும்.

இப்னு நஜா அல் வாஇழ், அல்-ஹாபிழ் அர்-ரஹாவி, அப்துல் காதிர் ஜீலானியின் மகன் மூஸா மற்றும் இமாம் இப்னு குதாமா போன்ற பெரும் அறிஞர்கள் தோற்றம் பெற்றமை கல்வித் துறை கண்ட முன்னேற்றமாகும். அதுபோலவே நன்கு பயிற்றப்பட்ட ஆன்மீகத் தலைவர்கள் தத்தமது பிரதேசங்களில் கல்விப் பாசறைகளை உருவாக்கி பணிபுரிந்தார்கள். கல்வி மற்றும் பயிற்றுவித்தல் துறை கண்ட மிகப் பெரிய அடைவாக இது அமைகிறது.

இந்த வகையில்,

1. அதவிய்யா - அஷ்ஷெய்க் அதீ பின் முஸாபிர் (சிரியா-திமிஷ்க்)
2. அஸ்ஸஹ்ரவர்தியா - அஷ்ஷெய்க் அபுந் நஜீப் அப்துல் காஹிர் அஸ்ஸஹ்ரவர்தீ (ஈராக்)
3. பயானிய்யா - அஷ்ஷெய்க் அபுல் பயான் (திமிஷ்க்)
4. மத்ரஸதுஷ் ஷெய்க் ரஸ்லான் அல்-ஜஃபரி (திமிஷ்க்)
5. மத்ரஸது ஹயாது பின் கைஸ் அல்-ஹரானி (சிரியா)

போன்ற 20க்கும் மேற்பட்ட பாசறைகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

அரசியல் தளத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்த இமாம்களிருவரும் மன்னர்களை அணுகி, அவர்களுக்குப் போதனைகள் வழங்குவதிலும், ஆலோசனை வழங்குவதிலும் முனைப்புடன் ஈடுபட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் கஸ்ஸாலி அவர்கள், அவரது காலத்தில் பலம் பெற்றிருந்த மன்னர்களான யூசுப் பின் தாஷ்பீன், முஹம்மத் பின் தோமூர்த் ஆகியோரை அணுகி இஸ்லாமிய தேசம் ஒன்றை அமைக்குமாறு தூண்டுதல் அளித்தார்கள். மன்னர்களின் நியமனம் குறித்துக் கூட இமாம் கஸ்ஸாலியிடம் ஆலோசனை பெறப்பட்டது. அதேபோல இமாம் அப்துல் காதர் அவர்கள் தமது பாசறைக்கு பொதுமக்களும், கல்விமான்களும், அரசர்களும் பல்வேறு தேசங்களில் இருந்து வந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். 400 பெரும் அறிஞர்களும் இமாமவர்களது பாசறையில் இருந்தமை குறிப்பிட்டுக் கூற வேண்டிய அம்சமாகும். இனி முக்கியமானதோர் விளைவு குறித்து நோக்குவோம்.

கட்டுரையின் ஆரம்பத்தில் முஸ்லிம் உலகுக்கெதிராக தோன்றிய முக்கிய சவால்களைக் குறிப்பிட்டிருந்தோம். அவற்றுள் சிலுவை வீரர்களின் படையெடுப்பே மிகப் பெரிய சவாலாக இருந்தது. சிலுவை வீரர்களின் இஸ்லாமிய உலகை நோக்கிய நகர்வை ஜிஹாத் புரிந்து பின்வாங்கச் செய்யும் அளவுக்கு முஸ்லிம் உலகு அகீதா ரீதியாக அன்று பலம் பெற்றிருக்கவில்லை. இப் பின்னணியே இரு இமாம்களும் அகீதாவை சீர்திருத்தும் பணியை இலக்காகக் கொண்டமைக்கான காரணமாகும்.

இமாம்களின் இம்முயற்சியே ஆக் ஸன்கர் (ஹி.477), இமாதுத்தீன் ஸன்கீ, நூருத்தீன் ஸன்கீ, பிக்ஹ் மற்றும் ஹதீஸ் கலை அறிஞர் அல்- ஹாபிழ் ஸலாஹுத்தீன் அய்யூபி போன்ற தளபதிகளின் வெற்றிக்குப் பின்னால் மறைந்திருந்தது. ஏனெனில், குறிப்பாக நூருத்தீன் மற்றும் ஸலாஹுத்தீன் படைகளில் ஆலோசகர்களாக, படை வீரர்களாக பணியாற்றியோர் இவ்விரு இமாம்களின் பாசறையில் பயிற்றப் பட்டவர்களே.

கி.பி. 1098 (ஹி.492)ல் ஆக்கிரமிக்கப்பட்ட குத்ஸை ஹி.570 காலப்பகுதியில் ஒரு நூற்றாண்டுக்குள்ளாலேயே சிலுவை வீரர்களிடம் இருந்து மீட்டெடுத்த ஸலாஹுத்தீன் தனது ஆலோசகராக இருந்த அல்-காழி அப்துர் ரஹீம் பின் அலி குறித்து "நான் இத்தேசத்தை எனது வாளினால் வெற்றி பெறவில்லை. நிச்சயமாக அல்காழி அவர்களது ஆலோசனையினாலேயே வெற்றி பெற்றேன். அவர் தனது அரசியல் சாணக்கியத்துடன் மிகுந்த பேணுதல் உள்ளவராக இருந்தார். அதிகமாக நோன்பு நோற்பவராகவும், தொழுபவராகவும், குர்ஆன் ஓதுபவராகவும் இருந்தார். பணிவுள்ளவராகவும், நோயாளிகளைத் தரிசிப்பவராகவும், ஏழைகளுக்கு உதவி புரிபவராகவும் இருந்தார்" என்று குறிப்பிடுவதன் மூலம் எத்தகைய ஆளுமைகள் அப்பாசறையில் உருப் பெற்றிருக்கின்றன என்பதை ஊகிக்க முடிகிறது.

எனவேதான் 'நேற்றைய கனவுகள் இன்றைய யதார்த்தங்கள்' என்று இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) குறிப்பிடுவது போல இரு இமாம்களின் பணி, முஸ்லிம் சமூகத்தை ஈற்றில் வெற்றிப் பாதைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டது. மட்டுமன்றி, புதிய பரம்பரையொன்றையும் உருவாக்கியது.

உண்மையில் இன்றைய 21ம் நூற்றாண்டின் பேசுபொருளாக மாறியிருக்கும் இஸ்லாம் கிட்டிய எதிர்காலத்துக்குள் சர்வதேச தலைமை பீடத்தை ஏற்க வேண்டுமெனின் இமாம் கஸ்ஸாலி, இமாம் அப்துல் காதிர் ஜீலானி போன்ற இமாம்களின் பணியையும், தியாகத்தையும் செய்பவர்களாக எமது அறிஞர்களும் தலைவர்களும் மாற வேண்டும். பிற்கால சமூகத்தை வழி நடாத்தும் தலைவர்களையும், சிந்தனையாளர் களையும் உருவாக்கும் பணியில் முழு முஸ்லிம் உம்மாவும் மிக வினயமாக ஈடுபட வேண்டும்.

அல்-குர்ஆனினதும் நபி (ஸல்) அவர்களது போதனைகளையும் கடைப்பிடித்து வாழும் மனிதர்கள் நிறைந்த தூய தேசமொன்றை உருவாக்க வேண்டும். அப்போதுதான் எமது இன்றைய கனவுகள் நாளை யதார்த்தங்களாய் மாறும் எனும் யதார்த்தத்தை இதனூடாக நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## அடிக்குறிப்புகள்

(1) ஸுஅமாஉல் இஸ்லாம்

(2) ரிஜாலுல் பிக்ரி வத்தஃவா

**உசாத்துணைகள்**


1. ஹாகதா ழஹர ஜீலு ஸலாஹித்தீன் வஹாகதா ஆததில் குத்ஸ் - மாஜித் இர்ஸான் அல்-கைலானி
2. ரிஜாலுல் பிக்ரி வத்தஃவா - அபுல் ஹஸன் அலி அந்நத்வி
3. ஸுஅமாஉல் இஸ்லாம் - ஹஸன் இப்ராஹீம் ஹஸன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HUMAN TOUCH

உலக மேற்பரப்பில் மனித வாழ்வு அரிய பல நிகழ்வுகளையும் சாதனைகளையும் தன்னகத்தே தொடர்ந்தும் நிரப்பிக் கொண்டே இருக்கின்றது. புதிய பல பெயர் தாங்கிய கண்டுபிடிப்புக்களையும், கற்கைகளையும் அறிமுகப்படுத்தி வளப்படுத்தியே வருகின்றது. ஆயினும், மனித வரலாற்றில் மனிதன் அறிந்தே விட்ட, கட்டாயம் சீர்செய்யப்பட வேண்டிய பல பிழைகளும், தவறுகளும் வரலாற்றுப் புகழ்பூத்த பக்கங்களில் விரவி காணப்படுகின்றன.

மனித வாழ்வு வெற்றி பெற இரு அறிவுகள் மிக அவசியம்.

1. நான் யார்? என்னை எவ்வாறு கையாளுவது?
2. என்னுடன் இருப்பவர்கள் யார்? அவர்களை எவ்வாறு கையாளுவது?



முதலாவது அறிவு ஒரு பரந்து விரிந்த ஆய்வை தன்னகத்தே கொண்டிருப்பதனாலும், விரிவஞ்சியும் அது தவிர்க்கப்பட்டு பிறருடனான எமது உறவை எவ்வாறு கட்டமைத்துக் கொள்வதென்பதை இங்கு நோக்குவது பொருத்தமும், காலத்தின் தேவையும் எனக் கருதுகிறேன். உலகில் மனித வாழ்வை பரஸ்பர தேவைகளையும், உதவி ஒத்தாசைகளையும் வேண்டப்பட்ட நிலையில்தான் அல்லாஹ் ஆக்கியுள்ளான். அதை புறக்கணித்த நிலையில் எந்தவொரு ஆத்மாவிலும் இவ்வுலகில் ஜீவிக்க முடியாது. இது இறைவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள இயல்புடன் பொருந்திப் போகும் விதி. இதையே அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

"நன்மை புரிவதிலும், இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் உதவியாக இருக்க வேண்டாம்." (அல்மாயிதா:2)

■■■

எம்.ஸீ. அப்துல் வாஜித்
**(விடுகை வருடம்)**

■■■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்ணில் இருந்து படைத்தோம். இன்னும் ஒருவருகொருவர் நீங்கள் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்." (அல்-ஹுஜ்ராத்: 13)**

உலகில் வாழும் அனைத்து மனிதர்களும் ஒரு தாய், தந்தை வழிவந்தவர்களே. அவர்களுக்குள் அறிமுகமும், பரஸ்பர அன்பும் பரிவும் ஏற்பட பலவாறான அமைப்பில் அல்லாஹ் அவர்களை வகைப்படுத்தியுள்ளதாகக் கூறுகிறான். தூய இஸ்லாமிய வாழ்வை வாழ எத்தனிக்கும் ஒரு முஃமின் பிறரை புறக்கணித்தவனாய் ஒருபோதும் தன் பயணத்தை தொடர்ந்திட இயலாது. அவ்வுறவை திறம்பட பேணிக் கொள்வதற்கான பல வழிகளை இஸ்லாம் எமக்கு முன்வைத்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ஒரு முஸ்லிமுக்கு பிற முஸ்லிமின் மீது ஆறு கடமைகள் உள்ளன.

1. அவனைத் தரிசித்தால் ஸலாம் சொல்லல்.
2. அவன் விருந்துக்கு அழைத்தால் அதற்கு பதிலளித்தல்.
3. உபதேசம் செய்யும்படி கேட்டால் உபதேசம் செய்தல்.
4. அவன் தும்மி 'அல்ஹம்துலில்லாஹ்' சொன்னால் 'யர்ஹமுக்கல்லாஹ்' சொல்லல்.
5. அவன் நோய்வாய்ப்பட்டால் நோய் விசாரிக்கச் செல்லல்.
6. அவன் மரணித்தால் ஜனாஸாவை பின் தொடர்ந்து செல்லல்.

பிறிதொரு தடவை சொன்னார்கள்: *"என் ஆத்மா எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, நீங்கள் ஈமான் கொள்ளாதவரை சுவனம் நுழைய மாட்டீர்கள். நீங்கள் பரஸ்பரம் அன்பு கொள்ளாதவரை ஈமான் கொண்டவராக ஆக மாட்டீர்கள்." (முஸ்லிம்)*

இஸ்லாம் முன்வைத்துள்ள மனித உறவின் அடிப்படைகளை மூலமாகக் கொண்டு மனித உள்ளத்தினை தொட 10 வழிமுறைகளை நவீன உளவியல் அறிமுகப்படுத்தியுள்ளது. இவை எம் சமூக உறவில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்த வல்லது என்பது சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்ட உண்மையாகிறது. ஏனெனில், மனிதன் எப்பொழுதும் தனது விடயத்தில் அடுத்தவர் கரிசனை செலுத்த வேண்டும் என்று அவா கொள்கிறான். அவனது தேவைகளை நிறை வேற்றும் பட்சத்தில் அவனால் விரும்பப்படும் மனிதனாக, அவனது உள்ளமெனும் சிம்மாசனத்தில் இடம்பிடித்த அரசனாக நிச்சயம் ஆக முடியும்.

பல்வேறு குலம் கோத்திரங்களாகப் பிரிந்து கிடந்த மானுட சமூகம் இடையறாத போராட்டத்தின் விளைவாக அடைந்திருக்கின்ற தொழில் நுட்ப அடைவும், அறிவியல் கண்டுபிடிப்பும் மானுட உறவை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கும் சாத்தியத்தையே ஏற்படுத்தியுள்ளன. கூடி வாழல், சகஜீவனம் என்பன முன்னெப்போதையும் விட அதிகரித்துள்ள இக்காலப் பிரிவில் "Human Touch" பற்றி ஒரு விரிவான கதையாடலை இவ்வரிகளின் வாயிலாக முன்வைக்க முயற்சிக்கிறேன்.

H - Hear him
U - Understand his feelings
M - Motivate his desire
A - Appreciate his efforts
N - News him
T - Train him
O - Open his eyes
U - Understand his uniqueness
C - Contact him
H - Honour him

## H - Hear him செவிமடு

உடலுறுப்புக்கள் அனைத்தும் தாமாகவே மூடிக்கொள்ளும்போதும் இரு உறுப்புக்கள் மட்டும் எப்போதும் திறந்தேயிருக்கின்றன.

1. மூக்கு - அது எமக்காக
2. காது - அது பிறருக்காக

அடுத்தவர்களது பேச்சை செவிமடுக்க எப்போதும் எம் காதுகள் தயார் நிலையில்தான் இருக்கின்றன. பிரச்சினைகளுக்குள் அகப்படும் ஒருவனது வேதனைகளை பிரிதொருவரிடம் அவன் முன்வைக்க அதை அவர் செவிமடுத்தாலே பெரும்பாலும் குறைந்துவிடுகின்றன. வைத்தியர் எழுதித் தரும் மருந்தினை விட நோயாளியின் முறைப்பாட்டை அவர் செவிமடுப்பதிலே குணம் தங்கியுள்ளது. அதுபோலத்தான் உளப் பிரச்சினைக்கு உட்படும் ஒருவனது குமுறல்களை உளவள ஆலோசகர் காது தாழ்த்திக் கேட்பதே அவனுக்கான மருந்து.

செவிமடுத்தலென்பது காது என்ற ஒரு உறுப்போடு மாத்திரம் தொடர்பான ஒன்றல்ல. அதனை ஓர் உளவியலாளர் பின்வருமாறு விளக்குகிறார்: 'செவிமடுத்தலானது ஒரு உளவள ஆலோசகர் பெற்றிருக்க வேண்டிய மிக முக்கியமான பண்பு. ஒருபோதும் எம் காதுகளால் மட்டும் செவி மடுக்கலாகாது. மாற்றமாக எம் கண்கள், சிந்தனை, உடல், உள்ளம் ஆகிய அனைத்தும் அப்பேச்சை செவிமடுக்க வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும்.' அதேபோன்று செவிமடுக்கும்போது பின்வரும் விகித அளவை பேண வேண்டும் எனவும் சொல்கிறார்.

வார்த்தை 7%

வார்த்தை வெளிவரும் முறை 38%

உடல் மொழி 55%

இஸ்லாத்தை பூரணமாக பின்பற்றுவதிலும் கூட முதலம்சம் செவிமடுத்தலாகும். அதனடியாக கட்டுப்படல் வேண்டும். மார்க்கத்தை பின்பற்ற இறைவனுக்கு செவிமடுத்தல் வேண்டும். மானிடர்களுக்கிடையேயான ஊடாட்டம் வெற்றி பெற ஒருவர் மற்றவரை செவிமடுக்க வேண்டும்.

## U - Understand his feelings
### உணர்வுகளைப் புரிந்துகொள்

Understanding is the shortest distance between two people. இரு மனிதர்களுக்கு இடையேயான மிகக் குறுகிய தூர இடைவெளி புரிந்துணர்வு.

மனித மனம் அடுத்தவர்களிடம் எதிர்பார்க்கும் ஒரு முக்கிய அம்சம், தான் புரியப்பட வேண்டும் என்பது. இவ்வுணர்வு சிறுபிள்ளை முதல் பெரியோர் வரை அனைவரது உள்ளத்திலும் ஆழமாக பதிந்து கிடக்கும். தன்னுணர்வுகளை மற்றோர் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு ஏற்றால்போல் அவர்கள் செயற்பட வேண்டுமென ஆழ்மனம் சொல்லிக் கொண்டே இருக்கும். வார்த்தைகளில் வெளிவராவிடினும், பிறருடனான எம்முறவை வலுப்படுத்துவதில் இது மிக முக்கிய அம்சம் பிறரை சரியாகப் புரிந்து அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படும்போது நெருக்கம் மிக இறுக்கமாகும்.

நபி (ஸல்) அவர்கள் தன்னிடம் வரும் ஒவ்வொரு மனிதனது உணர்வுகளுக்கும் உரிய பெறுமானத்தை கொடுத்தவர்களாக கேள்விகளுக்கு பதில் சொல்லும் வழக்கத்தை கொண்டிருந்தார்கள். சகபாடிகளில் உள்ளார்ந்த உணர்வலைகள் எம்மிடம் பெறுமதி பெறுகின்றன என்பதனை அவர்கள் அறியும்போது தன்னையறியாமலேயே எம்முன் கட்டுண்டு போய்விடுவார்கள்.

மனிதனை அணுக இரண்டு வழிகள் உள்ளன.

1. அறிவு ரீதியாக
2. உணர்வு ரீதியாக

அறிவுசார்ந்தது காலநீடிப்பை வலியுறுத்தி நிற்கும்; நிரந்தரமாயிருக்கும். ஆனால், உணர்வு ரீதியானது உடன் முடிவைக் காட்டும். உணர்வு ரீதியாக அணுகி அறிவு ரீதியாக வழிநடாத்தப்படும்போது உறவுகள் எப்போதும் உதய சூரியன் போல் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

## M - Motivate his desire
### தூண்டுதல் அளி

சூழலின் கைதி மனிதன். அவன் ஆசைகளின் அடிமை. ஆசைகளும் விருப்பங்களும் நிறைவேறும்போது அவனுள் ஊற்றெடுக்கும் மகிழ்ச்சியுணர்வு எல்லை கடந்து சிறகடிக்கச் செய்யும். இத்தகைய இயல்பு கொண்ட இவனை இலகுவில் அடைய அவனது ஆசைகளுக்கு உந்துதல் அளிப்பது போதுமானது. அவனை இலட்சியக் கனவு காண தூண்ட வேண்டும். அவை நிறைவேற வழிசெய்ய வேண்டும். வைக்கின்ற இலட்சியங்கள் உயரியனவாக அமைய வழிகாட்ட வேண்டும். உன்னதக் கனவுகளை உள்ளத்தில் சுமக்க அவனை பழக்க வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஆசை வைக்கும் படி எம்மை பணித்துள்ளார்கள். அதிலும் மிக உயர்ந்ததாகிய ஜன்னதுல் பிர்தெளஸ் எனும் சுவனத்தைக் கேட்கும்படி கற்றுத் தந்துள்ளார்கள். அதுபோலவே உமர் (ரழி) அவர்களும் ஆசை வைக்கும்படி தம் தோழர்களைத் தூண்டுவார்கள். அவர்களது விருப்பங்களை கேட்டு விட்டு அவற்றை விட உயர்ந்த, தன் விருப்பத்தை வெளிப்படுத்துவார்கள்.


குறுகிய ஆசைகளையுடைய மனிதனுக்கு நீண்ட இலக்குகளின் பாதையை காட்டிக் கொடுக்க வேண்டும். ஆசையின் விசாலத்துக்கு ஏற்ப அவனது பயணத்தை தொடர்ந்திட வழி காட்ட வேண்டும். தூண்டுதல் அளிப்பது அடிமனதில் ஆழிய இடம்பிடிக்க இலகுவான வழி என்பதை எம்மில் பலர் மறந்தே இருக்கிறார்கள்.

## A - Appreciate his efforts
### முயற்சிகளை பாராட்டு

'Appreciate' என்பது உதட்டளவிலான பாராட்டல்ல. உள்ளத்தில் இருந்து வரும் பாராட்டு. ஒருவன் மேற்கொள்ளும் முயற்சி சிறியதாயினும் பெரியதாயினும் பெறுமதியாயினும் பெறுமதியற்றதாயினும் பாராட்டல் வேண்டும். வில்லியம் ஜேம்ஸ் என்ற உளவியலாளர் சொல்கிறார்: "பாராட்டுக்காக ஏங்குவது மனித இயல்பு" எவனுடைய உள்ளத்தில் பொறாமை, வஞ்சகம், குரோதம் போன்ற இழி குணங்கள் இல்லையோ அவன் மட்டுமே இப்பண்பை தன்னகத்தே கொண்டிருப்பான். எம் சமூகத்தில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய பல பணிகள் இடையில் தரிபட்டமைக்கு இது மிக அடிப்படைக் காரணம். தனது செயற்பாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டிற்காக தன்னை அடுத்தவர்கள் பாராட்ட வேண்டுமென சிறு குழந்தை கூட எதிர்பார்க்கின்றது.

நபிகளாரின் வாழ்வில் இதற்கான பல உதாரணங்களை காண முடிகின்றது. ஒவ்வொருவரது திறமைகளையும் அறிந்து பாராட்டுபவர்களாக நபி (ஸல்) அவர்கள் காணப்பட்டார்கள். இத்தகைய உணர்வு ஏற்பட வேண்டுமாயின் கெட்ட எண்ணங்களை விட்டும் தூய்மையானதாக உள்ளம் மாற வேண்டும். கெட்ட எண்ணங்களை தவிர்ந்து கொள்ளும்படி அல்லாஹுத் தஆலா ஸூறதுல் ஹுஜ்ராத்தின் 12ம் வசனத்தில் கட்டளை இடுகிறான். செயல்களில் சிறந்தது மனிதனை மகிழ்விப்பது. நாம் பாராட்டினால் நிச்சயம் பாராட்டப்படுவோம்.

நவீன சிறுவர் உளவியல் கூட இதனை அண்மைக் காலமாக வலியுறுத்துகிறது. ஏனெனில், சிறுவர்கள் தங்களது சிறு சிறு கருமங்களுக்காகவும் தாங்கள் பாராட்டப்படல் வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். நிறைவேறாத போது நிராசையடைகிறார்கள். இச்சிறு விடயம் நிகழ வேண்டிய நேரத்தில் நிகழாது போனால் அவர்களது வாழ்க்கைப் பாதை வேறு திசையை நோக்கி திரும்பவும் வாய்ப்பிருக்கின்றது.

பாராட்டும்போது ஒரு விடயத்தை கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும். அது தூய்மையானதாக இருத்தல் வேண்டும். சமூகத்தில் கூடி நின்று Felicitate பண்ண தயாராய் இருக்கும் மனிதர்கள் உள்ளத்தால் Appreciate பண்ண பின் வாங்குகிறார்கள். Felicitate கூட Appreciate ஆக மாறும்போது உள்ளங்களில் எம்மால் இடம்பிடிக்க முடியும்.

**N - News him** - *சிறப்பித்துப் பேசு*

இன்றைய உலகு தகவல்களாலும் செய்திகளாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. அன்றாடம் உலகில் இடம்பெறும் நிகழ்வுகளையும் சம்பவங்களையும் தகவல்களாக எமக்கு வழங்கக் காத்திருக்கும் எத்தனையோ வகையான ஊடக சாதனைகளை நாம் எதிர்கொள்கிறோம். அந்நோக்கத்தை நிறைவேற்ற பல வகையான கண்டு பிடிப்புகளை நாளாந்தம் உலக பிரசவிப்பது அதிசயமானதொன்றல்ல. குறித்ததொரு தினத்தில் நிகழும் ஒரு நிகழ்வை அதே தினத்தில் அதை அறியாத நிலையில் ஒருவன் உயிர் வாழ்கிறான் எனில் உண்மையில் அவன் அன்றைய தினம் உலகில் வாழவில்லை என்பதே பொருள்.

மனித உறவாடலின் வெற்றிக்கு செய்திப் பரிமாற்றம் இன்றியமையாததொன்று. இருவருக்கிடையேயான தகவல் பரிமாற்றம் அன்பையும், நட்பையும் மென்மேலும் வளர்க்கும் சாதனம். நாமறிந்ததை அறியாத ஒருவருக்கு சொல்லித் தரும் வேளையில் தனக்குத் தெரியாத ஒரு விடயத்தை தனக்குச் சொல்லித் தந்தவனை உளமாற மதித்து உண்மை அன்பை வெளிப்படுத்தும் ஒருவனாக நிச்சயம் அவன் மாறுவான். இது ஒரு சர்வ சாதாரண விடயம். தானறிந்ததைத் தெரியப்படுத்துவது, தகவல் கொடுப்பது, செய்தி அறிவிப்பது, இது உள்ளத்தில் ஏற்படுத்தும் தாக்கம் புரியாமலும், மனித உறவில் அதன் ஆழம் தெரியாமலும் தடுமாறும் எத்தனையோ மனிதர்களை அன்றாடம் நாம் காண்கின்றோம்.

குறித்ததொரு விடயம் தொடர்பில் ஓரிடத்தில் மக்களிடையே கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. அவ்விடயம் தொடர்பில் எவ்வித தகவல்களையும் அறியாத ஒருவன் அவர்களிடையே இருப்பானேயானால் அனைவர் முன்னிலையிலும் வெட்கித் தலைகுனிய வேண்டி வரும். அதேநேரம், அதே சபையில் பிறிதொருவனுக்கு அவ்விடயம் தொடர்பான தகவல்களை நாம் கொடுத்தனுப்புவோமேயானால் அவன் கருத்துச் சொல்லும் ஒவ்வொரு கனப்பொழுதும் எம்மை நன்றியோடு நினைவு கூர்ந்து பிரார்த்திக்கவும் செய்வான். ஏனெனில், நாம் கொடுத்த தகவல் அவன் மானத்தை காப்பற்றியுள்ளது.

மனித உறவுகளை வெற்றியடையச் செய்யும் இவ்வழிமுறை மிகவும் இலகுவானது. செயற்படுத்த வரும் விளைவுகளோ பெறுமதியானவை. தந்தை மகனுக்கும், ஆசிரியர் மாணவனுக்கும், கணவன்-மனைவிக்கும், நண்பர்கள் தங்களிடையேயும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். கொடுபடும் தகவல் வரலாற்றுத் தகவலாயினும் சரியே. நாளாந்த செய்தியாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் சரி இங்கு முக்கியம் எம்முன் புதைந்து போயிருக்கும் தகவலை எம் பிற சகோதரர் களுக்குக் கொடுப்பது தவிர வேறில்லை.

### T - Train him - பயிற்றுவி

இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதில் பயிற்றுவித்தலின் (தர்பிய்யா) வகிபாகம் அளப் பரியது. யாருக்கேனும் ஒரு சிந்தனை முன்வைக் கப்பட்டால் அதற்காக அவர் நிச்சயம் பயிற்று விக்கப்படல் வேண்டும். இல்லாது போகும் பட்சத்தில் பாரிய சிந்தனைகள் கூட செல்லாக் காசாகும் இழிநிலை ஏற்பட இடம்பாடுண்டு.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது பிரச்சா ரத்தை ஆரம்பித்து இஸ்லாம் பற்றிய அறி முகத்தை முதற்கண் வழங்கினார்கள். பின்பு அர்கம் (ரழி) அவர்களின் வீட்டில் ஸஹாபாக்க ளுக்கு பயிற்றுவித்தலை செம்மையாக வழங்கி னார்கள். அதில் பயிற்சி பெற்றவர்களே நபி களாரின் காலத்திலும் அதன் பின்பும் இஸ்லாத் தின் தூதை உலகோங்கச் செய்தவர்கள்.

பெற்றோர்-பிள்ளைகளையும் ஆசிரியர்கள்-மாணவர்களையும் நண்பன் தன் நண்பனையும் என பயிற்றுவித்தலின் வட்டம் விரிந்து செல்கி றது. இயல்பில் மனிதன் இதனை எதிர்பார்க்கி றான். தன்னை சீராக பயிற்றுவிப்பவனை உளமாற விரும்புகிறான். அங்குதான் நாம் அவனை Touch பண்ணுகிறோம். அதன்பால் ஈர்க்கப்பட்ட மனிதன் உறவையும் தொடர்பை யும் எங்கும் எப்பொழுதும் எம்மோடு பகிர்ந்து கொள்வான். இதுவே எமது வெற்றி.

மனிதனை இறைவன் மூன்று அடிப்படை களுடன் படைத்துள்ளான்.

*1. உடல், 2. அறிவு, 3. ஆன்மா*

இவை மூன்றும் இன்னும் மூன்று விடயங் களின் பால் தேவையுடையனவாக இருக் கின்றன.

1. உடலுக்கு - உடற் பயிற்சி, விளையாட்டு
2. அறிவுக்கு - கற்றல், கற்பித்தல்
3. ஆன்மாவுக்கு - தூய்மைப்படுத்தல் (தஸ்கியா)

இவையனைத்தையும் உள்ளடக்கியதாகவே பயிற்றுவித்தல் அமைய வேண்டும். இவ்வா றான சந்தர்ப்பத்தை ஒருவனுக்கு நாம் வழங்கி னால் எந்த வகையில் அவன் எம்மை விட்டு தூரமாக முடியும்?

### O - Open his eyes - வழிகாட்டு

வழி தெரியாமல் தடுமாறும் மனிதனுக்கு வழியைக் காட்டுவதை ஸதகா என்று சொல் லும் மார்க்கம் இஸ்லாம். அனைத்து மனிதர் களும் சிந்திப்பார்கள், ஆனால் எதை சிந்திக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டல் தேவை. எல்லோரும் செயற்படுவார்கள். ஆயினும் எவ் வாறு செயற்பட வேண்டும் என்பதற்கு கட்டா யம் வழிகாட்டப்பட வேண்டும். இதற்காகத் தான் அமைப்புக்களும் வழிமுறைகளும் எமக்கு அவசியப்படுகின்றன. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உலகில் செய்த பாரிய பணி இதுதான். மடமையின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருந்த மக்களை நேர்வழியின் ஒளி விளக்காக ஆக்கிடவே அவர்கள் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார்கள். அதனை கச்சிதமாக செய்தார்கள். அனைவராலும் கவரப்பட்டார் கள். முழு உலக உம்மத்தின் உள்ளங்களையும் வென்றார்கள்.

எனக்கு படிக்க இயலும். ம்ச்ச்... ஆனால், 'எனக்கு நல்ல Guide தான் இல்லை.' அனேக மாண(ன)வர்களின் உதடுகள் உதிர்க்கும் வசனம். அவர்கள் என்னதான் எதிர்பார்க்கிறார்கள். எமக்கருகில் ஒருவர் இருந்து செல்ல வேண்டிய பாதையை சரியான முறையில் காட்டித் தர வேண்டும். அக்காட்டுகை அறிவின் சாரமாக வும், அனுபவத்தின் வெளிப்பாடாகவும் இருக்க வேண்டுமெனவும் விரும்புகிறார்கள்.

மாணவனுக்கு கற்கும் வழியைக் காட்டிக் கொடுத்த எந்த ஆசிரியனும் வகுப்பறை கற்பித்த லில் தோல்வியுற மாட்டான். மகனுக்கு வாழ கற்றுக் கொடுத்த எந்தத் தகப்பனும் பின்னாளில் கவலைப்பட மாட்டான். இவ்விலகு வழியை அறியாமல் தம்மோடிருப்பவர்களை தம் கட்டுக் குள் வைத்திருக்க எவ்வளவோ முயற்சிகள் எந்தப் பெறுமானங்களும் அற்றவைகளாய்...

### U - Understanding his uniqueness தனித்துவத்தை புரிந்துகொள்

மனிதர்கள் கனிப் பொருள்களை ஒத்தவர் கள். ஒவ்வொரு கனிப்பொருளும் தனிரகம். அதற்கேயுரிய சிறப்புகளும் பண்புகளும் காணப் படுகின்றன. பயன்படுத்தும் முறைமையும் வித்தியாசம். இதுபோலத்தான் மனிதர்களும் தனக்கென்று பெறுமானத்தை, இயல்பை, பண்பை வகுத்துக் கொண்டு வாழ்வார்கள். அது சரிவர புரியப்படல் வேண்டும். மனித வாழ் வில் சந்திப்புக்களும் பரஸ்பர பரிமாறல்களும் இன்றியமையாதவை. இத்தொடர்புகள் நீடித்து நிலைக்க அவரவர் பற்றிய சரியான அறிமுக மும், பண்புகள், இயல்புகளில் தெளிவும் அவசியம்.

உறவாடல்களில் என்னை அடுத்தவன் புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliment From*

## 10th Years Anniversary


# MS GOLD HOUSE




Dealers in 22kt Genuine Gold Jeweleries,
Watches, Wall Clock & Gems



**No. 114, Main Street, Beruwala.**
**Tel: 034 2279663**
**Fax: 034 5585985**







# ASHFAK'S HARDWARE



**No. 89, Main Street,**
**Dharga Town.**
**Tel: 034 4929519, 034 2271854**
**Mob.: 0777 305238**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ECG
- SCAN
- ENT CLINIC
- EYE CLINIC
- IMMUNIZATION CLINIC
- EMERGENCY TREATMENT UNIT
- DENTAL SURGERY
- CHANNEL CONSULTATION
- FULLY COMPUTERIZED LABORATORY
- PHYSIOTHERAPY UNIT

BERUWALA
NURSING HOME
(PVT) LTD

DR. B.M. MUSTHAFA MBBS DFM (SL)
Family Physician

064, Perera Road, China Fort, Beruwala.
Hotline: 077 8524768
Tel: 034 227384, 034 4908333, 034 5676386 Mob.: 071 4297438
E-mail: dr.bmmusthafa@yahoo.com

ARAMCO

Aramco Travels

LABOUR LICENCE NO. 1719

Overseas Manpower Consultants
Travel Agent, Tour Operators & Allied Services

No. 1121 B, 2/1, 2nd floor,
Maradana Road,
Borella, Colombo 08, Sri Lanka.

Tel: 011 4622384
Tel/Fax: 011 4622385
Mob.: 077 7630289
E-mail: aramcotravel@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாகாது, அடுத்தவனை அவனது தனியாளுமை களை நாம் புரிந்து நடக்க முயற்சிக்க வேண் டும். நாம் எவ்வாறு நடாத்தப்பட வேண்டு மென எதிர்பார்க்கிறோமோ அவ்வாறே அடுத்த வரையும் நாம் நடாத்தல் வேண்டும். பொது வாக எல்லா மனிதர்களும் இதனை எதிர்பார்க் கிறார்கள். உறவாடிப் பிரிந்த இருவரிடம் பிரிவுக்கான காரணத்தை வினவினால் வரும் பதில் ஒன்றுதான். "அவர் என்ன புரிஞ்சிக் கொள்ளல்ல" கணவன் மனைவியாயினும் நண்பர் தோழர்களாயினும் இதே பதில்தான் வெளிவரும். இது யதார்த்தம் மட்டுமல்ல, எல்லோரது எதிர்பார்ப்பும்.

45-50 ஆண்டுகள் இல்லற வாழ்வில் இணைந் திருந்த தம்பதியர்கள் பின்வருமாறு கூறுவதை நாம் கேட்கிறோம். "அந்த மனிசன புரிஞ்சிக் கவே முடியல" ஆனால், ஹிராக் குகையிலி ருந்து நடுக்கத்தோடு வந்த தூதரை சரிவர புரிந்து கொண்ட கதீஜா நாயகியின் அணுகுமுறை ஒரு வரை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டு மென்பதற்கான துல்லிய வழிமுறை.

உலகிற்கு வழி காட்ட வந்த இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்கள் ஒவ்வொரு வரையும் தனித் தனியாக விளங்கி வைத்திருந் தார்கள். ஒவ்வொரு ஸஹாபியுடனும் அவர்கள் பழகிய அமைப்பை பார்க்கும்போது இதனைத் தெளிவாக அறியலாம். ஈமானில் ஒவ்வொரு வரது தரத்தையும் நிலையையும் அறிந்து கட்டளையிட்டார்கள். கொடையில் அபூபக்ர் (ரழி) தன்னிகரற்றவர் என்றும், வீரத்திற்கு உமர் (ரழி) என்றும், வெட்கத்திற்கு உஸ்மான் (ரழி) என்றும் அறிந்து வைத்ததனாலேயே அவர் களது தூது நடைமுறைச் சாத்தியமானது.

இன்று நாம் மனித உறவுகளில் வீட்டிருக்கும் பாரிய குறையிது. எம்மை அடுத்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்படு கிறோம். ஆனால் அவர்களை நாம் புரிந்து கொள்ள முயற்சிக்கிறோமில்லை. மனித உறவை பலப்படுத்தும் பலமான கயிறு இது. உணர்வு களுக்குள்ளால் மனிதனை Touch பண்ணும் உன்னத வழி இது.

## C - Contact him - தொடர்புறு

உரையாடல், தொடர்பாடல் இவை மனித உறவாடலின் அடிநாதம். என்னதான் மனி தனை விளங்கி வைத்திருந்தாலும் உறவும் தொடர்பும் இல்லாமல் போவது எவ்வகை யிலும் எமக்கு பலன் தரவல்லதாக அமையாது. உறவாடலில் தான் மனிதன் சமூகமயமாகின் றான். சமகாலம் தொடர்பூடகம் மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ள யுகம்.

நேசம் கொள்ளும் மனிதனுடன் தொடர்பு களை வலுவாக கொண்டிருக்க வேண்டும். தொடர்பு வலுப்படும் போதுதான் பரஸ்பரம் அன்பும், பாசமும் பகிரப்படும். எதிர்பார்க்கும் விளைவு எட்டப்படும். தானாகப் போய் பேசு வதை விட தன்னோடு அடுத்தவர்கள் வந்து பேசுவதை விரும்புவதே மனித மனம். தாமாகச் சென்று தொடர்புறும் பொழுது மூடியிருக்கும் உளக் கதவு எமக்காக திறந்து கொள்ளும். எல்லா உள்ளங்களுக்கும் ஒரு திறவுகோல் உண்டு. அதனைத் தொடர்பாடலின்போது மட்டுமே கண்டறியலாம். உளக் கதவுகளின் திறவுகோல் கள் எம் கைவசமிருந்தால் பூட்டப்பட்டிருக்கும் எந்த உள்ளத்தையும் இலகுவாகத் திறக்கலாம்.

ஸலாத்தை பரப்பும் படி இஸ்லாம் எமக்கு பணிக்கிறது. இதன் மூலம் தொடர்பாடலின் அடிப்படையை எமக்கு போதிக்கின்றது. உற வாடலை தவிர்த்து ஒதுங்கியிருக்கும் ஒருவனால் உள்ளங்களை கொள்ளை கொள்ள முடியாது. உரையாடலில் வெற்றி பெற்ற ஒருவனே உளம் எனும் சிம்மாசனத்தின் அரசன்.

## H - Honour him - மேன்மைப்படுத்து


கண்ணியம், கௌரவம், மேன்மை இவை யெல்லாம் மனிதனுள் ஊறித் திளைத்திருக்கும் விடயதானங்கள். எந்த ஓர் இடத்திலும் தான் அவமதிக்கப்படுவதனை எவனும் விரும்ப மாட் டான். மரியாதையானது எல்லோரும் எல்லோரி டத்திலும் எதிர்பார்க்கும் விஷேட அம்சம். வயது செல்லச் செல்ல இவ்வுணர்வும் அதிகரிக் கும். சிறியவர்கள் மீது அன்பு காட்டாதவனும் பெரியோரைக் கண்ணியப்படுத்தாதவனும் எம்மைச் சார்ந்தவன் அல்ல என நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.

அன்பு காட்டல் என்பதும் ஒருவகையில் கண்ணியப்படுத்தல்தான். பிறரிடம் அவமானப் படும் அளவுக்கு தான் எந்த வகையிலும் குறைந்தவன் அல்லன் என்ற உணர்வு எல்லோர் மனதிலும் இருக்கும். பொது இடமொன்றில் சிறு பிள்ளையொன்றை மதித்து நடப்போமா யின் அவன் தன்னுள்ளத்தில் பொக்கிஷமாய் எம்மை பாதுகாப்பான். நாம் அவனை மறந்தா லும் அவன் ஒருபோதும் எம்மை மறக்கவே மாட்டான். எங்கு கண்டாலும் நாம் வழங்கிய மரியாதையின் வெளிப்பாடு இருந்துகொண்டே இருக்கும்.

பிறரை மதிப்பதால் நாம் ஒருபோதும் குறைந்து விடுவதில்லை. அடுத்தவரை மதிக்கு மளவுக்கு நாம் சமூகத்தில் மதிக்கப்படுவோம். இதுதான் உண்மை. பெரும்பாலானோர் பிறரை மதிப்பதை அகௌரவமாகவே (தொடர் ப. 78)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்லாமிய வங்கிகளின் நிதி மூலங்களும் நிதியியல் செயற்பாடுகளும்

ஸப்வான் ஆரிப்
(விடுகை வருடம்)

பொதுவாக எல்லா வங்கிகளும் தமது வங்கி நடவடிக்கைகளை மக்களின் முதலீடுகள், சேமிப்புகளை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்கின்றன. இதனால் அவை ஒரு வகை இடைத் தரக நிதி நிறுவனங்களாகவே (Broakerage Firms) தொழிற்படுகின்றன. எனவே வங்கிகளின் தொடர்ந்தேர்ச்சையான தொழிற்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் அவை கொண்டுள்ள நிதி மூலங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

இந்தவகையில் இலாபக் கணிப்பீடு, இலாபப் பங்கீடு என்பவற்றை முதன்மையாகக் கொண்டு இஸ்லாமிய வங்கிகளின் நிதி மூலங்கள் பின்வருமாறு அமைந்து காணப்படும்.

### 01. இஸ்லாமிய வங்கிகளின் உள்ளக நிதி மூலங்கள்

ஏனைய வங்கிகளில் காணப்படுவது போன்றே உள்ளக நிதி மூலங்கள் இஸ்லாமிய வங்கிகளிலும் காணப்படுகின்றன. அதாவது ஆரம்ப மூலதனம், நிலையான சொத்துக்கள், மூலதனத்தின் பெறுமான அதிகரிப்பு என்பன உள்ளக நிதி மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன. வணிக வங்கிகளை (Commercial Banks) விட முதலீட்டு வங்கிகளில் (Investment Banks) இவை பிரதான நிதி மூலங்களாகக் காணப்படுகின்றன. இங்கு இஸ்லாமிய வங்கிகள் முதலீட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதால் அவற்றுக்கு இவை அதி முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஏனெனில், அனர்த்தங்களின்போது ஈடுசெய்வதற்கு இவை பயன்படுகின்றன.

### 02. இஸ்லாமிய வங்கிகளின் வெளியக நிதி மூலங்கள்

வங்கியின் வாடிக்கையாளர்கள் வெளியக நிதி மூலங்களின் தேவையை பூர்த்தி செய்வதில் மிகப் பிரதான இடத்தை வகிக்கின்றனர். இந்த வகையில் அவர்களுடைய வைப்புக்கள் மிக முக்கியமானதாகும். அதாவது நிலையான வைப்புக்கள் (Fixed Deposits) தவணை வைப்புக்கள் (Term Deposits), சேமிப்பு வைப்புக்கள் (Saving Deposits) என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வகையான வைப்புக்களும் வெளியக நிதி மூலங்களாகக் கருதப்படுகின்றன. நடைமுறை வைப்புக்களைப் பொறுத்தவரை அவற்றில் இலாப நோக்கங்கள் கிடையாது. அதனை ஒரு சேவையாகவே வங்கி மேற்கொள்கின்றது.

### இஸ்லாமிய வங்கிகளில் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான கருவிகள்

பொதுவாக பழமைவாத வங்கிகள் (Conventional Banks) வட்டியை முதன்மையாகக் கொண்டே வைப்புக்களை ஏற்கின்றன. அவை சேமிப்புக்கான வட்டியாகவோ அல்லது முதலீட்டுக்கான வட்டியாகவோ காணப்படும். மேலும் அவை அனர்த்தங்களின்போது மீள ஒப்படைக்கப்படாததாகவும் வட்டி வீதம் (தொகையில்) ஏலவே தீர்மானிக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றன.

ஆனால், இஸ்லாமிய வங்கிகள் உருவாக்கப்பட்டிருப்பது வங்கியியல் முறைமையை இஸ்லாமிய மயப்படுத்துவதற்கும், வட்டியிலிருந்து இஸ்லாத்தை நோக்கிய அமைப்பு மாற்றத்தை மேற்கொள்ளவுமே ஆகும். எனவே அவை எப்போதும் ஷரீஆவின் எல்லைகளுக்குள் இருந்து கொண்டேதான் தமது எல்லா செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றன. இந்த வகையில் பின்வரும் முறைமைகளுக்கூடாக அவை வைப்புக்களை ஏற்கின்றன.

#### 1. முழாரபா (Mudarabah)

முழாரபா என்பது இரு தரப்புக்கிடையில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு வியாபார ஒப்பந்தமாகும். இது முகாழரா, கிராழ், முஆமலா எனவும் அழைக்கப்படுகின்றது. அதாவது, பங்குடமை அடிப்படையிலான இந்த உடன்படிக்கையில் மூலதனத்தை வழங்கும் தரப்பு (Financier) ரப்புல் மால் (Rab al maal) ஆகவும் தமது உழைப்பையும், நேரத்தையும் பயன்படுத்தி அம்மூலதனத்தை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்ற அடுத்த தரப்பு (Fund Manager) முழாரிப் (Mudarib) ஆகவும் செயற்படுகின்றனர்.

முழாரபா முறையில் வங்கிக்கும் வைப்பாளருக்கும் இடையில் இலாபப் பங்கு விகிதம் ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்பட்டு விடும். இங்கு வைப்பாளர் கூடிய இலாப விகிதத்தைப் பெறுவார். அதேபோன்று நஷ்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வார். ஏனெனில், முதலீட்டு முயற்சியில் காணப்படாத நிலையில் பெறப்படுகின்ற இலாபம் வட்டியாகும். மேலும் இங்கு வங்கி செயற்படுகின்ற பங்காளராக (Active Partner) காணப்படுவதால் அதன் உழைப்பும் முயற்சியும் அதனுடைய இழப்பாகக் கொள்ளப்படும்.

பொதுவாக இஸ்லாமிய வங்கிகளில் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான பிரதான கருவியாக முழாரபா பயன்படுகிறது.

#### 2. கர்ழ் (Qarl)

கர்ழ் என்பது பிரதியுபகாரம் எதுவும் எதிர்பார்க்காது மேற்கொள்ளப்படுகின்ற கடன் முறையாகும். இன்றைய வங்கிகள் பெரும்பாலும் இயங்கிக் கொண்டிருப்பது கடன் கொடுக்கல் வாங்கலின் ஊடாகவேயாகும்.

பொதுவாக நடைமுறை வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு கர்ழ் ஒரு கருவியாக இஸ்லாமிய வங்கிகளில் பயன்படுத்தப்படுகின்றது. வங்கியானது இவ்வைப்புக்களை தான் பெற்றுக் கொண்ட கடனாகவே கருதும். இவற்றை வங்கி முதலீடு செய்யும். ஆனால், அவற்றுக்காக வைப்பாளர்களுக்கு இலாபம் வழங்காது. ஏனெனில், இலாபம் என்பது முயற்சிக்கான கூலியாகவே காணப்படும்.

அத்தோடு வங்கியின் எத்தகைய நடவடிக்கைகளும் இவ்வைப்பாளர்களைப் பாதிக்காது. எந்த சூழ்நிலையிலும் உடன்படிக்கைக்கேற்ப வங்கி அந்நிதியை மீள ஒப்படைக்க வேண்டும் என்பது இங்கு பிரதான நிபந்தனையாகும்.

#### 3. வதீஆ (Wadee'a)

வதீஆ என்பது ஒருவர் தனது செல்வத்தைப் பாதுகாப்பு நோக்கம் கருதி மற்றொருவரிடம் மீளப்பெறும் உறுதியுடன் ஒப்படைத்தலாகும். இது கடனிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும்.

இஸ்லாமிய வங்கிகள் தமது வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக வதீஆ முறையையும் பயன்படுத்துகின்றன. ஆனால், இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் வைப்பாளரோ அல்லது வங்கியோ இலாபம் உழைக்க முடியாது. ஏனெனில், இதனை வங்கி ஓர் அமானிதமாகவே பெறுகின்றது. இதனால், வைப்புக்களை வங்கி எந்த முதலீட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தாது வைப்பாளர்கள் கேட்கும்போது மீள ஒப்படைக்கும். எனவே இவ்வைப்புக்களை மிக அவசியமான சூழ்நிலைகளில் மாத்திரமே இஸ்லாமிய வங்கிகள் ஏற்கின்றன. அதாவது நடைமுறை கணக்கு, Safe keeping (Locker) போன்றவற்றில் இது பயன்படுத்தப்படுகிறது.

இஸ்லாமிய வங்கிகளிலுள்ள வைப்பு முறைகள் ஏனைய வங்கிகளின் வைப்பு முறைகளிலிருந்து பல்வேறு காரணிகளால் வேறுபடுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. இஸ்லாமிய வங்கிகள் தம்மிடமுள்ள சொத்துக்களை முதலீடு செய்து இலாபமுழைக்கக் கூடியவை. அவை தமது ஒவ்வொரு இலாபம் உழைக்கும் செயற்பாட்டிலும் இலாப நட்ட அபாயத்தை (Risk) கொண்டிருக்கின்றன.

## இஸ்லாமிய வங்கிகளில் காணப்படுகின்ற கணக்கு முறைகள்

இஸ்லாமிய வங்கிகள் வட்டி கலக்காத வங்கிச் சூழலை ஏற்படுத்துவதில் எப்போதும் அதிக கவனம் செலுத்துகின்றன. அந்த வகையில் இஸ்லாமிய வங்கிகளுக்கும் ஏனைய வங்கிகளுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளை கையாளுகின்ற முறைமைகளிலேயே அதிகம் தங்கியுள்ளது. இஸ்லாமிய வங்கிகளின் கணக்குகளைப் பேணுகின்ற ஒழுங்குகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### 1. முதலீட்டு வைப்புக் கணக்குகள் (Investment Accounts)

முதலீட்டு நோக்கம் கொண்ட வாடிக்கையாளரின் வைப்புக்கள் முதலீட்டுக் கணக்குகளாகக் கருதப்படுகின்றன. இலாப எல்லைகளைப் பொறுத்து அவற்றை நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள் என வகைப் படுத்தலாம்.


இஸ்லாமிய வங்கியானது வைப்புக் கணக்குகளை வதீஆ முறையில் ஒருபோதும் பேணுவது கிடையாது. மாற்றமாக முழாரபா முறையையே பயன்படுத்துகின்றது. சிலபோது சேமிப்பு வைப்புக்களில் கர்ழ் முறையை அவை பயன் படுத்துகின்றன.

அதாவது வதீஆ, கர்ழ் முறைகளில் பேணப் படுகின்ற கணக்குகளுக்கு இலாபப் பங்கு கிடையாது. எனவே முதலீட்டு நோக்கம் கொண்ட கணக்குகளை முழாரபா முறையிலும், சேமிப்பு நோக்கம் கொண்ட கணக்குகளை கர்ழ் முறையிலும் அவை பேணுகின்றன. அதே வேளை இஸ்லாமிய வங்கிகள் முதலீட்டு வைப்புக்களை மீள் முதலீட்டு (Re-investment) நோக்கம் கருதியே ஏற்கின்றன. இதனால் வதீஆ முறையை இக்கணக்குகளில் அவை தவிர்ந்து கொள்கின்றன.

### 2. நடைமுறைக் கணக்குகள் (Current Accounts)

வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக மேற்கொள்வதற்காக வங்கியால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்ற ஒரு முறையே நடைமுறைக் கணக்குகளாகும். இக்கணக்குகளைப் பேணுவதின் பிரதான நோக்கம் அசையா சொத்துக்களை பாதுகாக்கின்ற அல்லது சேமிக்கின்ற பழக்கத்தை அதிகரிப்பதும், இந்த சேமிப்புக்களை பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதுமாகும்.

எனவே இவ்வகையான கணக்குகளை இஸ்லாமிய வங்கிகள் வதீஆ முறையில் பேணுவதில்லை. ஏனெனில், வதீஆ முறையில் பெற்ற சொத்துக்களின் மூலம் இலாபம் உழைக்க முடியாது. மேலும் அது வங்கிக்கு ஒரு சுமையாகவும் காணப்படும். இதனால் நடைமுறைக் கணக்குகள் கர்ழ் முறையிலேயே பேணப்படுகின்றன. இஸ்லாமிய வங்கியானது கர்ழ் முறையில் வைப்புக்களை ஏற்கும்போது



(அது கடன் என்ற வகையில்) அவற்றை முதலீடு செய்து இலாபமீட்ட முடியும். ஆனால் அதிலிருந்து எதனையும் வைப்பாளர்களுக்கு இலாபமாக வழங்காது. அத்தோடு கடனுக்குரிய எல்லா ஷரீஆ கொள்கைகளும் இக்கணக்கில் நடைமுறையாகும்.

இஸ்லாமிய வங்கிகளில் நடைமுறைக் கணக்குகள் பின்வரும் குறிப்பியல்புகளைக் கொண்டிருக்கின்றன.

1. நடைமுறை வைப்பாளர்கள் தொடர்ந்து வைப்பிலிடவும் மீளப் பெறவும் அனுமதிக்கப் படுவர். வைப்பாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எந்தத் தொகையையும், எந்த நேரத்திலும் வங்கி வழங்கும்.

2. ஏனைய வங்கிகளைப் போலல்லாது இஸ்லாமிய வங்கிகளில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு காசோலை (Cheque) மூலமாகவோ அல்லது கடிதத்தின் மூலமாகவோ நடைமுறைக் கணக்காளர்கள் வங்கியைக் கோரலாம்.

3. வங்கி ஏதாவது அனர்த்தங்களுக்கு உட்பட்டால் அல்லது நஷ்டமடைந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய வங்கிகளைப் போலல்லாது நடைமுறை வைப்பாளர்கள் முழுத் தொகையையும் மீளப் பெறுவார்கள். (நடைமுறைக் கணக்குகளை வங்கி கர்ழ் முறையில் பேணினால் மட்டுமே இது செல்லுபடியாகும்.)

4. வைப்பாளர் வங்கி மேலதிகப் பற்று (Over draft) கோரும்போது இஸ்லாமிய வங்கியானது கடனாகவோ அல்லது ஏதாவது ஒரு நிதியியல் கருவியைக் (Financial Instrument) கையாண்டு புதிய உடன்படிக்கை ஊடாகவோ அதனை வழங்கும். இஸ்லாமிய வங்கிகளின் எல்லாக் கணக்குகளுக்குமான நிஸாப் கணிக்கப்பட்டு ஸகாத் தொகை வேறுபடுத்தப்பட்ட பின்னரே இலாபம் பங்கிடப்படுகிறது. இஸ்லாமிய வங்கியானது முழாரபா, கர்ழ், வதீஆ முறைகளில் தனி நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் திரட்டுகின்ற செல்வத்தை மீள் முதலீடு செய்து இலாபமீட்டி வைப்பாளர்களுக்கு வழங்கும்.

இஸ்லாமிய வங்கியின் மீள் முதலீட்டுக் கருவிகளாகவே முழாரபா உட்பட முஷாரகா (Profitanal Lost share), முராபஹா (Cost plus markup), இஜாரா (Leasing), கபாலா (Kafala - letter of Guarantee), ஹவாலா (Hawala - Letter of Credit), ஜுவாலா (Juala - Foriegn Exchange Business) என ஏனைய எல்லா அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் கருவிகளும் தொழிற்படுகின்றன. முழாரபாவானது வங்கியின் நிதி திரட்டல் கருவியாகவும் மீள் நிதியீட்டல் கருவியாகவும் தொழிற்படுகின்றது.

## இறுதியாக...

இஸ்லாமிய வங்கிகள் என்பது வங்கியியல் முறைமையை இஸ்லாமிய மயப்படுத்துவதற்கும் வட்டி அமைப்பிலிருந்து இஸ்லாமிய அமைப்புக்கு அவற்றை மாற்றுவதற்கும் உருவாக்கப்பட்டவையாகும். அந்த வகையில் இஸ்லாமிய வங்கிகள் எப்பொழுதும் ஏனைய வங்கி முறையிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இன்றைய காலகட்டத்தில் இஸ்லாமிய வங்கிகளின் தேவை அவசியப்பாடு முஸ்லிம்களால் மட்டுமன்றி பொதுவாக எல்லா மக்களாலும் உணரப்பட்டுள்ளது. கடந்த சில தசாப்தங்களுக்குள்ளால் இஸ்லாமிய வங்கித் துறை அடைந்துள்ள பாரிய முன்னேற்றம் இந்த உண்மையை வெகுவாக எடுத்துக் காட்டுகின்றது. குறிப்பாக உலகப் பொருளாதார நெருக்கடியை (economic Crisis) தொடர்ந்து இவ்வுண்மை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனினும் இஸ்லாமிய வங்கியின் செயற்பாடுகள் பற்றிய மயக்கமும், தவறான புரிதல்களும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. விஷேடமாக எமது நாட்டைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய வங்கித் துறை ஒரு புதிய வரவு என்ற வகையில் இந்நிலை காணப்படுவது ஆச்சரியமானதல்ல.

**இஸ்லாமிய வங்கியின் செயற்பாடுகள் பற்றிய மயக்கமும், தவறான புரிதல்களும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. விஷேடமாக எமது நாட்டைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய வங்கித் துறை ஒரு புதிய வரவு என்ற வகையில் இந்நிலை காணப்படுவது ஆச்சரியமானதல்ல.**


எனவே இஸ்லாமிய வங்கியின் ஒவ்வொரு செயற்பாடு பற்றியும் மக்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். மேலும் இது பற்றிய கற்கைகள் பரவலாக இடம்பெற வேண்டும். அப்போது தான் தூய இஸ்லாமிய வங்கிச் சூழல் உருவாக முடியும் என்பது அனைவரினதும் வலுவான நம்பிக்கையாகும்.

**உசாத்துணைகள்**


1. Mohamad Saeed Shingeri, A Modle of pure interest - free Banking (2007) IFA, India
2. Muhammad Taqi Usmani, An Introduction to Islamic Finance (2008), India
3. Dr. M. Muslehuddin, Banking and Islamic Law
4. கலாநிதி முஆத் அப்துல்லாஹ் அல்-உமர், முகத்திமா பில் புனூக் அல் இஸ்லாமிய்யா (2006), குவைத்
5. கலாநிதி அலி அஹ்மத் அஸ்ஸானூஸ், ஹுக்மு வதாஇஉல் புனூக் வஷஹாதாதுல் இஸ்திஸ்மார் (2006), கட்டார்
6. முஹம்மத் ஹம்மாத், அர்-ரகாபதுஷ் ஷரஇய்யா பில் மஸாரிப் அல்-இஸ்லாமிய்யா (2006), ஜோர்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆன், பைபிளின் பார்வையில் ஈஸா (அலை)

## ஒப்பீட்டாய்வு

எம்.ஜீ.எம். இன்ஸாப்
*(விடுகை வருடம்)*

மனித இன வரலாற்றை எடுத்துப் பார்த்தால் மனிதன் படைக்கப்பட்டது முதல் காலத்துக்கு காலம் இறைவழிகாட்டல் அனுப்பப்பட்டுள்ளதை கண்டு கொள்ளலாம். முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களை இவ்வுலகுக்கு அனுப்பும்போது கூட அல்லாஹ்,

''நீங்கள் அனைவரும் இதிலிருந்து இறங்கி விடுங்கள். பின்னர், என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி நிச்சயமாக வரும்போது எவர் என்னுடைய (அந்)நேர்வழியைப் பின்பற்றுகிறாரோ, அவர்களுக்கு (மறுமையின் காரியங்களில்) யாதொரு பயமுமில்லை; (மேலும் இவ்வுலகில் எதை விட்டுச் செல்கிறார்களோ அது பற்றி) அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள்'' (பகரா:38) என்று கூறுகிறான்.

இவ்வாறு தொடராக அனுப்பப்பட்ட வழிகாட்டுதல்கள் மனிதக் கரங்களின் கையாடலுக்கு உட்பட்டன. எனவேதான் 124,000 நபிமார்கள் அனுப்பப்பட்டதாக ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு அனுப்பப்பட்ட 25 நபிமார்களின் பெயர்களை அல்குர்ஆன் எடுத்துரைக்கின்றது.

அந்நபிமார்களின் தொடரில் இறுதியாக வந்த சமூகமாகிய நாம் இறுதி வழிகாட்டலான அல்குர்ஆனைப் பெற்று வழிதவறிச் சென்ற சமூகங்களை நேர்வழிப்படுத்துமாறு ஏவப்பட்டுள்ளோம். இதனையே அல்குர்ஆனில் அல்லாஹ்,

''(நபியே) மனிதர்களை விவேகத்தைக் கொண்டும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக் கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன், அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்க அறிந்தவன். இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் மிக்க அறிந்தவன்.''

(அந்நஹ்ல்:125)

''(நபியே!) நீர் கூறுவீராக, இதுவே எனது (நேரான) வழியாகும். (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன்; தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னை பின்பற்றியவர்களும் இருக்கிறோம், அல்லாஹ் மிகப் பரிசுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவன். நான் (அவனுக்கு) இணைவைப் போரில் உள்ளவனுமல்லன்.'' (யூசுப்:108)

போன்ற வசனங்களினூடே தெளிவுபடுத்து கிறான். எனவே இந்த வகையில் அல்லாஹ் வின்பால் அழைப்பதற்கான அழகிய வழிமுறை களாக அல்லாஹ்வும், அவனது தூதரும் காட்டித் தந்த ஏராளமான வழிமுறைகள் (அஸாலீபுத் தஃவா) காணப்படுகின்றன. இந்த வகையில் மதங்களை ஒப்பிட்டு அவற்றிலுள்ள குறைகளை யும் எடுத்துக் காட்டுவது ஒரு வழிமுறையாகும்.

**''விசுவாசிகளே! நீங்கள் வேதத்தையுடை யோருடன் எது மிக அழகானதோ அதைக் கொண்டல்லாது (அவர்களுடன்) தர்க்கிக்க வேண்டாம். (ஆயினும் அவர்களில் அநியா யம் செய்தோர் தவிர, (அவர்களுடன் தர்க்கித் தால்) எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்தை யும், உங்களுக்கு இறக்கப்பட்ட வேதத்தையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம்; எங்கள் வணக் கத்துக்குரியவனும் உங்கள் வணக்கத்துக் குரியவனும் ஒருவனே; மேலும் நாங்கள் அவ னுக்கு முற்றிலும் கீழ்படிந்து நடக்கின்றவர்கள் என்றும் கூறுங்கள்.'' (அன்கபூத்:46)**

மேலும் யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஷ்ரிக்கு கள் பற்றியும் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள் ளது. எனவே இந்த வழிமுறையின் அடிப்படை யில், 'இயேசு' தொடர்பாக இஸ்லாம், கிறிஸ்த வம் கூறும் விடயங்களை இக்கட்டுரை ஆராய் கிறது.

## இயேசுவின் பெற்றோர்

இயேசு தொடர்பாக ஆய்வு செய்து பார்க்கும் போது அவரது பெற்றோர், பிறப்பு தொடர்பாக வும் பேசுவது அவசியமாகும். ஏனெனில் அவரது பிறப்பு அற்புதமானது. இது தொடர்பாக பிரதான மதங்களான கிறிஸ்தவம், இஸ்லாம் என்பன என்ன கூறுகின்றன என்பதை முதலில் நோக்குவோம்.

புதிய ஏற்பாட்டின் கருத்துப்படி ஆபிரகாம் (இப்றாஹீம் அலை) அவர்களின் 41வது தலை முறையான யோசோப்பு (யூசுப்)க்கு நிச்சயிக்கப் பட்டிருந்த மரியாள் (மரியம் அலை) பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியாகி இயேசுவைப் பெற்றெடுத்ததாகவும், இயேசு என்ற பெயர் கர்த்தருடைய தூதரின் ஏவல் படியே இயேசு என்று பெயரிடப்பட்ட விபரங்களும் கூறப் பட்டுள்ளன. (மத்தேயு 1:21) லூக்காவின் 1:27-35 வரையான பகுதி இதனையே குறித்து நிற் கின்றது.

இப்பகுதியில் தேவ தூதன் வந்தபோது மரியாள் பயப்பட்டது எந்த ஆணும் என்னைத் தொட்டது கூட இல்லையே (இது எப்படி யாகும்? புருஷனை அறியேன் என்றாள்) லூக்கா 1:34 என தேவ தூதனுக்கு அவள் கூறியது அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களை நாம் இஸ்லாத்துடன் ஒப்பிட்டு பார்க்கும்போது பெரும்பாலும் இவை அனைத்தும் இஸ்லாத்துடன் ஒத்தவையாகவே காணப்படுகின்றன. அதாவது மரியாளை திரு மணம் செய்யவிருந்த தச்சரான யோசோப்பின் சந்ததி பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், மரியாள் பைதுல் மக்திஸில் பணி விடை செய்தது, அவளைப் பராமரிக்கும் பொறுப்பை ஸகரிய்யா ஏற்றிருந்தமை, பரிசுத்த ஆவி கப்ரயீல் (ஜிப்ரீல் அலை) அவர்கள் மரியா ளிடம் வந்து யேசு பற்றி நன்மாராயம் கூறியது, அதனால் அவள் அச்சமடைந்தது; கலக்கம டைந்தது, இறைவன் மரியாளுக்கு செய்த அருட் கொடைகள், யேசு தொட்டிலிலே பேசியது போன்றவை குறித்து ஸூறா மர்யமின் 16-34 வரையான வசனங்கள் பேசுகின்றன. மரியா ளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்ட யோசோப்பு பற்றி சில நபிமொழிகள் வந்துள்ளன.

எனவே யேசுவின் பிறப்பு, மரியாள் தொடர் பான விடயங்கள் பற்றி பைபிளும் குர்ஆனும் ஒருமித்த கருத்தையே பேசுகின்றன.

## யார் இந்த இயேசு

ஆயினும் 'இயேசு' யார்? என்ற கேள்விக்கு நாம் பதில் தேடுகின்றபோது பைபிளே முரண் பட்ட கருத்துக்களை கூறுகின்றது. அதாவது இயேசு பற்றி மூன்று நிலைப்பாடு கிறிஸ்தவர் களிடையே காணப்படுகின்றன.

*1. கடவுளின் குமாரன்*

*2. கடவுளின் பேச்சு*

*3. கடவுள் (கர்த்தர்) யேசுவில் குடிகொண்டார்*

இக்கருத்துக்கள் கிறிஸ்தவ மதத்தினுள் நுழைவதற்கு தத்துவ கருத்துக்களும் திரு. போல் அடிகள் என்பவரின் கையாடலுமே காரணம் என்று கூறலாம். திரித்துவ சிந்தனையின் அடிப்படையில் பிறந்ததே கர்த்தரின் குமாரன் என்ற கோட்பாடு.

பைபிளின் கருத்துப்படி கடவுளின் குமாரன் என்ற சொல் எப்ரேயு மொழியில், கிரேக்க மொழியில் இறைவனின் சிறந்த அடியார்கள் அனைவருக்கும் பயன்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஆயினும், கிறிஸ்தவ சகோதரர்களின் தவறான புரிதலே 'கடவுளின் மகன்' என்ற கோட்பாடு பிறக்க ஏதுவாய் அமைந்தது. ஆயினும் பைபிளி லுள்ள பல வசனங்கள் யேசுவை மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பலரை கடவுளின் குமாரன் என்று கூறுகின்றன.

''அப்போது நீ பார்வோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால் இஸ்ரவேலர் என்னுடைய குமாரன், என் சேஷ்ட புத்திரன்'' *(யாத்திராகமம்: 4:22)*

''அழுகையோடும் விண்ணப்பஸ்களோடும் வருவார்கள்... இஸ்ரேவேலுக்கு நான் பிதாவாக இருக்கிறேன். எப்பிராயீம் என் சேஷ்ட புத்திரனாயிருக்கிறான்'' *(எரேமியா 31:9)*

''தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன், கர்த்தர் என்னை நோக்கி, நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜநிப்பந்தேன்.' *(சங்கீதம்: 2:7)*

மேலும் புதிய ஏற்பாட்டிலும் லூக்கா *3:38*ல் ஆதாம் கர்த்தரின் குமாரன் என கூறப்பட்டுள்ளது. ஆயினும், பைபிளின் தமிழ் மொழி பெயர்ப்பில் ''ஆதாம் தேவனால் உண்டானவன்'' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளதையும் கவனத்தில் கொள்க.

மேலும் ஆதியாகமம் 6:2,4 போன்ற வசனங்கள் சிறந்த மனிதர்களை தேவ குமாரர் எனக் கூறுகின்றன. எனவே யேசுவிற்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் இப்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைவனின் அடியார் என்பதையே இது குறிக்கிறது என கூறினாலும், இவை அனைத்தும் சிலேடையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. யேசு மட்டுமே கர்த்தரின் உண்மையான குமாரர் என வாதிடுவோரும் உளர்.

அல்குர்ஆன் இயேசு அல்லாஹ்வின் அடியார், இறைவனால் தேர்தெடுக்கப்பட்ட தீர்க்கதரிசி என்றே கூறுகின்றது.

**''வேதத்தை உடையவர்களே! உங்கள் மார்க்கத்தில், நீங்கள் அளவு கடந்து செல்லாதீர்கள்; இன்னும் அல்லாஹ்வின் மீது உண்மையைத் தவிர (வேறெதையும்) கூறாதீர்கள்; நிச்சயமாக மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹ், அல்லாஹ்வுடைய ஒரு தூதரும், அவனுடைய வாக்கும் ஆவார். அல்லாஹ், மர்யமின் பால் அ(ந்த வாக்கான)தைப் போட்டான்; மற்ற ஆன்மாக்களைப் போன்று அவரும்) அவனிடமிருந்து (படைக்கப்பட்ட) ஓர் ஆன்மாவே. ஆகவே அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் நீங்கள் விசுவாசியுங்கள்; (வணக்கத்துக்குரிய தெய்வங்கள்) மூன்று என்று கூறாதீர்கள்; (இவ்வாறு கூறுவதை) விட்டு விலகி விடுங்கள். (அது) உங்களுக்குத்தான் மிக்க நன்று (ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் ஒரே நாயன்தான். அவனுக்கு மக்கள் இருப்பதை விட்டும் அவன் மிக பரிசுத்தமானவன்; வானங்களில் உள்ளவை மற்றும் பூமியில் உள்ளவை அவனுக்கே உரியன. (உங்கள் யாவரின் காரியங்களை) பொறுப் பேற்றுக் கொள்ள அல்லாஹ் (ஒருவனே) போதுமானவன்.' (அந்நிஸா:171)**

மேலும் யேசுவில் கடவுள் குடிகொண்டுள்ளார்; யேசுதான் கடவுள் என்று கூறுபவர்களுக்குப் பதிலாக ஸூறதுல் மாஇதாவின் 17ம் வசனம்:

**''நிச்சயமாக, அல்லாஹ் அவன்தான் மர்யமுடைய குமாரர் மஸீஹ் என்று கூறினார்களே அத்தகையோர் திட்டமாக நிராகரிப்பாளர்களாகி விட்டனர். (ஆகவே நபியே!) 'மர்யமுடைய மகன் மஸீஹையும் அவருடைய தாயையும் பூமியிலுள்ள (மற்ற) யாவரையும் அவன் அழித்துவிட நாடிவிட்டால் அல்லாஹ் வி(ன் வேதனையி)லிருந்து (அதனைத் தடுக்க) சிறிதேனும் எவர் சக்தி பெறுவார் என நீர் கேட்பீராக. (ஏனென்றால்) வானங்களுடைய மற்றும் பூமியுடைய, இன்னும் இவை இரண்டிற்கும் மத்தியிலிருப்பவைகளுடைய ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் நாடியதை படைக்கிறான்; இன்னும் அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றலுடையவன்'' (அல்மாஇதா:17) எனக் கூறுகிறது.**

### இயேசுவின் போதனைகள் எவை?

யேசு தொடர்பானதொரு தெளிவான நிலைப்பாட்டிற்கு பைபிளின் ஒளியில் வர முடியாதுள்ளது. இது தொடர்பாக தொடர்ந்து வரும் உப தலைப்புக்களில் நோக்குவோம். யேசு எதனை போதித்தார் என்பது பற்றி இரு மதங்களும் எதனைக் கூறுகின்றன என்பதை இப்பகுதியில் நோக்குவோம்.

யேசுவை கிறிஸ்தவ சகோதரர்கள் கடவுளின் அந்தஸ்திற்கு உயர்த்தியுள்ளனர். அவரை ஆதரிக்கவும் செய்கின்றனர். ஆயினும் யேசு தன்னை வணங்குமாறு கூறியுள்ளாரா? என்று கிறிஸ்தவ சகோதரர்களின் புனித நூலாகிய பைபளில் தேடினாலும் கூட அவர் அவ்வாறு ஏவியதற்கோ அனுமதித்ததற்கோ சான்றுகள் ஏதும் இல்லை. அவர் பிரசாரம் செய்ததெல்லாம் ஏக இறைவனை வணங்கி வழிபடுமாறுதான். தனக்கு எந்த சக்தியும் கிடையாது. இறைவனது பண்புகள், ஆற்றல் பற்றியெல்லாம் அந்த சமூகத்துக்கு அவர் பிரச்சாரம் செய்துள்ளார் என்பதை நாம் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இறை கட்டளைகளை பின்பற்றியோர் பற்றி இவ்வாறு கூறப்படுகிறது, ''அதற்கு அவர் அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதனைக் காத்துக் கொள்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.'' (லூக்கா 11:28)

மேலும் பிரார்த்தனை என்பது கூட ஒரு வணக்கமாகும். ஏனெனில், மனிதன் தனது தேவையை இறைவனிடம் கேட்கும்போது அவன் ஏனையவற்றை நிராகரித்து ஏக இறைவனையே சார்கிறான். எனவே பிரார்த்தனை கூட இறைவனிமே புரியப்பட வேண்டும் என்று யேசு கூறுகிறார். ''மேலும் நான் உங்களுக்கு சொல்கிறதாவது; கேளுங்கள் அப்போது உங்களுக்கு கொடுக்கப்படும்... பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.'' (லூக்கா 11:9-13)

இறுதிநாள் பற்றி நம்பிக்கையையும் மறுமையின் நிகழ்வுகள், மறுமை ஏற்படவிருக்கும் போது நிகழும் விடயங்கள், குழப்பங்கள், பிரபஞ்சத்தில் ஏற்படும் ஒழுங்கீனங்கள் பற்றிய முன்னறிவிப்புக்களையும் நாம் பைபிளில் கண்டுகொள்ள முடிகின்றது.

மத்தேயுவின் 24ஆது அதிகாரம் இத்தகைய நிகழ்வுகளைப் பற்றியே பேசுகின்றது. அதிலே வரும் ஒரு திருவசனம் இவ்வாறு அமைகிறது. ''அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே சூரியன் அந்காரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.'' (மத்தேயு 25:29)

> பைபிளின் கருத்துப்படி கடவுளின் குமாரன் என்ற சொல் எப்ரேயு மொழியில், கிரேக்க மொழியில் இறைவனின் சிறந்த அடியார்கள் அனைவருக்கும் பயன்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

மேலும் ''இவைகளையெல்லாம் சம்பவிக்கும் முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.'' (மத்தேயு 25:34)

சுவர்க்கம் நரகம் பற்றி இயேசு இவ்வாறு கூறியிருக்கிறார்: ''உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்து எறிந்து போடு; நீ இரண்டு கையுடையவனாய் அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும் சப்பானியாய் அல்லது ஊனனாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். (மத்தேயு 18:8)

ஆயினும் இயேசுவின் போதனைகள் இவ்வாறிருக்க தற்போது அவரையே வழிபடக் கூடியதொரு நிலைமை இருப்பதைப் பார்க்கலாம். யேசுவின் சிலையுடன் கூடிய ஒரு சிலுவை வழிபாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. (இதனை உபயோகிக்காத சில பிரிவுகளும் உள்ளன). மேலும் கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபாட்டின்போது அப்பம், வைன் போன்றன பக்தர்களுக்கு பகிர்ந்தளிக்கும் வழமையும், திருமுழுக்குக் கொடுக்கும் வழமையும், எண்ணெய் தடவுதல், திருமணம் கிறிஸ்தவ கோயிலிலே நடத்தப்படுதல் போன்ற சில வழிமுறைகளும் காணப்படுகின்றன.

சிலுவை வழிபடும் முறை கி.பி. 4ம் நூற்றாண்டிலிருந்தே தோற்றம் பெற்றுள்ளது. இயேசுவின் போதனைகள் பற்றிய அல்குர்ஆனின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி நோக்கினால் அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

இயேசுதான் அல்லாஹ்வின் அடிமையாக இருப்பதை குறைவாகக் கருதவில்லை. அந்த ஏக இறைவனையே அவர் வழிபட்டார்.

''மஸீஹும் (இயேசு) அல்லாஹ்விற்கு நெருக்கமான மலக்குகளும் அல்லாஹ்விற்கு அடிமையாயிருப்பதை குறைவாகக் கொள்ளவே மாட்டார்கள். எவர்கள் அவனுக்கு வணக்கம் செலுத்துவதை விட்டும் குறைவாகக் கருதி கர்வமும் கொள்வார்களோ அவர்கள் யாவரையும் (மறுமையில் எழுப்பி) அவன் தன் பக்கமே ஒன்று திரட்டுவான்.'' (4:172)

மேலும் அவருடைய அழைப்பும் அதுவாகத்தான் இருந்தது. யார் தன்னையும் தனது தாயையும் கடவுளாகக் கொண்டனரோ அவர்களை விட்டும் நிரபராதியாகி விடுவார். ஏனெனில் தான் போதிக்காத ஒன்றை எவ்வாறு உரிமை கோர முடியும்.

''(மனிதர்களே!) நிச்சயமாக அல்லாஹ் தான் என்னுடைய இரட்சகனும் உங்களின் இரட்சகனுமாவான். (ஈஸாவாகிய நானல்ல) ஆகவே அ(வன் ஒரு)வனையே நீங்கள் வணங்குங்கள். இதுதான் நேரான வழி என்று ஈஸா (இயேசு) கூறினார்.'' (19:36)

மேலும் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் இறைவன், மலக்குகள், வேதங்கள், மறுமை, மறுமை நிகழ்வதற்கான அடையாளங்கள் பற்றியெல்லாம் பேசியுள்ளனர். இவற்றில் ஒருவருக்கொருவர் வேறுபட மாட்டார்கள். வேதங்களை விசுவாசித்தல் பற்றி யேசு இவ்வாறு கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''மேலும் மர்யமின் புதல்வர் ஈஸா, இஸ்ராயீலின் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை உண்மைப்படுத்தியவனாகவும் எனக்குப் பின்னர் அஹ்மத் என்னும் பெயருள்ள ஒரு தூதர் வருவார் என நன்மாராயம் கூறுபவனாகவும் நிச்சயமாக உங்கள்பால் (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதராக நான் இருக்கின்றேன்'' என்று கூறியதை (நபியே நீர் நினைவு கூறுவீராக.) (61:6)

மேலும் இயேசு மறுமை நிகழும்போது ஏற்படும் அடையாளமாகக் கூறிய சூரியன் ஒளியிழந்து நட்சத்திரங்கள் உதிர்வதானது அல்குர்ஆனில் ஸூறதுத் தக்வீரின் வசனங்களுடன் பொருந்தி வருகின்றது. ''சூரியன் (ஒளி நீக்கப்பட்டு) சுருட்டப்படும்போது, நட்சத்திரங்கள் (ஒளியிழந்து) உதிர்ந்து விடும்போது (81:1-2)

மேலும் பொய்ச் சத்தியம், விபச்சாரம், கொலை, கொள்ளை என்பன எல்லா தீர்க்க தரிசிகளும் தடைசெய்த விடயங்களாகும்.

**சீடர்கள்**

இயேசுவின் சீடர்கள் பற்றி பைபிள் கூறுகையில் அவர்கள் பன்னிருவர் என்று கூறுகின்றது. ''அவர்கள் யாரெனில் சீமோன், இவனுக்கு பேதுரு என்கிற பெயரிட்டார். செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான்; இவ்விருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங் கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்... அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவர்களே'' *(மாற்கு 3:16-19)*

மேலும் சீடர்கள் இயேசுவுடன் இணைந்து அழைப்புப் பணியில் ஈடுபட்டனர். இயேசுவின் பின்னரும் அவர்கள் பல பிரதேசங்களக்கு பிரிந்து சென்று பிரச்சாரம் செய்ததாக கூறுவர். மேலும் அந்த சீடர்களுள் ஒருவரே யூதாஸ். இயேசுவை காட்டிக் கொடுத்ததாகவும் பைபிள் கூறுகிறது.

ஆயினும், அல்குர்ஆன் இயேசுவின் சீடர்கள் பற்றி பின்வருமாறு கூறுகின்றது. ''இறை நம்பிக்கையாளர்களே! -மர்யமின் குமாரர் ஈஸா தம் சீடர்களை நோக்கி இறைவன்பால் அழைப்பதில் எனக்கு உதவி புரிபவர் யார்? எனக் கேட்டபோது 'நாங்கள், அல்லாஹ்வின் உதவியாளராக இருக்கிறோம்' எனச் சீடர்கள் மறுமொழி அளித்ததைப்போல் நீங்களும் அல்லாஹ்வின் உதவியாளராகத் திகழுங்கள்.

(61:14)

இந்த வசனம் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவர்களைப் பார்த்து பேசுகின்றது. யூத சமூகத்தின் சித்திரவதைகளுக்கு மத்தியிலும் சீடர்கள் தீர்க்க தரிசிக்கு உதவியாகவும் துன்பங்களின்போது பொறுமையாகவும் இருந்தது போல நீங்களும் இருங்கள் என்று கூறுகின்றது. மேலும், ''இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள் நிராகரிக்க முனைந்து விட்டதை ஈஸா உணர்ந்து கொண்டபோது அல்லாஹ்வின் வழியில் எனக்கு உதவி புரிபவர் யார்? என வினவினார். அப்போது சீடர்கள் 'நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்களாய் இருக்கிறோம். நாங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறோம். எனவே நீ, எங்கள் பெயர்களை சத்தியத்திற்கு சான்று வழங்குவோருடன் சேர்த்து எழுதுவாயாக.''

(3:52-53)


எனவே இயேசுவின் சீடர்கள் ஒருபோதும் அவருக்கு தீமை நினைத்ததில்லை, சதி செய்யவில்லை என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இந்த வசனத்தில் வரும் 'ஷாஹிதீன்' என்பதற்கு இமாம் இப்னுல் ஜவ்ஸி அவர்கள் ஐந்து அர்த்தங்களைக் கூறுகிறார்.

1. முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களது சமூகமும்
2. அவர்களுக்கு (இயேசுவிற்கு) முன் வாழ்ந்த நல்லடியார்கள், விசுவாசிகள்
3. நபிமார்கள் -ஏனெனில் அவர்கள் தமது சமூகத்தின் சாட்சியாளர்கள்
4. உண்மையாளர்கள்
5. நபிமார்களை உண்மைப்படுத்தியோர்

மேலும் இமாம் இப்னு கஸீர் அவர்கள் தனது 'கிஸஸுல் அன்பியா' எனும் நூலில் இப்னு ஜரீர் வழியாக முஹம்மத் இப்னு இஸ்ஹாக் அறிவிக்கும் பின்வரும் அறிவிப்பைப் பதிவு செய்துள்ளார். ''ஈஸா (அலை) வானுக்கு உயர்த்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட முன்பு தனது சீடர்களுக்கு மக்களை அல்லாஹ்வின் பாலும் அவனை மட்டுமே வணங்கி வழிபடவும், அவனுக்கு எதையும் இணைவைக்காதிருக்கவும் அழைப்பு விடுக்குமாறு ஏவினார். மேலும் ஒவ்வொருவரையும் குறிப்பிட்ட பகுதிக்கு நியமித்தார். அவர்கள் அக்குறிப்பிட்ட பகுதி மக்களின் மொழியை அறிந்திருந்தனர்.

## இயேசு நிகழ்த்திய அற்புதங்கள்

இயேசு நிகழ்த்திய அற்புதங்களாக பைபிள் பல விடயங்களைச் சுட்டிக் காட்டுகிறது. தொழு நோயைக் குணப் படுத்துதல், குருடனுக்கு பார்வையை ஏற்படுத்தல் போன்ற விடயங்களை குறிப்பிடுகின்றது.

''அப்போது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து அவர் முன்பாக முழங்கால் மடியிட்டு உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக உம்மால் ஆகும்'' என்று வேண்டிக் கொண்டான். இயேசு மனதுருகி கையை நீட்டி அவனை தொட்டு எனக்கு சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். இப்படி அவர் சொன்னவுடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிவிட்டது.'' *(மாற்கு 1:40-43)*

**மறுமை நெருங்கும்போது [ஈஸா அலை] இயேசு பூமிக்கு இறக்கப்படுவார். அவர் தஜ்ஜாலைக் கொலை செய்வார். நபி முஹம்மத் [ஸல்] அவர்களின் [ஷரீஅத்தையே] வேதவாக்குகளையே நடைமுறைப்படுத்துவார் எனும் நம்பிக்கை கொண்டவர்களே முஸ்லிம்கள்.**

இயேசுவின் அற்புதங்கள் தொடர்பாக அல் குர்ஆன் கீழ்வருமாறு கூறுகிறது. **''திண்ணமாக நான் உங்களுடைய இறைவனிடமிருந்து உங்களுக்குச் சான்று கொண்டு வந்துள்ளேன். நான் உங்கள் முன் களிமண்ணிலிருந்து பறவையின் உருவத்தைப் போல ஒன்றைச் செய்து அதில் ஊதுவேன். அது அல்லாஹ்வின் கட்டளையினால் பறவையாகிவிடும். மேலும் நான் அல்லாஹ்வின் அனுமதி கொண்டு பிறவிக் குருடனையும் வெண்குஷ்டமுடையவனையும் குணமாக்குவேன். இன்னும் இறந்தவர்களை அவனது அனுமதி கொண்டு உயிர் பெறச் செய்வேன்.''** (3:49)

மேற்கூறிய அற்புதங்கள் அனைத்தும் இறைவன் கொடுத்தவையே அன்றி யேசு கடவுள் அந்தஸ்திலிருந்து செய்தவைகளல்ல. இதனை அவரே மேலுள்ள வசனத்தின் மூலம் தெளிவாகக் கூறியிருப்பதை காணலாம்.

## இயேசு சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டாரா?

கிறிஸ்தவ சகோதரர்களின் நம்பிக்கையின் படி இயேசு சதி செய்யப்பட்டு சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். அவரை அவரது சீடர்களில் ஒருவரான யூதாஸ்தான் காட்டிக் கொடுத்தார். இயேசுவை இழிவுபடுத்தி, முகத்தில் உமிழ்ந்து கேலி செய்த பின்னரே சிலுவையில் அறைந்தனர் என்று நம்புகின்றனர். இதனை பைபிளும் எடுத்துக் காட்டுகிறது. இயேசுவைக் கொலை செய்ய சதி செய்தது பற்றி பைபிள் இவ்வாறு கூறுகிறது. ''பன்னிருவன் ஒருவனான யூதாகிஸ்திரியோத்து என்பவன் அவரை தலைமை ஆச்சாரியாருக்குக் காட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் அவர்களிடம் போனான். அவர்கள் அதை அறிந்து மகிழ்ச்சிடைந்து அவனுக்குப் பணம் கொடுப்பதாக வாக்களித்தார்கள். அவனும் சமயம் பார்த்து அவரைக் காட்டிக் கொடுப்பதற்காக வழிதேடிக் கொண்டிருந்தான்.'' *(மாற்கு 14:10-11)*

மேலும் தன்னைக் கொலை செய்ய சதி செய்திருப்பது பற்றி 'பாஸ்க்' பண்டிகைக்கு சற்று முன்பு இயேசு தனது சீடர்களுக்கு எடுத்துக் கூறியது பற்றி யோவான் *13:1-17* வசனங்கள் கூறுகின்றன. மேலும் தன்னைக் காட்டிக் கொடுக்கப் போவதைப் பற்றி முன்னறிவிப்பு செய்தது தொடர்பான தகவல்கள் யோவானில் *13:21-29* வசனங்கள் கூறுகின்றன. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ந்து இயேசு கொல்லப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுவது பற்றியும், அதன் பின்னரான நிகழ்வுகள் பற்றியும் பைபிள் இவ்வாறு கூறுகிறது.

''அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி மேய்ப்பவனை வெட்டுவேன். ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார். *(மாற்கு 14:27-28)*

மேலும் யூதாஸ் யேசுவைக் காட்டிக் கொடுத்தது பற்றி கீழ்வருமாறு கூறுகின்றது. ''அவரைக் காட்டிக் கொடுக்கிறவன் நான் எவனை முத்தஞ் செய்வேனோ அவன்தான். அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். உடனே அவன் இயேசுவினிடத்தில் வந்து ரபீ, வாழ்க என்று சொல்லி அவரை முத்தஞ் செய்தான்.'' *(மத்தேயு 26:48-49)*

பின்னர் இயேசு பிடிபடுதல் அன்னாவிடம் அழைத்துச் செல்லப்படல். பின்னர் தலைமை ஆச்சாரியிடம் கொண்டு செல்லப்படல். ''அவருக்கு செய்த சித்திரவதைகள், சிலுவையில் அறையப்படல், இறந்த பின்பு யோசோப்பு பிலாந்துவிடம் இயேசுவின் உடலைப் பெற்று அடக்கம் செய்தல், பின்பு மீண்டும் உயிர்த்தெழுதல் போன்றவை தான் சுவிசேசங்களில் இறுதி அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது. மேலும் 'மாற்கு' 16:19 திருவசனம் இவ்வாறு கூறுகிறது.

''இவ்விதமாய் கர்த்தர் அவர்களுடனே பேசிய பின்பு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பரிசத்தில் உட்கார்ந்தார்.'' மேலும் லூக்காவின் 24:51 திருவசனம் ''அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்'' என்று கூறப்படுகிறது.

அதாவது இயேசு உயிர்த்தெழுந்த சிறிது நாட்களில் பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டார் என்று கூறுகின்றது. ஆயினும் பர்னபாவின் பைபிளிலே இயேசுவைக் காட்டிக் கொடுக்க வந்த யூதாஸ் இயேசுவின் உருவிற்கு மாற்றப்பட்டதாகவும், இயேசு கொலை செய்யப்படும் முன்னரே வானுக்கு உயர்த்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளதாக இமாம் அபூ ஸஹ்றா அவர்கள் தனது ''முஹாழராதுன் பின் நஸ்ரானிய்யா'' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி இஸ்லாத்தின் நிலைப்பாடு யாதெனில், இயேசு தனது சீடர்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. அவர் சிலுவையில் அறையப்படவுமில்லை. அவரது தோற்றத்தை ஒத்த ஒருவரே சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பதாகும்.

**''இன்னும் அல்லாஹ்வுடைய தூதர் மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹை நிச்சயமாக நாங்கள் கொலை செய்து விட்டோம் என்று அவர்கள் கூறியதன் காரணமாகவும் (அவர்களை அல்லாஹ் சபித்துவிட்டான்) அவரை அவர்கள் கொல்லவுமில்லை. அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. எனினும், அவர்களுக்கு (ஈஸாவின் தோற்றத்தைப் பெற்ற) ஒருவனை ஒப்பாக்கிக் காண்பிக்கப்பட்டது. இன்னும் நிச்சயமாக இவ்விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களே அத்தகையோர் அது பற்றி சந்தேகத்திலேயே உள்ளனர். வெறும் யூகத்தைப் பயன்படுத்துவதைத் தவிர அதில் அவர்களுக்கு உண்மையான அறிவு கிடையாது. மேலும் உறுதியாக அவர்கள் அவரை கொலை செய்யவே இல்லை. மாறாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாக தீர்க்கமான அறிவுடையவனாய் இருக்கின்றான்.''** (4:157-158)

மேலும் மறுமை நெருங்கும்போது (ஈஸா அலை) இயேசு பூமிக்கு இறக்கப்படுவார். அவர் தஜ்ஜாலைக் கொலை செய்வார். நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் (ஷரீஅத்தையே) வேதவாக்குகளையே நடைமுறைப்படுத்துவார் எனும் நம்பிக்கை கொண்டவர்களே முஸ்லிம்கள். இதற்கு ஏராளமான நபிமொழிகள் சான்றாக இருக்கின்றன.

இமாம் தபரி அவர்கள் தனது 'முஃஜமுல் கபீரில்' கவ்ஸிப்னு அவ்ஸ் வழியாக அறிவிக்கும் அறிவிப்பில் கீழ்வருமாறு அமைகிறது: ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''மர்யமின் குமாரன் தமஸ்கஸின் கிழக்குப் பகுதியில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை நிற மினாரா (கோபுரத்தின்) மீது இறங்குவார். ஸஹீஹு ஜாமிஇஸ் ஸகீர் (நாஸிருத்தீன் அல் அல்பானி)

### இறுதியாக...

இந்த ஆக்கம் இயேசு பற்றிய விடயத்தில் இஸ்லாம், கிறிஸ்தவத்திற்கிடையிலுள்ள முரண்பாடுகளைத் தொட்டுக் காட்டினாலும் அதிகமாக உடன்பாடுகளைப் பற்றியே பேசுகின்றது. ஏனெனில் இதனூடே கிறிஸ்தவம் ஒரு திரிபுபடுத்தப்பட்ட மதம் என்பது தெளிவாக வேண்டும். கிறிஸ்தவ சகோதரர்கள் உண்மையை உணர வேண்டும். முரண்பாடுகள் பற்றி மட்டும் பேசுவதாயின் இந்தப் பக்கங்கள் போதாதிருக்கும். ஆயினும் முரண்பாடுகள் பற்றிப் பேசாது அவற்றுக்கான காரணங்கள் பற்றியும், தீர்வுகள் பற்றியும் பேசுவதே சாலச் சிறந்தது.

மேலும் கிறிஸ்தவத்தினுள் இத்தகைய முரண்பாடுகள், திரிபுகள் ஏற்படக் காரணம் என்னவெனில் அதன் வேத நூல் ஆரம்பத்திலேயே முறையாகப் பாதுகாக்கப்படவில்லை. மேலும் 'திருபோல்' என்பவர் கிறிஸ்தவத்தை ஆரம்பத்தில் கடுமையாக எதிர்த்து பிற்பட்ட காலத்தில் திடீர் உளமாற்றம் பெற்றவராக கிறிஸ்தவத்தில் நுழைந்து சீர்திருத்தம் செய்வதாக பல உட்புகுத்தல்களையும் திரிபுகளையும் செய்தார். மாற்றுக் கொள்கைகள், கோட்பாடுகளிலிருந்து சில விடயங்களைப் பெற்று அதனைக் கிறிஸ்தவத்தோடு இணைத்தார். இதன் விளைவே கிறிஸ்தவத்தில் திரித்துவம் நுழைந்தது.

இயேசு பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டு பிதாவின் வலது புறத்தில் அமர்ந்தது, ஞாயிற்றுக் கிழமை புனித நாளாகக் கருதுவது, கொண்டாடுவது, டிசம்பர் 25/26 நாளை புனித நாளாகக் கருதுவது போன்ற விடயங்கள் இவை யாவும் மித்ரா (Mithra) வின் மார்க்கத்தில் இருந்து பெறப்பட்டவையாகும். எனவே இயேசு போதித்த மார்க்கம் இன்று உயிருடன் இல்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். மேலும் காலத்திற்கு காலம் கிறிஸ்தவ திருச்சபையினால் பல புதிய விடயங்கள் உட்புகுத்தப்பட்டும், சில விடயங்கள் திரிக்கப்பட்டும் வந்துள்ளதை காண முடியும். புனித வேத நூலாகக் கருதும் பைபிள் கூட புது பதிப்புகளைக் காணும்போது கிறிஸ்தவ திருச்சபையின், கிறிஸ்துவ போதகர்களின் கையாடலுக்கு உட்படுவதைக் கண்டு கொள்ள முடியும்.

ஷெய்க் அஹ்மத் தீதாத் அவர்கள் பைபிளில் 50,000ற்கும் அதிகமான பிழைகள் இருப்பதாகத் தனது The Choice எனும் நூலின் 2ம் பாகத்தில் குறிப்பிடுகிறார். அதற்கு ஆதாரமாக 1957ம் ஆண்டு செப்டம்பர் 3ம் திகதி 'Awalce' என்ற சஞ்சிகையில் வெளியான ஒரு செய்தியையும் ஆதாரமாகக் கூறுகிறார்.

மேலும் அறிவுக்குப் பொருந்தாத பல விடயங்கள், முன்னுக்குப் பின் முரணான செய்திகளெல்லாம் பைபிளில் காணப்படுகின்றன. உதாரணமாக இயேசு மரணித்த பின் அவரது கல்லறைக்கு பல பெண்கள் பார்க்கச் சென்ற நிகழ்வுகள் தொடர்பாக பதிவாகியுள்ள விடயத்தில் சுவிஷேசங்களுக்கிடையே 'பெண்கள் கூட்டமொன்று' சென்றதாகவும் யோவான் 'ஒரு பெண் மட்டுமே' சென்றதாகவும் குறிப்பிடுகிறார்.

மேலும் இயேசு உயிர்த்தெழுந்து சீடர்களுக்கு காட்சியளித்தது தொடர்பாகவும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. லூக்கா, இயேசு மூன்று முறை தோற்றமளித்ததாகவும், கலிலியோவில் ஒருமுறை மட்டும் தோற்றமளித்ததாக யோவானும் குறிப்பிடுகிறார். ஆயினும் திரு. பவுல் அடிகள் கொரியந்தருக்கு எழுதிய முதலாவது நிருபத்தில் இதற்கு நேர்முரணாகவும் உள்ளது. (பார்க்க: கொரியந்தருக்கு எழுதிய முதலாவது நிருபம் 15:3,7)

மேலும் ஏராளமான ஆபாசமான விடயங்களும் உட்புகுத்தல்களும் முன்னுக்குப் பின் முரணான விடயங்களும் காணப்படுகின்றன. இவை அனைத்தும் நுணுக்கமான ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.


### உசாத்துணைகள்


1. அல்குர்ஆன்
2. பரிசுத்த வேதாகமம் - இந்திய வேதாகம சங்க வெளியீடு
3. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு) 9th Print 2000
4. தப்ஸீர், அபி ஸுஊத்
5. கிஸஸுல் அன்பியா - இமாம் இப்னு கஸீர்
6. கிஸஸுல் அன்பியா - அப்துல் வஹ்ஹாப் நஜ்ஜார்
7. முஹாழராதுன் பீந் நஸ்ரானிய்யா - இமாம் அபூ ஸஹ்ர்
8. ධර්ම ගවේෂණ - අහ්මද් අන්වර් මනතුංග
9. விஞ்ஞான ஒளியில் அல்குர்ஆன், பைபிள் டாக்கடர் மாரிஸ் புகைல்
10. God Concept in mager religious - Dr. Zakir Naik
11. The Choice - Ash-sheik Ahmed Deedat
12. இதுதான் பைபிள் - பீ. ஜைனுல் ஆப்தீன்
13. இவர் யார்? - இலங்கை வேதகாமர் சங்க வெளியீடு, 293இ காலிவீதி, கொழும்பு 03.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் முகாமைத்துவமும்



ஜே.எம். அஸீம்
(விடுகை வருடம்)

உயர்ந்த நோக்கத்திற்காக உயரிய இலட்சியத்தினை வரையறுத்து அதற்கான தெளிவான பாதையை குறுகிய, நீண்ட திட்டமிடல்களின் அடிப்படையில் அமைத்து தனது அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தி மிகச் சிறப்பாக நிர்வகித்து மிகச் சிறந்த வெற்றியீட்டியவர்கள்தான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள். இதனை அவர்களது வாழ்வின் (ஸீறா) ஒவ்வொரு அசைவிலும் காணலாம். சிறந்த நிர்வாகியாகவும் சிறந்த தலைவராகவும் இன்றளவும், இனிமேலும் பேசப்படும் ஆளுமைமிக்கவராகக் கருதப்படக் காரணம் அதுதான்.

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதை இந்த உலகிற்கு எடுத்துரைத்தது முதல் அபீஸீனியா, தாயிப், மதீனா ஹிஜ்ரத், மஸ்ஜிதுன் நபவி நிர்மாணம், அவ்ஸ்-கஸ்ரஜ் இணக்கப்பாடு, முஹாஜிர்-அன்ஸார் சகோதரத்துவப் பிணைப்பு, யூதர்களுடனான உடன்படிக்கை, யுத்தங்கள், உடன்படிக்கைகள், மக்கா வெற்றி... என அனைத்துமே மிகச் சிறந்த முறையில், மிக நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு நடந்தவை. இவற்றுக்கிடையிலான ஒவ்வொரு சிறிய, பெரிய நிகழ்வுகளும் திட்ட மிடல்களின் அடிப்படையிலேதான் நிகழ்ந்தன.

மாத்திரமன்றி அவை ஒழுங்குபடுத்தப்பட்டு, வழிநடாத்தப்பட்டு, சிறந்த தலைமை மூலம் நிர்வகிக்கப்பட்டதன் மூலம்தான் இத்தகு வெற்றிகள் சாத்தியமாயின.

இந்த வகையில் "முகாமைத்துவம்" எனும் கோட்பாடு பற்றியும் இது ரஸூல் (ஸல்) அவர்களது வாழ்வில் செயற்பட்ட விதத்தையும் இரத்தினச் சுருக்கமாக நோக்குவோம்.

## முகாமைத்துவம் (Management)

முழு உலகிலும் குறிப்பாக மேற்கிலும் பெருந் துறையாக விருத்தியடைந்துள்ள இத்துறையானது அதன் பல வெற்றிகளுக்குப் பின்நின்று செயற்பட்ட காரணி என்பது தெளிவான உண்மை. இது பற்றியறிய முதலில் முகாமைத்துவம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். இதற்கு பல வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. "திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடாத்துதல், கட்டுப்படுத்தல் போன்ற முகாமைத்துவ செயற்பாடுகளினூடாக நிறுவனத்தின் குறிக்கோளை வினைத்திறன் வாய்ந்த முறையில் அடையும் ஒரு செய்முறை முகாமைத்துவம் எனப்படும்".

அதேபோல் மற்றொரு வரைவிலக்கணமும் காணப்படுகிறது. அதாவது, "நிறுவன நோக்கத்தினை அடையும் பொருட்டு மனித வளச் செயற்பாடுகளையும் பௌதீக வளச் செயற்பாடுகளையும் வழிநடத்துகின்ற ஒரு கலை அல்லது திறனே முகாமைத்துவம் எனப்படும்.

மேலும் ELF Brech என்பவர், "முகாமைத்துவம் ஒரு சமூக செய்முறை" என விளக்குகிறார். அத்துடன் முகாமைத்துவ நுட்பங்களாக (Managerial Skills) மூன்று திறன்கள் கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொழில்நுட்பத் திறன் (Technical Skills)

2. மனிதத் தொடர்புத் திறன் (Human Relations Skills)

இத்திறமையானது -ஊக்குவித்தல் (Motivation), மற்றவர்களோடு சேர்ந்து வேலை செய்தல் (Coordinating), பிரச்சினைகளைத் தீர்த்தல் (Problem Solving) என்பவற்றோடு சம்பந்தப்பட்ட நுட்பங்களாகும்.

3. கருத்து தொடர்பான திறன் (Conceptual Skills)

இது முகாமையாளரின் பரந்த தீர்மானமெடுக்கும் (Dicision Making) தூரநோக்குடைய சிந்தனையுடன் தொடர்புபட்ட திறனாகும்.

முகாமைத்துவம் தொடர்பான இவ்விடயங்களை வைத்துப் பார்க்கின்ற பொழுது இவை ரஸூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் இழையோடி யிருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

முகாமைத்துவத்திற்கான வரைவிலக்கணங்கள் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வில் இயல்பாகவே அமுல்படுத்தப்பட்டுள்ளதை நுணுக்கமாக அவ தானிக்கலாம். திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்துதல், கட்டுப்படுத் துதல் ஆகிய செயற்பாடுகளாயினும் அல்லது பௌதீக, மனிதவளச் செயற் பாடுகளை வழிநடத்துவதாயினும் மிக உன்னத குறிக்கோள்களை நோக்கிய நகர்வுகளாக அவை அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும். இவற்றை நாம் முகாமைத்துவ செயற்பாடுகளினூடாகப் பார்ப்போம்.

**முகாமைத்துவச் செயற்பாடுகள் (Functions of Management)**

1. திட்டமிடல் (Planning)
2. ஒழுங்கமைத்தல் (Organizing)
3. வழிநடத்துதல் (Directing)
4. கட்டுப்படுத்தல் (Controlling)

***திட்டமிடல் (Planning)***


முகாமைத்துவச் செயற்பாடுகளின் அடிப்படையான இது, முன்கூட்டியே தீர்மானித்தலைக் குறிக்கும். இதனை நிறுவனத்தின் எதிர்கால செயற்பாடு களுக்கான திட்டங்களை வகுத்தல் என வரையறுப்பர்.

இந்த வகையில் நோக்குகின்றபோது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையும் திட்டமிடலின் அடிப்படையில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். அதுமட்டுமல்லாமல் திட்டமிடல் செயன்முறை (Planning Process) கூட தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வில் சிறப்பாகச் செயற் படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் திட்டமிடல் செயன்முறையான,

1. குறிக்கோள்களை உருவாக்கல்
2. அதனை அடைவதற்கான தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்
3. திட்டமிடல் காலத்தை வரையறுத்தல்
4. பெறுபேறுகளை நோக்கி எல்லா முயற்சிகளையும் நெறிப்படுத்தல்
5. பெறுபேறுகளை விலகிச் செல்லாமல் கட்டுப்படுத்தல்

போன்ற அனைத்தும் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருப்பதனைக் கண்டுகொள்ள முடியும்.

அத்துடன் இன்று பிரதான திட்டமிடல் வகைகளாக அறிமுகப்படுத்தப் படும் திட்டமிடல்கள் கூட தூதரின் வாழ்வில் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் குறிக்கோளை அடைய வேண்டிய இடத்திற்கு எடுத்துச் செல்லும் இலக்கையுடைய நீண்ட வீச்சுடைய திட்டமிடல் 'செயல் முக்கியத்துவமுடைய திட்டமிடல்' (Strategic Planning) எனப்படும். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஹிஜ்ரத், ஹுதைபிய்யா உடன் படிக்கை போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

அத்துடன் மறுதலையாக விரைவில் பெறு பேறு தரக்கூடிய குறித்த சில நடவடிக்கைகளின் விளைவுகளை நோக்காகக் கொண்ட குறுகிய வீச்சுடைய திட்டமிடலானது, 'செய்முறைத் திட்டமிடல்' (Tactical planning) எனப்படும். இதற்கும் ஏராளமான உதாரணங்கள் உள.

இத்திட்டமிடல் செயற்பாடுகள் யாவும் தூதரின் தீட்சண்யப் பார்வைக்கும் தூரநோக்கிற்கும் சிறந்த உதாரணங்களாகும். தலைவர் எந்தளவு தூரம் சமயோசிதமாகவும், தூர நலன்களைக் கருத்திற் கொண்டு தொலைநோக்குடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது நபிகளார் (ஸல்) அவர்கள் நடந்துகொண்ட முறையில் கூர்ந்து அவதானிக்க முடியும்.

மேலும் குறிக்கோள் அடிப்படையிலான முகாமை மூலம் திட்டமிடல் (Planning by MBO (Management by Objective) என்று கூறப்படும் யார், எதனை, எப்போது, எப்படி செய்யப் போகிறார்கள் என்பதனைக் குறிக்கும் திட்டமிடலினை தூதர் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் நிகழ்வில் சிறப்பாக அவதானிக்கலாம். இந்த வகையில்

- அலி (ரழி), அபூபக்கர் (ரழி), அவரது மகன், மகள், ஒட்டகம், வழிகாட்டுபவன் யார் என்பதையும்,
- அவர்கள் எதனை, எப்போது, எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதனையும் ரஸூல் (ஸல்) அவர்கள் நுணுக்கமாகத் திட்டமிட்டதனை ஸீறாவில் தெளிவாகக் காணலாம்.

மாத்திரமல்லாமல் இதன் (Planning by MBO) கட்டங்கள் நான்கும் அந்நிகழ்வில் செயற்படுத்தப்பட்டிருப்பதையும் இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டும். இந்த வகையில்

1. *தயார்படுத்தல்:* ஒட்டகம், வழிகாட்டுபவன், உணவு... என்பன.
2. *தீர்மானம் எடுத்தல்:* எப்போது, எங்கே தங்குவது, எத்தனை நாட்கள் என்பன.
3. *தகவல் பரிமாறுதல்:* அபூபக்கர் (ரழி) அவர்களின் மகள், மகன்
4. *கட்டுப்படுத்தல்:* என்பன தூதர் (ஸல்) அவர்களினால் நுணுக்கமாக மேற்கொள்ளப் பட்டன.

மேலும் தூதரின் முழு வாழ்க்கையிலுமே இது இழையோடியிருப்பதனைக் கண்டுகொள்ள முடியும். இந்த வகையில் மக்கா காலம் அல்லாஹ்வின் வழிகாட்டலோடு திட்டமிடப்படுகிறது. இக்கால செயற்பாடுகள் பொறுமையோடு இரகசியத் திட்டங்களின் அடிப்படையில் நடைபெறுகின்றன.

பின்னர், தசாப்த காலப் போராட்டத்தின் பின் இஸ்லாம் எனும் கொள்கை உலகாள்வதற்கும் 'பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதி' என்ற அல் லாஹ்வின் கட்டளை நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டிய கட்டத்தை நோக்கித் திட்டமிடப்பட்டு ஹிஜ்ரத் என்ற வழிமுறையினூடாக இது சாத்தியமாக்கப்படுகிறது.

### ஒழுங்கமைத்தல் *(Organizing)*

முகாமைத்துவத்தின் இரண்டாவது செயற்பாடான ஒழுங்கமைத்தல் என்றால் என்ன என்பது பற்றியும் அது ஸீறாவில் எவ்வாறு செயற்பட்டது என்பது தொடர்பாகவும் நோக்குவோம்.

இந்த வகையில் திட்டமிட்டபடி நிறுவனங்கள் தமது நோக்கத்தின் அடிப்படையில் தனது செயற்பாடுகளைத் தொகுதியாக்கி அவற்றுக்கு பொருத்தமானவர்களை நியமித்து அவர்களுக்கு வேண்டிய அதிகாரம் பொறுப்புக்களை (Authority and Responsibility) வழங்கி நிறுவன செயற்பாடுகளை அமைப்பாக்கம் செய்தல் 'ஒழுங்கமைத்தல்' (Organizing) எனப்படும்.

இதனையும் ரஸூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலே காணலாம்.

- தாயிப், அபீஸீனியா, ஹிஜ்ரத்கள் திட்டமிடப்பட்ட விதமும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையும்
- மதீனா ஹிஜ்ரத் திட்டமிடப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதும்
- யுத்தங்களின்போது திட்டமிடப்பட்ட நுணுக்கங்களும், ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையும் உதாரணங்களாகும்.

### வழிநடாத்துதல் *(Directing)*

இவ்வாறு திட்டமிடப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெறும் முகாமைத்துவ செயற்பாடுகளில் வழிநடாத்துதல் முக்கியமான மற்றொரு அம்சமாகும். இதில்,

1. தலைமைத்துவம் (Leadership)
2. ஊக்குவித்தல் (Motivation)
3. மற்றவர்களுடன் சேர்ந்து வேலை செய்தல் (Coordinating) என்பன உள்ளடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறரை வழிநடத்தி அவர்களிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பினைப் பெற்று, அதனூடாக நிறுவனத்தின் நோக்கத்தினை அடைய முற்படும் ஓர் இயங்கு செயல்முறை" என தலைமைத்துவத்தினை வரையறுப்பர்.

இவ்வடிப்படையில் நபி (ஸல்) அவர்கள் யுத்தங்களில் தளபதியாக, சமூகத்தின் தேவைகளில் சேவையாளராக, தொழுகையில் இமாமாக, குடும்பத்தின் தலைவராக... அனைத்து தலைமைத்துவங்களிலும் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி இத்தகு வழிநடாத்தலை, தலைமைத்துவத்தை, ஊக்குவிப்பை, கூட்டிணைந்த செயற்பாட்டை ஸீறா முழுவதும் காணலாம்.

### கட்டுப்படுத்தல் *(Controlling)*

முகாமைத்துவத்தின் இறுதிச் செயன்முறையாகவும் திட்டமிடலோடு தொடர்பான மற்றுமொரு அம்சமாகவும் இது நோக்கப்படுகிறது.

திட்டங்கள் பயனுறுதியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதே கட்டுப்படுத்தல் எனப்படும். மேலும் திட்டமிடப்பட்டு நடவடிக்கைகளுக்கேற்ப அவை நடைபெறுகின்றனவா? எனக் கண்காணிப்பதும் உறுதிப்படுத்துவதுமான செயற்பாடு கட்டுப்படுத்தல் ஆகும்.

நாங்கள் மேலே உதாரணத்திற்கு எடுத்துக் கொண்ட ஸீறாவின் அனைத்து நிகழ்வுகளிலும் இக்கட்டுப்படுத்தல் -நெறிப்படுத்தல் நடைபெற்று வந்துள்ளதை அவதானிக்கலாம்.

இவ்வாறான செயற்படுகின்ற முகாமைத்துவ செயற்பாடுகள் பூமியில் பிரதிநிதியாக (கலீபா) பூமியை வளப்படுத்துகின்ற (இமாரத்) செயற்பாட்டைச் செய்து இறை உவப்பை (றிழல்லாஹ்) பெறுகின்ற அந்த குறிக்கோளை வினைத்திறன் வாய்ந்த முறையில் அடைய முயல்கிறது.

இந்த வகையில், கிலாபத், இமாரத், இறைதிருப்தி, சுவனத்தை நோக்காகக் கொண்டு குறுகிய செயல்முறைத் திட்டமிடல் (Tactical planning) நீண்ட செய்முறை திட்டமிடல் (Strategic Planning) களின் அடிப்படையில் முழு வாழ்வையும் ஒழுங்குபடுத்தி (Organizing) அதனை மனித, பௌதீக வளங்களைக் கொண்டு இயங்கச் செய்து அவர்களை வழிநடாத்தி (Directing) நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி (Controlling) இஸ்லாம் என்ற கொள்கை இயக்கத்தின் வெற்றிக்கு வித்திட்டவர்கள்தான் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள்.

இத்தகைய முகாமைத்துவமானது இன்றைய உலகில் கிளை பரப்பி பெரு விருட்சமாக வளர்ந்துள்ள ஒரு துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. இதன் அபார வளர்ச்சி காரணமாக இதனுடைய உப பிரிவுகள் கூடத் தனித் தனித் துறைகளாக வளருமளவுக்கு விருத்தியடைந்துள்ளன.

இந்த வகையில் பல பிரதான முகாமைத்துவ துறைகளை அடையாளப்படுத்த முடியும். உதாரணமாக,

1. மனிதவள முகாமைத்துவம் (Human Resource Management)
2. வியாபார முகாமைத்துவம் (Business Management)
3. முரண்பாட்டு முகாமைத்துவம் (Conflict Management)
4. நேர முகாமைத்துவம் (Time Management)
5. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் (Information Technology Management)

என்பவற்றைக் குறிப்பிடலாம். இத்தகு முகாமைத்துவங்களை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தனது வாழ்வில் எவ்வாறு நடைமுறைப்படுத்தினார்கள் என்பதையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

சிறந்த தலைவராகக் காணப்பட்ட தூதர் (ஸல்) அவர்கள் தனது ஸஹாபாக்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் சிறப்பாக நன்றாக நுணுக்கமாக அறிந்திருந்து அவர்களை சிறப்பாக வழிநடாத்தி உரிய பயிற்சியளித்து சிறந்த மனித வள முகாமைத்துவத்தை (Human Resource Management) செயற்படுத்திக் காட்டினார்கள்.

அதேபோல் அவ்ஸ்-கஸ்ரஜ்களுக்கு மத்தியிலான முரண்பாட்டைத் தீர்த்து, முஹாஜிர்-அன்ஸாரிகளுக்கு மத்தியில் சகோதரத்துவ இணக்கப்பாட்டை ஏற்படுத்தி முரண்பாட்டு முகாமைத்துவத்திற்கு (Conflict Management) சிறந்த நடைமுறைத் தீர்வை காட்டினார்கள்.

ரஸூல் (ஸல்) அவர்களை மிகச் சிறந்த முகாமையாளராக வர்த்தகத் துறையிலே அறிமுகப்படுத்த முடியும். கதீஜா (ரழி) ரஸூலுல்லாஹ்வை (ஸல்) திருமண முடிக்க காரணமாயிருந்த நிகழ்வை சிந்தித்துப் பாருங்கள். வர்த்தகர் (Business Man) என்பதற்கு மேலாக எந்த வியாபாரத்தையும் சிறந்த முறையில் நிர்வகித்து, இலாபமீட்டி, வியாபார வெற்றியீட்டிய அந்த வியாபார முகாமையாளர்தான் கதீஜா (ரழி) திருமண முடித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மட்டுமல்லாமல் நபி (ஸல்) அவர்கள் யுத்த களங்களில் மிகச் சிறந்த முறையில் முகாமைத்துவத்தை அமுல்படுத்தினார்கள். யுத்தங்களுக்கு முன்னர் திட்டமிட்டு, அவற்றை ஒழுங்கமைத்து, அந்த யுத்தங்களில் தலைவராக நின்று வழிநடாத்தி, ஊக்கமளித்து, கட்டுப் படுத்தி யுத்த வெற்றிகளைக் குவித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல் பொதுவாக அனைவராலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்ட தலைவராகவும் காணப்பட்டதால்தான் மைக்கல் எச். ஹார்ட்டினால் The Hundred என்ற நூலில் முதலிடத்தில் வைத்து நோக்கப்படுகிறார்கள். மேலும் தலைமைத்துவத்தின் பண்புகளான, பிரச்சினைகளைத் தீர்த்தல் (Problem Solving), தீர்மானமெடுத்தல் (Decision Making), ஊக்குவித்தல் (Motivation)... அனைத்திலும் சிறந்த முறையில் தடம்பதித்தார்கள். தலைவராக இருந்து தனது ஸஹாபாக்களுக்கு இவர்கள் அளித்த பயிற்சிகள் இன்றளவும் புகழப்படுகின்றன.

இஸ்லாத்தின் இத்தகு வெற்றிகளுக்குப் பின்னால் உள்ள இரண்டு முக்கியமான காரணங்களை இங்கு அடையாளப்படுத்துவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

1. மஷூறா (கலந்தாலோசனை)

2. இஸ்லாம் முழு வாழ்க்கையையுமே இபாதத் ஆகக் கருதி ஆன்மீகப் பிணைப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய ஆன்மீகப் பெறுமானங்களின் இணைப்புதான் தூய்மையான வடிவில் நம்பிக்கையும் நேர் மனோபாவத்துடன் (Positive Mind) எதனையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்துடன் பொறுமையாக தொடர்ந்தேர்ச்சியாக முயற்சிக்கச் செய்து உரிய பலனைப் பெற்றுக் கொடுத்தது.

உலகில் கட்டிக் காத்து கொடிகட்டிப் பறந்த முதலாளித்துவப் பொருளாதாரம் கூட வீழ்ச்சியடைந்து மாற்றீடாக இஸ்லாமியப் பொருளாதாரத்தை நோக்கித் தனது கவனக் குவிப்புக்களைத் திருப்பும் இவ்வேளையில், சிலபோது இனிவரும் காலங்களில் இன்று பெரு வளர்ச்சி காணும் முகாமைத்துவம் கூட தோல்வியுற்று மாற்றீட்டைத் தேடலாம். அப்போது இஸ்லாம் சிறந்த முகாமைத்துவமொன்றை மாற்றீடாக வழங்கத் தக்களவு பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும். இதற்காக நாம் கரிசனை செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

**மேலதிக வாசிப்பிற்கு**


1. Management effective organizing - Steer, Ungson, mowday
2. Islam and Management - Dr. Naceur Jabnoun
3. Traning Guide for Islamic Workers - Hisham Atthalib
4. அர்ரஹீக் அல் மக்தூம், அப்துர் ரஹ்மான் முபாரக் பூரி
5. முயற்சியாண்மையும் சிறு வியாபார முகாமைத்துவமும் (Entreprenurship and small business management) எஸ். குணபாலன் (விரிவுரையாளர்)
6. Management - Wikipedia, The free encyclopedia, http://en.wikipedia.org/wiki/management


## Human Touch *(தொடர்ச்சி)*

கருதுகின்றார்கள். அடுத்தவனை மதிக்காது, மேன்மைப்படுத்தாது நான் மட்டும் பிறரால் மதிக்கப்படல் வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

இது மிகப் பிழையான அணுகுமுறை. வாழ்நாளில் ஒரு தடவையேனும் பிறரை மதித்துப் பாருங்கள். விளைவு கண் முன்னாலேயே தெரியும். நாம் அடுத்தவனுக்கு கொடுக்காததை அடுத்தவனிடமிருந்து எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம்?

**முடிக்க முன்...**

தொட்டவுடன் சுருங்கிவிடும் தொட்டாச் சினுங்கி போல் பட்டவுடன் மாறிவிடுவதுதான் மனித உள்ளம். எல்லா மனிதனுக்கும் ஒரு Key உள்ளது. அதை முதலில் கண்டறியனும். கண்டுகொண்டால் "Human Touch" மிக இலகு. மனிதனை அணுகும் வழிகள் என்று இவற்றைச் சொன்னாலும் பிரிதொரு வகையில் மனிதப் பலவீனங்கள். இவை சரணடையும் புள்ளிகள். இதன் நோக்கம் மனிதனை கவிழ்க்கும் கலையைப் பயில்வதல்ல.

மாறாக அல்லாஹ்வுக்காக எம் சகோதரத்துவ உறவுகள் உயிரோட்டமாய் அமைவதற்காக உயரிய சமூகத்தை கட்டமைக்கும் முன் உள்ளத்தால் அனைவரும் ஒன்றுபடுவோம். தீய எண்ணங்களை தவிர்த்து நல்ல எண்ணங்களால் உருவான ஒரு வாழ்வை அமைப்போம். தூய உள்ளத்துடனான எமது வாழ்வு நிச்சயம் இம் மண்ணில் இஸ்லாத்தை உயிர்ப்பிக்கும் மறுமையில் எமக்கான சுவனத்தை நிச்சயிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# FAIZ BRASS

## IMPORTED FB BRAND BRASS DOOR FITTINGS

**Importers and Manufacture**

**Tel: 0773435700, 0112431356**

**Fax: 0112321361**

**Dealers Islandwide**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைப் புள்ளியில் குவியும் முக்கோட்பாடுகள்

அஸ்ஸாம் ஸாதிக்
(ஆறாம் வருடம்)

விஞ்ஞானம் -மனிதனின் அறிவு ஏற்றுக் கொண்ட ஒற்றை மார்க்கம். நாஸ்திகம் என்ற ஆடை போர்த்தப்பட்டிருக்கிறது இதற்கு. வாழ்வியல் கோட்பாடுகளிலும் தன்னைச் சூழவுள்ளவற்றின் மீதும் மனிதன் செய்யும் முதலாதிக்கம் என்றும் இதனைச் சொல்ல முடியும். விஞ்ஞானத்திற்குத் தேவையான அறிவு கத்தி போன்றது. இதனை நன்மை, தீமை இரண்டிற்கும் பயன்படுத்த முடியும். அதைத்தான் இன்றைய உலகு செய்துகொண்டிருக்கிறது.

வரலாற்றின் ஆரம்பத்தில் மனிதன் தன்னைப் பற்றி சிந்திக்கத் தலைப்படவில்லை. தன்னைச் சூழவுள்ளவற்றின் மீதே தன் ஆய்வுப் பார்வையை செலுத்தினான். சிந்தித்தான். இதனால்தான் அன்றையவர்களுக்கு இப்படைப்புகளுக்கெல்லாம் இறைவனொருவன் தேவையென்றுபட்டது. காலம் சென்றது. பிறவற்றிலிருந்து தேவையற்றவனானான் மனிதன். இப்போது தான் தன்னைப் பற்றி சிந்திக்கிறான். -விளைவு- இன்றைய நவீன உலகு போர்த்தியிருக்கும் நாஸ்திக ஆடையை நெய்தது அறிவு. டார்வினிஸம்-மார்க்ஸிஸம் ப்ரொய்டிஸமாய் ஆகிப்போனது உலகு.

இம்மூன்று கோட்பாடுகளும் ஆன்மீகமென்ற ஓசோனை ஓட்டையிட்டிருப்பது நிஜம். "மனித ஊகத்தின் விளைவுகளே இறை மார்க்கங்கள்"[1] என்று மார்க்ஸை சொல்ல வைத்தது எது? ஆனால் உண்மையில் ஓட்டை படைப்பியல் கோட்பாடுகளிலல்ல. மாறாக இம்மூன்று கோட்பாடுகளிலும் தான். சமூக அமைப்புகளில் மையமாகவிருந்து அதனைக் கட்டுப்படுத்துவதோடு அதன் மாற்றத்திற்குரிய கொள்கையாகவும் இருப்பதை "இரட்டைப் பிணிப்புக் கொள்கை"[2] (Double Bind Theory) என்போம். எனவே, இம்மூன்று சிந்தனைகளும் பொதுவாக ஆற்றல் நிறைந்த நவீன நாஸ்திக உலகொன்றை படைத்திருக்கின்றன. இவை மூன்றும் எந்த மையத்தில் ஒன்றுபடுகின்றன என்பதை ஆதாரபூர்வமாக ஆராய்வதோடு இதன் கோட்பாட்டியலாளர்கள் எதில் கோட்டை விட்டிருக்கிறார்கள் என்பதையும் இக்கட்டுரை காண முயல்கிறது.


Charles Darwin

### டார்வினிஸமும் அது இழைத்த தவறுகளும்

குரங்கிலிருந்து மனிதன் வந்தான். இதனால் மனிதன் இறைவனை மறந்தான். இதுதான் அறிவியல் உலகுக்கு டார்வின் கொடுத்த பரிசு. இதைத்தான் முஹம்மது குத்ப் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: "மனிதனை ஒரு தனித்துவமான அந்தஸ்த்தில் வைக்கும் மதக் கோட்பாடுகளையும் முன்னைய தத்துவவியல்களையும் இது மறுக்கிறது."[3] படைக்கும் ஆற்றலை இறைவனுக்கு வழங்கும் இஸ்லாம் எப்படி இதனை ஏற்றுக் கொள்ளும்? சுய பிறப்பாக்கத்தின் (Self Emergence) மூலம் தோன்றியதுதான் உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையென்றால் இறைவனின் படைப் பியல்புக்கு நாம் என்ன கூறப் போகிறோம். எனவே, இங்கே டார்வின் தனது கோட்பாட்டை முன்வைக்க எடுத்துக் கொண்ட அளவீடுகளை அலசுவோம்.

### 01. தக்கன பிழைத்தல் *(Survival of the fittest)*

மிகப் பொருத்தமானதே சூழலில் நிலைத்து வாழ்தல் என்பதே இதன் உண்மை விளக்கம். ஆனால், இதனை பலமானவைகளே சூழலில் நிலைத்து வாழ்தல் என்று மாற்றியமைத்து போர்களை சட்டமாக்கி, இயலாத மக்களை கொன்று குவித்து, அவர்களின் செல்வங்களைச் சூறையாடும் அரசியல் நோக்குடனே நடந்தேறியது[4] எனலாம். இதனை டார்வின் தனது கொள்கையை நிரூபிக்கப் பயன்படுத்தியிருந்தாலும் இதனை தொடக்கி வைத்தவர் ஸ்பென்ஸர் ஆவார்.

### 02. இயற்கைத் தேர்வு *(Natural Selection)*

இந்த இரண்டாவது விதியே பரிணாமச் செயற்பாடுகளை துல்லியமாக விளக்க இவருக்கு பயன்பட்டதோடு எழுமாற்று மரபணு விகாரச் செயற்பாட்டின்[5] (Random Genetic Mutation) ஆரம்பக் கட்டமாகவும் இது அமைந்திருக்கிறது எனலாம். சூழல் மாற்றத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் உயிர்களே வாழும். இணங்காதவை மடிந்து போகும் என்பதையே இச்சொல்லாடல் குறித்து நிற்கிறது.

> டார்வினுடைய கருத்துக்களெல்லாம் மனிதனது வாழ்வும் அவனுடைய உயர் பெறுமானமும் ஒரு பக்டீரியாவின் அல்லது நாடாப் புழுவொன்றின் பெறுமானத்தை விடவும் உயர்வாக மதிக்கத்தக்கதன்று
>
> –முஹம்மத் குத்ப்–

### 03. இசைவாக்கம் *(Adaptation)*

ஒன்றோடொன்று தொடர்பு கொண்டதாகவே இருக்கிறது உயிரியல் உலகம் என்பதை இவ்விதி ஆராய்கிறது. இதனால் டார்வின் 'கூர்ப்பியல் மரம்' என்ற அட்டவணையை உருவாக்கி எலியிலிருந்து அலிவரை எல்லாமே கூர்ப்படைந்த தன் விளைவுகளே என்று விளக்குகிறார்.

### 04. தலைமுறையுரிமையாதல் *(Inheritance)*

கூர்ப்போடு சேர்ந்து ஒவ்வொரு உயிரிகளினதும் பண்புகள் கூட இடம் மாறியிருக்கிறது என்பதை இவ்விதி ஆராய்கிறது.

இருப்பினும் இன்றைய விஞ்ஞானத்தால் இயற்கைத் தேர்வு பொய்த்துப் போனது. இதனால்தான் நவீன டார்வினிஸம் (Neo-Darwinism) இதிலுள்ள விதிகளைத் தவிர்த்து சுய பிறப்பாக்கத்தைப் பேசுவதோடு திடீர் நிகழ்வு விதி[6] (Chance), கிடை வேறுபாடு (Horizental Variation), விகாரம் (Mutation) போன்ற பல புதிய சொல்லாடல்களையும் கருத்தாக்கங்களையும் பிரசவித்தது எனலாம்.

உண்மையில், இவ்வாறான கோட்பாடுகள் தோற்றுவிக்கப்பட ஏதுவானது இருண்ட யுக பாதிரிமார்களின் உலகப் படைப்பு பற்றிய அறிவுக்குப் பொருந்தாத வாதங்களேயாகும். இதுவே, மதங்களை விட்டு மானுடவியலை (Humanism) எடுத்துக் கொள்ள மக்களுக்கு துணை நின்றது. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த உஷ்ஷர் (Ussher) என்ற பாதிரியார் உலகம் கி.மு. 26-10-4004 அன்று காலை 9.00 மணிக்கு படைக்கப்பட்டது[7] என்றார். இதைக் கேட்டால் அறிவுள்ள யாருக்குத்தான் ஆத்திரம் வராது. ஆனால், இதற்காக குரங்கிலிருந்தா மனிதனைப் பெற்றெடுப்பது? கூர்ப்பியல் பற்றிய காரசாரமான விவாதங்கள் மேற்குலகில் இன்றும் நின்றபாடில்லை. கூர்ப்பியலை மறுத்து தற்போது அறிஞர்கள் நுண்ணறிவு படைப்புக் கோட்பாட்டை (Intelligence Design Theory) முன்மொழிந்து அதற்கான சான்றாதாரங்களையும் கூறியுள்ளனர். இக்கோட்பாட்டியல் விளக்கம் வேறொன்றுமல்ல. மனிதன் இறைவனின் பிரத்தியேகப் படைப்பு. இவ்வுலகப் படைப்புகளின் நுணுக்கங்களுக்கு பின்னால் ஒரு நுண்ணறிவாளன் (Intelligent Agent) உள்ளான் என்பதேயாகும்.

எனவே, இன்றைய அறிவியல் இவ்வுலகப் படைப்பிற்கு இறைவன்தான் காரணி என்பதை ஏற்றுக் கொள்கிறது. இது பற்றிய விரிவான விளக்கங்களை பேராசிரியர் ஹாரூன் யஹ்யாவின் "இருபது கேள்விகளில் கூர்ப்பியலின் தோல்வி" (The Collapse of Theory of Evolution in 20 Questions) என்ற நூலில் காணலாம். அத்தோடு இன்றைய பல நூற்களை ஆய்ந்தெழுதியுள்ளனர். மனிதன் தனியாக நிற்கவில்லை (Man Doesnot Stand Alone), கடிகாரம் செய்பவன் எவ்வாறு குருடனானான்?[8] (How blind is the watch maker) ஆகிய புத்தகங்களை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார்வினை முஹம்மத் குத்ப் இவ்வாறு விமர்சிக்கிறார்: "டார்வினுடைய கருத்துக்களெல்லாம் மனிதனது வாழ்வும் அவனுடைய உயர் பெறுமானமும் ஒரு பக்டீரியாவின் அல்லது நாடாப் புழுவொன்றின் பெறுமானத்தை விடவும் உயர்வாக மதிக்கத்தக்க தன்று"[9] என்பதாகும்.

அதுமட்டுமல்லாது விஞ்ஞானம் தான் செய்த அகழ்வாய்வுகளையும் (Excavation) சுவட்டியல் பதிவுகளையும் (Fossil records) கொண்டு இவ்வுலகத்தின் வாழ் காலத்தை பல கட்டங்களாகப் பிரிக்கிறது. இதிலே கேம்ப்ரியன் (Cambrain) காலத்திற்கு முன்னர் இழுதுமீன் (Jelly Fish) போன்ற ஓரிரு உயிர்களே வாழ்ந்திருக்கின்றன. ஆனால், கேம்பிரியன் யுகத்தில் திடீரென 13 புதிய உயிரின வகைகள் தோன்றிய அடையாளம் தெரிகிறது. எனவே படிப்படியான கூர்ப்பியல் செயற்பாட்டினால் தோன்றியது உயிர்களென்றால் இந்த 13 உயிரிகளினது வரவு எங்ஙனம் சாத்தியப்படும்? இதனையே அறிஞர்கள் கேம்பிரியன் வெடிப்பு (Cambrain Explosion) என்கின்றனர்.

இவ்வாறு கூர்ப்பியலை உடைக்கும் விஞ்ஞானபூர்வமான பல சான்றுகளை முன்வைக்கலாம். ஆனால், இக்கட்டுரையின் திசை வழி வேறாக இருப்பதால் விரிவு தவிர்க்கப்பட வேண்டியது.


**மார்க்ஸிஸம்**

இன்று 130 கோடி[11] மக்களால் கடைபிடிக்கப்படும் ஒரு மதமாகவே இது மாறிவிட்டிருக்கிறது. ஆனாலும் இதற்குள் மூன்று வகையான சொல்லாடல்கள் இருப்பதையும் நாம் கவனத்தில் கொண்டு வர வேண்டும். சோஷலிஸம், கொம்யூனிஸம், மார்க்ஸிஸம் இம்மூன்றும் ஒரே கருத்தைக் காட்டும் என்பதே பலரது அபிப்பிராயமாயினும், இதில் சுட்டிக் காட்டப்பட வேண்டிய நுண்ணிய வேறுபாடுகள் உண்டு.

**சோஷலிஸம்:** அது சிக்கலற்ற ஒரு எளிய சமூகத்தில் காணப்படுவது. அதாவது சமூகவாக்கத்தின் ஆரம்ப நிலையில் உள்ளது எனலாம்.

**கொம்யூனிஸம்:** 1840களில் தோன்றிய இச்சொல்லாடல்[12] சிக்கலான சமூக அமைப்பிலிருக்கும் பொருளியல் பங்கீடு அல்லது கோட்பாடு என்று வரையறுக்கலாம்.

**மார்க்ஸிஸம்:** மேலுள்ள கொம்யூனிஸக் கோட்பாடுகளை சமூகவியல் விஞ்ஞானமாக[13] (Social Science) ஆக மாற்றியவர் மார்க்ஸ் என்பதால்தான் இவர் கூறும் கோட்பாட்டியல் விளக்கங்களுக்கு மார்க்ஸிஸம் எனப் பெயர் வழங்கப்பட்டது. எனவே இவர் எவ்வாறு தனது பொருளியல் கோட்டிபாட்டினூடாக இறைவனை மறுக்கிறார் என்பதைப் பார்ப்போம்.




இவர் உலகத்தின் யதார்த்தம் சடங்களால் சூழப்பட்டிருக்கிறது என்று தனது Anti-Dihring என்ற நூலில் குறிப்பிடுகிறார்.[14] ஆகவே முழு மொத்தமாக உலகத்தில் மனிதனின் இருப்பைத் தீர்மானிப்பது சடங்களே, இறைவனல்ல என்று முடிவு கட்டிவிடுகிறார். இதனால்தான் மக்களின் இருப்பை அவர்களது உணர்வுகள் தீர்மானிப்பதில்லை. இருப்பே உணர்வுகளை நிர்ணயிக்கிறது[15] என்று வாதிடுகிறார். அத்தோடு இவர் மார்க்கம் பற்றியும் நாஸ்திகத்தின் தேவை பற்றியும் மூன்று படி நிலைகளைக் கூறுகிறார்.

*01.* மனித வாழ்வுக்கானதொரு சட்டத்தை வகுக்கும்போது அது அன்றாடத் தேவைகளோடு (உணவு, உடை, வீடு) சுருங்கி விடுகிறது. மார்க்கத்தையும் பண்பாட்டையும், ஒழுக்க விழுமியங்களையும் பொறுத்தவரையில் மார்க்ஸின் பார்வையில் அவை கேலிக்குரியனவாகும்.[16]

*02.* மதம் மக்களுக்கு அபின் போன்றது.

*03.* மனிதனின் பண்பாட்டுப் பெறுமானம் பற்றிக் கூறும் இவரது விளக்கமாகும். நிலையற்ற உலகில் மனிதன் வெறுமனே பொருளாதாரத்தின் பிரதிபலிப்பேயாகும். ஏனெனில், இவ்வுலகம் பொருளாதார வாழ்வுக்கு ஏற்ப பரிணமிக்கக் கூடியது.[17]

எனவே, இவர் தனது கோட்பாட்டினூடாக தெளிவாக நாஸ்திகத்தை முன்வைத்தார். இவரது பொருளியல் நோக்கு விஞ்ஞானமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளப்பட்டால் இவரது இறை மறுப்பு உண்மையாகிவிடும். அப்படியென்றால் இவரது கோட்பாட்டில் தவறு எங்கேயிருக்கிறது?

எந்தவொரு கோட்பாடும் தனது கொள்கையைப் பேசுவதோடு அது எதிர்கால விடயங்கள் எவ்வாறு அமையும் என்பதையும் எதிர்வுகூறும். இவ்வாறு மார்க்ஸ் கூறிய மூன்று விடயங்களும் பொய்யாகி இவரது கோட்பாட்டியல் நோக்கு பிழையென நிரூபணமாகியுள்ளது.

*01. முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளிகள் நட்டமடைவார்கள்.*

*02. எதிர்காலத்தில் நடுத்தர வர்க்கமென்ற ஒன்று இருக்காது. அதில் சிலரே முதலாளிகளாக மாற ஏனையோர் தொழிலாளர்களாவர்.*

03. தொழில் இயந்திரமடைவதால் இலாபம் குறையும்.[18] இந்த மூன்று எதிர்வுகூறல்களும்(?!!!) எவ்வாறு பொய்த்துப் போனது என்பதை விளக்க வேண்டிய தேவையே இல்லை.

எனவே ஒரு சமூகத்தில் மனிதனின் பெறுமதியையும் அந்தஸ்தையும் பொருளியல் நோக்கில் பார்த்துத் தோற்றவர் என்று மார்க்ஸை நாம் அழைக்க முடியும். பொதுவாகவே மதங்கள் கஷ்டப்படுபவர்களை பொறுமையாக இருக்கச் சொல்கிறது. அல்குர்ஆன் இவ்வாறு அவர்களைப் பார்த்துக் கூறி வாழ்க்கையின் யதார்த்தத்தையும் நிதர்சனத்தையும் தெளிவாக்குகிறது.

**''இந்த நாட்களை நாம் மக்களுக்கிடையில் மாறி மாறி வரச் செய்கிறோம்.''**[19] ஏழைகள் பொறுமையாக இருப்பது, முதலாளிகள் சுகானுபவம் பெறுவதற்கா? எப்படி இதனை மதங்கள் ஏற்றுக் கொள்கின்றன என்று மார்க்ஸ் வாழ்வின் நிதர்சனம் புரியாமல் வாதிட்டதன் விளைவாகவே மார்க்ஸிஸம் நாஸ்திகத்தை உற்பத்தி செய்தது.

### ஃபிரொய்டின் பிறழ்வு

ஃபிரொய்டிஸத்தைப் பற்றி அறிவதற்கு முதல் உளவியலைப் பற்றி இஸ்லாம் என்ன கூறி யிருக்கிறது என்பதைப் பார்ப்போம். கலீல் முஹம்மத் கலீல் இவ்வாறு கூறுகிறார்: "உள்ளமானது இறைவனின் ஆச்சரியமான படைப்பு மாத்திரமன்றி, எங்கேயுள்ளது என்று அறிய முடியாததுமாகும். அதன் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்கக் கூடியவன் அல்லாஹ் மாத்திரம்தான்.[20]

அத்தோடு மனித உள்ளம் பற்றிய மார்க்க சட்டம் அதனை சீர்படுத்துதல், நேர்வழிப்படுத்துதல், அதன் பிரச்சினைகளுக்குத் தீர்வளித்தல், உள இச்சைகளிலிருந்து தவிர்ந்திருத்தல்[21] போன்றவையாகும். இதனையே அல்குர்ஆன் இவ்வாறு பேசுகிறது.


சிக்மன் ஃபிரொய்ட்

**"ஆத்மாவின் மீதும் -அதனைச் செவ்வையாக்கியவன் மீதும் சத்தியமாக. பின்னர், அதற்கு அதன் தீமையையும் அதற்குரிய நன்மையையும் உணர்த்தினான்.''**[22]

மனிதனின் உள்ளம் வாழ்க்கையுள்ளம் (நப்ஸுல் ஹயாத்), குறிப்பான உள்ளம்[23] (நப்ஸுல் தம்யீஸ்) என இருவகைப்படும் என இப்னு ஸுஜாஜ் அவர்கள் லிஸானுல் அறபிலே குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்கூறிய இஸ்லாத்தின் உள்ளம் பற்றிய நிலைப்பாட்டிலிருந்து அது உளவியல் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தில் இருப்பது புலனாகிறது. அது மட்டுமல்லாமல் அல்குர்ஆன் உள்ளங்களை திருப்தியடைந்த உள்ளம் (நப்ஸுல் முத்மஇன்னா), நன்மை செய்யத் தூண்டுமுள்ளம் (நப்ஸுல் லவ்வாமா), பாவத்தை தூண்டுமுள்ளம் (நப்ஸுல் அம்மாரா) என வகைப்படுத்தியிருப்பதும் நாமறிந்ததே. இனி உள்ளத்தைப் பற்றி ஃபிரொய்ட் என்ன கூறுகிறார் என்பதை ஆராய்வோம்.

1856ல்[24] பிறந்த இவர் மனித நடத்தைகளுக்கு ஆழ்மனமே காரணமென்று கூறி, அதன் ஆய்வுகளுக்கு முக்கியத்துவமளித்துள்ளதுடன் நரம்புத் தளர்ச்சி நோயாளர்களைக் குணப்படுத்தும் உளப் பகுப்பாய்வு முறைமையையும் (Phsyco Analysis) உலகுக்கு அறிமுகப்படுத்தினார். இவரது கோட்பாட்டை பொதுவாக ஒரு வார்த்தையில் சொல்லி விட முடியும். "எல்லாம் காமமயம்." மனிதன் காணும் கனவிலிருந்து அவனுக்கேற்படும் நரம்புத் தளர்ச்சி நோய்வரை எல்லாவற்றிற்கும் ஆழ்மன காமவுணர்ச்சி நெருக்குதலே காரணமென்கிறார்.

இவரது கோட்பாடுகளை பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்க முடியும். கனவுகள் பற்றிய விளக்கமும் உளப் பகுப்பாய்வுமே அவையிரண்டுமாகும். இவர் கனவுகளை ஆராய்ந்து எல்லாக் கனவுகளும் குறியீட்டுத் தன்மை கொண்டவை, அது ஒன்று சேர்ந்து காட்சிகளை உருவாக்கும், கனவுகள் விருப்ப நிறைவேற்றத்தைக் காட்டும்[25] (dream is the fulfillment of wish) போன்ற பல பண்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு வழங்கியுள்ளார். ஆனாலும் இவர் கனவுகளின் குறியீடுகளுக்கு (symbols) கொடுத்திருக்கும் விளக்கம்தான் அபத்தமானதும் ஆபத்தானதுமாகும். அவர் கூறியிருக்கும் சில விளக்கங்கள்:

*நீளமான எந்தப் பொருட்களும் குச்சி, கம்பு, மரத்துண்டு, குடை, கத்தி, வாள் முதலியன குறியைக் குறிக்கும். விரிந்த நிலையிலுள்ள குடை விறைத்த நிலையைக் காட்டுகிறது. எல்லா வகையான பெட்டிகளும் அலுமாரிகள் போன்றனவும் பெண்களின் கர்ப்பப் பையைக் குறிக்கின்றன.*[26] இதுபோன்ற கனவுகளுக்கு தொலைவான விளக்கம் கொடுப்பதாகக் கூறி இவரோடிருந்த இவரது ஆராய்ச்சிக்கு துணை புரிந்த யுங் (Yung) உம் பிரிந்து சென்றது இதனால்தான்.


இவரது நிர்வாணத் தத்துவம் பிரபலமானது. இது பற்றி அன்தனி ஸ்டோ (Anthoney Store) இவ்வாறு வியாக்கியானம் செய்கிறார்.

ஓர் உயிர்ப் பொருள் தன் இறுக்கங்கள் அனைத்தையும் முற்றிலும் வெளியேற்றுவதால் சலனமின்மை எனும் நிலையை அடையத் தேவையேற்படுகிறது. அந்தத் தேவைதான் மனித வாழ்க்கையின் முதன்மைத் தத்துவம். இதுவே நிர்வாணத் தத்துவமாகும்.[27]

நான் இங்கே ஃபிரொய்டிஸத்தை தேர்ந்தெடுக்கக் காரணமே அவரது உளப் பகுப்பாய்வுத் தத்துவமாகும். இத்தத்துவத்தை விளங்குவதன் மூலமே இக்கட்டுரையின் நோக்கம் சீரமையும் என்பதில் இரு வேறு கருத்திற்கு இடமில்லை.

எனவே, இவரது இப்பாகுபாட்டு விளக்கத்தையறிய ஹீலி (Healy), ப்ரோனர் (Bronner), பவர் (Bower) போன்றோர் சேர்ந்து உருவாக்கிய உளப் பகுப்பாய்வு விளக்கப் படத்தை[28] நோக்குவோம்.

(உரு:1)




இவர் உள்ளத்தை வெளிமனம் (conscious), உள்மனம் (Subconscious), ஆழ்மனம் (unconscious) என்று பிரிக்கின்றார். இவரது மனோ பரிணாமத் தத்துவம் நாஸ்திகத்தைச் சொல்லும் இன்னோர் ஆயுதமாகும்.

### *01. இட் (ID) (விலங்குணர்ச்சி)*

தன்னையறியாமலே மனிதன் கொள்ளும் ஆவேச நிலை இதுவாகும். இது இன்பம் காணும் தத்துவம் (Pleasure Principle) என்றும் அழைக்கப்படும். ஆரம்ப கால மனிதனின் விலங்குணர்வை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு குழந்தை நிலை பாலியல் உணர்வுகளின் வங்கியென்றும் ஃபிரொய்ட் இதனைக் கருதுகிறார்.

இது பற்றி ஜோஸப் ஜஸ்ட்ரொவ் (Joseph Justraw) கூறுகையில்:

"ஃபிரொய்டின் வாதங்களெல்லாம் காமத்தை நோக்கியே இருக்கின்றன. ஃபிரொய்ட் சிறுவயதில் ஏற்படும் தாக்கங்களால் உருவான நரம்பியல் நோய்களையும் குடும்பத்துக்குள்ளேயே இருக்கின்ற வலுவான பாலியல் தொடர்புகளின் அதிகரிப்பால் ஏற்படும் நோய்களையும் கண்டறிந்தார்."[29]

இவ்வாறு இவர் எல்லாவற்றையும் காமத்தோடு தொடர்புபடுத்த வேறொன்றும் காரணமல்ல. சிறுவயதில் ஃபிரொய்ட் தன் தாயையும் தந்தையையும் நிர்வாண நிலையில் கண்டதன் விளைவே என்று ஜோஸப் ஜஸ்ட்ரொவ், ஃபிரொய்டின் வாழ்க்கைக் குறிப்பை எழுதும்போது குறிப்பிடுகிறார். இப்புத்தகம் 'அடையாளம்' பதிப்பகத்தால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுமிருக்கிறது.

மேலும் இவர் 'இட்' பற்றி கூறும்போது முழுமொத்த மனித வாழ்க்கையும் இந்த விலங்குணர்ச்சியிலிருந்தே ஆரம்பமாவதாகக் கருதுவதோடு அவனது செயற்பாடுகளைத் தீர்மானிக்கும் இடமாகவும் இதனைக் காண்கிறார்.

### *02. விலங்குணர்ச்சியின் வளர்ச்சியடைந்த கட்டமே Ego (பண்பாட்டுணர்ச்சி) ஆகும்.*

அதாவது சூழலுக்கு ஏற்றவாறு மனிதன் நடந்து கொள்ளும் உளவியல் பாங்கையே இது காட்டுகிறது.[30] இங்கே டார்வினின் இயற்கைத் தேர்வு விதியோடு இதனைப் பொருத்திப் பார்த்தால் இரண்டினதும் ஒற்றுமை புலப்படும்.

### *03. Super Ego (தெய்வ நிலை)*

பண்பாட்டுணர்ச்சியின் வளர்ச்சியடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை இதுவாகும். இப்பண்பாட்டுப் பெறுமானங்கள் குழந்தைப் பருவத்திலே தீர்மானிக்கப்படுகிறன என்று ஃபிரொய்ட் கருதுகிறார்.

ஆகவே, மனித பாசம் எல்லாவற்றிற்குமான காரணியாக காமத்தை ஃபிரொய்ட் கருதி, ஒரு மாட்டின் செயற்பாட்டோடு[31] இதனை ஒப்பீடு செய்கிறார்.


ஒரு மகன் தன் தாயின் மீது கொள்ளும் காமத்தின் காரணமாக தந்தையை கொலை செய்வான். பின்னர் அவன் செய்ததை நினைத்து வருந்துவான் என்கிறார் ஃபிரொய்ட். ஆனால் மிருகங்கள் தான் செய்ததை நினைத்து வருந்தாது[32] என்று கூறி இவ்வாதத்தை முஹம்மத் குத்ப் அவர்கள் உடைக்கிறார்கள்.

எனவே இவைகள்தான் இம்மூன்று கோட்பாடுகளினதும் வாதங்களும் அவற்றுக்கான மறுப்புகளுமாகும். இனி இம்மூன்று கோட்பாடுகளும் குவிகின்ற ஒற்றைப் புள்ளியைத் தேடுவோம்.

## இம்முக்கோட்பாட்டின் குவிமையம்

மொரீஸ் (Morries) என்ற அறிஞர் சமூகத்தில் ஒரு மனிதனின் பெறுமானத்தைத் தீர்மானிக்கும் விடயங்களை ஆராய்ந்துள்ளார். இக்கோட்பாட்டியல் ஆய்வுடன் இம்முக்கோட்பாடுகளையும் பொருத்திப் பார்த்தால் உண்மை துலங்குவதோடு எந்த அடிப்படை இயங்கியல் இதனுள்ளால் தொழிற்படுகிறது என்பதையும் அறியலாம். அத்தோடு இக்கோட்பாடுகள் ஏன் நாஸ்திகத்தைப் பேசியது என்பதையும் தீர்மானிக்க முடியும்.

(உரு. 2)




மொரீஸ் கூறும் உளப் பெறுமான அடிப்படைகளை இனிப் பார்க்கலாம். இப்படத்தில் நான்கு காரணிகளைக் குறிப்பிட்டபோதும் அதனை மூன்றாகக் குறைக்கிறார்.

*01. சூழலியல், சமூகவியல் வழிமுறைகள்:* இவை இரண்டையும் ஒன்றாக விளக்க முடியும் என்பதற்காகவே இவ்வாறு சேர்ந்திருப்பதாக கலாநிதி அப்துல் லதீப் முஹம்மத் கலீபா கூறுகிறார்.[33]

*02. உளவியல் வழிமுறைகள்*

*03. உயிரியல் வழிமுறைகள்.* அத்தோடு மொரீஸ் சூழலியல் சமூகவியல் காரணிகள் மூன்றாகப் பிரிக்கப்பட முடியும் என்கிறார்.

*அ)* நாம் தேர்ந்தெடுக்கும் கல்வி

*ஆ)* குடும்பசார் அறநெறிகள்

*இ)* இன, மத, பொருளாதாரம் சார் சமூகவியற் காரணிகள்[34]

இங்கே தனிமனிதனொருவனின் சமூகப் பெறுமானத்தையும் உளப் பெறுமானத்தையும் தீர்மானிக்கும் காரணிகளை ஒப்பீடு செய்வோம்.

டார்வினிஸம் மனிதனை உயிரியல் கண்கொண்டு மட்டும் பார்த்தது. தவறிழைத்தார் டார்வின். மார்க்ஸ் மனிதனிடம் பொருளியலை மட்டும் தேடினார். வழி தவறியது அவரது ஆய்வு. ஃபிரொய்ட் மனித உள்ளத்தில் காமத்தை மட்டும் பார்த்தார். அபத்தமானது அவரது கண்டுபிடிப்பு. ஒன்றுக்கொன்று உள்தொடர்பு கொண்ட இக்கோட்பாடு அன்றைய அறிஞர்களையும் மதத்தையும் பிரிக்கும் ஏற்பாடென்று[35] முஹம்மத் குத்ப் கூறுகிறார்.

ஏனெனில், ஃபிரொய்டும் மார்க்ஸும் யூதர்கள். மார்க்ஸின் கோட்பாடும் டார்வினின் கோட்பாடும் ஒன்றிணைந்தவை.[36] ஆகவே இது யூதர்களின் சதியாகவும் இருக்க முடியும்.

ஆனால், இம்மூன்று கோட்பாடுகளினதும் அகத் தொடர்பை தேடுவதே இக்கட்டுரையின் நோக்கம். உளவியல், உயிரியல், பொருளாதாரம் போன்ற மனிதனுள் கலந்துள்ள மூன்று கோணங்களையும் தனித்துப் பார்த்ததே உலகம் போற்றும் இவ்வறிஞர்கள் விட்ட தவறு. அப்படியென்றால் மனிதன் பற்றி எப்பார்வை சரியானது? என்று கேட்டால்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"(யாவற்றையும்) படைத்த இறைவனோ நுட்பமான (அறிவுடைய)வனாக, யாவற்றையும் நன்குணர்பவனாக இருக்க (நெஞ்சங்களில் உள்ளவற்றை) அவன் அறிய மாட்டானா?"[37]

இந்த வசனமே இதற்கு விடை பகரும். அவன் உள்ளத்தை மட்டுமல்ல, உலக யதார்த்தத்தையும் அறிபவன்.

அடிக் குறிப்புகள்:

1. பக்: 42, முஹம்மத் குத்ப், அத்ததவ்வுர் வத்தபாத் பீ ஹயாதில் பஷரிய்யா
2. பக்: 74, முனைவர் பொ.ரு. கமலா, நவீன கோட்பாட்டு ஆய்வுகள், *அந்தனி வில்டனின் இக்கருத்து "The Double Bind: Logic, Magic and Economics" என்ற நூலில் இடம்பெறுவதாகக் குறிப் பிடுகிறார்.
3. பக்: 50, முஹம்மத் குத்ப், மஃரகதுத் தகாலீத்
4. பக்: 59 அத்தவாஸுல் 12ல் இடம்பெற்ற "தார்வீன் யமூது மர்ரதன் உஹ்ரா" இதனை அஸ்ஸதீக் பஷீர் நஸ்ர் எழுதியுள்ளார்.
5. ஓர் உயிரினமானது தனது உரு, பண்பு ஆகியவற்றிலிருந்து சூழல் விதிகளுக் கேற்ப இன்னோர் உருவ நிலைக்கு தானாகவே மாறும் செயற்பாட்டையே இது குறிக்கும்.
6. பிரபஞ்சம் தற்செயல் நிகழ்வால் உரு வானது. அதிலுள்ள வாழ்க்கையும் இவ்வாறே தற்செயலால் உருவானது. இவ்வுலகச் செயற்பாடுகளுக்கும் பின்னால் ஒரு நுண்ணறிவாளன் கிடையாது என்று நுண்ணறிவுப் படைப்புக் கோட்பாடிற்கெதிராக கூர்ப்பியலாளர்கள் முன்வைத்த கோட்பாடே இதுவாகும்.
7. பக்: 10, ப. செங்குட்டுவன், உயிரினங் களின் வரலாறு கண்ட டார்வின்
8. பக்: 69, அத்தவாஸுல்-12இல் வெளியான அஸ்ஸதீக் பஷீர் நஸ்ர் எழுதிய 'தார்வீன் யமூது மர்ரதன் உஹ்ரா' என்ற கட்டுரையில் இடம்பெற்றிருக்கிறது.
9. பக்: 50, முஹம்மத் குத்ப், மஃரகதுத் தகாலீத்
10. P-23, Harun Yahya, The Callapse of Theory of Evolution in 20 Questions.
11. பக்: 203, மைகல் எச். ஹார்ட், (மொழி பெயர்ப்பு - மணவை முஸ்தபா), நூறு பேர்.
12. பக்: 15, ப. ஜீவானத்தம், சோஷலிஸ தத்துவங்கள்
10. Ibid - P-17
14. பக்: 42, முஹம்மத் குத்ப், அத்ததவ்வுர் வத்தபாத் பீ ஹயாதில் பஷரிய்யா
15. பக்: 139, முஹம்மத் குத்ப், அல்ஜாஹிலிய்யது கர்னில் இஷ்ரீன்
16. பக்: 42, முஹம்மத் குத்ப், அத்ததவ்வுர் வத்தபாத் பீ ஹயாதில் பஷரிய்யா
17. Ibid - P-43
18. பக்: 206, மைகல் எச். ஹார்ட், (மொழிபெயர்ப்பு - மனவை முஸ்தபா), நூறு பேர்.
19. ஆல இம்றான்: 140
20. பக்: 10, கலீல் முஹம்மத் கலீல், அந்நப்ஸுல் பஷரிய்யா கமா தஹத்தத் அன்ஹா அல்குர்ஆன்
21. Ibid - P-10
22. ஸூறதுல் முல்க்: 14
23. பக்: 15, கலீல் முஹம்மத் கலீல், அந்நப்ஸுல் பஷரிய்யா கமாத தஹத்தத் அன்ஹா அல்குர்ஆன்
24. பக்: 457, மைகல் எச். ஹார்ட், (மொழிபெயர்ப்பு - மணவை முஸ்தபா), நூறு பேர்.
25. பக்: 55, சிக்மண்ட் ஃபிரொய்ட் (நாஹூத் ரூமியின் மொழிபெயர்ப்பு), கனவுகளின் விளக்கம்
26. Ibid - P-118
27. பக்: 32, அந்தனி ஸ்டோ, ஃபிரொய்ட் ஒரு அறிமுகக் குறிப்பு
28. P-86, Hoseph Jastraw Phd, LLD, Frued his dream ans sex theories.
29. Ibid, P-189
30. பக்: 110, மு. திருவள்ளுவர், புதிய பார்வை, புதிய வார்த்தை, புதிய வாழ்க்கை
31. பக்: 60, முஹம்மது குத்ப், மஃரகதுத் தகாலீத்
32. Ibid, P-60
33. பக்: 86, கலாநிதி அப்துல் லதீப் முஹம்மத் கலீபா, இத்திகாஉல் கியம்
34. Ibid, P-88
35. பக்: 35, முஹம்மத் குத்ப், அத்ததவ்வுர் வத்தபாத் பீ ஹயாதில் பஷரிய்யா
36. 'உயிரினங்களின் வரலாறு கண்ட டார்வின்' என்ற நூலை எழுதிய ப. செங்குட்டுவன் இக் கருத்தை கார்ல் மார்க்ஸின் சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறுகிறார். பக்: 129
37. அல் முல்க்: 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# හින්දු ආගමික ග්‍රන්ථවල අල්ලාහ් හා රසූල් (සල්)

එම්.එස්.එම්. ආසාත්
(පස්වන වසර)

නබි මුහම්මද් (සල්) තුමාණෝගේ නාමය පවා හින්දු ආගමික ග්‍රන්ථයන් හි දැක බලාගන්නට පුළුවනි.

හින්දු ආගමික ග්‍රන්ථ පිළිබඳව කෙටි විමසුමක්:

හින්දු ආගමේ ප්‍රධාන මූලාශ්‍ර: "රික්, යජූර්, සාම, අදර්වණ" යනුවෙන් සතරකට බෙදා සලකනු ලැබේ. එකම මූලාශ්‍රය සතරකට බෙදන ලදි යනුවෙන් සමහරු කියති. තවත් සමහරු මෙම මූලාශ්‍රයන් සතරම වෙන වෙනවම පහළවූ බවට පවසති. එනමුත් සත්‍ය දේව මූලාශ්‍රය වසං වූ බවත් පසු කාලීන අනුගාමිකයින් විසින් මූලාශ්‍රය සමග එකඟවෙන ආකාරයට මේ මූලාශයන් සතරම සම්පිණ්ඩනය කළ බවට ද පිළිගත හැකි මතයක් ද තිබේ. හින්දු ආගමික මූලාශ්‍රයන් යයි විශ්වාස කරන ලද ග්‍රන්ථයන් සංස්කෘත බසින් සංස්කරණ කරන ලදී.

දෙවි කෙනෙක් අවශ්‍යද?

මෙම විශ්වය මවා එය පරිපාලන කරන ලද්දේ එකම දෙවියෙකු විසින් බව හින්දු, ක්‍රිස්තියානි හා ඉස්ලාම් දහම් එහි ප්‍රධාන මූලාශ්‍ර ග්‍රන්ථයන් පවසයි. මැවුම්කරු එක්කෙනෙකුනම් මෙතරම් ආගම් දහම් බිහි වූයේ කෙසේ ද? යන ප්‍රශ්නය සාධාරණයි.

මෙම විශ්වයේ තිබෙන්නාවූ දෑ ඉතාමත්ම සූක්ෂම ලෙස ගවේෂණය කරන විට මෙයට පසුපසින් තිබෙන, මෙම විශ්වය හා එහි ඇති දෑ ඉතාමත්ම ක්‍රමානුකූලව ක්‍රියාත්මක කරන මහා බලවේගයක් පිළිබඳ වූ විශ්වාසය ප්‍රතික්ෂේප නොකරනවා නිසැකයි. නියත වශයෙන්ම මෙම විශ්වය නිසියාකාරව ක්‍රියාත්මක වීමට, එය පාලනය කිරීමට අතිශයින්ම මහා බලසම්පන්න කෙනෙක් සිටීම ඉතාමත් අවශ්‍යයි.

මිනිසා අඛණ්ඩව ආශ්වාස හා ප්‍රශ්වාස කරමින් සිටියි. ප්‍රශ්වාස කරන විට $CO_2$ වායුව මිනිසා පිටකරන විත්තිය අප කාටත් නොදන්නා දෙයක් නොව. මෙම $CO_2$ වායුව පිරිසිදු $O_2$ වායුවකට මාරු නොවූයේ නම් ටික කලකට පසු $CO_2$ වායුවෙන් පිරුණු ප්‍රදේශයක්, කලාපයක් හැටියට මෙලොව ව්‍යාප්ත වී මිනිසුන් සියල්ලන්ටම මැරීමට සිදුවේ. වායුගෝලය විවිධාකාර වායුවලින් සමන්විත මිශ්‍රනයකි. එහි $CO_2$, $O_2$, $H_2$, N, H මෙසේ බොහෝ වායුවන් ඇත. එනමුත් මිනිසා $O_2$ වායුව පමණක් ආශ්වාස කර $CO_2$ වායුව ප්‍රශ්වාස කරන්නේ නම්, ශාක සාරයන්, තුරුලතාවන් $CO_2$ වායුව පමණක් ආශ්වාස කර $O_2$ වායුව ප්‍රශ්වාස කරන්නේ නම්, මෙම විශ්වය පසුපස මෙහි ඇත දෑ ක්‍රියාත්මක කිරීමට කෙනෙකු සිටියි යන්න වටහා ගත හැක. මෙම මහා බලවේගය සිංහලෙන් "දෙවියා" යයි ද ද්‍රවිඩ බසින් "කඩවුල්", "ඉරෛවන්"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

යයිද ඉංග්‍රීසියෙන් "ගෝඩ්" යයි ද හීබ්රුවලින් "ඉලෝහ්" යයි ද අරාමික්වලින් "එලෝයි" යයි ද මලයාල බසින් "ඊස්වරන්" යයි ද විවිධ භාෂාවලින් විවිධාකාරව හඳුන්වනු ලැබේ. මේ නිසා ආගම් දහම් මොනතරම් බිහිවූවත් සත්‍ය දහම එකක් පමණයි යන්න වටහාගත යුතුයි.

### හින්දු ආගමික ග්‍රන්ථවල අල්ලාහ්

හින්දු ආගමික ග්‍රන්ථවලින් ඉතා මුඛ්‍ය ග්‍රන්ථයක් වන "රික්" ග්‍රන්ථයේ 333 සංඛ්‍යාවක දෙවිවරුන් සම්බන්ධව පවසා ඇත. මෙහි ඉන්ද්‍ර, මිත්‍රා, වරුණ, අග්නි, විෂ්ණු යන අය ප්‍රධාන ස්ථානයක සිටිති. මොවුන් සෑම කෙනෙකුම විවිධාකාර වෙනස් ක්‍රියාවන්, කාර්යයන්වලට වගකිව යුත්තන් යයි විශ්වාසයක් ඇත. එනමුත් මෙම බහු දේව වාදයට හාත්පසින්ම වෙනස්, ඒක දේව වාදය පිළිබඳවූ කරුණු ද බොහෝ ඇත. "හිරන්යහර් භන්, විශ්ව කර්ම ප්‍රජාපති" යනුවෙන් එම උතුම් දෙවියන් වහන්සේ පිළිබඳ වූ කරුණු, ඔහුගේ ඒකීයත්වය පිළිබඳවූ අදහස් උදහස් බොහෝ දැක බලා ගන්නට පුළුවනි.

රික් දහම:

"පළමුව සිටියේ හිරන්යහර්භන් පමණි... ඔහු සෑම ආලෝක වස්තුවකටම මූලයකී. මෙලොව, සූර්යයා හා ස්වර්ගය මවා පරිපාලනය කරන ලද්දේ ඔහු විසින් ය... සියල්ල සිදුවන්නේ ඔහුගේ නියමය අනුවයි. එම නිසා ඔහුට පමණක් වන්දනාමාන කරනු."

(රික් - 10:121:1)

මෙසේ ඒක දේව වාදයට බොහෝ සාක්ෂි ඇත.

බලන්න : (රික් - 10:121:9)

(රික් - 10:01:02)

(අතර්වණ දහම - ක්‍රියෝ ධශකණ්ඩම් 4:4:14:19)

උපනිශවලින් :

"ඉතා සූක්ෂම ලෙස මහා පරමාධිපති මෙම විශ්වය මවා තමාගේ අණ පරිදි පාලනය කරයි." (ස්වේදාස්තරෝ උපනිශය : 3:1)

"එම පරමාධිපති.... දෑස් නැතිව සියල්ල බලයි, කන් නැතිව සියල්ල අසයි"

(ස්වේදාස්තරෝ උපනිශය : 3:9)

"ඔහුට සමානව මෙලොවේ කිසිවෙකු නැත. ඔහුට අණ දීමට ද කවුරුත් නැත... ඔහුව කිසි වෙකු මැවුවේ ද නැත. ඔහුට උසස් පරමාධිපති යෙක් ද නැත."


(ස්වේදාස්තරෝ උපනිශය : 6:5)

උපනිශවලත් ඒක දේව වාදයට බොහෝ කරුණු දැක බලාගන්නට පුළුවන්ය.

බලන්න : (මුණ්ඩකෝ උපනිශය : 2:2:11)
(කඨෝ උපනිශය : 1:2:22-23)

සර්ව බලධාරී දෙවියන් වහන්සේට රූපයක් ආදේශ කිරීම ඉතා භයානක පාප ක්‍රියාවක් බවට ද හින්දු ආගමික මූලාශ්‍රයන් පවසයි.

බලන්න : (කේණෝ උපනිශය : 1:6-7)
(භගවත් ගීතාව : 11:43)




හින්දු ආගමික ග්‍රන්ථයක්

### හින්දු ආගමික ග්‍රන්ථවල මුහම්මද් නබි (සල්)

දෙවියන් වහන්සේ මෙලොවට මිනිස් ආත්මයකින් පැමිණෙනු ඇත, යනු බොහෝ හින්දු භක්තිකයින්ගේ පොදුවූ සාමාන්‍ය විශ්වාසයකි. තවත් සමහරු ජන්මය යනු දෙවියන් තමන් පිළිබඳ පැවසූ කරුණක් හැටියට සළකති.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එනමුත් ජන්මය (ආත්මය) යනු දෙවියන් තමන් පිළිබඳව පැවසූ දෙයක් නොව. එය "ඍෂි" එනම් මෙලොවට එවන ලද උතුම් දූතයකු පිළිබඳව පැවසූ දෙයක් යැයි සමහර හින්දු භක්තිකයෝ පවසති. මෙය පිළිගැනීමට ප්‍රමාන වත් සාක්ෂි ද ඇති බව ඔවුහු සඳහන් කරති. මෙම "ඍෂි" සංකල්පය අල්-කුර්ආනය පවසන "නුබුව්වත්, රිසාලත්" සංකල්පය සමඟ එකඟව පවතියි. මිනිසුන්ගෙන්ම කෙනෙකු තෝරාගෙන ඔහු සමඟ "වහි" දේව පණිවුඩමඟින් කතාබස් කරන අන්දම අල්-කුර්ආනය පැහැදිලි කරයි. ඉස්ලාම් දහම අනුව මොහු දූතයා නැතිනම් උතුම් වක්තෘවරයා යයි හඳුන්වනු ලැබේ.

"සෑම යුගයකටම දූතයෙක් පැමිණෙයි" යයි අල්-කුර්ආනය පවසයි.

(අල්-කුර්ආන් 13:7)

හින්දු ආගමික මූලාශ්‍රයන් බලන කල්හි බොහෝ දේව දූතයින් මෙලොවට පැමිණ ඇති සත්‍ය පැහැදිලි වේ. මෙහි "කල්කි" අවතාරය හින්දු භක්තිකයින් අතර ඉතා ප්‍රකටයි.

භගවත් ගීතාවේ "ෂම්පාලා නගරයේ විෂ්ණු යාෂ් නම් නායකයකුගේ නිවෙසක ඔහු උපත ලබයි. ඔහුගේ නම 'කල්කි' ය."

(භගවත් ගීතාව : 12:02:18-20)

"ඔහුගේ පියා විෂ්ණුයාෂ් යනුවෙන් හැඳින්වේ." (කල්කි පුරාණය - 02:04)

"කල්කිට" සතර දෙනෙකු උදව් උපකාර කරති" (කල්කි පුරාණය - 02 : 5)

"ඔහුට යුද බිමේ දී වානරයින්ගෙන් (සුරදූතයින්ගෙන්) උදව් උපකාර ලැබේ"

(කල්කි පුරාණය - 03:07)

"ඔහු විෂ්ණුයාෂ් නිවෙසෙහි "සුමදි" ගේ කුසෙන් උපත ලබයි." (කල්කි පුරාණය - 02:11)

"ඔහු "මාදෝ" මාසයේ 12 වෙනි දින උපත ලබයි." (කල්කි පුරාණය - 02:15)

මෙසේ බොහෝ කරුණු හින්දු ආගමික මූලාශ්‍රවල දැක බලාගන්නට පුළුවනි. මෙම කරුණු ඉස්ලාම් දහම සමඟ සසඳා බලන කලෙහි;

'කල්කි' (ඔහු)ගේ පියා 'විෂ්ණුයාෂ්' එනම් දෙවියන් වහන්සේගේ දාසය, වහලා යනුවෙන් ඇත. අප හොඳින් දැන සිටින මුහම්මද් (සල්) තුමාණෝගේ පියා අබ්දුල්ලාහ්. එහි තේරුමද දෙවියන් වහන්සේගේ වහලා යන්නයි.

'කල්කි' (ඔහු)ගේ මව සුමදි, "සුමදි" යන පදයේ තේරුම ශාන්තිය, සමාදානය වේ. නබි (සල්) තුමාණෝගේ මව "ආමිනා". එහි තේරුමද ශාන්තිය, සමාදානය වේ.

ඔහු 'ෂම්පාලා' නගරයෙහි උපත ලබයි. මෙහි තේරුම ශාන්තිය, සමගිය, නිහඬත්ව යෙන් යුත් නගරය යන්නයි. මුහම්මද් නබි (සල්) තුමාණෝගේ ජන්ම භූමිය වූ මක්කමට "දාරුල් අමානා" එනම්, ශාන්තිය, නිහඬත්ව යෙන් යුත් නගරය යනුවෙන් ද නමක් ඇත.

ඔහු ග්‍රාම නායකයකුගේ නිවෙසහි උපත ලබයි නබි (සල්) තුමාණෝ මක්කමේ උසස් නායක යකුගේ නිවෙසෙහි උපත ලැබූහ.

"මාදෝ" මාසයේ 12 වෙනි දින උපත ලබන බවට සඳහන් වේ. මුහම්මද් නබි (සල්) තුමාණන් "රබී උල් අව්වල්" මාසයේ 12 වෙනි දින උපත ලැබූහ.

ඔහු අවසාන "ඍෂි" හැටියට හැඳින්වේ. අල්ලාහ් අල්කුර්ආනයේ

"මුහම්මද් ඔබලා අතර සිටින පිරිමින් කිසි කෙනෙකුගේ පියා නොවේ. නමුත් ඔහු අල්ලාහ්ගේ දූතයායි අවසාන වක්තෘවරයායි."

(අල්-කුර්ආන් 3:40)

නබි (සල්) තුමාණෝව අවසාන දූතයෙකු ලෙස මුස්ලිම්වරු සලකති.

"ඔහුට උදව් උපකාර කිරීමට සතර දෙනෙක් සිටිති." මුහම්මද් (සල්) තුමාණන්ට අබූ බක්කර්, උමර්, උස්මාන්, අලි (රලි) යන සතරදෙනා විවිධාකාරයෙන් උදව් උපකාර කළහ.

එසේම නබි මුහම්මද් (සල්) තුමාණෝගේ නාමය පවා හින්දු ආගමික ග්‍රන්ථයන් හි දැක බලාගන්නට පුළුවනි.

ඔහු "නරෂම්ෂා" යනුවෙන් හැඳින්වේ. මෙහි අර්ථය වන්නේ ප්‍රශංසා කරන ලද තැනැත්තා යන්නයි. 'මුහම්මද්' නබි නම් අරාබි වචනයේ තේරුමද මෙයයි.

(භවිශ්‍ය පුරාණය - 3:3:3)

(අතර්වණ ග්‍රන්ථය - 20:121:1-14)

මෙවැනි බොහෝ කරුණු ඉස්ලාම් දහම සමඟ සසඳා බලන විට හින්දු ආගමික ග්‍රන්ථවල ද අල්ලාහ්, මුහම්මද් නබි (සල්) පිළිබඳව සටහන් තිබීම එම ග්‍රන්ථ තව තවත් අධ්‍යයනය කිරීමට අපව පොළඹවයි.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# DIAMOND

ஜம்இய்யதுல் உலமாவின்
ஹலால் சான்றிதழ் பெற்றது

ALL CEYLONE JAMIYYATHUL ULAMA CERTIFIED
Halaal - Sri Lanka

P.M. MOHAMED ALI & CO.
No. 187, Prince Street, Colombo 11.
Tel: 0112 430499, 0112 446573 Fax: 0112 439477

abe accredited college

IIBI

GET AN INTERNATIONALLY RECOGNIZED QUALIFICATION IN THE FASTEST GROWING FIELD OF ...

# ISLAMIC BANKING & FINANCE

Association of Business Executives - UK in Partnership with Institute of Islamic Banking & Insurance - UK

OFFERS

**Concepts and Principles of ISLAMIC ECONOMICS** in DIPLOMA LEVEL

**ISLAMIC FINANCE** in ADVANCED DIPLOMA LEVEL

MSc in Islamic Finance (1 year) Durham University (UK)

Post graduate diploma (Pgd) at IIBI (UK) 6 months

Concepts & Principles of Islamic Economics (Diploma level) & Islamic Finance (Advanced diploma level) of abe (UK)

A/L 2 passes (pending results also can apply) | O/L with experience | abe Certificate level

IBS prepares Professionals for the Future Business World..




IBS

INSTITUTE OF BUSINESS STUDIES

# 67, Kawdana Road, Dehiwala. Tel: 011 5522188 / 011 5522488
# 524/1/1, Peradeniya Road, Kandy. Tel: 081 5636377 / 081 2200588
Email: info@ibslanka.com Web: www.ibslanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ORBIT

International Co.

شركة اوربت الدولية

Travels & Tours (Pvt) Ltd.

شركة اوربت السياحة المحدودة

**License No. 1563**

TICKETING AGENT, MANPOWER CONSULTANTS,
TOUR OPERATORS, HAJ & UMRA OPERATORS

مكتب الإستقدام - وكالة السفر والسياحة

**1053, Maradana Road,**
**Colombo 08**
**Tel: 011 2671682-5, Fax: 011 2671685/6**
**E-mail: orbiti@sltnet.lk**

---

abe
accredited college

## UK, USA, Canada, Malaysia, Singapore

போன்ற நாடுகளில் உயர் கல்வி வாய்ப்பு

**After** O/L, A/L

To be come a **ISLAMIC BANKING PROFESSIONAL?**
Meet the provider of internationally recognize advance diploma in islamic banking and finance (will be start in January)

கடந்த 5 வருட அனுபவமுள்ள எமது நிறுவனத்தினூடே பெற முடியும்.

**Hotline:** As Sheikh N.M. Ajardeen
0771800618

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

# SBS (Sydney business school)

Contect: M. AZHAR
0772301383, 0715820779
azharati@gmail.com

No. 192, Galle Road,
Dehiwala, (Opposite to Waidya Road)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரணமில்லா காரியவாதம்

வீதியில் செல்லும் ராணுவத்தைக் கண்டு
பயந்து, மெதுவாக
கதவு இடுக்கிலிருந்து
எட்டிப் பார்க்கும்
ஒரு சின்னக் குழந்தை போல
எட்டிப் பார்க்கிறது
என் கவிதை.

என் கற்பனை தேரின் மீது
முல்லை படர்ந்ததோ
சேற்றில் புதைந்ததோ
என தேடிப் பார்க்கும்
நாதியுமில்லை எனக்கு.

நிராகரித்து,
புறம்தள்ளி,
குத்திக் கிளரிய
ஞாபகக் காயங்கள் மட்டும்
நேற்றய புன்னகையை
உதட்டில் சுமந்து.

மாட்டிக் கொண்ட
மோதிரம் ஒன்றாய்
கழற்ற முயன்று தோற்றுப் போனதில்
காயங்கள் மட்டுமே
மீதமாயின.
உங்களால் அடிக்கடி உடைந்து
வீழும் வேளைகளில்
மோதிரக் கீறல்கள் கூட
சுகமாக தெரிவதுண்டு
முஸ்லிம் என்பதனால் மட்டும்.

என் குழந்தைகள்
பட்டாம் பூச்சிகளிடம்
வண்ணங்கள் கடன் வாங்கி
கலர் கலராய்
வரைந்த அக்ஸா பள்ளி ஒன்று
களவாடப்படுவதும்
கருக்கலைக்கப்படுவதும்
இந்த நிமிடங்களில்தான்

இரவுக்கு மட்டுமான
ஆந்தையின் ஊர்வலம்
பகலுக்கு மட்டுமான
சூரியனின் அதிகாரம்
எமக்கு மட்டுமான
மேற்கின் இதிகாசம்
என்று தனியும் இந்த
காரணமில்லா
காரியவாதம்.

பிரதி வாதிகளே இல்லாத
எம் வழக்கில் மாத்திரம்
குற்றவாளியும் நாங்களாய்
வக்கீலும் நாங்களாய்
தீர்ப்பு வழங்க காத்திருக்கும்
நீதிபதியாய் இறைவன் மட்டும்
நிலுவையில் நிற்கிறது
எம் அக்ஸா வழக்கு.

ஏ.எஸ். ஜெஸீல் அஹ்மத்
(விடுகை வருடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைப் பிரபந்தம்



இஸ்பஹான் ஷாப்தீன்
(ஆறாம் வருடம்)

முஸ்லிம் தமிழ்ப் புலவர்களால் இயற்றப் பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் எண்ணிலடங்காதவை. தமிழ் இலக்கியத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பிரபந்த வகைகள் காணப் படுகின்றன. அவ்வனைத்து வகைகளையும் பயன்படுத்தி முஸ்லிம் தமிழ்ப் புலவர்களால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இலக்கியப் படைப்புகள் எழுதப்பட்டு வெளியிடப்பட்டி ருக்கின்றன. இதனைத்தான் கவிக்கோ அப்துர் ரஹ்மான் அவர்கள் இஸ்லாமிய தமிழ் இலக் கிய மாநாட்டிலே (1999) இப்படிக் கூறிப் பெருமைப்பட்டார்.

''நாமே இஸ்லாத்தை தமிழாக்கியவர்கள்
தமிழை இஸ்லாமாக்கியவர்கள்
மக்கா அரபிக்கு
மங்கைத் தமிழை
நிக்காஹ் முடித்தவர்கள்
சும்மா முடிக்கவில்லை
ஈ◦ராயிரம் மஹராய் ஈந்தே
மணமுடித்தோம்.''

இவ்வாறு முஸ்லிம் புலவர்களால் இயற்றப் பட்டு வெளியிடப்பட்ட இலக்கியப் படைப்பு கள் அனைத்தையும் ஆய்ந்தறிந்து பார்த்தால் முஸ்லிம் புலவர்கள் தமிழ் மொழியை எந்தளவு தூரம் வளப்படுத்தி இருக்கிறார்கள் என்பது புரியும்.

முஸ்லிம் தமிழ்ப் புலவர்களின் இலக்கியப் பங்களிப்பை கீழ்வருமாறு பகுத்து நோக்கலாம்.

இவை ஒவ்வொன்றையும் பற்றிய தனியான ஆய்வுகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். அவை அனைத்தையும் நாம் விளக்க முற்பட் டால் இச்சஞ்சிகையே இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு சஞ்சிகையாக மாறிவிடும். எனவே இவற்றுள் மிகப் பிரதானமாக நாம் கருதும் 'மாலை'ப் பிரபந்தம் பற்றிய ஆய்வாக இவ்வாக்கத்தை அமைக்க விரும்புகிறோம்.

## அறிமுகம்

இஸ்லாமிய தமிழிலக்கியப் பிரபந்த வகை களுள் 'மாலை'ப் பிரபந்தம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதற்கு இரு காரணங் கள் உண்டு. அதிகமான இஸ்லாமிய தமிழிலக் கிய வெளியீடுகள் மாலைப் பிரபந்தமாக இருப்பது முதற் காரணமாகும். அதேபோன்று தமிழ் மொழியில் ஆக்கப்பட்ட முதலாவது இஸ்லாமியப் பிரபந்தம் 'மாலை' வகையைச் சேர்ந்ததென்பது இரண்டாவது முக்கிய காரண மாகும். அதாவது முஸ்லிம் புலவர் ஒருவரால் இயற்றப்பட்ட முதலாவது தமிழ்ப் பிரபந்தம் 'மிஃராஜ் மாலை' ஆகும். இது ஹிஜ்ரி 1000ல் ஆலிப் புலவரால் இயற்றப்பட்டது.

இந்துத் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்டு வந்த இந்த மாலைப் பிரபந்த முறை வழியை இற்றைக்கு சுமார் 430 வருடங்களுக்கு முன்தான் முதன் முதலாக முஸ்லிம் புலவர்கள் பயன் படுத்தத் தொடங்கியுள்ளனர். மாலை பிரபந்தங் களுள் அடங்கும் இலக்கண அணிகலன்கள் ஆரம்பகால 'மாலை'களில் பின்பற்றப்பட்டு வந்தாலும் பிற்பட்ட காலங்களில் பெரும்பாலும் கைக்கொள்ளப்படவில்லை. இலக்கண அணி கலன்களின் அடிப்படையில் மாலை பல வகைப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்லாமிய தமிழிலக்கிய பிரபந்த வகைகள்**

- சிற்றிலக்கியங்கள்
  - **மரபு தழுவியவை**
    - அந்தாதி
    - அம்மானை
    - கலம்பகம்
    - ஆற்றுப்படை
    - மாலை
    - கும்மி
    - திருப்புகழ்
    - குறள்
    - ஏசல்
    - சிந்து
    - சதகம்
    - பலபாடற் திரட்டு
    - திருப்பாடற் திரட்டு
    - பிள்ளைத் தமிழ்
    - ஞானப்பாடல்
    - கோவை
    - தூது
    - தாலாட்டு
    - பதிகம்
  - **புத்தாக்கம்**
    - படைப்போர்
    - கிஸ்ஸா
    - மஸ்அலா
    - நாமா
    - முனாஜாத்து
- பேரிலக்கியங்கள்
  - **மரபு தழுவியவை**
    - புராணம்
    - காப்பியம்
    - நாடகம்
  - **புத்தாக்கம்**
    - நொண்டி நாடகம்
    - நாயக புராணம்

***(படம் 01)***

உதாரணமாக:

அங்க மாலை

பன்மணி மாலை

இணைமணி மாலை

மும்மணி மாலை

வசந்த மாலை

நவமணி மாலை

போன்ற சில முறைமைகளைக் கூறலாம். இவற்றைக் கையாண்டு இஸ்லாமிய மயப் படுத்திய முஸ்லிம் புலவர்கள் 'மாலை'க்கு புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்தனர் எனத் துணிந்து கூறலாம்.

**'மாலை' என்றால்....**

நாம் சாதாரணமாகப் பயன்படுத்துகின்ற கழுத்து அணிகலன்தான் மாலை. இது பல சங்கிலிப் பிணைப்புகளைக் கொண்டு நீண்டு செல்லும். இவ்வாறான ஒரு போக்கில் இயற்றப்பட்ட இலக்கிய வடிவுக்கே மாலைப் பிரபந்தம் எனப்படுகிறது. அதாவது மாலை போல் தொடராகத் தொடுக்கப்படும் செய்யுள் வரிகளைக் கொண்டமைவதை இது குறிக்கும்.

பெரும்பாலும் மாலைப் பிரபந்தங்கள் குறிப்பிட்ட ஒரு கருப்பொருளை மையப்படுத் தியதாய் மாத்திரம் அமைய வேண்டும் என்றில்லை. ஏனெனில் பல கருப் பொருட் களில் பல வகை 'மாலை' பிரபந்தங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இதனை பூக்களால் தொடுக்கப்படும் மாலையை உதாரணமாகக் கொண்டு விளக்கலாம்.

ஒரே விதமான பூக்களைக் கொண்டும் மாலை தொடுக்கலாம். பல நிறம் கொண்ட பல்வேறு பூக்களைக் கொண்டும் மாலை தொடுக்கலாம். அதாவது ஒரு பொருளை வைத்து அப்பொரு ளைப் பற்றி பல்வேறு பாக்களைக் கொண்டும், பாவினங்களைக் கொண்டும் இயற்றலாம். முஸ்லிம் புலவர்களால் இயற்றப்பட்ட 'மாலை'கள் பெரும்பாலும் ஒரு பொருளைக் குறித்து பல செய்யுள்கள் இயற்றப்படும் முறை வழியைக் கொண்டு இயற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.

தமிழ் பேசும் முஸ்லிம்கள் வாழ்கின்ற இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இவை இயற்றப் பெற்று புழக்கத்தில் இருந்து வந்தி ருக்கின்றன. மரணம், திருமணம், கந்தூரி போன்ற விசேட நிகழ்வுகளின்போது மட்டு மன்றி அன்றாட செயற்பாடாக (சடங்காக) வீடுகளிலும் கடைகளிலும், மஸ்ஜிதுகளிலும் பாடப்பட்டு வந்திருப்பதை அவதானிக்கலாம். இன்றும் இவை பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாலை பிரபந்தங்கள் ஒரு பகுப்பாய்வு:

அந்த வகையில் முஸ்லிம் புலவர்களால் இயற்றப்பட்ட மாலை வகைகளை ஓரளவேனும் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

### 1. தனிநபர் புகழ்ச்சி மாலைகள்

இவை நபிமார்கள், நபித்தோழர்கள், இமாம்கள், மகான்கள் போன்றோரைப் புகழ்வதாய் அமைந்திருக்கும் இதனையும் இரு வகையாகப் பகுக்கலாம்.

அ) அவர்களது அங்க உறுப்புகளை வர்ணிப்பது (அங்கமாலை). இதில் கேசாதி பாதமாகவோ, பாதாதி கேசமாகவோ அங்கங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கும்.

ஆ) அவர்களது மகிமை, செயல் மற்றும் சேவைகள் அதி முக்கியத்துவம் பெற்று புகழப்பட்டிருக்கும்.

- முதுமொழி மாலை (நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து)
- முபாரக் மாலை (நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்து)
- முஹியத்தீன் மாலை
- முஸ்தபா மாலை

### 2. ஒழுக்க நெறிகளைப் போதிக்கும் மாலைகள்

இதில் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களைப் போதிக்கும் வகையிலான கருத்துக்கள் இடம்பெற்றிருக்கும். பெண்களுக்கென பிரத்தியேகமாகவும் இயற்றப் பெற்றிருக்கின்றன.

- பெண்புத்தி மாலை
- அதபு மாலை
- நஸீஹத்து மாலை
- தம்பாக் மாலை (வெற்றிலைப் பழக்கத்தைக் கண்டித்து)

### 3. சமய அறிவு புகட்டும் மாலைகள்

இதில் இஸ்லாத்தின் கடமைகள், சுன்னத்துக்கள், சட்டங்கள் போன்றன பற்றி விளக்கப்பட்டிருப்பவை அடங்கும்.

- இஃதிலாம் மாலை (ஷாபி, ஹனபி கருத்து முரண்பாடுகள்)
- தீன் மாலை (ஹதீஸ்கள் விருத்தப் பாக்களாக வடிக்கப்பட்டவை)
- ஸலாதுல் அர்கான் மாலை
- கல்யாண பித்அத் மாலை

### 4. மரணத்தை மையப்படுத்தி இயற்றப்பட்ட மாலைகள்

இதில் மரணத்திற்கு முன் நிகழ்த்த வேண்டியவை, மரணத்தின்போது நிகழ்த்த வேண்டியவை, மரணித்த பின் நிகழ்பவை போன்றன குறித்து பேசப்பட்டிருக்கும்.

- சக்கராத்து மாலை
- மரண ரத்தின மாலை
- ஒசியத்து மாலை
- மரணத்துவக்க மாலை

### 5. ஞான மாலைகள்

இறைவனை மையப்படுத்தி பக்தி ததும்பும் பாணியில் அமையப் பெற்றவை ஞான மாலைகள்.

- ஞான மணி மாலை
- ஞான ஒலி மாலை
- மஃரிபத்து மாலை
- கல்வத்து மாலை

### 6. நிகழ்வுகள், இடங்கள், அரசுகளை பிரத்தியேகமாக வர்ணிக்கும் மாலைகள்

- பலுலுன் அஸ்ஹாபி மாலை
- கோத்திர மாலை
- திருமதீனத்து அந்தாதி மாலை
- மிஃராஜ் மாலை

இவற்றுக்குள் அடங்காத மாலை நூல்கள் மிகக் குறைவே. மேலே பகுத்திருக்கின்ற முறைக்குள் எப்படியேனும் மாலை நூல்கள் அடங்கி விடுகின்றன.

இலக்கியச் செழுமைக்கு சில எடுத்துக் காட்டுகள்:

இஸ்லாமிய மாலை நூல்களின் விஷேடம் என்னவெனில் அவை தனித் தமிழில் மாத்திரம் அமையாது புது முறை வழிகளில் உருப் பெற்றமையாகும்.

அறபு மொழியும் தமிழ் மொழியும் கலந்த நடையில் தமிழ் வரியில் எழுதப்பட்ட மாலைப் பிரபந்தங்கள், அறபு மொழியும் தமிழ் மொழியும் கலந்த நடையில் அறபுத் தமிழ் வரியில் எழுதப்பட்ட மாலைப் பிரபந்தங்கள், தனி அறபு மாலைப் பிரபந்தங்கள், தனித் தமிழ் மாலைப் பிரபந்தங்கள் என முஸ்லிம் புலவர்களால் மாலைகள் இயற்றப் பெற்றிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை இசைத் தமிழின் ஒருவகை என்பதால் பிற்பட்ட காலப் பகுதியில் மாலைப் பிரபந்தங்கள் மெட்டமைத்துப் பாடப்படும் பாடல்களாக மாறின. எனவே பலர் கூடி ஒன்றிணைந்து பாடும்போது ஏற்படுகின்ற உணர்வு புலவர்களை இவ்வகை மாலைகள் இயற்ற தூண்டியிருக்க வேண்டும். இதனால்தான் மாலைப் பிரபந்தங்கள் அதிக வரவேற்பைப் பெற்று வெளியாகியிருக்கின்றன. முஸ்லிம் புலவர்களால் பாடப்பட்ட சொல்லழகும், பொருளழகும் கொண்டு விளங்கும் மாலைச் சிறு நூல்கள் தமிழ்ப் புலவர்கள் பாடிய மாலைகளுக்கு நிகரான தரத்தில் இருப்பது முஸ்லிம் புலவர்களின் தமிழ்ப் புலமைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். உதார ணத்துக்காக சில செய்யுள்களைப் பார்ப்போம்.

★ இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் முதன் முதலில் ஆலிப் புலவரால் இயற்றப்பட்ட 'மிஃராஜ் மாலை' இல் இருந்து ஒரு செய்யுள் -நாட்டுச் சிறப்பு என்ற படலத்தில் சோலையை வர்ணிக்கையில்...

மந்திதனைக் கடைசியர்தங் கொழுவிரலாற்
களைந்தவனை வாங்கி யோங்கக்
கந்தி தனி லிருந்திளம் பூங் கதலி நறுங்
கனியுதிர்த்துக் கனிமாங் கொம்பி
னுந்திநதிக் கரைப்பலவி னுன்னி நெடுங்
கைதைமட லுதிர்த்துப் பீறிச்
சிந்திமயிற் கணங்கலைத்துச் செழுங்கரும்பில்
விழுந்துயரச் செல்லூங் காவே(13)

★ இலங்கை, காத்தான்குடி அஹ்மத் நெய்னாப் பாவலர் (இறப்பு கி.பி. 1740) இயற்றிய 'தீன் மாலை' (நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகளை விருத்தப்பாக்களாகப் பாடியது)இல் இருந்து ஒரு பாடல்:

தீனைப் படித்து வணங்காத மாந்தர்கள்
செய்த அமல்க ளெல்லாம் பழுதாகும்
ஊனைப் பொதிந்த சடலமும் ரூஹும்
ஓயாது வேதனைக் குள்ளாயிருக்கும்
கானைப் பொதிந்த சுரத்தினி லாறெனக்
காட்டிய வள்ளலைக் காணவு மாட்டார்
தானத் துடன்வரச் செய்யும் ஷஃபாஅத்துத்
தானு மிழந்து தள்ளாடுவர் கண்டீர்.

★ சா.மு. நையினா லெப்பை ஆலிம் சாஹிப் அவர்கள் இயற்றிய 'அறுக்கான் மாலை' 1958 அச்சேறியது. 58 பக்கங்கள் கொண்ட இந்நூலில் தொழுகைக்கு முந்திய ஒழுங்குகள், தொழுகையில் இடம்பெற வேண்டிய ஒழுங்குகள் என்பவற்றை இக்கவிதையில் தந்துள்ளார்.

தொழுகையின் ஷர்த்துக்களைக் கூறல்:

முந்த முஸ்லிமாயப்புத்திமானாய்
மொழிந்ததுடக்குடனஜீசு நீக்கல்
சந்தேகமின்றியுயர் கிபுலாத்
தன்னை முகநோக்கல் மறைத்தல்
இந்த தொழுகையின் பரிசறிதல்
யிதற்காம் பொழுதையுமத் தொழுகை
தந்தமேற்பறுவெலனற்பறுலைத்
தக்கசுன்னத்தென்றெண்ணாமையே (பக்:15)

## இதுவரை வெளியாகிய மாலை நூல்கள்...

முஸ்லிம் புலவர்களால் இயற்றப்பட்டு இதுவரை வெளியாகியிருக்கும் மாலை நூல்களை எமது தேடலுக்குட்பட்ட வகையில் தொகுத்துத் தர முயல்கிறோம்.

1. அடைக்கல மாலை - சின்ன மரைக்காயர்
2. அஜபு மாலை - குஞ்சுமூசுப் புலவர்
3. அதபு மாலை - ஷாம் ஷிஹாபுத்தீன் ஒலி
4. அதபு மாலை - சாமு நைனா லெப்பை ஆலிம்
5. அபூ ஷகுமா மாலை - சாமு நைனா புலவர்
6. அகந்தெளியு மாலை - முஹம்மது ஹம்ஸா லெப்பை
7. அருள் மணி மாலை - அருள் வாக்கி அப்துல் காதர் புலவர்
8. அறபி அஃபல் மன்றாட்ட மாலை - ஆர்.எம்.எம். அப்துல் காதர்
9. அருமைக் காரண மாலை - முஹம்மது லெப்பை ஆலிம் சாஹிபு
10. அருக்கான் மாலை - சா.மு. நைனா லெப்பை ஆலிம் சாஹிபு

★ இதுபோன்ற சுமார் 215ற்கும் மேற்பட்ட மாலை நூற்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

அல்ஜாமிஆவின் நான்காவது இதழை வெளியிட ஆரம்பம் முதலே ஆக்கமும்
ஊக்கமும் அளித்த ஜாமிஆ நளீமிய்யாவின் நிருவாகத்திற்கும்
எம்மைத் தொடராகத் தூண்டி, தேவையான போதெல்லாம் வளமான
ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய பொறுப்பாசிரியர்களுக்கும்
'அல்-ஜாமிஆ' சஞ்சிகை வெளிவருவதற்கு உதவிய விரிவுரையாளர்களுக்கும்
ஆக்கங்களை எழுதித் தந்த எழுத்தாளர்களுக்கும்
நன்கொடைகளை வாரித் தந்த நல்லுள்ளங்களுக்கும்
விளம்பரங்களைப் பெறுவதற்கு எமக்கு உதவி, ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும்
விளம்பரங்களைத் தந்துதவியவர்களுக்கும்
சஞ்சிகையை அழகுற வடிவமைத்துத் தந்த சகோதரர்களுக்கும்
மேலும் ஆரம்பம் முதல் இறுதி வரை எமக்குதவிய அனைவருக்கும்
உளமார்ந்த நன்றிகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஜஸாகுமுல்லாஹு கைரன்
(ஆசிரியர் குழு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka's biggest fashion chain

The Fashion Destination

for exclusive Sarees & Sh

## NOLIMIT Fashion Showrooms

196, GALLE ROAD, WELLAWATTE. TEL: 011 2360260
40, D. S. SENANAYAKE MAWATHA, BORELLA. TEL: 011 2672689
1, HILL STREET, DEHIWALA. (GENTS) TEL: 011 2732492
17, HILL STREET, DEHIWALA. (LADIES & CHILDREN) TEL: 011 2726299
143, GALLE ROAD, RATMALANA. TEL: 011 2731090
152, HIGH LEVEL ROAD, NUGEGODA. TEL: 011 2829955
108A, HIGH LEVEL ROAD, MAHARAGAMA. TEL: 011 27451
424, MAIN STREET, NEGOMBO. TEL: 031 22241
456, MAIN STREET, NEGOMBO. (LADIES & CHILDREN) TEL: 031 22241
557, PERADENIYA ROAD, KANDY. TEL: 081 22007
09, BAUDDHALOKA MAWATHA, KURUNEGALA. TEL: 037 22218

## NOLIMIT Glitz Showrooms

267, HIGH LEVEL ROAD, 7TH MILE POST, NUGEGODA. TEL: 011 2812021
179, GALLE ROAD, MT. LAVINIA. TEL: 011 2733865
24, HYDE PARK CORNER, COLOMBO 02. TEL: 011 2382676

## NOLIMIT Pallu Showroom

21, KAWDANA ROAD, DEHIWALA. TEL: 011 2716660

## NOLIMIT Discount Store

213, HILL STREET, DEHIWALA. (DISCOUNT STORE) TEL: 011 2734072

**Head Office: 18, Kawdana Road, Dehiwala. 011 2737441** www.nolimit.lk

"உங்களுக்காகவே உருவாக்கப்பட்ட
ஆச்சரியமிக்க மாற்று வழி"





Head Office
98, Bauddhaloka Mawatha, Colombo - 04.
Tel: 0117 501 000 Fax: 0112 597 429
E-mail: info@takaful.lk Web: www.takaful.lk

**Amãna Takaful Insura**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BAIRAHA



ளரும் புரொய்லர் கோழி தற்பொழுது உயர் வளர்ச்சி பெறக் காரணம், இயற்கையாகவே பரம்பரை பரம்பரையாக கோழிகளை மாத்திரம் தெரிவு செய்து உற்பத்தி செய்யப்படும் கோழிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தான் Great Grand Parent, Grand Parent, Parent Birds மற்றும் Broiler கோழிகள் ஆகும். இக்கோழி மக்கு தேவையான எல்லா வகையான வசதிகளுடன் கூடிய சிறந்த சுற்று சுழலில் வளர்க்கப்படுகின்றன. இதனால் ல் வளரும் கோழிகளுக்கு கொடுக்கும் உணவானது குறிப்பிட்ட காலத்துக்குள் உயர் வளர்ச்சி பெற்ற பெற முடிகின்றது. இது தலைமுறை தலைமுறையாக உலகப் புகழ் பெற்ற கோழி உற்பத்தி பண்ணையாளர்கள் ராய்ச்சி நிறுவனங்களின் முயற்சியினாலேயே முடிந்துள்ளது. பைரஹா பாம்ஸ் நிறுவனம் தன்னுடைய ன Parent Birds ஐ உற்பத்தி செய்யும் Grand Parent கோழிகளை உலகின் முன்னனி நாடுகளில் இருந்து செய்யப்படுகின்றன.

இன்று கோழிக்கு கொடுக்கின்ற உணவானது மிகச்சரியாகவும் மற்றும் விஞ்ஞான முறையில் ஆராய்ந்து கிடைக்கப்பெறும் ஊட்டச்சத்து சம்மந்தமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மூலப் பொருட்களிடம் (விஷேசமாக சோளம், சோயா, அரிசியினால் ஆன உற்பத்திப் பொருட்கள்) பெற்று குறைந்த கொழுப்புகளுடன் கூடிய இறைச்சியை பெற்று கூடிய வளர்ச்சியுடைய புரொய்லர் கோழிகளை உற்பத்தி செய்ய முடிகின்றது.

'பைரஹா கோழி இறைச்சி'
இயற்கையானதும் போசாக்கும் நிறைந்தது
பைரஹா பாம்ஸ் PLC
407, காலி வீதி, கொழும்பு-03.

As-Sheikh S.L. Abdul Razzack (Naleemi) B.A.
Chairman Managing Director

ID WORLD MANPOWER

anpower Consultants, Tours & Travels
and Commission Agent

ligakanda Lane,
na,
bo 10,
ka.

Tel: 0094 11 4622342
0094 11 4990863
0094 11 4622343
Fax: 0094 11 2695725
Mobile: 0094 77 3245302
0094 77 3185991

E-mail: razzak2050@yahoo.com

noolaham.org | aavanaham.org